தமிழ்நாடு அரசு

வாய்மையே வெல்லும்

CONNEMARA PUBLIC LIBRARY
27 OCT 1977
MADRAS

NIRVĀKAC CIRTIRUTTA ĀṆAIK KULU

நிர்வாகச் சீர்திருத்த ஆணைக் குழு

TAMIL NĀṬU

KŪṬṬURAVU PAṞṞIYA AṞIKKAI

கூட்டுறவு பற்றிய அறிக்கை

V 1

தொகுதி I

ATTIYĀYAṄKAḶ I MUTAL VIII VARAI

(அத்தியாயங்கள் I முதல் VIII வரை)

சென்னை

சனவரி 1974

887D/6—a.

நிர்வாகச் சீர்திருத்த ஆணைக்குழுவின் அமைப்பு

1. திரு. T. A. வர்க்கீஸ், ஐ.சி.எஸ். (ஓய்வு பெற்றவர்) .. தலைவர்
2. திரு. K. S. சிவசுப்பிரமணியன், ஐ.ஏ.எஸ். .. உறுப்பினர்
3. திரு. V. கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ். .. உறுப்பினர்
4. திரு. A. R. சுப்பையா முதலியார், எம்.எல்.ஏ. .. உறுப்பினர்
5. திரு. V. கிருஷ்ணசாமி, ஐ.ஏ.எஸ். உறுப்பினர் செயலாளர்

83

பொருளடக்கம்

CONNEMARA PUBLIC LIBRARY 27 OCT 1977 MADRAS

அத்தியாயம் எண்.	தலைப்பு.	பக்க எண்.
(1)	(2)	(3)
1.	வரலாற்றுப் பின்னணியும் அறிக்கையின் ஆய்வுவரம்பும்	1
2.	துறை அமைப்பு	12
3.	தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின்கீழ் துறையின் சட்டப்படிக்கான அலுவல்கள்	47
4.	கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர் பதவியும் நிர்வாகக் குழுக்களின் அமைப்பும்	56
5.	வேளாண்மையில் கூட்டுறவு (குறுகிய காலக் கடன்)	72
6.	வேளாண்மையில் கூட்டுறவு (நீண்ட காலக் கடன்)	90
7.	வேளாண்மை விளைபொருள் விற்பனையில் கூட்டுறவு	102
8.	வேளாண்மையில் கூட்டுறவு (பொதுப் பணிகள்)	107
9.	வேளாண்மையில் கூட்டுறவு (உற்பத்திப் பொருளைச் செய்முறைப்படுத்தல்) ..	111
10.	வேளாண்மையில் கூட்டுறவு (பால்பண்ணை)	118
11.	வேளாண்மையில் கூட்டுறவு (மீனளம்)	122
12.	வேளாண்மையில் கூட்டுறவு (கால்நடை வளர்ப்பு)	125
13	தொழிலில் கூட்டுறவு (கைத்தறித் தொழில்)	127
14.	தொழிலில் கூட்டுறவு (கிராமத் தொழில்கள்)	130
15.	தொழிலில் கூட்டுறவு (சிறு தொழில்கள்)	133
16.	நுகர்வோர் கூட்டுறவுகள்	145
17.	வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்கள்	152
18.	கூட்டுறவில் கல்வி—பயிற்சி	163
19.	கூட்டுறவுத் துறையில் பணியாளர் பதவித் தரங்கள்	156
20.	கூட்டுறவும் அரசுப் பணியாளர்களும்	171
	அறிக்கையின் சுருக்கம்	178
	இணைப்புகள் 1–33	

27 OCT 1977
MADRAS

அத்தியாயம் I.

வரலாற்றுப் பின்னணியும் அறிக்கையின் ஆய்வுவரம்பும்.

கூட்டுறவு இயக்கத்தின் தோற்றம்.

1.1.1. இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் இந்தியாவில் கூட்டுறவு இயக்கத்தின் கோட்பாடு அறிமுகப்படுத்தப்பட்டது. வறுமையில் உழன்ற உழவர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்துடன் இந்த இயக்கம் தொடங்கப்பட்டது. மேலை நாடுகளிலெல்லாம் கூட்டுறவு இயக்கம் மக்களிடம் இருந்தே அடிமட்டத்திலிருந்து தோன்றியது. ஆனுல், இந்தியாவில் இந்த இயக்கம் அரசால் கொண்டுவரப்பட்டது. சட்ட மன்றங்களில் சட்டங்களை நிறைவேற்றியும் வரவு-செலவுத் திட்டங்களில் நிதிகள் ஒதுக்கியும், முறைப்படுவதற்கான நடவடிக்கைகள் மூலமும் அரசு கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தியதோடு அவற்றிற்கு ஆதரவும் அளித்து வந்துள்ளது. இந்த இயக்கம் இந் நாட்டில் சுமார் எழுபது ஆண்டு காலமாக இருந்து வந்தாலும், மொத்தத்தில் இதனை அரசு நேரடியாக நிர்வகிக்காவிட்டாலும் கூட கூட்டுறவுத் துறை மூலமாக அரசு இதனை தொடர்ந்து மேற்பார்வை செய்து அதன்மீது கட்டுப்பாட்டு அதிகாரம் செலுத்தி வருகிறது. இதற்குத் தமிழ் நாடு விதிவிலக்கல்ல. புதிய முயற்சி, மாற்றம் அல்லது சீர்திருத்தம் ஏதும் செய்யப்படுகையில் அதற்கான தொடக்க நடவடிக்கை பெரும்பாலும் அரசாலேயே எடுக்கப்பட்டுள்ளது. ஆயினும், திட்டங்களைச் செயல்படுத்தும் போது அவற்றில் உறுப்பினர்கள், அரசுச் சார்பற்ற தலைவர்கள் ஆகியோரின் பங்கு மேற்படி திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றப்படுவதற்குப் பேருதவியாக இருந்துள்ளது.

1.1.2. வேளாண்மை வங்கிகள் அமைப்பதற்கான வாய்ப்பு பற்றி ஆய்வு செய்ய அப்போதைய சென்னை மாநில அரசால் சிறப்புப் பணியில் சர் பிரடரிக் நிக்கல்சன் அமர்த்தப்பட்டார். இவர் ஒரு திறமை மிக்க சென்னை வாசி. இவரது பரிவுரையின் பேரில், இந்திய அரசு 1904 ஆம் ஆண்டு கூட்டுறவுக் கடன் வழங்குச் சங்கங்கள் சட்டத்தை இயற்றியது. இச் சட்டத்தின் மூலம் இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் அதிகாரபூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்டது என்று கூறலாம். 1904 ஆம் ஆண்டு சட்டம் கிராமக் கடன் வழங்கு சங்கங்களை ஏற்படுத்துவதற்கு வகை செய்தது. இதைத் தொடர்ந்து விரைவில் மற்றொரு சட்டம் 1912 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்டது. கடன் வழங்குதல் நீங்கலாக, ஏனைய காரியங்களுக்காகச் சங்கங்களை அமைக்கவும் கடன் வழங்கு துறையிலேயே உயர் மேற்பார்வை அமைப்புகளையும் நிதி நிறுவனங்களையும் அமைக்கவும் இச் சட்டம் வகை செய்தது. 1919 இல் கூட்டுறவு மாகாணத்தால் கவனிக்கப்படுகிற ஒரு துறையாக மாறி அதனை மக்கள் ஆதரவுள்ள அமைச்சகம் நிர்வகித்து வந்தது. கூட்டுறவு இயக்கத்தினை மேலும் தூண்டிவிட இது வழிகோலியது. பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் எண்ணிக்கையையும் பெரிதும் பெருகத் தொடங்கியது. திருவாளர் டவுன்சென்டு தலைமையிலான குழு செய்த பரிவுரைகளின் அடிப்படையில், தமிழ் நாடு 1932 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டமும் தமிழ் நாடு 1934 ஆம் ஆண்டு கூட்டுறவு நில அடைமான வங்கிகள் சட்டமும் நிறைவேற்றப்பட்டன. நிதி வகையில் சீர்மையற்ற சங்கங்களுக்குச் சேர வேண்டிய தொகைகளை வசூலித்து மீண்டும் அச்சங்கங்களுக்குப் புத்துயிர் அளிப்பதில் ஈடுபட்ட பதிவாளரின் கரங்களுக்கு 1932 ஆம் ஆண்டு சட்டம் வலுவூட்டியது. 1934 ஆம் ஆண்டு சட்டத்தின் மூலம் மாநில அரசு, மத்திய நில அடைமான வங்கியின் கடனீட்டுறுதிப் பத்திரங்களுக்கு உத்தரவாதம் அளிக்க ஏதுவாயிற்று. கடனீட்டுறுதிப் பத்திரம் வைத்திருப்பவர்கள் சார்பாக 'டிரஸ்டி' ஒருவரை நியமிக்கவும், நில அடைமான வங்கிகளின் காலங்கடந்த நிலுவைகளை சுருக்க வகையில் வசூலிக்கவும் வகை செய்தது. தமிழ் நாட்டில் நீண்ட காலக் கடன் வசதி

வளர்ச்சியில் இச் சட்டம் முக்கியமான மைல் கல்லாக அமைந்தது. தமிழ் நாடு 1932 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் 30 ஆண்டு காலம் தொடர்ந்து செயலில் இருந்து வந்தது. அதன் பின்னர் மேற்படி சட்டத்திற்குப் பதிலாகத் தமிழ் நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் அடங்கல் சட்டம் கொண்டுவரப்பட்டது. இச் சட்டம் தற்போது செயலில் இருந்து வருகிறது.

பதிவாளர் ஆற்றும் பங்கு.

1.2. கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தையும் அதன்கீழ்ச் செய்யப்பட்ட விதிகளையும் படித்துப் பார்க்கும்போது பதிவாளர் கூட்டுறவு அமைப்பின் அச்சாணியாக விளங்குகிறார் என்பது தெள்ளத்தெளிவாகிறது. இச் சட்டத்தில் அநேகமாக ஒவ்வோர் அத்தியாயத்தின் கருத்தும், சங்கங்களைப் பதிவு செய்தல், துணை விதிகளுக்கு ஏற்பளிப்பு வழங்குதல், தணிக்கை, விசாரணை, ஆய்வு, இழப்புப் பொறுப்புத் தொகை வசூல் நடவடிக்கை, சங்கங்களைக் கலைத்தல், தகராறுகளைத் தீர்த்து வைத்தல், தீர்ப்புகளைச் செயல்படுத்துதல், சங்கங்களுக்குக் கட்டளைகள் பிறப்பித்தல், இயக்குநர்களை நியமனம் செய்தல், அவர்களைத் தகுதியற்றவர்களாக்குதல் அல்லது சில சூழ்நிலைகளில் அவர்களை நீக்குதல், சங்கங்களை மூடிவிடுதல் போன்ற நிர்வாகம் சம்பந்தப்பட்ட அனைத்திற்கும் பதிவாளரை முழுப் பொறுப்பு வாய்ந்த அதிகாரியாக விளங்கச் செய்வதேயாகும். இச் சட்டத்தில் இவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பார்க்கும்போது இவர் ஒரு 'காவலராக' இருந்தாலும் கூட, உண்மையில் கடந்த ஆண்டுகளில் இவர் செயல்பட்டு வந்த போக்கைக் காணுகையில், துறையின் பணிகளை முறைப் படுத்தும் கடமைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படாமல், சங்கங்களை உருவாக்கி மேம்படுத்தும் பணிகளுக்கும் வளர்ச்சிப் பணிகளுக்கும் அதிக முக்கியத்துவம் ஏற்பட்டிருப்பது தெரிய வரும். அடுத்தடுத்து வந்த பதிவா ளர்கள் இதே வகையில் ஆற்றிய ஆக்கபூர்வமான பணியானது, அண்மைக் காலங்களில் இம்மாநிலத்தில் கூட்டுறவு இயக்கம் விரைந்து வளர்ச்சியடைய வழிகோலியது.

1.3. பல்வேறு வளர்ச்சித் துறைகளுக்கு இந்த இயக்கம் பரந்து விரிந்து நிற்பதானது, பல்வகைச் சங்கங்களின் நிர்வாகப் பணியில் தனிப் பயிற்சியை மேலும் பெறுவதற்கான தேவையை ஏற்படுத்தியது. இதனால், அந்த வளர்ச்சித் துறைகளின் தலைவர்களை, அந்தத் துறைகள் சம்பந்தப்பட்ட சங்கங்களைப் பொறுத்தவரையில் பதிவாளர்களாக நியமனம் செய்வதன் மூலம் அவர்களுக்குப் பதிவாளரின் அலுவல்களை மாற்ற வேண்டியதாயிற்று. 1960 ஆம் ஆண்டிற்கு முன்னர் கூட, தொழில் கூட்டுறவுச் சங்கங்களும் மீனளக் கூட்டுறவுச் சங்கங்களும் முறையே தொழில் துறைக்கும் மீனளத் துறைக்கும் மாற்றப்பட்டன. 1960-க்குப் பின்னர், கைத்தறி, பால் வழங்கல், வீட்டு வசதி, சர்க்கரை ஆலைகள், கிராமத் தொழில்கள், கோழி, செம்மறியாடு வளர்ப்பு ஆகியவை சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் அந்தந்த துறைகளுக்கு மாற்றப் பட்டுள்ளன. தற்போது பெருமளவில் பரந்து விரிந்து வரும் வேளாண்மைக் கடன் வழங்கு பணியை மட்டுமே தாய்த் துறையான கூட்டுறவுத் துறை கவனித்து வருகிறது. இவ்வாறு அந்தந்த வளர்ச்சித் துறைத் தலைவர்கள் அவரவர் துறை சம்பந்தப்பட்ட சங்கங்களின் மீது நிர்வாகக் கட்டுப்பாடு வைத்திருப்பதானது, 2 ஆவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல் சரியான நடவடிக்கையாகும் என்று நாங்கள் கருதுகிறோம்.

துறையின் அமைப்பில் மாறுதல்கள்.

1.4. பணி அளவும், தன்மையும் பெருகி வருவதன் காரணமாகத் தாய்த் துறையின் அமைப்பு முறையில் கணிசமான மாற்றங்கள் செய்யப் பட்டுள்ளன. 1958 இல் தணிக்கைப் பிரிவு ஒன்று தனியாக ஏற்படுத்தப்

பட்டது. (கடன் வழங்கும் பணிக்கான) அந்தந்த பணிக்குரிய துணைப் பதிவாளர் பதவிகள் சில நீக்கப்பட்டன. மாநிலம் ஆட்சிப் பகுதி வாரியான வட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. 1966 இல், இணைப் பதிவாளர் அளவில் அந்தந்த பணிக்கான பதவிகள் பெரும்பாலானவை நீக்கப்பட்டன. வட்டாரங்கள் உருவாயின. ஒவ்வொரு வட்டாரத்திற்கும், இணைப் பதிவாளர் ஒருவர் பொறுப்பு வகித்தார்.

நிலவள வங்கிகளுக்காகத் தனியாக இருந்த துணைப் பதிவாளர் பதவிகள் 1972 இல் நீக்கப்பட்டன. அதற்கு நிகராக பொதுத் துணைப் பதிவாளர்களது வட்டங்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டது. இதனால், பொதுத் துணைப் பதிவாளர்கள் நிலவள வங்கிகள் சம்பந்தப்பட்ட பணிகளுக்கும் பொறுப்பாக்கப்பட்டனர். இவ்வாறாக, இம்மாற்றங்கள், வட்டார, வட்ட அதிகாரிகளின் வட்டார அதிகார வரம்பைக் குறைக்கும் வகையிலும், சிறு பகுதியில் கூட்டுறவுப் பணிகள் அனைத்திற்கும் அவர்கள் பொறுப்பேற்கச் செய்யும் வகையிலும் அமைந்துள்ளன. அண்மை ஆண்டுகளில், சிறு பாசனத் திட்டங்கள், சிறு பாசனத் திட்டங்கள் அல்லாத பிற பாசனத் திட்டங்கள் ஆகியவற்றிற்கு நிதியுதவி அளிப்பதற்காக வேளாண்மை நீண்டகாலக் கடனைப் பெருமளவில் வழங்குவதற்காக தொழில் நுட்பப் பணியாளர் சிலர் (பொறியியல், வேளாண்மைப் பணியாளர்) இத் துறையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். பல ஆண்டுகளாக நிர்வாக அலுவல்களை ஆற்றுவதற்குக் கூட்டுறவு நிறுவனத்திற்குத் துறை அதிகாரிகளின் பணிகளை நல்கிவருவது நடைமுறையில் உள்ளது. இந்நடைமுறை தொடர்ந்து அப்படியே வளர்ந்து வருகிறது.

1.5. கூட்டுறவுச் சங்கங்கள் அரசு சார்பற்ற, தேர்தல் நடைமுறை மூலம் நிர்வாகிகளைத் தெரிந்தெடுக்கிற நிறுவனங்களாகும். அவற்றில் எவரும் உறுப்பினராகச் சேர அவை அனுமதிப்பதுடன், கட்டுப்பாடற்ற தேர்தல்கள் நடத்தவும் வகை செய்கின்றன. சமூக அல்லது பொருளாதார வேறுபாடுகளின் அடிப்படையில் உறுப்பினர்களிடையே பாகுபாடு எதையும் செய்யாமல் கூட்டுறவுச் சங்கங்கள் அவர்களுக்குப் பணி புரிகின்றன. இக்கொள்கைகள் நடைமுறையில் பின்பற்றப்படவில்லை என்றும், சில பிரிவு மக்களே சங்கங்களின் நிர்வாகத்தை தங்களது ஏகபோக உரிமை ஆக்கிக் கொண்டுள்ளனர் என்றும் அவ்வப்போது குறைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இக் குறைகள் குறித்து அரசு கவனம் எடுத்துக் கொண்டு அத்தகைய குறைகளைச் சட்டத்தின் மூலம் போக்குவதற்கு முயற்சி செய்து வந்துள்ளது. 1968 இல் கூட்டுறவு குறித்து சந்தானம் குழு நியமிக்கப்பட்டது. அக்குழு நியமிக்கப்பட்ட போது, சங்க நிர்வாகங்களின் அமைப்பு குறித்து குறைகள் கூறப்பட்டதை அரசு குறிப்பாக அக் குழுவுக்குச் சுட்டிக்காட்டி, இந்தப் போக்கினை மாற்றுவதற்கான நடவடிக்கைகளைப் பரிவுரை செய்து இடைக்கால அறிக்கை ஒன்றைப் பணிந்தனுப்புமாறு அக்குழுவைக் கேட்டுக்கொண்டது. இக்குழு, 20—6—68 நாளிட்ட தனது இடைக்கால அறிக்கையில் முக்கியமான சில கருத்துரைகளைத் தெரிவித்தது. ஆயினும், அரசு அவற்றைப் பரிசீலனை செய்ததாகத் தெரியவில்லை. அண்மையில் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அம் மாற்றங்கள் மூலம் தலைமைச் சங்க அளவிலும், மத்தியச் சங்க அளவிலும் முழுவதும் அல்லது பெரும்பாலும் (நேரடியாகவோ மறைமுகமாகவோ) நியமனம் செய்யப்பட்ட குழுக்கள் ஏற்பட்டுள்ளன. இதை நன்மை பயக்கும் வளர்ச்சி எனக் கூறுவதற்கில்லை.

வேளாண்மைக் கடன் (குறுகிய காலக் கடன்).

1.6. குறுகிய கால, நடுத்தரக் கால வேளாண்மைக் கடனைப் பொறுத்தமட்டில், ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு சங்கம் இருக்க வேண்டுமென்ற கொள்கை இருந்து வந்துள்ளது. சங்கங்கள் திறம்படப் பணியாற்ற இயலும் பொருட்டு சிறிய சங்கங்களைத் தனித்து இயங்கக்

கூடிய பெரிய பிரிவுகளாக மாற்றி சீரமைப்பதற்காக 1964-ல் இக்கொள்கை மாற்றியமைக்கப்பட்டது. இப்பத்தாண்டுகளில் கடன் வழங்கு நடைமுறைகளில் செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றம், பிணையத்தை அடிப்படையாகக் கொண்ட கடன் வழங்கு முறையிலிருந்து உற்பத்தி அடிப்படையிலான கடன் வழங்கு நடைமுறைக்கு மாற்றியதும், கடன் வாங்குவோரது உடைமையின் மதிப்பையொட்டி கடன் வழங்குவதற்குப் பதிலாக பயிரிடப்படும் பயிரின் தன்மை, பயிரிடப்படும் நிலத்தின் பரப்பு ஆகியவற்றையொட்டி கடன் வழங்கும் பயிர்க் கடன் முறையைப் பின்பற்றியதுமேயாகும். சங்கங்கள் 1960–61-ல் ரூ. 25 கோடி கடன் வழங்கின. இக் கடன் தொகை 1965–66-ல் (மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி ஆண்டு) ரூ. 30.34 கோடியாக உயர்ந்தது. இது, 1972-73-ல் ரூ. 65 கோடியாக உயர்ந்தது.

வேளாண்மைக் கடன் (நீண்ட காலக் கடன்).

1.7. நீண்ட கால வேளாண்மைக் கடன் வழங்குவதைப் பொறுத்த மட்டில், ஒவ்வொரு வட்டத்திற்கும் நில அடைமான வங்கி ஒன்று இருக்க வேண்டுமென்ற கொள்கை கடைசி பத்தாண்டுகளில் பின்பற்றப்பட்டது. 1969-70-ல், ஒவ்வொரு வட்டாரத்திற்கு ஒரு வங்கி இருக்கும் வகையில், வங்கிகளைச் சீரமைப்பது உகந்ததென்று கருதப்பட்டது. அவற்றின் எண்ணிக்கை 106-லிருந்து 223 ஆக உயர்த்தப்பட்டது. எனினும், ரிசர்வ் வங்கி கேட்டுக்கொண்டதன் பேரில், வங்கிகள் தனித்தியங்கக் கூடியதாய் இருக்க வேண்டுமென்ற கருத்து வலியுறுத்தப்பட்டு, வங்கிகளின் எண்ணிக்கை உயர்வது நிறுத்தப்பட்டது. ஏற்கெனவே உள்ள வங்கிகளில் 154 கிளை வங்கிகளை தனி வங்கிகள் இல்லாத வட்டாரங்களில் ஏற்படுத்துவதென முடிவு செய்யப்பட்டது. தமிழ் நாடு மாநில நிலவள வங்கி திரட்டும் கடனீட்டுறுதிப் பத்திரங்களில் முதலீடு செய்வதன் மூலம் நில மேம்பாடு—சிறு பாசனத் திட்டங்களுக்குப் பெருமளவில் நிதியுதவி வழங்க 1968-லிருந்து வேளாண்மை மறுநிதியுதவிக் கழகம் முன்வந்துள்ளது. 1971-லிருந்து, அனைத்துநாட்டு வளர்ச்சி நிறுவனத்தின் நிதிகள், இந்தக் கடனீட்டுறுதிப் பத்திரங்களில் முதலீடு செய்வதற்காக வேளாண்மை மறு நிதியுதவிக் கழகம் மூலம் வழங்கப்படுகிறது. 1—4—1968-லிருந்து அரசு, உழவர்களுக்கு நேரடியாகக் கடன் வழங்குவதை நிறுத்தியுள்ளது. மேலும், கிணறுகள், விசையேற்றங்கள் முதலியவற்றிற்காக வழங்கப்படும் கடன்கள் நிலவள வங்கிகள் மூலமாக மட்டுமே வழங்கப்பட வேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளது. கடன் வழங்கு நடைமுறைகள் சீரமைக்கப்பட்டு, வங்கிகள் உற்பத்தி அடிப்படையில் கடன் வழங்கும் கொள்கைகளைப் பின்பற்றத் தொடங்கியுள்ளன. முந்தியக் கடன்களைக் கொடுத்துத் தீர்ப்பதற்காக புதியக் கடன்கள் வழங்குவதற்குப் பதிலாக, உற்பத்திக் காரியங்களுக்கென புதியக் கடன்கள் வழங்குவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது என்பதை உணர்த்துவதற்காக, ‘நில அடைமான வங்கி’ என்ற பெயர் ‘நிலவள வங்கி’ என்று மாற்றப்பட்டது. மாநில நிலவள வங்கி வழங்கிய நீண்ட காலக் கடன் 1960-61-ல் சுமார் ரூ. 2 கோடியாக மட்டுமே இருந்தது. 1965-66-ல் ரூ. 3.62 கோடியாகவும் 1967-8-ல் ரூ. 8.52 கோடியாகவும் உயர்ந்தது. 1969-70-ல் கடன் வழங்கும் அளவில் கணிசமான உயர்வு ஏற்பட்டு, வழங்கப்பட்ட கடன் தொகை ரூ. 17.49 கோடியாக உயர்ந்தது. 1971-72-ல், 1972-73-ல் வழங்கப்பட்ட கடன்கள் (வேளாண்மை மறுநிதி உதவிக் கழகம், அனைத்துநாட்டு வளர்ச்சி நிறுவனத் திட்டங்கள் உட்பட) முறையே மொத்தம் ரூ. 25.25 கோடியாகவும் ரூ. 19 கோடியாகவும் இருந்தன.

வேளாண்மை விளைபொருள் விற்பனை வசதி.

1.8. வேளாண்மை விளைபொருள் விற்பனை வசதியைப் பொறுத்தமட்டில் தொடக்க விற்பனைச் சங்கங்களின் எண்ணிக்கை (1961-ல் 126, 1972-ல் 132) தொடர்ந்து கிட்டத்தட்ட ஒரே மாதிரியாகவே இருந்தது. உருளைக்கிழங்கு,

பாக்கு, காப்பி போன்ற குறிப்பிட்ட விளைபொருட்களின் விற்பனையைக் கவனித்துவரும் ஒரு சில விற்பனைச் சங்கங்களைத் தவிர, ஒரு வட்டத்தில் முக்கியமான பயிர்களின் விற்பனையை மேற்கொள்ள பொதுவாக ஒரு சங்கமே ஒரு வட்டத்தில் செயல்பட்டது. இச்சங்கங்கள் விற்பனை செய்த வேளாண்மை விளைபொருட்களின் மதிப்பு 1960-61-ல் ரூ. 2.71 கோடியாக இருந்தது. 1966-67-ல் ரூ. 8.36 கோடியாகவும் 1971-72-ல் ரூ. 11.50 கோடியாகவும் உயர்ந்தது. 1960-61-ல் ரூ. 4.19 கோடி மதிப்புள்ள உரங்கள், ஏனைய வேளாண்மை குறித்த பயிரிடு பொருள்களையும், 1966-67-ல் ரூ. 9.44 கோடி மதிப்புள்ள உரங்கள், ஏனைய பயிரிடு பொருள்களையும் அச்சங்கங்கள் வழங்கின. இது 1971-72-ல் ரூ. 19.49 கோடியாக உயர்ந்தது. எனினும், செய்முறைத் துறையில் விற்பனைச் சங்கங்கள் அவ்வளவாக முன்னேற்றம் காட்டவில்லை. 1966-67-ல் அவைகளுக்குச் சொந்தமான 84 பிரிவுகள் விதையெடுக்கும் இயந்திரங்கள், வேர்க்கடலை மேல்தோல் உரித்து எடுக்கும் இயந்திரங்கள் (பருத்தி எண்ணெய் ஆலைகள், அரிசி ஆலைகள்) ஆண்டொன்றுக்கு 1.92 லட்சம் மெட்ரிக் டன் செய்முறைப் படுத்தும் திறன் கொண்டவையாக இருந்தன. ஆனால் அவை உண்மையில் 0.46 லட்சம் டன்னை மட்டுமே செய்முறைப்படுத்தின. 1971-72-ல் மொத்தம் 3.41 லட்சம் டன் செய்முறைப்படுத்தும் திறன் இருந்ததற்கு மாறாக, 0.64 லட்சம் டன் மட்டுமே செய்முறைப்படுத்தப்பட்டது. தொடக்க விற்பனைச் சங்கங்கள் இணைக்கப்பட்ட மாநிலம் அளாவிய நிறுவனமாகிய தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு, விற்பனைச் சங்கங்கள், நுகர்வோர் சங்கங்கள் ஆகிய இரண்டின் கூட்டமைப்பாக 1959-ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் பின்னர் விற்பனைச் சங்கங்கள் கூட்டமைப்பாக 1966-ல் இது மாற்றி அமைக்கப்பட்டது. உரங்கள் வழங்குவதில் இது முக்கியமான பங்கு ஆற்றி வருகிறது. 1966-67-ல் அதன் விற்பனைத் தொகை ரூ. 2.17 கோடியாக இருந்தது. இது 1971-72-ல் ரூ. 9.92 கோடியாக உயர்ந்தது. அதில் உர விற்பனை மூலம் ரூ. 8.50 கோடி கிடைத்தது. வெளியூரில் உரமாரித் தொழிற் சாலை ஒன்றை அது அமைத்துள்ளது. சென்னை மாநகரில் குளிர்ப்பதன நிலையம் ஒன்றையும் அமைத்து வருகிறது. மாநிலத்தின் பல்வேறு உற்பத்தி நிலையங்களில் தூய்மைப்படுத்தப்பட்ட வேர்க்கடலை (ரேடியோ) எண்ணெய், சூரிய காந்தி எண்ணெய், பருத்தி விதை எண்ணெய் முதலியவற்றை உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலைகளை அமைக்கவும் அது திட்ட மிட்டுள்ளது.

பொது வேளாண்மைப் பணிகளுக்கான சங்கங்கள்.

1.9. மாநில அளவில் தங்களுக்கென்று கூட்டமைப்பு ஒன்றுடன் இறைவைப் பாசனச் சங்கங்களை அமைத்தது, அண்மை ஆண்டுகளில் வேளாண்மைத் துறையில் கூட்டுறவு முயற்சி அடிப்படையில் ஏற்பட்டுள்ள சிறப்பான வளர்ச்சியாகும். சிறு அளவு நிலங்கள் வைத்துள்ள உழவர்கள் தங்கள் நிலங்களை ஒருங்கு சேர்க்க உதவுவதும், பொதுவான பாசனவாயிலை அமைப்பதுமே அவைகளின் முக்கிய நோக்கமாகும். 1971-72-ல் 2,000-க்கு மேற்பட்ட சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆனால், பெரும்பாலானவை இன்னும் விரைந்து செயல்படவில்லை. வேளாண் பொறியல் பணிக் கூட்டறவு நிலையங்களை ஏற்படுத்தியது துணை வளர்ச்சி யாகும். மாநில அளவில் கூட்டமைப்பு ஒன்றுடன் வளர்ச்சி வட்டார அளவில் 140 சங்கங்களையும், மாவட்ட அளவில் 16 சங்கங்களையும் ஏற்படுத்தியது. உழவர்களுக்கு வேளாண் பொறியியல் பணியை அளிப்பதே அவற்றின் நோக்கமாகும். கிணறுகளைத் தோண்டுதல், ஆழப்படுத்துதல், விசையேற்றங்களை நிறுவுதல், டிராக்டர்களையும் பிற துணைப் பொருள்களையும் வாங்குதல் ஆகியவற்றிற்காக நில வள வங்கிகள் விரிவான அளவில் கடன் வழங்கு திட்டத்தை மேற்கொண்டதைத் தொடர்ந்து, இறைவைப் பாசனச் சங்கங்கள், வேளாண் பணி—பொறியியல் நிலையங்கள் ஆகியவற்றை ஏற்படுத்தும் கருத்து உருவாகியது.

வேளாண்மை வினை பொருளை கூட்டுறவுத் துறையில் செய்முறைப் படுத்துதல்.

1.10 வேளாண்மை விளைபொருளைக் கூட்டுறவுத் துறையில் செய் முறைப்படுத்துவதில் கடைசி பத்து ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. 1960-61-ல் உரிமம் வழங்கப்பட்டுள்ள ஆறு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில், மூன்று ஆலைகள் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. அவை 3.62 லட்சம் டன் கரும்பைச் சாறு பிழிந்து, 32,500 டன் சர்க்கரையை உற்பத்தி செய்தன. 1971-72-க்குள் உரிமம் வழங்கப்பட்டுள்ள 10 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில், 7 ஆலைகள் உற்பத்தியைத் தொடங்கின. அவை 10 லட்சம் டன் கரும்பைச் சாறு பிழிந்து, 95,000 டன் சர்க்கரை உற்பத்தி செய்தன. (தனியார் துறையில் உள்ள 9 ஆலைகள் உட்பட) இம்மாநிலத்தில் உள்ள 16 சர்க்கரை ஆலைகள் அனைத்தும் மொத்தம் உற்பத்தி செய்த 2.98 லட்சம் டன் சர்க்கரையில் 32 சதவீதம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளால் உற்பத்தி செய்யப்பட்டது.

கூட்டுறவு பாற்பண்ணை.

1.11. கூட்டுறவு முறையில் பால் வழங்கும் முயற்சி சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டது. அப்போது சென்னை மாநகரின் புறநகர்ப் பகுதிகளில் பால் வழங்கு சங்கங்கள் அமைக்கப்பட்டன. 1961-ல் (21 யூனியன்கள் உட்பட) 1,007 பால் வழங்கு சங்கங்கள் இருந்தன. 1967-ல் (23 யூனியன்கள் உட்பட) 2,653 சங்கங்கள் இருந்தன. 31—3—1972-ல் (23 யூனியன்கள் உட்பட) 2,345 சங்கங்கள் இருந்தன. இவற்றில், 1,195 சங்கங்கள் செயல் முடங்கியிருந்தன. செயல்பட்ட சங்கங்களில், சுமார் 500 சங்கங்கள் மட்டுமே நல்ல முறையில் செயல்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அவற்றில் சுமார் 200 சங்கங்கள் மட்டுமே பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களாக உண்மையில் செயல்படுகின்றன. உரிய ஆதாயமற்ற முறையில் செயல்பட்டு வருகிற சங்கங்களைக் கலைத்துவிட்டு எஞ்சிய சங்கங்களைத் தனித்தியங்கவல்ல சுமார் 850 சங்கங்களாக மாற்றி அமைப்பதற்கான திட்டம் ஒன்றைக் கூட்டுறவுத் துறை மேற்கொண்டுள்ளது. 1967-68-ல் இச்சங்கங்கள் மொத்தம் சுமார் 1.64 லட்சம் லிட்டர் பாலை உற்பத்தி செய்தன. 1971-72-ல் இது 2.41 லட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது. ஒவ்வொரு சங்கமும் சராசரியாக உற்பத்தி செய்த பாலின் அளவு 107 லிட்டரிலிருந்து 214 லிட்டராக உயர்ந் துள்ளது. தனித்தியங்கவல்ல சங்கம் ஒன்று நாளொன்றுக்கு குறைந்தது 500 லிட்டர் பால் உற்பத்தி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நகர்ப் புறங்கள் பெருகிவருவதாலும், பாலுக்குத் தேவை பெருகி வருவதாலும் தொலைவான இடங்களிலிருந்து பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் பாலைச் சேகரிக்க வேண்டிவந்தது. இதனால் விரைவில் பாலைக் கொண்டுவரும் முன்னரே பதப்படுத்தும் பிரச்சினைகள் பல ஏற்பட்டன. கூட்டுறவு பால் வழங்கு சங்கங்கள் பல, பாலை 'பாஸ்டர் முறையில்' பதப்படுத்தும் இயந்திரங்களையும், குளிர வைக்கும் நிலையங்களையும் அமைத்துள்ளன. பாலைக் கொண்டு செல்வதற்கான வண்டிகளையும் வாங்கியுள்ளன. பால் பண்ணையைப் பொறுத்த வரையில், குஜராத் மாநிலத்துடன் ஒப்பிடுகையில், தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்கள் பெருமளவு முன்னேற வேண்டும். குஜராத்தில் உள்ள பால் வழங்கு யூனியன்களும், சங்கங்களும் 1969-70-ல் ரூ. 36.56 கோடிக்கும், ரூ. 23.91 கோடிக்கும் பால் விற்பனை செய்தன. தமிழ்நாட்டில் உள்ள யூனியன்களும், சங்கங்களும் முறையை ரூ. 2.28 கோடிக்கும், ரூ. 5.53 கோடிக்கும் பால் விற்பனை செய்தன.

மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் :

1.12. தமிழ்நாட்டில் உள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் ஓரளவு முன்னேற்றம் அடைந்து வருகின்றன. 1961-ல் இத்தகைய 279 சங்கங்கள் இருந்தன. 1966-ல் அவை 401 ஆகவும் 1972-ல் 465 ஆகவும் உயர்ந்துள்ளன.

(விற்பனை யூனியன்கள் உட்பட) 1961-ல் 7 ஆக இருந்த விற்பனைக் கூட்டமைப்புகள் 1966-ல் 16 ஆகவும் 1972-ல் 18 ஆகவும் உயர்ந்துள்ளன. கடலில் மீன் பிடிக்கும் மீனவர்களின் குப்பங்கள், உள்நாட்டு நீர்நிலைகளில் மீன்பிடிக்கும் மீனவர்களின் குப்பங்களின் பெரும்பகுதி ஆகியவை இச் சங்கங்களில் அடங்கும். விற்பனைப் பிரிவுகள் செவ்விய முறையில் செயல்பட முடியவில்லை. அண்மையில் மேற்கொண்ட நடவடிக்கை, மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மீனவர்களுக்குச் செவ்விய முறையில் உதவும் முகவாமைப்பாகச் செயல்பட உறுதி அளிக்கிறது.

சென்னை, திருநெல்வேலி ஆகிய இடங்களிலுள்ள கூட்டுறவுக் கூட்டமைப்பு களுக்கு முறையே ரூ. 34 லட்சம், ரூ. 78 லட்சம் மூலதனச் செலவுடைய மீன்வள வளர்ச்சித் திட்டங்களுக்காக வேளாண்மை மறு நிதியுதவிக் கழகம் நிதியுதவி வழங்கியுள்ளது.

காால்நடை வளர்ப்பில் கூட்டுறவு.

1.13. கால்நடை வளர்ப்புத் துறையில், செம்மறியாடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் 52-ம், கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் 115-ம் உள்ளன. இவற்றில் பெரும்பாலான சங்கங்கள் 1972-ல் அமைக்கப் பட்டவையாகும். இத்துறையிலும் ஒரு முக்கியமான வளர்ச்சி ஏற்பட் டுள்ளது. அதாவது, செம்மறியாடு வளர்ப்புத் திட்டம் (இதில் 39 சங்கங்கள் அடங்கும்) ஒன்றுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கான மூலதனச் செலவு ரூ. 51 லட்சமாகும். இத்திட்டத்திற்கு வேளாண்மை மறுநிதியுதவிக் கழகம் கடனுதவி அளிக்கிறது.

கைத்தறித் தொழிலில் கூட்டுறவு.

1.14. குடிசைத் தொழில் துறையில் கூட்டுறவு இயக்கமானது ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் முதற்கண் கைத்தறித் துறையில் தொடங்கியது. அப்போது 1920-ல் காஞ்சிபுரத்தில் முதல் நெசவாளர் சங்கம் அமைக்கப் பட்டது. நெசவாளர் தலைமைச் சங்கம் 1935-ல் அமைக்கப்பட்டது. 1952-ல் அனைத்திந்திய கைத்தறி வாரியம் அமைக்கப்பட்டு, கூட்டுறவுத் துறையில் நெசவாளர்களுக்குப் பெருமளவில் நிதியுதவி செய்யப்பட்டது. இதன் பயனாக, நெசவாளர் சங்கங்களின் எண்ணிக்கையும், அவற்றின் உறுப்பினர் களின் எண்ணிக்கையும், உற்பத்தி அளவு, விற்பனை அளவு ஆகியவையும் பெருமளவில் உயர்ந்தன. 1961-ல் 1,064 சங்கங்களும், 1966-ல் 1,130 சங்கங் களும் இருந்தன. இவை முறையே ரூ. 10.15 கோடி மதிப்புக்கும் ரூ. 13.02 கோடி மதிப்பிற்கும் துணியை உற்பத்தி செய்தன. 1970-71-ல் (தனித்தியங்கும் அடிப்படையில் சீரமைக்கப்படுதல் திட்டத்தை யொட்டி எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ள) 703 சங்கங்கள் ரூ. 15.23 கோடி மதிப்புக்குத் துணியை உற்பத்தி செய்தன. நெசவாளர் சங்கங்களின் செயல் முறையில் நல்ல விளைவை ஏற்படுத்திய முக்கியமான மேம்பாடு யாதெனில், நியாயமான விலையில் போதுமான அளவில் நூல் வழங்குவதற்காகச் சங்கங் களுக்கென்று சொந்தமாகப் பல கூட்டுறவு நூற்பு ஆலைகள் ஏற்படுத்தப் பட்டதேயாகும். 1961-ல் 4 ஆலைகள் இருந்தன. இப்போது 12 ஆலைகள் இருக்கின்றன. ஒவ்வோர் ஆலையின் நூற்புத்திறன் 12,000 முதல் 25,000 கதிர் களாகும். இவை திங்கள் ஒன்றுக்கு 4,500 பொதி நூலை உற்பத்தி செய்கின்றன. ஆனால், நெசவாளர் சங்கங்களுக்குத் தேவைப்படுவதோ சுமார் 3,475 பொதிகள் மட்டுமேயாகும்.

கிராமத் தொழிலில் கூட்டுறவு.

1.15. பனைவெல்லம் தயாரித்தல், தோல் பதனிடுதல், தேனீ வளர்த்தல், செங்கல் சூளை, மட்பாண்டத் தொழில் போன்ற ஏனைய கிராமத் தொழில் களுக்கும் கூட்டுறவு இயக்கம் பரவியுள்ளது. மேற்குறிப்பிட்ட தொழில்களில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களுக்கு உதவுவதே இதன்

நோக்கமாகும். இவர்களுக்காக அமைக்கப்பட்ட சங்கங்கள், 1960-லிருந்து மாநிலக் கதர்-கிராமத் தொழில் வாரியம் அமைக்கப்பட்ட பின்னர், முறைப்படியும் பெருமளவிலும் உதவி பெற்று வருகின்றன. மாநிலக் கதர்-கிராமத் தொழில் வாரியம் தனக்குத் தேவைப்படும் நிலையில் பெரும் பகுதியைப் பம்பாய் கதர்-கிராமத் தொழில் ஆணைக்குழுவிட மிருந்து பெறுகிறது. 3,034 கிராமத் தொழில் சங்கங்கள் உள்ளன. இவற்றில் பெரும்பாலான சங்கங்கள் (1,563) பனைவெல்லத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளன. கிராமத் தொழில் சங்கங்கள் பற்றி வருந்தத்தக்க கூறு யாதெனில் இங்கு 3,034 சங்கங்களில் பெரும்பாலானவை செயல் படாது முடங்கிய நிலையில் அல்லது விரயத்தில் செயல்படுகின்றன என்ப தாகும். கிராமத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 1–4–1972 முதல் 30–9–1972 வரை (6 மாதங்கள்) உற்பத்தி செய்த, விற்பனை செய்த பொருள் களின் மொத்த மதிப்பு முறையே, ரூ. 1,29.52 லட்சமும், ரூ. 1.45.21 லட்சமும் ஆகும்.

ஏனைய சிறு தொழில்களில் கூட்டுறவு.

1.16. கிராமத் தொழில் நீங்கலாக, உலோகப்பணிகள், தச்சு வேலை, கருமார் தொழில், பொறியியல், தீப்பெட்டி தயாரித்தல் முதலிய சிறு தொழில்கள் குறித்தும் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வந்துள்ளன. 1961-ல் இதுபோன்ற சங்கங்கள் 319 இருந்தன. இவை 1960-61-ல் ரூ. 68 லட்சம் மதிப்புடைய பொருள்களை உற்பத்தி செய்தன. 1966-ல் 405 சங்கங்கள் இருந்தன. இவை ரூ. 1,71.45 லட்சம் மதிப்புடைய பொருள்களை உற்பத்தி செய்தன. 1971-72-ல் 313 சங்கங்கள் இருந்தன. இவற்றின் உற்பத்தி, விற்பனை முறையே ரூ. 4,83.77 லட்சமும், ரூ. 5,93.33 லட்சமும் ஆகும். கிராமத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களைப் போலவே, தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் குறித்தும் நமக்கு வருத்தத்தை அளிக்கக் கூடிய நிலை இருக்கிறது. முந்நூற்றுப்பதிமூன்று சங்கங்களில் 192 சங்கங்கள் விரயத்தில் செயல்படுகின்றன. தொழில் கூட்டுறவுச் சங்கங்களிடையே, 10 தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலைகள் நீலகிரி மாவட்டத்தில் உள்ளன. இவை நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. ஆயினும், தேயிலை வளர்ப்போரின் பயனுக்காகத் தேயிலை பதப்படுத்தும் பெரிய சங்கங்களாக மேற்படி தொழிற்சாலைகள் கருதப்பட வேண்டுமேயல்லாமல் (கரும்பு பயிரிடுவோருக்கான சர்க்கரை ஆலைகள் போன்று) தொழிற்சாலை தொழிலாளர்களுக்கான சங்கங்களாகக் கருதப்படுவதற்கில்லை. தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி செய்யும்பொருட்டு 1961-ல் தொழில் கூட்டுறவு வங்கி ஒன்று தனியாக ஏற்படுத்தப்பட்டது. ஆனால், எதிர்பார்த்த அளவிற்கு இதன் நிதிவாயில்கள் வளர்ச்சி பெறவில்லை. கொடுத்த கடன் தொகையைத் திரும்பப் பெறுவதற்கான வசதிகள் ரிசர்வ் வங்கியிடமிருந்து கிடைக்காமையே தொழில் கூட்டுறவு வங்கியின் நிதிவாயில்கள் வளர்ச்சி அடையாததற்கான முக்கியக் காரணங்களுள் ஒன்றாகும். தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்காகவென்றே தனியாக ஒரு வங்கி அமைப்பதை ரிசர்வ் வங்கி எதிர்த்துள்ளது. தொழில் கூட்டுறவு வங்கியை முறையான கூட்டுறவு வங்கி அமைப்பாக ஒருங்கிணைப்பது பற்றிப் பரிசீலிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்.

1.17. தமிழ்நாட்டில் கூட்டுறவு இயக்கம் எவ்வளவு காலமாக இருந்து வருகிறதோ அவ்வளவு காலமாக நுகர்வோர் கூட்டுறவுச் சங்கமும் இருந்து வருகிறது. திருவல்லிக்கேணி நகர்ப்புறக் கூட்டுறவுச் சங்கம் (T.U.C.S.) 1904-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. இந்த வகையில் இதுவே முதலாவதாகும். பண்டகசாலை, சங்கங்கள் பொதுவாக, இன்றியமையாப் பொருள்கள் பற்றுக் குறையாக இருந்த காலங்களில் நிறைந்த வளர்ச்சி பெற்றன. இரண்டாவது உலகப் போரின் போதும், போருக்குப் பிந்திய காலத்திலும் சங்கங்களின் எண்ணிக்கை விரைந்து

பெருகியது. பொதுவாகப் பயன் படுத்தப்படும் பொருள்கள் மீது கட்டுப்பாடு விதிக்கப்பட்டதன் காரணமாக சங்கங்களின் மொத்த வியாபாரத் தொகையும் சங்கங்களின் எண்ணிக்கையும் பெருகின. 1962-ல் சீனப் படையெடுப்பு, 1965-ல் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு ஆகியவற்றின் விளைவாக இன்றியமையாப் பொருள்களின் விலைகள் உயர்ந்தன. அதனால் சிறிது காலத்திற்கு நுகர்வோர் பண்டகசாலைகளின் வளர்ச்சி மேலும் பெருகியது. ஆனால், கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதன் விளைவாக அவற்றின் வியாபாரம் குறைந்தது. கடைசி பத்தாண்டு காலத்தில், நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தில் முக்கியமான மேம்பாடுகள் ஏற்பட்டன. மத்திய அரசு ஆதரவளிக்கும் திட்டங்களின்கீழ் மொத்த விற்பனை பண்டகச்சாலைகளும் சிறப்பங்காடிகளும் அமைக்கப்பட்டன. மாநில அளவில் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் சம்மேளனம் ஒன்று ஏற்படுத்தப் பட்டது. 1961-ல் 864 ஆக இருந்த தொடக்க பண்டகசாலைகளின் எண்ணிக்கை 1967-ல் 1,246 ஆக உயர்ந்தது. 1970-71-ல் 1,132 பண்டகசாலைகள் மட்டுமே இருந்தன. 1968-69-ல் இவற்றின் மொத்த விற்பனைத் தொகை ரூ. 33.97 கோடியாகும். 1970-71-ல் இது ரூ. 26.95 கோடியாகக் குறைந்து விட்டது. மாவட்ட வழங்கல் மொத்த விற்பனைப் பண்டகசாலைகளின் விற்பனையும் இதுபோலவே குறைந்துள்ளது. 1966-67-ல் இவற்றின் மொத்த விற்பனைத் தொகை ரூ. 45.39 கோடியாகும். 1971-72-ல் இது ரூ. 35.43 கோடியாகக் குறைந்து விட்டது. விரயத்தில் செயல்படும் பண்டகசாலைகளின் எண்ணிக்கையும் படிப்படியாக உயர்ந்து வந்துள்ளது.

கூட்டுறவு வீட்டு வசதி.

1.18.1. தமிழ் நாட்டில் முதலாவது கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் 1913-14-ல் கோயம்புத்தூரில் அமைக்கப்பட்டாலுங்கூட, 1923-ல் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களுக்கு நீண்ட காலக் கடன்கள் வழங்குவதற்கான விதிகளை மாநில அரசு வகுத்தபோதுதான் சங்கத்தின் வளர்ச்சியில் முன்னேற்றம் ஏற்படத் தொடங்கியது. வீட்டு வசதி மேம்பாடு, குறைந்த வருமானம் பெறுபவர்கள், நடுத்தர வருமானம் பெறுபவர்கள், தொழிற்சாலைத் தொழிலாளர்கள் ஆகியோருக்காக அனைத்து இந்திய அளவில் பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களை வகுத்தல் ஆகியவற்றிற்கு அரசு உதவியளிக்க வேண்டிய அவசியம் முப்பது ஆண்டுகளுக்குப் பின்னரே, அதாவது, இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்களின் போதே உணரப்பட்டது. தமிழ் நாட்டில் உள்ள கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் பொதுவாக இருவகையில் உருவாகியுள்ளன. ஒன்று, வீடு கட்டக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கமாகும். மற்றொன்று, தானே வீடுகளைக் கட்டிக்கொடுக்கும் கூட்டுறவுச் சங்கமாகும். இச் சங்கம் வீடுகளைக் கட்டி அவற்றைத் தனது உறுப்பினர்களுக்குத் தவணைக் கொள்முதல் அடிப்படையில் வழங்குகின்றது. இவ்வகைச் சங்கங்கள் நகர்ப்புறப் பகுதிகளிலும் கிராமப்புறப் பகுதிகளிலும் உள்ளன. தற்போது 950 வீட்டு வசதிச் சங்கங்கள் உள்ளன. இவற்றில், 877 சங்கங்கள் தற்பொது கிராமப் பகுதிகளில் உள்ளன. 1967 இல் இம் மாநிலத்தில் 877 சங்கங்கள் இருந்தன. அவற்றில் 388 சங்கங்கள் கிராமப் பகுதிகளில் இருந்தன. 1971-72-ல் இச் சங்கங்கள் வழங்கிய மொத்தக் கடன் தொகை ரூ. 80 இலட்சமாகும்.

1.18.2. வீட்டு அடைமான வங்கிகள், மற்றொரு வகை வீட்டு வசதிச் சங்கங்களாகும். புதிய வீடுகள் கட்டுவதற்காக வீட்டு வசதிச் சங்கங்கள் அமைக்கப்பட்டபோது, சங்கங்களின் உறுப்பினர்கள் தங்களது வீடுகளின் மீது முன்னர் உள்ள அடைமானங்களைத் தீர்க்கவும் தற்போதுள்ள வீடுகளைப் பழுதுபார்த்து சீர் செய்யவும் அவர்களுக்குக் கடன் வழங்க வீட்டு அடைமான வங்கிகள் செயலுக்கு வந்தன. இம் மாநிலத்தில் முதலாவது வீட்டு அடைமான வங்கி 1912 இல் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், 1959 வரை அத்தகைய வங்கிகள் ஐந்துதான் இருந்தன. இவை தங்கள்

நிதிவாயில்களுக்கு, அவை திரட்டும் நீண்ட கால வைப்பீட்டுத் தொகைகளையும் முன்னாள் தென்னிந்திய கூட்டுறவு இன்ஷூரன்ஸ் சங்கத்திடமிருந்து (பின்னர் இது நாட்டுடைமையாக்கப்பட்டது) பெறும் கடன்களையுமே பெரிதும் நம்பியிருந்தன. 1959 இல், பெரிய நகராட்சிகள் அனைத்திலும் வீட்டு அடைமான வங்கிகளைப் படிப்படியாக அமைக்கவும் இவற்றிற்கு நிதியுதவி செய்ய மத்திய வீட்டு அடைமான வங்கி (தற்போது இதன் பெயர் தமிழ் நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் என்று மாற்றப்பட்டுள்ளது) ஒன்றை ஏற்படுத்தவும் அரசு முடிவு செய்தபோது, வீட்டு அடைமான வங்கிகள் வளர்ச்சி பெறத் தொடங்கின. 1961 இல் 31 தொடக்க நிலை வீடு அடைமான வங்கிகள் இருந்தன. தற்போது அத்தகைய 93 வங்கிகள் உள்ளன. இவை தங்களுக்குத் தேவையான நிதிவசதியைத் தமிழ் நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்திடமிருந்து பெறுகின்றன. தமிழ் நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் தனது நிதிவாயில்களுக்கு ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தையே பெரிதும் நம்பியிருக்கிறது. இந்த மத்திய நிறுவனம் ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து இதுவரை சுமார் ரூ. 10 கோடி கடன் பெற்றுள்ளது. 1972 இல், நிதி வசதிக்காக வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் தமிழ் நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்துடன் இணைக்கப்பட வேண்டுமென்று அரசு ஆணைகளைப் பிறப்பித்தது. அரசு நேரடியாக நிதியுதவி செய்வதன் அவசியத்தைத் தவிர்க்கவும், கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து உயர்ந்த அளவுக்கு எவ்வளவு கடன் பெறமுடியுமோ அவ்வளவு கடன் பெறவும் வேண்டி இவ்வாறு ஆணை பிறப்பிக்கப்பட்டது.

கூட்டுறவுக் கல்வியும் பயிற்சியும்.

1.19. கூட்டுறவு இயக்கம் செவ்வையாகவும் சீராகவும் வளர்ச்சி பெற வேண்டுமானால், அதற்கு அறிவார்ந்த உறுப்பினர்களும் கூட்டுறவு அமைப்புகளின் நிர்வாகத்தில் அவர்களின் தீவிரமான பங்கும் கூட்டுறவு, அது சார்ந்த பணிகள் ஆகியவற்றின் கோட்பாடுகள் நடைமுறைகள் பற்றி அறிவு பெற்று, கூட்டுறவுப் பணிகளுக்காகவே தம்மை அர்ப்பணித்துக் கொள்ளும் தலைவர்களும் தொழிலாளர்களும் இருக்க வேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும். வெவ்வேறு நிலைகளுக்குத் தகுந்த கூட்டுறவு கல்வி–பயிற்சி முறை ஒன்று இருந்தால் தான் இது சாத்தியமாகும். அதிர்ஷ்டவசமாக, இம் மாநிலத்தில் கூட்டுறவு இயக்கம் தோன்றியவுடன் அத்தகைய கல்வி பயிற்சிக்கான அவசியம் உணரப்பட்டது. கூட்டுறவுக் கல்வி–பயிற்சிக்காக மாகாணக் கூட்டுறவு யூனியன் ஒன்று (தற்போது இது தமிழ் நாடு கூட்டுறவு யூனியன் ஆகும்) 1914 ஆம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டது. 1928 இல் வேளாண்மை குறித்து அமைக்கப்பட்ட ராயல் ஆணைக் குழுவைத் தொடர்ந்து அடுத்தடுத்துவந்த குழுக்கள் செய்த பரிவுரைகளின் பேரில், உறுப்பினர்கள், குழு உறுப்பினர்கள், நிர்வாகிகள், அரசுப் பணியாளர்கள், அரசுச் சார்பற்ற பணியாளர்கள் ஆகியோருக்குப் பயிற்சியளிக்கும் திட்டங்கள் கொண்டுவரப்பட்டு அவ்வப்போது மேம்படுத்தப்பட்டன. கூட்டுறவு நிறுவனங்களில் வேலைக்கமர்த்தப் பெறுவதற்காக இளநிலைப் பணியாளர்களுக்குப் பயிற்சியளிக்கத்தக்கத் தற்போது ஏழு நிலையங்களும், கூட்டுறவுத் துறையில் இளநிலைப் பணியாளர்களாக வேலைக்கமர்த்தப்படுவதற்குத் தெரிந்தெடுக்கப் பட்ட நபர்களுக்குப் பயிற்சியளிக்க ஒரு நிலையமும் உள்ளன. இவை தவிர, கூட்டுறவு நிறுவனங்கள், கூட்டுறவுத் துறை ஆகியவற்றைச் சேர்ந்த இடை-நிலைப் பணியாளர்களுக்குப் பயிற்சியளிக்கக் கூட்டுறவுக் கல்லூரி ஒன்று உள்ளது. கூட்டுறவுக் கல்வி, பயிற்சி தொடர்பாக அண்மைக் காலத்தில் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கூட்டுறவுக் கல்வி நிதியும், கூட்டுறவு மேம்பாட்டு நிதியும், அமைப்பதற்காகச் சட்டமியற்றப்பட்டது. அத்துடன், மாவட்ட, வட்டக் கூட்டுறவு யூனியன்கள் ஏற்படுத்தப்பட்டன.

அறிக்கையின் ஆய்வரம்பு.

1.20. கூட்டுறவு பரந்து விரிந்த ஒரு பொருளாகும். கூட்டுறவு இயக்கத்தின் செயல்முறைபற்றி ஆய்வு செய்ய அனைத்து இந்திய அளவிலும் மாநில அளவிலும் பல குழுக்கள் இருந்து வந்துள்ளன. கூட்டுறவு இயக்கத்தில், கடன் வழங்கல், விற்பனை, கைத்தறி போன்ற குறிப்பான சில துறைகள்பற்றி ஆய்வு செய்யவும் குழுக்கள் இருந்து வந்துள்ளன. தமிழ் நாட்டில் கூட்டுறவு இயக்கத்தின் செயல்முறை குறித்து ஆய்வு செய்ய கடைசியாக அமைக்கப்பட்ட குழுவிற்குத் திரு. க. சந்தானம் தலைவராக இருந்தார். இக்குழு தனது அறிக்கைகளை 20—6—68 அன்றும் 5—5—69 அன்றும் பணிந்தனுப்பியது. கைத்தறித் தொழில் சிக்கல்கள் குறித்து ஆய்வு செய்ய திரு. க. சந்தானம் அவர்களையே தலைவராகக் கொண்ட மற்றொரு குழு நியமிக்கப்பட்டது. இக்குழு தனது அறிக்கையில், கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்களைப் பற்றியும் ஆய்வு செய்துள்ளது. ஆகவே, கூட்டுறவுத் துறையின் அலுவல்கள் தொடர்பாகத் துறையின் தற்போதைய பணியாளர் அமைப்பைப் பற்றியே நாங்கள் முக்கியமாக ஆய்வு செய்து பரிவுரை செய்துள்ளோம். கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள், நிர்வாகக் குழுக்களின் அமைப்பு, கூட்டுறவு இயக்கத்தின் வெவ்வேறு துறைகளின் நோக்கங்கள் தொடர்பாக அத் துறைகளில் காணப்படும் சிக்கல்கள் ஆகியவை பற்றியும் நாங்கள் சிறிது விரிவாக ஆய்வு செய்துள்ளோம்.

அத்தியாயம் 2.

துறை அமைப்பு.

மாநில அளவில்.

2.1.1. கூட்டுறவுத் துறையின் தலைவர் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் ஆவார். தலைமையிடத்தில் இவருக்கு உதவிபுரிய இணைப் பதிவாளர்களும், துணைப் பதிவாளர்கள் தரத்தில் அரசிதழ் பதிவுள்ள உதவி யாளர்களும் பணிபுரிகின்றனர். கடன் வழங்குதல், விற்பனை வசதி செய்துதருதல், நுகர்வோர் பண்டகசாலைகள் போன்ற வெவ்வேறு துறை களில் பணிகளை மேற்கொள்வதற்கு அலுவல் அடிப்படையில் மாநில அளவில் 1966-ல் ஆறு இணைப் பதிவாளர்கள் (தலைமைத் தணிக்கை அதிகாரி தவிர) இருந்தனர். அந்த ஆண்டில் இணைப் பதிவாளர்களது அளவில் துறை அமைப்பைச் சீரமைக்குமாறு அரசு ஆணையிட்டது. வட்டத் துணைப் பதிவாளர்களது பணியை உன்னிப்பாகவும் திறம்படவும் மேற்பார்வையிடும் பொருட்டு, இணைப் பதிவாளர்களது அலுவல் வகையான அமைப்பு, வட்டார அமைப்பாக மாற்றப்பட வேண்டுமென்று கருதப்பட்டது. அந்த அமைப் பில் துணைப் பதிவாளர்களின் எல்லாத் துறைப் பணிகளையும் வட்டார அதிகாரி மேற்பார்வையிடுவார். ஐந்து வட்டாரங்கள் ஏற்படுத்தப்பட்டன. தலைமையிடத்திலுள்ள ஆறு இணைப் பதிவாளர்களில் நான்கு பேர் இந்த வட்டாரங்களில் நியமிக்கப்பட்டனர். சம்பந்தப்பட்ட பிரிவுகளில் பணி புரிந்த அரசிதழ் பதிவுள்ள உதவியாளர்களும், சார்நிலைப் பணியாளர்களும் அவர்களுடன் வட்டாரத்திற்கு மாற்றப்பட்டனர். தஞ்சாவூரில் ஏற்கெனவே இணைப் பதிவாளர் ஒருவர் இருந்தார். இவர், மும்முர வேளாண்மை மாவட்டத் திட்டம் தொடர்பான பணிகளை மட்டுமே கவனித்து வந்தார். இவர், மும்முர வேளாண்மை மாவட்டத் திட்டப் பணி உட்பட, கூட்டுறவுப் பணி இனங்கள் அனைத்திற்கும் பொறுப்பு வகிப்பதற்காக ஐந்தாவது வட்டாரத்தின் இணைப் பதிவாளராக நியமிக்கப்பட்டார். வட்டார அதிகாரி களுக்கு அதிகாரங்கள் பிரித்துக் கொடுக்கப்பட வேண்டுமென்பதும், அவர்கள் பெருமளவு நிர்வாகப் பொறுப்பேற்க வேண்டுமென்பதும், முக்கிய மான பொருள்கள் அல்லது கொள்கைகள் குறித்து மட்டுமே பதிவாளரிடம் ஆணைகள் பெற வேண்டுமென்பதும், கூட்டுறவு இயக்கம் செயல்படும் முறை, அதன் முன்னேற்றம் ஆகியவற்றை ஆய்ந்து அறிந்துகொள்ளவும், கொள்கை சம்பந்தப்பட்ட பொருள்களில் ஆழ்ந்து கவனம் செலுத்தி பொதுவான கட்டளைகளையும் ஆலோசனைகளையும் வழங்கவும் பதிவாளருக்குப் போதிய நேரம் இருக்க வேண்டுமென்பதுமே வட்டார அமைப்பு முறையைச் செயலுக்குக் கொண்டுவந்ததன் நோக்கமாகும். எனவே, தலைமையிடத்தில் (தலைமைத் தணிக்கை அதிகாரி தவிர) எஞ்சியுள்ள இணைப் பதிவாளர்கள் இருவரின் பணி போதுமானதென்று கருதப்பட்டது.

2.1.2. ஆயினும், பின்னர் ஏற்பட்டவை எதிர்பார்த்த முறையில் அமைய வில்லை. தற்போது மாநில அளவில், கூட்டுப் பதிவாளர் ஒருவரும், இணைப் பதிவாளர் ஐந்து பேரும், அலுவல் முறையில் இணைப் பதிவாளர் இருவரும், தலைமைத் தணிக்கை அதிகாரி ஒருவரும், நிலநீர் ஆய்வுக்காகச் சிறப்பு அதிகாரி ஒருவரும் உள்ளனர். அவர்கள் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(i) கூட்டுப் பதிவாளர் — கூட்டுறவு இயக்கத்தின் கடன்வழங்கு துறை முழுவதற்கும் பொறுப்பு வகிக்கிறார்.

(ii) இணைப் பதிவாளர் (மும்முர வேளாண்மைப் பகுதித் திட்டம்) — மும்முர வேளாண்மைப் பகுதித் திட்டத்தின் இணைப் பதிவாளராக இவர் பதவிப் பெயரிடப்பட்டுள்ளார். ஆனால், இவர் குறுகியக் காலக் கடன், நடுத்தரக் காலக் கடன், பணியாளரமைப்பு முதலியவை குறித்த பணி முழுவதையும் கவனித்து வருகிறார்.

இணைப் பதிவாளர் (வேளாண்மை மறுநிதியுதவிக் கழகம்). —	நிலவள வங்கிகள் மூலம் வேளாண்மை மறு நிதியுதவிக் கழகம் நிதியுதவி அளிக்கும் திட்டங்களுக்கு முக்கியமாக பொறுப் பேற்க வேண்டும். ஆனால் அவர் சாதாரண நீண்டக்கால கடன் வழங்கு பணிகளையும் கவனிக்கிறார்.
(iv) இணைப் பதிவாளர் (நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம்). —	நுகர்வோர் கூட்டுறவுச் சங்கத்திற்குப் பொறுப்பு வகிக்கிறார்.
(v) இணைப் பதிவாளர் (வசதி விற்பனை). —	தற்போதுள்ள இணைப் பதிவாளர் ஐ.எ.எஸ். அதிகாரியாவார். கூட்டுறவு இயக்கத்தின் விற்பனைத் துறைக்கு இவர் பொறுப்பு வகிக்கிறார்.
(vi) இணைப் பதிவாளர் (தேர்தல் நியமனம்). —	கூட்டுறவுச் சங்கச் சட்டம், சங்கங்களின் விதிகள், துணை விதிகள் ஆகியவற்றில் அண்மையில் செய்த மாற்றங்களின் காரண மாக, கூட்டுறவு நிறுவனங்களுக்குத் தேர்தல்கள், நியமனங்கள் தொடர்பான பணி முக்கியமானதாகவும் விரிவான தாகவும் உள்ளது. இணைப் பதிவாளர் ஒருவர் இப்பணிக்குப் பொறுப்பாக்கப் பட்டுள்ளார். மேலும், இவர் நடுவர் மன்றத் தீர்ப்பு வழங்குதல், ஆணை இழப்புப் பொறுப்புத் தொகை வசூல் நடவடிக்கை, சங்கங்களைக் கலைத்தல், செயல்படுத்துதல் போன்ற சட்டப்படிக்கான பணிகளுக்கும் பொறுப்பு வகிக்கிறார்.
(Vii) இணைப் பதிவாளர் (இறைவைப் பாசனம்). —	இவர், இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்களின் மாநிலக் கூட்டமைப்பின் செயலாளராக உள்ளார். மேலும், இவர், எல்லா இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அதாவது 2,000 சங்கங் களுக்கு மேற்பட்ட சங்கங்களுக்கு அலுவல் முறையில் இணைப் பதிவாளராக இருக் கிறார். இவருக்குச் சம்பளம் வழங்கும் பொறுப்பை அரசு ஏற்கவில்லை.
(viii) இணைப் பதிவாளர் (பொறியியல்). —	இவர், வேளாண்மைத் துறையின் பொறியியல் பிரிவின் அதிகாரியாவார். இவர், வேளாண்-பொறியியல்-பழுது பார்க்கும் கூட்டுறவு நிலையங்கள் 150-க்கு மேற்பட்டவற்றைக் கொண்ட மாநிலச் சம்மேளனத்தின் செய லாளராக உள்ளார். இந்தச் சங்கங்களைப் பொறுத்தமட்டில் இவர் அலுவல் முறையில் இணைப் பதிவாளராக இருக்கிறார். இவருக்கு சம்பளம் வழங்கும் பொறுப்பை அரசு ஏற்கவில்லை.
தலைமைத் தணிக்கை அதிகாரி	மாநில அரசின் கணக்குத் துறைத் தலைவரின் அலுவலகத்தில் கணக்குத் துறை உதவி அதிகாரியாவார். இவர் துறையின் தணிக்கைப் பிரிவுக்குத் தலைமை அதிகாரி யாக உள்ளார்.

(x) சிறப்பு அதிகாரி (நிலநீர்). இவர், பொதுப் பணித் துறையில் மேற் பார்வைப் பொறியாளராவார். நிலவள வங்கிகள் மூலமாக வேளாண்மை மறுநிதி யுதவிக் கழகத்தினால் நிதியுதவி அளிக்கப் படும் சிறுபாசனத் திட்டங்களைப் பொறுத்த வரையில், நிலநீர் ஆய்வு செய்யப்பட வேண்டுமென்பதும் வரையறுக்கப்பட்ட இடைவெளி இருக்க வேண்டுமென்பதும் நிபந்தனைகளுள் ஒன்றாகும். மாநிலத்தின் நிலநீர் ஆய்வுக்காக இயக்குநர் ஒருவர் (தலைமைப் பொறியாளர் தரத்தில்) இருந்த போதிலும், திட்டப் பகுதிகளில் கடன் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்வதை விரைவு படுத்துவதற்காகப் பதிவாளரின் கீழ் சிறப்பு அதிகாரி ஒருவர் நியமிக்கப் பட்டுள்ளார்.

2.1.3. (அலுவல் முறையில் உள்ள இரண்டு இணைப் பதிவாளர்கள் நீங்கலாக) ஒவ்வொரு இணைப் பதிவாளரின் கீழும் துணைப் பதிவாளர் தரத்தில் அரசிதழ் பதிவு பெற்ற உதவியாளர் ஒருவர் பணிபுரிகிறார். தலைமைத் தணிக்கை அதிகாரியின் கீழ் துணைத் தலைமைத் தணிக்கை அதிகாரி (பட்டயக் கணக்கர்) ஒருவர் உள்ளார். சிறப்பு அதிகாரியின் (நிலநீர்) கீழ் உதவி வேளாண்மைப் பொறியாளர் ஒருவரும் உதவிப் புவியியல் வல்லுநர் ஒருவரும் பணிபுரிகின்றனர். இணைப் பதிவாளரின் (விற்பனை) கீழ் துணைப் பதிவாளர் ஒருவரைத் தவிர, உதவிப் பொறியாளர் ஒருவரும் பணிபுரி கின்றார். விற்பனைச் சங்கங்கள், பிற சங்கங்கள் ஆகியவை கட்டும் கிடங்கு களின் கட்டுமானப் பணியை மேற்பார்வையிடுவதற்காக பொதுப் பணித் துறையினால் உதவிப் பொறியாளர் முகமையில் அனுப்பப்படுகிறார். பணி யாளரமைப்புக்குப் பொறுப்புவகிக்கும் இணைப் பதிவாளரின்கீழ் (மும்மூர வேளாண்மைப் பகுதித் திட்டம்) பணியாளரமைப்பு குறித்த பொருள்களைக் கவனிப்பதற்குப் பதிவாளருக்கு நேர்முக உதவியாளர் ஒருவர் உள்ளார்.

2.1.4. அரசிதழ் பதிவு பெற்ற உதவியாளர்களின்கீழ், மேலாளர்கள், கண்காணிப்பாளர்கள், உதவியாளர்கள் அடங்கிய பிரிவுகள் உள்ளன. இவர்கள் கூட்டுறவு உதவிப் பதிவாளர்கள், முதுநிலை ஆய்வாளர்கள், இளநிலை ஆய்வாளர்கள் ஆகிய பதவித் தரங்களில் உள்ளவர்களிலிருந்து நியமிக்கப்படுகின்றனர். நிர்வாகப் பணியிலுள்ள ஒருசில இளநிலை உதவி யாளர்களும், தட்டச்சர்களும் பணிபுரிகின்றனர்.

வட்டார நிலையில்.

2.2.1. 2.1.1. பத்தியில் சொல்லியுள்ளவாறு, 1966-ஆம் ஆண்டில் ஐந்து வட்டாரங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1971-72-ல், மேலும் மூன்று வட்டாரங்கள் ஏற்படுத்தப்பட்டன. தற்போது எட்டு வட்டாரங்கள் உள்ளன. ஒவ்வொரு வட்டாரமும் இணைப் பதிவாளர் ஒருவரது தலைமையில் செயல் படும். துணைப் பதிவாளர்கள், கூட்டுறவு உதவிப் பதிவாளர்கள், முதுநிலை ஆய்வாளர்கள் முதலிய பணியாளர்கள் அவருக்கு உதவியாக இருப்பர். ஒவ்வொரு வட்டாரமும் ஓரிரு மாவட்டங்களைக் கொண்டிருக்கும். வட்டார இணைப் பதிவாளர் தனது வட்டாரத்தில் கூட்டுறவுப் பணி முழுவதுக்கும் பொறுப்புவகிக்கிறார்.

மாவட்ட நிலையில்.

2.3.1. மாவட்ட அளவில், சென்னை மாநகரம் நீங்கலாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒருவர் என்ற விதத்தில் திட்ட அதிகாரிகள் (வேளாண்மை மறுநிதி உதவித் திட்டங்கள்) என்ற பதவிப் பெயரிடப்பட்ட

13 துணைப் பதிவாளர்கள் உள்ளனர். வேளாண்மை மறுநிதி உதவிக் கழகம், அனைத்து நாடுகள் வளர்ச்சி மன்றம் ஆகியவற்றின் நிதி உதவி பெறும் திட்டங்களைத் தயாரித்து அவற்றை நிலவள வங்கிகள் மூலமாக நிறைவேற்றுவது திட்ட அதிகாரியின் கடமையாகும். இவர் தமது அலுவல் காரணமாக மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் ஆவார். இத் திட்டங்களின் பணி முன்னேற்றத்தைக் கண்காணிக்க அமைக்கப்பட்ட மாவட்ட ஆய்வுக் குழுவின் உறுப்பினர்-செயலாளர் ஆவார். மாவட்ட ஆட்சித் தலைவரே இக்குழுவின் தலைவர் ஆவார். திட்ட அதிகாரியின்கீழ் நிர்வாக, தொழில்நுட்பப் பணியாளர்கள் பணியாற்றுகின்றனர். 6-வது அத்தியாயத்தில் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

2.3.2. கூட்டுறவுத் துறையின் 30—8—1972 நாளிட்ட 707-ஆம் எண் ஆணையில் திட்ட அதிகாரியின் பதவி மாவட்டக் கூட்டுறவுப் பதிவாளர் என்ற புதிய பதவியாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. (துணைப் பதிவாளரின் சம்பள வீதம் : ரூ 550—950. மாவட்டக் கூட்டுறவுப் பதிவாளரின் சம்பள வீதம் : ரூ. 800–1,250.) தரமுயர்த்தப்பட்ட பதவிகள் இன்னும் நிரப்பப்பட வில்லை. தற்போதுள்ள திட்ட அதிகாரிகள் தொடர்ந்து துணைப் பதிவாளரின் பதவித் தரத்திலே செயல்படுகின்றனர்.

2.3.3. மாவட்ட அளவில், தணிக்கைப் பிரிவு துணைப் பதிவாளர் ஒருவர் பணியாற்றுகிறார். மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அதிகாரி என அவருக்குப் பதவி பெயரிடப்பட்டுள்ளது. சங்கங்களின் தணிக்கைப் பணியைச் செய்ய கூட்டுறவு உதவிப் பதிவாளர்கள், முதுநிலை ஆய்வாளர்கள் போன்ற துணைப் பணியாளர்கள் அவருக்கு உதவுகின்றனர். 3-வது அத்தியாயத்தில் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

வட்ட நிலையில்.

2.4. வட்ட நிலையில், கூட்டுறவுப் பணி அனைத்தையும் கவனிக்கத் துணைப் பதிவாளர் பொறுப்பாக இருக்கிறார். வட்டம் ஒன்றில் பொதுவாக இரண்டு தாலுகாக்கள் (taluks) இருக்கும். 1972 ஆகஸ்டு வரை 37 வட்டங்கள் இருந்தன. 2.3.2. பத்தியில் குறிப்பிடப்பட்ட அரசாணை யினால் இது 52 ஆக உயர்த்தப்பட்டது. வட்டத் துணைப் பதிவாளர்களின் பதவியில் (i) நிலவள வங்கிகள் தொடர்பான பணியை மட்டுமே கவனிக்கிற 11 துணைப் பதிவாளர்களையும் (ii) வேளாண்மைப் பகுதி முனைப்புத் திட்டம் குறித்த பணியைக் கவனிக்க நான்கு மாவட்டங்களில் பணியாற்றுகிற நான்கு துணைப் பதிவாளர்களையும் சேர்த்துக் கொள்வதன் மூலம் இவ்வாறு உயர்த்தப்பட்டது.

2.5. இவ்வாறாக, வட்டார, வட்ட நிலைகளில் தலைமை அதிகாரிகள் பிரதேச அடிப்படையில் பணியாற்றுகின்றனர். (பதிவாளர் நீங்கலாக) மாநில நிலையிலும், மாவட்ட நிலையிலும் அதிகாரிகள் அலுவல் அடிப் படையில் பணியாற்றுகின்றனர்.

2.6. மாநில அளவிலிருந்து வட்ட அளவு வரை உள்ள பல்வேறு நிலைகளில் துறையின் அமைப்பைக் காட்டும் விளக்க அறிக்கை ஒன்று I-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

பிற துறைகளில் பணியாற்றும் கூட்டுறவுத் துறை அதிகாரிகள்.

2.7.1. 1955 ஆம் ஆண்டு வரை, எல்லா வகைப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளரின் நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டன. 1956-லிருந்து

பல்வேறு வகைச் சங்கங்கள் தொழில் நுட்பத் துறைகளுக்குக் கீழே காட்டியுள்ளவாறு மாற்றப்பட்டன :—

சங்கங்களின் வகை. (1)	மாற்றப்பட்ட ஆண்டு. (2)	யாருக்கு மாற்றப்பட்டது என்பது. (3)
(1) தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்.	1956	தொழில்-வணிக இயக்குநர்.
(2) மீனளக் கூட்டுறவுச் சங்கங்கள்.	1959	மீனள இயக்குநர்.
(3) இராமத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்.	1960	கதர்-கிராமத் தொழில் வாரியம்.
(4) கோழி வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்களும், செம்மறியாடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களும்,	1964	கால்நடை வளர்ப்புத் துறை இயக்குநர்.
(5) நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும், நூற்பு ஆலைகளும்.	1965	கைத்தறி-பஞ்சாலை இயக்குநர்.
(6) பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள்.	1965	பால் உற்பத்தி-பாற்பண்ணை மேம்பாட்டு ஆணையாளர்.
(7) வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள்.	1966	தலைவர், வீட்டு வசதி வாரியம்.
(8) கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள்.	1969	சர்க்கரைத் துறை இயக்குநர்.

2.7.2. கிராமத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரை, தொழில்-வணிகத் துறை இயக்குநரிடமிருந்து கதர்-கிராமத் தொழில் வாரியத்திற்கு அவை மாற்றப்பட்டன.

2.7.3. மேற்குறிப்பிட்ட பல்வேறு வகைச் சங்கங்களின் நிர்வாகக் கட்டுப்பாடு மாற்றப்பட்ட துறைத் தலைவர்களுக்கு கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் கீழ் பதிவாளருக்குள்ள அதிகாரங்கள் அனைத்தும் அளிக்கப்பட்டுள்ளன.

2.7.4. தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பொறுத்தவரை, சம்பந்தப்பட்ட துறைகளில் சங்கங்களை நிர்வகிப்பதற்கும் மேற்பார்வையிடுவதற்கும் தனிப்பட்ட வகைப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஏனைய வகை சங்கங்களைப் பொறுத்தவரை, சம்பந்தப்பட்ட தொழில் நுட்பத் துறைகளுக்கு பணியாளர்களை கூட்டுறவுத் துறை அனுப்பி வருகிறது.

2.7.5. ஏனைய துறைகளுக்குப் பணியாளர்களை அனுப்புவது தவிர, கூட்டுறவுத் துறை தனது அதிகாரிகளைக் கூட்டுறவு நிறுவனங்களுக்கும் அனுப்பிவருகிறது.

2.7.6. (நிர்வாகப் பணியாளர்கள், கடைநிலைப் பணியாளர்கள் நீங்கலாக) கூட்டுறவுத் துறையில் உள்ள மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை 6,241 ஆகும். அவர்களில் (கூட்டுறவு நிலையங்களில் பணியாற்றும் 322 பேர் உட்பட) 4,974 பேர் தாய்த் துறையில் பணியாற்றுகின்றனர். 1,267 பேர் I -வது இணைப்பில் காட்டப்பட்டுள்ளவாறு பிற துறைகளில் பணியாற்றுகின்றனர். கூட்டுறவுத் துறையில் பணியாற்றும் பல்வேறு கைப் பணியாளர்களின் எண்ணிக்கையும், அவர்களுடைய சம்பள வீதமும் III -வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

இட்ட அதிகாரிகளின் பதவிகளைத் தரம் உயர்த்துவதன் மூலம் துறையில் மற்றொரு பதவி நிலையைக் கொண்டுவருவதற்கான அவசியம்.

2.8.1. 2.3.2 பத்தியில் தெரிவித்துள்ளவாறு, மாவட்டங்களில் உள்ள இட்ட அதிகாரிகளின் பதவிகள் துணைப் பதிவாளர்கள் பதவித் தரத்திலிருந்து மாவட்டக் கூட்டுறவுப் பதிவாளர்கள் என்ற புதிய பதவித்

தரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளன. வட்டார இணைப் பதிவாளருக்கும் வட்டத் துணைப் பதிவாளருக்கும் இடையே ஒரு பதவி நிலையை ஏற்படுத்துவது அவசியம்தானு எனபது குறித்து நாம் ஆய்வு செய்வோம்.

2.8.2. பதவியைத் தரம் உயர்த்தியதற்கு அரசாணையில் கொடுக்கப் பட்டுள்ள முக்கியமான காரணம் வருமாறு :—இத் திட்டத்தின்கீழும் வழக்க மான வேலைத் திட்டங்களின்கீழும் நீண்டகாலக் கடன்கள் வழங்கப்படும் வேகம் மனநிறைவளிப்பதாய் இல்லை. கிராம அளவில் வளங்கள், தேவைகள் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த மதிப்பீடு அவசியமாகும். எனவே, தேவைப் படும் ஒருங்கிணைப்பைக் கொண்டுவரும்பொருட்டு, இத்திட்டங்களின் முழு பொறுப்பையும் ஏற்குமாறு போதுமான அளவு உயர் நிலையிலுள்ள ஓர் அதிகாரி நியமிக்கப்பட வேண்டும். பதவித் தரம் உயர்த்தப் பெற்ற அதிகாரிகள், அவருக்கு அடுத்து உயர் பதவியிலுள்ளவர்கள், அவருக்குகீழ் நிலையில் அடுத்துப் பணிபுரிவோர் ஆகியோரின் கடமைகள், பொறுப்புகள் பற்றி அரசாணையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது :

(i) வேளாண்மை மறுநிதியுதவிக் கழகம், அனைத்துநாட்டு வளர்ச்சி நிறுவனம் ஆகியவற்றின் மூலம் நிதியுதவி பெறும் திட்டங்களின்கீழ் வரும் திட்டப்பணிகளை வகுத்து செயற்படுத்தும் பொறுப்பும், மாவட்டங் களிலுள்ள நிலவள வங்கிகளின் வழக்கமான வேலைத் திட்டங்களை வகுத்து நிறைவேற்றும் பொறுப்பும் பொதுவாக மாவட்டக் கூட்டுறவுப் பதிவாளர் களைச் சேர்ந்ததாகும், (ii) வட்டார இணைப் பதிவாளர் அவர்கள்மீது பொது மேற்பார்வை வகிப்பார், (iii) நீண்டகாலக் கடன்களைப் பொருத்த மட்டில், வட்டத் துணைப் பதிவாளர்கள் மாவட்டக் கூட்டுறவுப் பதிவாளர் களின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் பணிபுரிவர்.

2.8.3. முன்னர் வட்டத் துணைப் பதிவாளர்கள் வட்டார இணைப் பதிவாளரது நிர்வாகத்தின்கீழ் நேரடியாகப் பணியாற்றினர். புதிய ஏற்பாட்டில், இவர், உயர் நிலை அதிகாரிகள் இருவரது கட்டுப்பாட்டின்கீழ் இருந்து பணியாற்றுவார். நீண்டகாலக் கடன்களைப் பொறுத்தமட்டில் மாவட்டக் கூட்டுறவுப் பதிவாளரின் கீழும், நீண்டகாலக் கடன்கள் உட்பட வட்டாரத்தின் எல்லாக் கூட்டுறவுப் பணியைப் பொறுத்த மட்டில் வட்டார இணைப் பதிவாளரின் கீழும் பணியாற்ற அவர் நியமிக்கப்பட்டுள்ளார். மாவட்டக் கூட்டுறவுப் பதிவாளரே வட்டார இணைப் பதிவாளரின் பொது மேற்பார்வையின்கீழ் வைக்கப்பட்டுள்ளார். வட்டத் துணைப் பதிவாள ருக்கும், வட்டார இணைப் பதிவாளருக்குமிடையில் அமைப்பில் மூன்றுவது பதவி ஒன்றை ஏற்படுத்துவதும், வட்டத் துணைப் பதிவாளரை (அலுவல் அடிப்படையில், பணிபுரியும் ஒருவர், பகுதி அடிப்படையில் பணிபுரியும் ஒருவர் ஆக) இரண்டு உயர்நிலை அதிகாரிகளின்கீழ்ப் பணிபுரியச் செய்வதும் நிர்வாக அமைப்பைச் சீரமைப்பதில் உதவிபுரியாது என்று நாங்கள் கருது கிறோம். அதற்குப் பதிலாக இது பொறுப்புக்கள் குறைந்துபோக வகைச் செய்யும் என்று தோன்றுகிறது. உயர் தகுதியுள்ள அதிகாரி ஒருவர் மூலம் ஒருங்கிணைப்பு ஏற்படுத்துவதன் அவசியத்தைப் பொறுத்தவரையில், வேளாண்மை மறுநிதியுதவிக் கழகத் திட்டங்கள், அனைத்துநாட்டு வளர்ச்சி நிர்வாகத் திட்டங்கள் ஆகியவற்றின் கீழும், இயல்பான வேலைத் திட்டத்தின் கீழும் கடன்கள் வழங்கப்படுவதில் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்வதற்காக, துணைப் பதிவாளர் தரத்தில் உள்ள திட்ட அதிகாரி ஒருவர் மாவட்ட ஆட்சித் தலைவரின் (அலுவல் முறையில்), நேர்முக உதவியாளராகவும் மாவட்டக் குழுவின் (இக்குழுவின் தலைவர் மாவட்ட ஆட்சித் தலைவராவார்) உறுப்பினர்-செயலாளராகவும் இருக்கிறார் என்பதை ஈண்டுக் குறிப்பிடுவது பொருத்தமானதாகும். திட்ட அதிகாரி யுடன், மாவட்ட ஆட்சித் தலைவரின்கீழ் தொழில் நுட்பப் பிரிவு ஒன்றும் உள்ளது. இப்பிரிவில் வேளாண்மை உதவிப் பொறியாளர் ஒருவர், உதவிப் புவியியல் வல்லுநர் ஒருவர், தொழில் நுட்பச் சார்நிலைப் பணியாளர் ஆகியோர் உள்ளனர். திட்டங்களை வகுத்தல், செயற்படுத்துதல், திட்டம்

களில் முதலீடு செய்யப்பட்ட நீண்டக் காலக் கடனைப் பயன்படுத்தியது குறித்து மேற்பார்வையிடுதல் ஆகியவை தொடர்பான தொழில் நுட்பப் பணிகளை இப்பிரிவு கவனிக்கிறது. இந்த ஏற்பாட்டின்கீழ் நிர்வாக, தொழில் நுட்ப அதிகாரிகள் மாவட்ட ஆட்சித் தலைவரின்கீழ்ப் பணிபுரிகின்றனர். திட்டங்களைப் பொறுத்தமட்டில், எல்லாத் துறை அதிகாரிகளையும் ஒருங்கிணைப்பதற்காக இந்த அமைப்பு உள்ளது. திட்ட அதிகாரியின் பதவித் தரத்தை உயர்த்துவது ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்கு அவசியமானதல்ல. மேலும், திட்ட அதிகாரிகளின் பதவிகள் தற்காலிகமானவை. அவை, வெவ்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்படும் புதிய திட்டங்களின் வாய்ப்பைப் பொறுத்திருக்கும். புதிய திட்டங்களுக்கு ஓரளவே வாய்ப்பு உள்ளதால், நாளடைவில் திட்டப் பணிகள் குறைந்து விடுமென எதிர்பார்க்கலாம். இச்சந்தர்ப்பத்தில், திட்டங்களுக்கு தரம் உயர்த்தப்பட்ட புதிய பதவி ஒன்றை ஏற்படுத்துவது விரும்பத்தக்கதல்ல என்று தோன்றுகிறது. எனவே, பதவிகளின் தரத்தை உயர்த்தியது ரத்து செய்யப்படலாம் என்றும், திட்ட அதிகாரிகள், துணைப் பதிவாளர் தரத்திலேயே தொடர்ந்து இருக்கலாம் என்றும் நாங்கள் கருதுகிறோம். தரம் உயர்த்தப்பட்ட பதவிகள் இன்னும் நிரப்பப்படாததால், இப்பரிவுரையை நிறைவேற்றுவதில் நடைமுறையில் இடர்ப்பாடு ஏதும் இருக்காது.

மாவட்ட அளவில் துறைத் தலைமை அதிகாரி ஒருவர் இருக்க வேண்டியதன் அவசியம்.

2.9.1. சந்தானம் குழு, துறை அமைப்பு குறித்து பரிசிலனை செய்த போது, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் (மாநகரம், சிறிய மாவட்டங்கள் நீங்கலாக) ஒருவர் என்ற வீதத்தில் நிலவள வங்கிகளுக்காக 11 தனித் துணைப் பதிவாளர்கள் இருந்தனர். மேலும், மும்முர வேளாண்மைப் பகுதித் திட்டம் தொடர்பான பணிகளுக்காக நான்கு மாவட்டங்களில் துணைப் பதிவாளர் 4 பேர் இருந்தனர். அலுவல் அடிப்படையில் அமைந்த இப்பதவிகள் குறித்து குழு கீழ்க்கண்டவாறு கருத்து தெரிவித்தது. எல்லா வகைச் சங்கங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சி, மேற்பார்வையிடுதல் ஆகியவற்றிற்கு வட்டம் ஒன்றிற்கு (இரண்டு தாலுகாக்கள் அடங்கியது) துணைப் பதிவாளர் ஒருவர் மட்டுமே இருக்க வேண்டும். அவர் எல்லாவகை கூட்டுறவுப் பணிகளுக்கும் பொறுப்பேற்க வேண்டும். கூட்டுறவுத் துறையின் 30—8—1972 ஆம் நாளிட்ட 707 ஆம் எண் அரசாணையின் மூலம் மேற்குறிப்பிட்ட அலுவல் அடிப்படையில் அமைந்த 15 பதவிகளும் வட்டத் துணைப் பதிவாளர் பதவிகளுடன் இணைக்கப்பட்டு வட்டங்களின் எண்ணிக்கை 37-லிருந்து 52 ஆக உயர்த்தப்பட்டது. எனினும், சந்தானம் குழு அறிக்கைக்கும், பின்னர் ஏற்படுத்தப்பட்ட துணைப் பதிவாளர்களின் அலுவல் பதவிகள் (திட்ட அதிகாரிகள்) 13-ம் தனிப் பதவிகளாக அப்படியே வைத்துவரப்பட்டன; அவை வட்டத் துணைப் பதிவாளர் பதவிகளுடன் இணைக்கப்படவில்லை.

2.8.3. பத்தியில் நாங்கள் கூறியுள்ளவாறு, அப்பதவிகள் தற்காலிகமானவை; திட்டப் பணிகள் குறையக் குறைய அப்பதவிகளும் எடுத்து விடப்படுமென்று தோன்றுகிறது. எனவே, திட்ட அதிகாரிகளது பதவிகள் தொடர்ந்து அலுவல் பதவிகளாகவே இருக்கலாம்.

2.9.2. மாவட்டத்தை அலகாகக் கொண்டு கூட்டுறவுப் பணிகள் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டன என்றும், அவை பொதுவாக மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிகள் மூலம் மேற்கொள்ளப்பட்டன என்றும், மத்திய வங்கிகள், பிற கூட்டுறவுச் சங்கங்கள் பிற துறைகள் ஆகியவற்றுடன் கூட்டுறவுத் துறை மேற்கொள்கிற நடவடிக்கைகளில் கூட்டுறவுத் துறைக்கு உதவுவதற்காக மாவட்ட அளவில் ஓர் அதிகாரி இருப்பது அவசியமென்றும்

சந்தானம் குழு கருத்து தெரிவித்தது. ஒவ்வொருவரும் மூன்று அல்லது நான்கு மாவட்டங்களைத் தமது அதிகார வரம்பிற்குள் கொண்டுள்ள வட்டார இணைப் பதிவாளர்கள். இப் பங்கை முழுவதும் ஆற்ற இயலாது என்றும், மாவட்டப் பதிவாளரைத் தலைவராகக் கொண்டு மாவட்ட அளவில் துறை அலுவலகம் ஒன்று இருக்க வேண்டும் என்றும், இவ்வாறு செய்யப்படுமாயின் வட்டார இணைப் பதிவாளர் பதவிகள் நீக்கப்பட்டு அவர்களது அலுவல்கள் மாவட்டப் பதிவாளருக்கு மாற்றப்பட வேண்டுமென்றும் குழு கருதியது. குழு இப்பரிவுரையைச் செய்யும்போது ஐந்து வட்டாரங்களே இருந்தன. பின்னர் வட்டாரங்களின் எண்ணிக்கை 8 ஆக உயர்ந்துள்ளது. ஒவ்வொரு வட்டாரமும் ஒரு வட்டார இணைப் பதிவாளரின்கீழ் உள்ளது. வட்டாரங்கள் குறித்த விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது :—

(i) திருநெல்வேலி, கன்னியாகுமரி.

(ii) மதுரை, இராமநாதபுரம்.

(iii) திருச்சிராப்பள்ளி.

(iv) தஞ்சாவூர்.

(v) தென் ஆற்க்காடு.

(vi) சேலம், தருமபுரி.

(vii) சென்னை, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு.

(viii) கோயம்புத்தூர், நீலகிரி.

எட்டு வட்டாரங்களில் 14 மாவட்டங்கள் அடங்கியிருந்தாலும், மூன்று வட்டாரங்களில், அவை ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு மாவட்டமே அடங்கியுள்ளது என்பதைக் காணலாம். இரண்டு வட்டாரங்களில் ஒவ்வொன்றிலும் இரு மாவட்டங்கள் உள்ளன. அவை திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகியனவாகும். இதில் இரண்டாவது மாவட்டத்தின் பரப்பு சிறியதேயாகும். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மாவட்டக் கூட்டுறவு அதிகாரி இருப்பதற்கு குழு பரிவுரை செய்துள்ளது. சந்தானம் குழுவின் அறிக்கைக்குப் பின்னர் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பொதுவாக ஓர் இணைப் பதிவாளர் இருக்க வேண்டுமென்ற நிலை உருவாகியுள்ளதால், தற்போதுள்ள 8 வட்டாரங்களை 10 வட்டாரங்களாக உயர்த்தி ஒவ்வொரு வட்டாரத்தையும் ஓர் இணைப் பதிவாளர் பொறுப்பின்கீழ் வைத்திருப்பதன் மூலம் இந்தப் போக்கினை அதன் உரிய அளவுக்கு நீட்டிக்கலாம் என்று நாங்கள் கருதுகிறோம். இந்த ஏற்பாட்டின்படி, ஒவ்வொரு மாவட்டமும் ஒரு வட்டாரமாகும். ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒரு வட்டார இணைப் பதிவாளர் இருப்பார். ஆனால் நீலகிரி மாவட்டத்திற்கு வட்டத் துணைப் பதிவாளர் ஒருவர் மட்டுமே உள்ளார். தருமபுரி, கன்னியாகுமரி, சென்னை ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் வட்டத் துணைப் பதிவாளர் இருவர் மட்டுமே உள்ளனர். இந்த நான்கு மாவட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு வட்டார இணைப் பதிவாளர் இருக்கும் அளவுக்கு இவை பெரியனவாக இல்லை. இவை சிறியவையே. இந்த நான்கு மாவட்டங்களும் இவற்றிற்கு அருகிலுள்ள கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி, செங்கற்பட்டு ஆகிய வட்டாரங்களில் சேர்க்கப்படலாம். சந்தானம் குழு பரிவுரை செய்துள்ளவாறு, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மாவட்டக் கூட்டுறவு அதிகாரி இருப்பதற்குப் பொதுவாக இந்த முறை வகை செய்யும்.

தலைமையிடத்தில் உள்ள இணைப் பதிவாளர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான அவசியம்.

2.10.1. பத்து வட்டாரங்கள் இருக்கும்போது, பல நேர்வுகளில் மாவட்டத்தின் எல்லையே வட்டாரத்தின் எல்லையாக இருப்பதால், மாநில அளவில் இணைப் பதிவாளர்கள் அதிக எண்ணிக்கையிலும் கூடுதல் பதிவாளர்

ஒருவரும் இருப்பது அவசியமா என்பது குறித்துப் பரிசீலிக்கப்பட வேண்டியுள்ளது. வட்டார அமைப்பு முறை 1966-ல் கொண்டுவரப்பட்ட போது அதன் உட்கருத்து யாதெனில், நிர்வாகப் பணியின் பெரும் பகுதி வட்டார அளவிலேயே இறுதியாகச் செய்து முடிக்கப்பட வேண்டும்; தலைமை அலுவலகம் ஒருங்கிணைப்பு குறித்து நாட்டம் செலுத்த வேண்டும் என்பதேயாகும். தற்போது அதிகாரம் அதிக அளவில் மையமாக்கப்படும் போக்கு இருப்பதுபோல் தோன்றுகிறது. (அலுவல் முறையில் இணைப் பதிவாளர் இருவர் உட்பட) கூடுதல் பதிவாளர், இணைப் பதிவாளர் ஆகியோரின் எண்ணிக்கை 2-லிருந்து 8 ஆக உயர்ந்துள்ளது. (அலுவல் முறையில் உள்ள இணைப் பதிவாளர் நீங்கலாக) ஒவ்வோர் இணைப் பதிவாளருக்கும் அரசிதழ் பதிவு பெற்ற உதவியாளராகத் துணைப் பதிவாளர் ஒருவர் உள்ளார்.

2.10.2. நீண்ட காலக் கடன் வழங்கும் பணியைப் பொறுத்தவரையில், குறுகிய கால, நீண்ட காலக் கடன் வழங்கும் பணிகளுக்குக் கூடுதல் பதிவாளர் ஒருவர் பொறுப்பு வகிப்பது தவிர, நீண்டகாலக் கடன் பணிக்காகவென்றே ஓர் இணைப் பதிவாளர் இருக்கிறார். இந்த அளவில், இரு அதிகாரிகளும் தாங்களே முடிவு எடுக்கும் திறனுடையவர்களாக இருக்க வேண்டும், குறிப்பாக, குறுகிய காலக் கடன் பணிக்காகவென்றே இன்னொரு இணைப் பதிவாளர் இருப்பதால் இவ்விரு பதவிகளில் ஒன்று அவசியமற்றதாகும். தற்போதுள்ள ஏற்பாட்டின்படி, கோப்புகள் இரு உயர் அதிகாரிகள் மூலமாக அனுப்ப வேண்டியிருப்பதால் காலதாமதமே ஆகும்.

2.10.3. தேர்தல், நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்தல் ஆகிய பணிகளுக்கு ஓர் இணைப் பதிவாளர் இருக்கிறார். இவருக்கு உதவியாகத் துணைப் பதிவாளர் ஒருவர் இருக்கிறார். ஒரே ஒரு மாவட்டம் அடங்கியுள்ள ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஓர் இணைப் பதிவாளர் இருக்கும் போது, தேர்தல்கள், நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்தல் ஆகிய பணிகளை முறையாகக் கவனிக்கும் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். தற்போதுள்ளபடி, இறவைப் பாசனச் சங்கங்கள், வட்டார அளவிலான வேளாண் பணி நிலையங்கள், தொடக்க நிலவள வங்கிகள் (சுமார் 2,000 முதல் 3,000 நிறுவனங்கள்) போன்ற தொடக்க நிறுவனங்களுக்குக்கூட நியமன நடவடிக்கைகள் தலைமை அலுவலகத்திலிருந்தே பிறப்பிக்கப்படுகின்றன. வட்டார இணைப் பதிவாளர்களுக்கு வழிமுறைக்குறிப்புகள் கொடுக்கப்பட்டால், மாநில அளவிலான அலுவலகத்திற்கு அநாவசியமாகப் பொறுப்பைச் சுமத்தாது இவ்வகைப் பணியை அவர்கள் கவனிக்க இயலும். இதற்காகப் பதிவாளர் அலுவலகத்தில் ஓர் இணைப் பதிவாளர் இருக்க வேண்டியது அவசியமற்றது எனத் தோன்றுகிறது. பதிவு செய்தல், நடுவர் தீர்ப்பு, தீர்ப்புகளை (நிறைவேற்றுதல், சங்கங்களைக் கலைத்தல்), இழப்புப் பொறுப்புத் தொகை வசூல் முதலிய சட்டப்படிக்கான பணிகளையும் இந்த இணைப் பதிவாளர் கவனித்து வருகிறார் என்று கூறப்பட்டது. இவ்வகைப் பணிகளில் பெரும்பகுதி வட்டத் துணைப் பதிவாளர்கள் அளவிலும் சில பணிகள் வட்டார இணைப் பதிவாளர்கள் அளவிலும் பெரிதும் செய்யப்படுவதாலும், பொதுவாக மறு ஆய்வுகள் மேல்முறையீடுகள் மட்டுமே தலைமை அலுவலகத்தில் பரிசீலிக்கப்படுவதாலும், இப் பதவியை நீக்குவதால் பணி மிகுதியாகத் தடைபடாது.

2.10.4. இறைவைப் பாசனச் சங்கங்களும் வேளாண்மை-பொறியியல் பணிக் கூட்டுறவு நிலையங்களும் அலுவல் முறையில் இரு இணைப் பதிவாளர்களால் கவனிக்கப்பட்டு வருவதால், பதிவாளர் அலுவலகத்தில் கவனிக்கப்பட வேண்டிய முக்கிய துறைகள் கடன் (குறுகிய காலக் கடன், நீண்ட காலக்கடன்), விற்பனை, நுகர்வோர் கூட்டுறவு ஆகியவையாகும். கூட்டுப் பதிவாளர் ஒருவரையும் 5 இணைப் பதிவாளர்களையும் (மொத்தம் ஆறுபேர்) வைத்திருப்பதற்குப் பதிலாக கூட்டுப் பதிவாளர்கள் மூவர் இருந்து இணைப்பதிவாளர் எவரும் இல்லாதிருந்தால் அதுவே போதுமானது என்று நாங்கள் கருதுகிறோம். இணைப்பதிவாளருக்குப் பதிலாகக் கூட்டுப் பதிவாளர்

பதவியை வைத்திருக்கக் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. ஏனெனில் சீரமைக்கப்பட்ட அமைப்பில், பணியில் இணைப் பதிவாளர் பலர் இருப்பர். எட்டு வட்டார இணைப் பதிவாளர்கள் இருக்கின்றனர். 2.9.2. பத்தியில் குறிப்பிட்டுள்ள கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டால் இந்த எண்ணிக்கை 10 ஆக உயரும். கூட்டுறவு நிறுவனங்களில் இணைப் பதிவாளர்கள் செயலாளர் களாகவும் நிர்வாக அதிகாரிகளாகவும் பொது மேலாளர்களாகவும் அல்லது கலைக்கப்பட்ட சங்கங்களின் சிறப்பு அதிகாரிகளாகவும் முகமையில் பணி யாற்றுகின்றனர். தற்போது கூட்டுறவுத் துறையில் 50-க்கு மேற்பட்ட இணைப் பதிவாளர்கள் இருக்கின்றனர். பதிவாளர் சார்பாக அவர்களின் பணியை மேற்பார்வை செய்து அவர்கள் மீது கட்டுப்பாட்டு அதிகாரம் செலுத்தும் அதிகாரிகள் இணைப் பதிவாளர் பதவித் தரத்தைக் காட்டிலும் உயர் பதவித் தரத்தில் இருப்பது விரும்பத் தக்கதாகும். துணைப் பதிவாளர் பதவித் தரத்தில் உள்ளவர்களும் தற்போது இணைப் பதிவாளர்களுக்கு உதவி செய்பவர்களுமான அரசிதழ் பதிவு பெற்ற உதவியாளர்கள் தொடர்ந்து கூட்டுப் பதிவாளர்களுக்கு உதவி செய்யலாம்.

2.10.5. இணைப் பதிவாளர்களுக்குப் பதிலாகக் கூட்டுப் பதிவாளர்களை நியமிக்க வேண்டுமென்று நாங்கள் பரிவுரை செய்வதற்கு மற்றுமோர் முக்கியக் காரணம் யாதெனில் துறைத் தலைவர் அலுவலக அளவில் மூன்று உயர் அதிகாரிகள் (பதிவாளர்/கூட்டுப் பதிவாளர்/இணைப் பதிவாளர்) இருப் பதற்குப் பதிலாக இரு உயர் அதிகாரிகள் மட்டுமே இருக்க வேண்டும். இந்த அளவில் இருவருக்கு மேற்பட்டு உயர் அதிகாரிகள் இருப்பதானது அலுவல்கள் பணியைச் செய்து முடிப்பதில் அவசியமற்ற காலதாமதம் ஆவதற்கு வழிகோலும். மேலும், இந்த மூவரில் குறைந்தது ஒருவர், மற்ற இருவரில் யாராவது தொடக்க முயற்சியையும் பொறுப்பையும் மேற் கொள்ளட்டும் என்று எண்ணுமாறு செய்துவிடும் என்று நாங்கள் கருது கிறோம். இரு உயர் அதிகாரிகள் மட்டுமே இருக்க வேண்டுமென்று நாங்கள் தெரிவித்துள்ள முறைப்படி, கூட்டுப் பதிவாளர் தாமே முடிவு எடுக்கவும், பதிவாளரின் பொதுவான மேற்பார்வைக்குட்பட்டுத் தமது பொறுப்பில் விடப்பட்டுள்ள துறை வெற்றிகரமாகச் செயல்படுவதை உறுதி செய்து கொள்ளவும் அவருக்கு இயலும். கூட்டுப் பதிவாளர் பதவிக்கான பதவி உயர்வு தகுதியின் அடிப்படையிலேயே கொடுக்கப்பட வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்த விழைகிறோம்.

துறைத் தலைவரும், தலைமைக் கூட்டுறவு நிறுவனங்களும

2.11.1. கூட்டுறவுத் துறைக்கும் கூட்டுறவு இயக்கத்திற்குமுள்ள தொடர்பில் முக்கியமான ஒன்றை இந்நிலையில் நாங்கள் குறிப்பிட விரும்புகிறோம். கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின்கீழ் வகுக்கப்பட்ட விதிகளின் (கூட்டுறவுத் துறையின் 19—2—1970 ஆம் நாளிட்ட 549 ஆம் எண் அரசாணை) மூலம், கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டுப் பதிவாளர் தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி நிர்வாகக் குழுவில் அலுவல் முறை உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். அதுபோலவே தமிழ்நாடு நிலவள வங்கிகள் சட்டத்தின்கீழ் வகுக்கப்பட்ட விதிகளின் மூலம் (17—3—1970 ஆம் நாளிட்ட 140 ஆம் எண் அரசாணை) கூட்டுப் பதிவாளர் (கடன் வழங்கல்) தமிழ்நாடு மாநில நிலவள வங்கியின் நிர்வாகக் குழுவில் மாநில அரசின் நியமனதாரராக நியமிக்கப்பட்டுள்ளார். மாநில அளவிலான இவ்விரு வங்கிகளின் நிர்வாகக் குழுவில் அடுத்த கீழ்நிலையிலுள்ள நிதியுதவி நிறுவனங்களின் தலைவர்களும் உள்ளனர். இந்த நிதியுதவி நிறுவனங்கள் குறுகிய காலக் கடன், நீண்ட காலக் கடன்கள் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. மேலும், இவை, கூட்டுறவு இயக்கத்தின் இரண்டு முக்கியப் பிரிவுகளைக் குறிக்கின்றன. நிதியுதவும் நிறுவனங்களாக இவை இருப்பதால், வேளாண்மை உற்பத்தி யிலும், கூட்டுறவு இயக்கத்தின் பிற துறைகள் வெற்றிகரமாக செயல்

படுவதிலும் இவற்றின் முக்கியத்துவத்தைக் கோடிட்டுக் காட்ட வேண்டிய அவசியமேயில்லை. துறைத் தலைவராகிய பதிவாளரே, கூட்டுப் பதிவாளருக்குப் பதிலாக, மாநில அளவிலான இவ்விரு நிறுவனங்களின் நிர்வாகக் குழுவில் அலுவல் முறையில் உறுப்பினராக நியமனதாரராக இருக்க வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம். இந்தத் தலைமை நிறுவனங்களின் கூட்டங்களில் நடைபெறும் விவாதங்களில் நேர்முகத் தொடர்பு கொள்வதும், பங்கு கொள்வதும் பதிவாளருக்கு, கூட்டுறவு இயக்கப் பிரச்சினைகள் குறித்து நேரடியாக தாமே தெரிந்து கொள்ளவும், அரசுசார்பற்ற முக்கியமான கூட்டுறவாளர்களின் மனப்போக்கையும், கருத்துக்களையும் அறிந்து கொள்ளவும் நல்லதொரு வாய்ப்பை அளிக்கும். பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதைப் பொதுவாக மேற்பார்வையிடவும், அவை செயல் படுத்தப்படுவது தொடர்பாக கூட்டுறவு இயக்கத்திற்குப் பொது ஆலோசனைகளை நல்கவும் அவருக்கு இது பயனுள்ளதாய் இருக்கும். கூட்டங்களில் கலந்துகொள்ளும் மற்றொரு அதிகாரி கொடுக்கும் அறிக்கையானது, நேரடியாக தொடர்பு கொண்டு, அதன் விளைவாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஈடாக முடியாது. இந்த விதிகளுக்குத் திருத்தம் கொண்டு வருவதன் மூலம் கூட்டுப் பதிவாளருக்குப் பதிலாக, தலைமை நிதியுதவும் நிறுவனங்கள் இரண்டின் நிர்வாகக் குழுவில் அலுவல் முறையில் உறுப்பினர்/நியமனதாரராக பதிவாளர் நியமிக்கப்பட வேண்டுமென்று நாங்கள் பரிவுரை செய்கிறோம். பதிவாளர் கூட்டங்களுக்கு வரவேண்டும் என்பதைப் பொது விதியாக வைத்துக் கொண்ட போதிலும் சில சமயங்களில் அவரால் கூட்டத்திற்கு வர இயலாமற் போகலாம். அப்போது அவர் சார்பில் கூட்டத்திற்கு வருவதற்கு வேறொரு அதிகாரியை முகமையில் அனுப்ப இவ் விதிகளில் தகுந்த விதித் துறை ஒன்று செய்யப்படலாம்.

2.11.2. மாநில விற்பனை வசதிச் சங்கம், மாநில நுகர்வோர் சங்கம் போன்ற பிற தலைமை நிறுவனங்களைப் பொறுத்தவரையில், சம்பந்தப்பட்ட இணைப் பதிவாளர்கள் தற்போது அரசுசார்புள்ள நியமனதாரர்களாக இருப்பதை நாங்கள் காண்கிறோம். இந்த ஏற்பாட்டை மாற்றியமைப்பது அவசியமென்று நாங்கள் கருதவில்லை. இணைப் பதிவாளர்கள் இடத்தில் கூட்டுப் பதிவாளர்கள் மட்டுமே இருப்பாராயின், கூட்டுப் பதிவாளர்களே அரசு சார்புள்ள நியமனதாரர்களாகக்கப்படலாம்.

2.11.3. இது தொடர்பாக நாங்கள் செய்ய விரும்புகிற மற்றொரு பரிவுரை தலைமை நிறுவனங்களுடன் பதிவாளர் அலுவலகம் நேரடியாகத் தொடர்பு கொள்ள வேண்டுமேயன்றி தற்போதுள்ள நடைமுறைபோல் சார்நிலை அலுவலகங்கள் மூலம் தொடர்பு கொள்ளக் கூடாது என்பதேயாகும். இந்த நிறுவனங்களின் நடவடிக்கைகள் மாநில முழுவதிலும் பரவியுள்ளன. வட்டார அல்லது வட்ட ஆட்சி வரம்பையுடைய கீழ்மட்ட அலுவலகங்கள் மேற்கூறிய நிறுவனங்களின் பிரச்சினைகளைச் சரிவர மதிப்பிடவோ ஆய்ந்து அறியவோ இயலாது. ஏனெனில் இப்பணியை மேற்கொள்ள அவ் வலுவலகங்கள் போதுமான வசதிகளைக் கொண்டவையாயில்லை. மேலும், பதிவாளர்/கூட்டுப் பதிவாளர் இந்நிறுவனங்களின் நிர்வாகக் குழுக்களில் உறுப்பினராக இருப்பார். எனவே, வரையறுக்கப்பட்ட ஆட்சி வரம்பை புடைய கீழ்மட்ட அதிகாரிகளைக் காட்டிலும் அந்நிறுவனங்களின் பிரச் சினைகள்பற்றி பதிவாளர்/கூட்டுப் பதிவாளர் சரிவர அறிவார். தலைமை நிறுவனங்களுக்கும், துறைத் தலைவருக்குமிடையே நேரடி கடிதத் தொடர்பு இருக்குமானால், தவிர்க்கக்கூடிய தாமதம் இருக்காது. மேலும், விரைவில் விவேகமான முடிவுகள் எடுப்பதையும் அது உறுதிப்படுத்தும். உரிமைக் கோரிக்கைகளை ஆய்வு செய்தல், பட்டிகளை ஏற்றுக்கொள்ளுதல் போன்ற தலைமை நிறுவனங்களில் ஆவணங்களைப் பார்வையிடும் வாலாயமான பணிகளில் கீழ்மட்ட அதிகாரிகளின் பணிகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கு ஆட்சேபணை எதுவுமில்லை.

அதிகாரிகளின் பதவித் தரங்களும், நியமன முறையும்.

2.12. கூட்டுறவுத் துறையில் பணிபுரியும் அதிகாரிகளின் பதவித் தரங்களும், அவர்களது நியமன முறைகளையும் குறிப்பிடும் விவர அறிக்கை ஒன்று 4-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. நியமன முறையில் எந்த மாற்றமும் செய்ய வேண்டியதில்லை.

ஆட்தேர்வு, நேரடி ஆட்தேர்வுக்கும் பதவி உயர்வுக்கும் உள்ள விகிதாச்சாரம்.

2.13.1. 1963-க்கு முன்னர், துணைப் பதிவாளர் தரத்திலுள்ள நிலையான மூன்று பதவிகளில் ஒன்று நேரடி ஆட்தேர்வு மூலம் நிரப்ப ஒதுக்கப்பட்டது. 1963-லிருந்து நிலையான, தற்காலிக பதவிகளில் 25 சத வீதம் நேரடி ஆட்தேர்வுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. காலியிடங்களின் மொத்த எண்ணிக்கையை முடிவு செய்கையில், கூட்டுறவு நிறுவனங்களுக்கும், பிற நிறுவனங்களுக்கும் முகமையில் அனுப்புவதால் ஏற்படுகிற காலியிடங்களில் 50 சத வீத காலியிடங்களும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று ஆணையிடப்பட்டது. 1964-லிருந்து 1972 வரை ஒவ்வோராண்டும் இரண்டு முதல் 5 வரையில் துணைப் பதிவாளர்கள் இந்த அடிப்படையில் நேரடியாகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர். மாற்றியமைக்கப்பட்ட அடிப்படையில் நேரடி ஆட்தேர்வு செய்வதானது கீழ்மட்ட பதவிகளை வகிக்கும் அதிகாரிகளின் பதவி உயர்வு வாய்ப்புகளைப் பெரிதும் பாதிக்கிறது என்ற கருத்து கூறப்பட்டது. நாங்கள் இது குறித்து பரிசீலனை செய்துள்ளோம். தற்போது 69 நிலையான துணைப் பதிவாளர் பதவிகளில் 27 பதவிகளில் நேரடியாக ஆட்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். (முகமையில் அனுப்பப்பட்டுள்ளவர்கள் உட்பட துணைப் பதிவாளர்கள் பதவிகளின் மொத்த எண்ணிக்கை 181 ஆகும்). வணிக வரித் துறை, காவல் துறை, வேளாண்மைத் துறை போன்ற சில துறைகளிலுள்ள இதற்கு நிகரான பதவிகளைப் பொறுத்தமட்டில், நேரடி ஆட்தேர்வு விகிதம் நிலையான பதவிகளுடன் தொடர்புடையதாகும். வருவாய், மீனளம், போக்குவரத்து போன்ற பிற துறைகளைப் பொறுத்தமட்டில், நேரடி ஆட்தேர்வு விகிதம் எல்லாப் பதவிகளுடன் சம்பந்தப்பட்டதாகும். மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்களது நேர்வில், இவ்விகிதம் எல்லாக் காலியிடங்களையும் பொறுத்தவரையில் 1 : 2 ஆகும். துணைப் பதிவாளர்களது நேர்வில் 1 : 3 என்ற தற்போதைய விகிதம், பதவி உயர்வு பெறுபவர்களுக்கு மிகவும் தாராளமான வாய்ப்புகளை ஏற்படுத்துகிறது. காலியிடங்களின் மொத்த எண்ணிக்கையைக் கணக்கிடுகையில், முகமையில் அனுப்பியதால் ஏற்பட்ட காலியிடங்களில் 50 சதவிகிதம் கருத்திற் கொள்ளப்படுகிறதென்பதில் ஐயம் ஏதுமில்லை. ஆனால், முக்கியமான நிறுவனங்களில் நிர்வாகிகளாக இளைஞர்கள் பணிபுரியும் அவசியத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. நிலையான காலியிடங்கள் 69-ல் 27 காலியிடங்கள் நேரடியாகத் தெரிந்தெடுக்கப்படும் அதிகாரிகளால் நிரப்பப்படுகிற தற்போதைய நிலையைக் கருதிப்பார்த்தால் கூட (கடந்த 9 ஆண்டுகளில் தற்போதைய முறை செயல்பட்டமையின் விளைவே இது), விகிதாச்சாரம் 1 : 2-க்கு ஓரளவே அதிகமாக உள்ளது. எல்லாக் கூறுகளையும் கருத்தில் கொண்டு, எல்லாக் காலியிடங்களில் 25 சத வீதம் என்ற தற்போதுள்ள விகிதாச்சாரத்தை மாற்ற வேண்டிய அவசியமில்லை என்று நாங்கள் கருதுகிறோம்.

2.13.2. கூட்டுறவு உதவிப் பதிவாளர்களின் நேர்வில், 1963-ஆம் ஆண்டுக்கு முன்னர், நேரடி ஆள் தெரிந்தெடுத்தலுக்கும், பதவி உயர்வுக்கும் உள்ள விகிதாச்சாரம் நிலையான பதவிகளில் 2 : 3 என்ற விகிதாச்சாரத்தில் இருந்தது. 1963-ஆம் ஆண்டிலிருந்து, நேரடியாக ஆள் தெரிந்தெடுப்பின் விகிதாச்சாரம் துணைப் பதிவாளர்களின் நேர்வில் உள்ளதுபோல் அதாவது காலியிடங்கள் அனைத்திலும் 25 சத வீதம் என்ற விகிதத்தில் மாற்றி அமைக்கப்பட்டது. இந்தப் பதவித் தரத்தைப் பொறுத்த வரையில்கூட, இந்த விகிதாச்சாரம் பின்பற்றப்படுவதால் பதவி உயர்வு பெறுபவர்களின் நலன்

மோசமாகப் பாதிக்கப்படுகிறது என்றும் நேரடி ஆட் தேர்வு விகிதாச்சாரம் நிலையான காலியிடங்களுக்குத் தொடர்புடையதாக இருக்க வேண்டும் என்றும் கருத்து நிலவுகிறது. கூட்டுறவுத் துறையில், முதல் அரசிதழ் பதிவு நிலை, அதாவது, துணைப் பதிவாளர்கள் தவிர, அரசிதழ் பதிவு பெறாத எல்லா நிலைகளிலும், இளநிலை ஆய்வாளர்கள், முதுநிலை ஆய்வாளர்கள், கூட்டுறவு உதவிப் பதிவாளர்கள் பதவிகளுக்கு நேரடியாக ஆட்கள் தெரிந்தெடுக்கப் படுகின்றனர். அதற்கடுத்து நான்கு நிலைகளிலும் உள்ள பதவிகளுக்கு நேரடி ஆட்தேர்வு விரும்பத்தக்கதல்ல. கூட்டுறவு உதவிப் பதிவாளர்கள், முதுநிலை ஆய்வாளர்கள் ஆகியோருக்கிடையே உள்ள விகிதாச்சாரம் 1 : 2 (முறையே 1660, 3136) என இருந்தபோதிலும், பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் புள்ளிவிவரத்தில் கண்டுள்ளபடி அவ்வளவு விரைவாக இல்லை. 1962-க்கு முன்னர், முதுநிலை ஆய்வாளர் ஒருவர் கூட்டுறவு உதவிப் பதிவாளராகப் பதவி உயர்வு பெறுவதற்கு சுமார் ஆறு ஆண்டுகள் ஆயின. ஆனால் அதிகமான கூட்டுறவு உதவிப் பதிவாளர்கள் இளைஞர்களாக இருப்பதாலும், அதன் விளைவாக ஆண்டுதோறும் ஓய்வு பெறும் அதிகாரிகள் குறைவாக இருப்பதாலும் (35 வயதுக்குக் குறைவாக 201 கூட்டுறவு உதவிப் பதிவாளர்களும், 35-45 வயதுத் தொகுதியில் 1,075 கூட்டுறவு உதவிப் பதிவாளர்களும் உள்ளனர்). பதவி உயர்வு பெறுவதற்குரிய கால அளவு 1972-ல் 11 ஆண்டுகளாக உயர்ந்துள்ளது. இந்த வகை அதிகாரிகளை நேரடியாகத் தேர்ந்தெடுப்பதன் மூலம் நிலைமையை மேலும் மோசமாக்குவது விரும்பத்தக்கதல்ல. எனவே, கூட்டுறவு உதவிப் பதிவாளர்கள் நிலையில் நேரடியாக ஆள் தேர்ந்தெடுப்பது நிறுத்தப்படலாம் என நாங்கள் பரிவுரை செய்கிறோம்.

2.13.3. முதுநிலை ஆய்வாளர்கள், இளநிலை ஆய்வாளர்கள் ஆகியோரைப் பொறுத்தவரை, தகுதியுள்ள நபர்கள் கிடைக்காததால் பதவி உயர்வு கொடுப்பதன் மூலம் நிரப்பப்பட இயலாத காலியிடங்கள் அனைத்தும் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படுகின்றன. முதுநிலை ஆய்வாளர்கள் நேர்வில் 60 சத விதம் பேர் நேரடி நியமனம் மூலம் நியமிக்கப்படுகின்றனர். இளநிலை ஆய்வாளர்கள் பதவியில் உள்ள காலியிடங்களில் 87 சத விதம் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படுகிறது. 2.18.3. பத்தியில், இளநிலை ஆய்வாளர் களுக்குப் படிப்படியாக பதவி உயர்வு கொடுக்கவேண்டுமென நாங்கள் பரிவுரை செய்துள்ளோம். எனவே, முதுநிலை ஆய்வாளர்கள் அளவில் மட்டுமே நேரடி நியமனம் செய்யப்பட வேண்டும். தற்போதுள்ள இளநிலை ஆய்வாளர்களுக்குப் பதவி உயர்வு கொடுப்பதன் மூலம் முதுநிலை ஆய்வாளர்கள் நிலையில் அதிகமான பேர் நேரடியாக நியமிப்பது குறையும் அளவுக்கு முறைப்படுத்தப்பட வேண்டும்.

நேரடி ஆட்தேர்விற்கான தகுதிகள்.

2.14. பல்வேறு வகைப் பதவிகளில் நேரடி ஆட்தேர்வுக்கு வரையறுக்கப் பட்ட தகுதிகளின் விவரங்கள் V-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. கூட்டுறவு உதவிப் பதிவாளர்கள் பதவிக்கு நேரடி ஆட்தேர்வு நிறுத்தப் பட்டால் பொருத்தமான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்பது தவிர, இது குறித்து எவ்வித குறிப்புரையும் தேவையில்லை.

பயிற்சி.

2.15. கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி ஒன்று உள்ளது. அதில் இடைநிலையில் உள்ள துறைப் பணியாளர்களுக்கு (முதுநிலை ஆய்வாளர்கள், உதவிப் பதிவாளர்கள், துணைப் பதிவாளர்கள்) அவர்கள் நேரடியாக நியமிக்கப்பட்ட பின்னர் பயிற்சி அளிக்கப்படுகிறது. கூட்டுறவுப் பயிற்சி நிறுவனம் ஒன்றும் உள்ளது. இளநிலை ஆய்வாளர்கள், நியமனம் செய்யப்பட்ட பின்னர் அவர்களுக்கு அங்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. (இந்நிலையங்கள் செயல் படுதல் குறித்த விவரங்கள் 18-வது அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டுள்ளன)

நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியின் விவரங்கள் VI-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. அதிகாரிகளுக்கும் பணியாளர்களுக்கும் தணிக்கை, வங்கியியல், விற்பனை, செய்முறை, நுகர்வோர் கூட்டுறவு வணிக நிர்வாகம் முதலிய சிறப்புப் பாடங்களில் பணியிருப்புப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. நேரடியாக நியமனம் செய்யப்பட்ட அதிகாரிகளுக்கும் பதவி உயர்வு பெற்றவர்களுக்கும் வரையறுக்கப்பட்ட துறைத் தேர்வுகளின் விவரங்கள் VII-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

வெவ்வேறு நிலைகளில் பதவி உயர்வுக்கான வாய்ப்பு.

2.16.1. கூட்டுறவு உதவிப் பதிவாளர் ஒருவர் தாம் கீழ்க்கண்டவாறு நியமிக்கப்படுவதற்காகத் தெரிந்தெடுக்கப்படும் ஆண்டின் ஜூலை முதல் நாளில் 52 வயதை நிறைவெய்தியவராக இருந்தால் இணைப் பதிவாளராக நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராகமாட்டார். நியமனம் செய்யும் அதிகாரி யார் என்பதும் ஒவ்வொரு வகைப் பதவியிலும் பதவி உயர்வு அளிப்பதற்குப் பின்பற்றப்படும் நடைமுறையும் VIII-வது இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன. இளநிலை உதவியாளர், பதவியிலிருந்து பதவி உயர்வு அளிப்பதற்காக மாநிலம் ஒரு அலகாக ஆக்கப்பட்டுள்ளது. கீழ் நிலைப் பதவிகளுக்கு துணைப் பதிவாளர் ஒவ்வொருவரின் அதிகார வரம்பும் தனிப்பட்ட அலகாக இருக்கிறது. ஒவ்வொரு வகைப் பதவியிலும் உள்ள பணியாளர்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு பார்த்தால், தோராயமான பதவி உயர்வு விகிதாச்சாரம் கீழே கண்டவாறு உள்ளது :—

பதவி வரை.	அப்பதவிக்கும் உயர் பதவிக்கும் உள்ள விகிதாச்சாரம், உயர் பதவியின் பெயர்.
(1)	(2)
(i) கூட்டுப் பதிவாளர்.	உயர் பதவி எதுவும் இல்லை. பதிவாளர் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருப்பார்.
(ii) கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர்.	51 : 1 (கூட்டுப் பதிவாளர்).
(iii) கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர்.	3 : 1 (இணைப் பதிவாளர்).
(iv) கூட்டுறவு உதவிப் பதிவாளர்.	9 : 1 (துணைப் பதிவாளர்).
(v) முதுநிலை ஆய்வாளர்கள்.	2 : 1 (கூட்டுறவு உதவிப் பதிவாளர்).
(vi) இளநிலை ஆய்வாளர்கள்.	1 : 3 (முதுநிலை ஆய்வாளர்கள்).
(vii) இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள், சுருக்கெழுத்தர்கள்.	1 : 5 (இளநிலை ஆய்வாளர்கள்).
(viii) தலைமைத் தணிக்கை அதிகாரி.	இதற்கு உயர்ந்த பதவி இல்லை.
(ix) துணைத் தலைமைத் தணிக்கை அதிகாரி.	1 : 1 (தலைமைத் தணிக்கை அதிகாரி).
(x) புள்ளி விவர அலுவலர்.	உயர்ந்த பதவி எதுவும் இல்லை.
(xi) புள்ளி விவர உதவியாளர்.	1 : 1 (புள்ளி விவர அலுவலர்).
(xii) கணக்கிடும் பொறி இயக்குபவர்கள்.	39 : 1 (புள்ளி விவர உதவியாளர்). முதுநிலை ஆய்வாளர்களாகப் பதவி உயர்வு பெற இவர்களும் தகுதி உள்ளவர்கள்.
(xiii) வரைபட வரைவாளர்.	உயர் பதவி எதுவும் இல்லை.

2.16.2. 1962-ல், துணைப் பதிவாளர் ஒருவர் இணைப் பதிவாளராகப் பதவி உயர்வு பெறுவதற்கு சுமார் 13 ஆண்டுகள் ஆயிற்று. 1972-ல் இக்கால அளவு சுமார் 7 ஆண்டுகளாகக் குறைந்தது. இணைப் பதிவாளர் பதவிகளின் எண்ணிக்கை உயர்ந்ததே இதற்குக் காரணமாகும். 1962-ல், கூட்டுறவு உதவிப்

பதிவாளர் ஒருவர் துணைப் பதிவாளராகப் பதவி உயர்வு பெறுவதற்கு சுமார் 6 ஆண்டுகள் பிடித்தது. அது படிப்படியாக 13 ஆண்டுகளாக உயர்ந்துள்ளது. 1962-ல், முதுநிலை ஆய்வாளர் ஒருவர் உதவிப் பதிவாளராகப் பதவி உயர்வு பெறுவதற்கு சுமார் 6 ஆண்டுகள் பிடித்தது. ஆனால், அக் கால அளவு 1972-ல் 11 ஆண்டுகளாக உயர்ந்துள்ளது. இளநிலை உதவியாளர்கள், இளநிலை ஆய்வாளர்கள் ஆகியோரைப் பொறுத்தவரை, அவரவர்களுக்கு மேல் உயர் பதவித் தரத்தில் உள்ள பதவிகளின் எண்ணிக்கை அவர்களுடைய எண்ணிக்கையைக் காட்டிலும் அதிகமாக இருக்கிறது. எனவே, இவர்களுக்குப் பதவி உயர்வு விரைவில் கிடைக்கிறது. முதுநிலை ஆய்வாளர்கள் பதவிகளின் எண்ணிகைக்கும் கூட்டுறவு உதவிப் பதிவாளர்கள் பதவிகளின் எண்ணிக்கைக்கும் இடையே உள்ள விகிதாச்சாரம் 2 : 1 என இருந்த போதிலும், (ஒவ்வொரு 2 முதுநிலை ஆய்வாளர்களுக்கும் ஒரு கூட்டுறவு உதவிப் பதிவாளர் இருக்கிறார்) இளைஞர்களாக உள்ள உதவிப் பதிவாளர்கள் அதிக அளவில் இருப்பதாலும் ஆண்டுதோறும் ஓய்வுபெறும் அதிகாரிகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதாலும் பதவி உயர்வு பெறுவதற்கான கால அளவு 6 ஆண்டுகளிலிருந்து 11 ஆண்டுகளாக உயர்ந்துள்ளது. கூட்டுறவு உதவிப் பதிவாளர்கள் பதவிக்கு நேரடியாக ஆள் தெரிந்தெடுப்பது நிறுத்தப் படலாம் என்று 2.3.12 பத்தியில் நாங்கள் செய்த பரிவுரை, முதுநிலை ஆய்வாளர்களுக்குரிய பதவி உயர்வு வாய்ப்புகளை ஓரளவுக்கு மேம்படுத்தும்.

கூட்டுறவு நிறுவனங்களில் பணியாற்றும் கூட்டுறவுப் பணியாளர்கள்.

2.17.1. கூட்டுறவுத் துறை அதிகாரிகளையும் சார்நிலைப் பணியாளர்களையும் கூட்டுறவு நிறுவனங்களில் செயலாளர்களாக, வணிக மேலாளர்களாக, பொது மேலாளர்களாக, கணக்கர்களாகப் பணியாற்றுவதற்கு அனுப்புவது கூட்டுறவுத் துறையில் பல ஆண்டுகளாக நடைமுறையில் இருந்துவந்துள்ளது. கூட்டுறவு நிறுவனங்களில் தற்போது 24 இணைப் பதிவாளர்கள், 51 துணைப் பதிவாளர்கள், 228 கூட்டுறவு உதவிப் பதிவாளர்கள், 19 முதுநிலை ஆய்வாளர்கள், 10 இளநிலை ஆய்வாளர்கள் (மொத்தம் 332 பேர்) முகமையில் பணியாற்றி வருகின்றனர். கூட்டுறவு நிறுவனங்களில் அயலிடப் பணியில் பணியாற்றுவது இணைப் பதிவாளர்களுக்கும் துணைப் பதிவாளர்களுக்கும் அரசால் ஆணையிடப்படுகிறது. அரசிதழ் பதிவு பெறாத அதிகாரிகளை அயலிடப் பணிக்கு அனுப்ப பதிவாளருக்கு அதிகாரம் உண்டு. தங்கள் அதிகார வரம்புக்குள் உள்ள கூட்டுறவு நிறுவனங்களில் கூட்டுறவு உதவிப் பதிவாளர்கள், முதுநிலை ஆய்வாளர்கள், இளநிலை ஆய்வாளர்கள் ஆகியோரை அயலிடப் பணியில் அனுப்ப இணைப் பதிவாளருக்கு அதிகாரம் உண்டு. கூட்டுறவு நிறுவனங்களுக்கு முகமையில் அனுப்பப்பட்டுள்ள அதிகாரிகள், (கூட்டுறவுத் துறையால் அனுப்பப்பட்டிருப்பினும் பிற துறைகளால் அனுப்பப்பட்டிருப்பினும்) கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் அல்லது ஊதியக் கொடை வழங்கல் சட்டத்தின் கீழ் சங்கங்களிடமிருந்து ஊதிய கொடை பெற அரசு அனுமதித்துள்ளது. முன்னர் அயலிடப் பணிக்கு அனுப்பப்பட்டுள்ள அதிகாரி ஒருவர் தமது ஊதியத்தில் 25 சதவீதத்திற்குச் சமமான தொகையை முகமைப் படியாக அக் கூட்டுறவு நிறுவனத்திலிருந்து பெற அனுமதிக்கப்பட்டார். அரசு அப்படியை 1963 ஆம் ஆண்டு ஜூலையிலிருந்து 20 சதவீதமாகக் குறைத்தது. 1966 ஜூலையிலிருந்து அதை முற்றிலும் நிறுத்தி விட்டது.

2.17.2. கூட்டுறவுத் துறை குறித்து சந்தானம் குழு (1969) இது குறித்துப் பரிசீலனை செய்தது. கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுடைய பணியாளர்களைக் கொண்டே தங்கள் அலுவல்களை நிர்வகிக்க வேண்டும் என்றும், சங்கங்களின் நிர்வாக அலுவலில் தலையிடாமல் துறை நிர்வாக மேற்பார்வை பணியை மட்டும் ஆற்ற வேண்டும் என்றும் குழு கருதியது. சிறப்புச் சூழ்நிலைகளில் தவிர ஏனைய நேர்வுகளில் கூட்டுறவுத் துறை அதிகாரிகள் கூட்டுறவுச் சங்கங்களில் நிர்வாக அலுவலர்களாகப் பணியாற்ற முகமையில் அனுப்பப்படக் கூடாது என்றும், சிறப்புச் சூழ்நிலைகளில்

அவர்கள் முகமையில் அனுப்பப்படும்போது, சங்கத்தில் அப் பதவியில் உள்ளவர்கள் பெறும் ஊதியங்களை இவர்களும் பெறத் தகுதியுடையவர் களாக்கப்பட வேண்டும் என்றும் அது கருத்து தெரிவித்தது. இதை நாங்கள் பொதுவாக ஒப்புக் கொள்கிறோம். இப்பரிவுரை குறித்து ஆணைகள் எவையும் பிறப்பிக்கப்படவில்லை. பின்னர், இரண்டாவது சம்பள ஆணைக்குழு இதுபற்றி பரிசிலித்து, படிப்படியான விதத்தில், அதாவது, முதல் இரண்டு ஆண்டுகளுக்குச் சம்பளத்தில் 20 சதவீதமும், மூன்றாவது ஆண்டில் சம்பளத்தில் 15 சதவீதமும் முகமைப் படியாக வழங்க பரிவுரை செய்தது. இப்பரிவுரை குறித்து அரசு இன்னும் ஆணை பிறப்பிக்கவில்லை. இதற்கிடையே, பிற துறைகளிலிருந்து சில கூட்டுறவு நிறுவனங்களுக்கு அதிகாரிகள் முகமையில் அனுப்பப்பட்ட நேர்வில், அவர்களுக்கு முகமைப் படி அல்லது சிறப்புச் சம்பளம் அனுமதிக்கப்படும்போது, கூட்டுறவுத் துறையிலிருந்து முகமையில் அனுப்பப்பட்ட அதிகாரிகளுக்கு அது மறுக்கப்படுகின்றது என்று புகார் கூறப்பட்டுள்ளது. நூற்பாலைகள், சர்க்கரை ஆலைகள் ஆகியவற்றிற்கு முகமையில் அனுப்பப்பட்ட அதிகாரிகளின் நேர்வில் அத்தகைய வேறுபாடு காட்டப்படவில்லையாயினும், பிற சங்கங்களுக்கு முகமையில் அனுப்பப்பட்டவர்களுக்கு அவ்வாறு வேறுபாடு காட்டப் படுவதாகத் தெரிகிறது. முகமையில் அனுப்பப்படுகிற நடைமுறை தொடர்ந்து செயலில் இருக்கும் வரை, கூட்டுறவுத் துறை அதிகாரிகளுக் கெதிராக வேறுபாடு காட்டப்படக்கூடாது என்பதும், அதிகாரி எந்தத் துறையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டாலும் ஊதியங்கள் ஒரு சீராக இருக்க வேண்டும் என்பதும் எங்கள் கருத்தாகும்.

இளநிலை ஆய்வாளர்கள் பதவிகளை எடுத்துவிடுதல்.

2.18.1. கூட்டுறவுச் சார்நிலைப் பணியில் இளநிலை ஆய்வாளர்கள் பதவி கடைசி பதவித்தரமாகும். பெரும்பாலும், சிறிய வேளாண்மைக் கடன் சங்கங்கள், பிற சங்கங்கள் ஆகியவற்றின் கணக்குகளைத் தணிக்கை செய்ய அவர்கள் நியமிக்கப்படுகின்றனர். டிக்ரிகளை நிறைவேற்றுவதற்காக விற்பனை அதிகாரிகளாகவும் விசாரணைகளை நடத்துவதற்காக நிர்வாக ஆய்வாளர் களாகவும், கலைக்கப்படும் நிலையில் உள்ள சங்கங்கள் குறித்து ஆய்வாளர் களாகவும் அவர்கள் பணியாற்றுகின்றனர். சங்கங்களின் நடவடிக்கைகள் அதிகமாகி இருப்பதாலும், பலதரப்பட்டவையாக உள்ளதாலும், தற்போதுள்ள நிலைமைகளில் தணிக்கை, செயல்படுத்துதல், கலைப்பு, விசாரணை தொடர்பான பணி இன்னும் உயர் பதவிகளில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கருத்துரை சந்தானம் குழுவால் பரிசீலிக்கப்பட்டது. இந்த பதவி எடுத்து விடப்பட்டு, முதுநிலை ஆய்வாளர்கள் பதவி ஆய்வாளர்கள் எனப் பதவிப் பெயரிடப்படலாம் என்று குழு கருத்து தெரிவித்தது.

2.18.2. எனினும், இப்பரிவுரையை அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. இச் செயற்குறிப்பு நிதிநிலை சீராகும்வரை ஒத்திப் போடப்படலாம் என்று 24—4—1972 நாளிட்ட தனது குறிப்பாணையில் அரசு ஆணையிட்டுள்ளது.

2.18.3. இளநிலை ஆய்வாளர்களுக்கு படிப்படியாகப் பதவி உயர்வு கொடுக்கப்பட வேண்டும் என்ற சந்தானம் குழுவின் பரிவுரையை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். இந்த இருவகைப் பதவித் தரங்களையும் வைத்துக் கொண்டு, இவ்விரண்டிற்கும் நேரடியாக ஆள் தெரிந்தெடுப்பது நல்லதோர் நிர்வாகத்திற்கு உகந்ததல்ல.

கூட்டுறவு வளர்ச்சி அதிகாரிகள்.

2.19.1. வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றிலும் தற்போது கூட்டுறவு உதவிப் பதிவாளர் பதவித் தரத்தில் வளர்ச்சி அதிகாரி ஒருவர் பணியாற்றுகிறார். அவர் வளர்ச்சி வட்டார ஆணையாளரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழும், வட்டத் துணைப் பதிவாளரின் தொழில் நுட்ப நிர்வாகத்தின் கீழும் பணியாற்றுகிறார்.

2.19.2. (கூட்டுறவு) நல வளர்ச்சி அதிகாரியின் கடமைகளும் பொறுப்புகளும் ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 26—2—1962 ஆம் நாளிட்ட 455 ஆம் எண் அரசு ஆணையில் விரிவாகக் குறிப்பிடப்பட்டன. கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தல், வேளாண்மைக் கடன் வசதிகளை விரிவுபடுத்துதல், கடன் வசதியையும் விற்பனை வசதியையும் ஒருங்கிணைத்தல், சங்கங்களைப் பார்வையிடுதல், வேளாண்மைக்குத் தேவையான விதைகள், உரங்கள் முதலியவற்றை வழங்கும் பணியைக் கிராமக் கடன் வழங்கு சங்கங்கள் மேற்கொண்டனவா என்பதை உறுதி செய்ய நடவடிக்கை எடுத்தல், நடுவர் தீர்ப்பு, நடுவர்மன்ற தீர்ப்புகளை நிறைவேற்றுதல், விசாரணை முதலிய சட்டப்படிக்கான பணிகளைச் செய்தல் ஆகியவை இவரது கடமைகளில் அடங்கும். 7—11—1962-ஆம் நாளிட்ட 219687 2/62-1 ஆம் எண் அரசுக் குறிப்பாணையில் (கூட்டுறவு), நல வளர்ச்சி அதிகாரியின் கடமைகள், பொறுப்புகள் குறித்துத் துணைக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன. குறிப்பாகக் குத்தகைக்காரர்கள், நிலமற்ற உழவர்கள் ஆகியோரைச் சங்கங்களில் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ள ஏற்பாடு செய்தல், அவர்களுக்குப் போதியக் கடன் வசதி அளித்தல், கடன்கள் சரிவரப் பயன் படுத்தப்படுகின்றனவா என்பதை நேரில் சென்று சரிபார்த்தல், பங்கு மூலதனம், வைப்பீட்டுத் தொகைகள் ஆகியவற்றைக் கூடுதலாக வசூலித்தல், அரசு உதவியுடன் கிடங்கு ஏதேனும் கட்டப்பட்டிருந்தால், அது முற்றிலும் பயன்படுத்தப்பட்டதா என்பதை உறுதி செய்தல் ஆகிய சில கடமைகள் குறித்து இக் குறிப்பாணையில் வலியுறுத்தப்பட்டது. ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திலும் தொடங்கப்படவிருக்கும் நிலவள வங்கிகள் ஊராட்சி ஒன்றிய அலுவலகப் பகுதி ஒன்றில் அமைக்கப்பட வேண்டுமென்றும், வளர்ச்சி வட்டாரத்தில் பணியாற்றும் (கூட்டுறவு) நல வளர்ச்சி அதிகாரியின் பொறுப்பில், வளர்ச்சி வட்டாரத்தின் தற்போதைய பணியாளரமைப்பிற்கு இடையூறு எதுமின்றி, இந்த வங்கிகள் விடப்படவேண்டுமென்றும் கூட்டுறவுத் துறையின் 8—1—1970 ஆம் நாளிட்ட 18 ஆம் எண் ஆணையில் அரசு கட்டளையிட்டது. பின்னர், தமிழ்நாடு நிலவள வங்கிகள் சட்டத்தின் 3-C பிரிவின்கீழ் அரசுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டு, வளர்ச்சி வட்டார அளவில் புதிதாக அமைக்கப்பட்ட தொடக்க நில்வள வங்கிளின் மேலாளர்களாக (கூட்டுறவு) நல வளர்ச்சி அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். இதற்கான ஆணைகள் 14—3—1970 ஆம் நாளிட்ட 138 ஆம் எண் அரசு ஆணையில் பிறப்பிக்கப்பட்டன. (இந்த அரசு ஆணையில் செய்யப்பட்ட நியமனங்கள் யாவும் 60 வங்கிகள் சம்பந்தப்பட்டவையாகும்.) மேலாளர்களாக நியமிக்கப்பட்ட நல வளர்ச்சி அதிகாரிகள் முன்பு போலவே வட்டார வளர்ச்சி அதிகாரிகள், துணைப் பதிவாளர்கள் ஆகியோரது கட்டுப்பாட்டின் கீழ் தாங்கள் வழக்கமாகச் செய்துவரும் அலுவல்களைத் தொடர்ந்து செய்து வருவரென்றும் அந்த அரசு ஆணையில் கூறப்பட்டிருந்தது. மேலும், தொடக்க நில்வள வங்கிகளின் மேலாளர் என்ற வகையில் அவர்கள், கூட்டுறவுத் துறையின் (நிலவள வங்கிகள்), துணைப் பதிவாளர், ஏனைய உயர் அதிகாரிகள் ஆகியோரது மேற்பார்வையின் கீழும் கட்டுப்பாட்டின் கீழ் பணியாற்றுவர் என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

2.19.3. (கூட்டுறவு) நல வளர்ச்சி அதிகாரிகளிடம் கடமைகள் ஒப்படைக்கப்படுவது குறித்து, ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 9—2—1972ஆம் நாளிட்ட 236ஆம் எண் அரசு ஆணையின் அடிப்படையில் வெளியிடப்பட்ட 6—4—1972 ஆம் நாளிட்ட சுற்றறிக்கையில் பதிவாளரால் அண்மையில் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. வட்டார அளவில் நிர்வாக அமைப்பைச் சீரமைப்பு செய்வது சம்பந்தமாக அச் சுற்றறிக்கையில் கண்டிருந்தது. வளர்ச்சி வட்டாரத்தின் 6 கிளைகளில் ஒன்று (கூட்டுறவு) நல வளர்ச்சி அதிகாரியின் பொறுப்பில் விடப்பட்டுள்ளது. புதிய கிணறுகள் தோண்ட உதவித் தொகைகள் வழங்குதல், அனைத்து நாடுகள் வளர்ச்சி நிறுவனத் திட்டங்கள், நிலவள வங்கிகள், பாசனச் சங்கங்கள், வேளாண்-பணிச் சங்கங்கள் சம்பந்தப்பட்ட பொருள்களை அவர் கவனிக்க வேண்டும். இவற்றுடன், சட்டப்படிக்கான கடமைகளையும் இவர் செய்ய வேண்டும்.

2.19.4. கூட்டுறவுக் கிளை அலுவலகத்திற்கு ஒரு எழுத்தர் அல்லது இளநிலை இன்ஸ்பெக்டர், அரசு கடைநிலை ஊழியர் ஒருவர் ஆகியோரை நியமிப்பதற்கு அனுமதி வழங்குவது குறித்து அரசுக் கூட்டுறவுத் துறை தனியாகப் பரிசீலித்து வருவதாக மேற்குறிப்பிட்ட அரசு ஆணையில் கூறப்பட்டது. இது குறித்து இதுவரை ஆணை ஏதும் பிறப்பிக்கப்படவில்லை யென்று தெரியவருகிறது.

2.19.5. நிர்வாக அமைப்பில் (கூட்டுறவு) நல வளர்ச்சி அதிகாரியின் பணி குறித்து சந்தானம் குழு பரிசீலித்தது. இந்த அதிகாரிகள் அநேகமாக சட்டப்படிக்கான அலுவல்களையே கவனித்து வந்ததாகவும், இந்நாட்களில் நிலவள வங்கிகளின் கடன் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து வருகின்றனர் என்றும் (இப்போது இப்பணியை அவர்கள் கவனிப்பதில்லை), இவர்கள் துணைப் பதிவாளர்களின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் அமர்த்தப் பட்டால் இவர்களின் பணி சிறந்த முறையில் மேற்பார்வையிடப்படும் என்றும் மேற்படி குழு கூறியது. (கூட்டுறவு) நல வளர்ச்சி அதிகாரிகள் கூட்டுறவுத் துறைக்கு மாற்றப்படலாமென்று குழு பரிவுரைத்தது. இப் பரிவுரை குறித்து இதுவரை ஆணை பிறப்பிக்கப்படவில்லை.

2.19.6. அரசுச் சார்பற்ற நிர்வாகப் பணியாளர்களையும் மேற்பார்வைப் பணியாளர்களையும் உடைய (குறிப்பாகக் குறுகிய காலக் கடன் பிரிவுக்கு) பொறுப்பு வகிக்கும் கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாகக் கூட்டுறவுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன என்று எங்களிடம் எடுத்துக் கூறப்பட்டது; மேலும், கூட்டுறவுத் துறையில் நீண்டகாலக் கடன் பிரிவிற்கும், விற்பனை, நுகர்வோர் கூட்டுறவு போன்ற ஏனைய பிரிவுகளுக்கும் இதுபோன்று பணியாளர்கள் உள்ளனர் என்றும், ஏனைய துறைகளைப் போல கூட்டுறவுத் திட்டங்களுக்காக வளர்ச்சி வட்டாரத்தின் வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கம் ஏதும் செய்யப்படவில்லையென்றும் தெரிவிக்கப் பட்டது. ஆகவே (கூட்டுறவு) நல வளர்ச்சி அதிகாரிகளின் பணியை ஆய்வு செய்யவும் கட்டுப்பாடு செய்யவும் வட்டார வளர்ச்சி அதிகாரிகளுக்குத் தேவையான புள்ளி விவரங்களோ ஆதாரங்களோ இல்லை; எனவே, இந்த அதிகாரிகள் கூட்டுறவுத் துறையின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் அமர்த்தப் பட்டால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று எங்களிடம் கூறப்பட்டது.

2.19.7. ஊராட்சி வளர்ச்சி நிர்வாகம் குறித்த எங்களது அறிக்கையில் ஊராட்சி ஒன்றியங்களின் அலுவல்கள் பற்றி (அத்தியாயம் 6, பத்திகள் 7.1, 7.2) ஆய்வு செய்கையில், இக்கருத்தின் எல்லா அம்சங்களையும் நாங்கள் பரிசீலித்துள்ளோம். இது தொடர்பாக 7.2 பத்தியை அப்படியே இங்கு எடுத்துக்கூறுவது சாலப் பொருத்தமாகும்:

"கூட்டுறவு வளர்ச்சிப்பணி அலுவலர்களை ஊராட்சி ஒன்றியங்களி லிருந்து நீக்குவது அறிவார்ந்த செயல் ஆகாது என்று ஆணைக்குழு கருதுகிறது. தற்போது அவர்கள் தாம் ஆற்றவேண்டிய முக்கிய பணியைச் சரிவர கவனிக்கவில்லை என்றாலும் அவர்களுக்கென்று முக்கியப்பணி உள்ள தென்பதை யாரும் மறுக்க முடியாது. கடன் வசதி, உரங்கள், உழவு கருவிகளைப் பழுதுபார்த்தல் போன்ற ஏனைய வசதிகள் முதலிய வேளாண்மைக்கான இன்றியமையாத தேவைகள் தற்போது பெரும்பாலும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. அவை வழங்கப் படுவதில் பல சிக்கலான நடைமுறைகள் உள்ளன. அந்த நடைமுறைகள் உழவர்கள் அறியாதவையாகும். இந்தப் பயன்களை அடைய, பொருத்தமான கூட்டுறவுச் சங்கங்களில் உழவர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்து, அவற்றின் நடைமுறைகளைக் கற்றறிய வேண்டும். ஊர்நல உதவியாளர்கள் மூலம் இந்நடைமுறைகளை உழவர்களுக்குக் கற்பிப்பதில் கூட்டுறவு வளர்ச்சிப் பணி அலுவலர்களுக்கு முக்கிய பங்கு இருக்கிறது. திறம்படவும் விரிவாகவும் இவ்வாறு செய்யப்படவில்லையெனில், கூட்டுறவுச் சங்கங்களின் பயன் பணக்கார-படித்த உழவர்களுக்கு மட்டுமே கிட்டும். கூட்டுறவு நிலையங்களின் மீது அவர்களுடைய ஆதிக்கம் எப்போதுமே இருந்து வந்துள்ளது. கூட்டுறவு

நிலையங்களைப் பரந்த அடிப்படையில் இயங்கச் செய்வது அவசரமான ஒரு பணியாகும். தகுந்த நிர்வாக முறைகள் மூலம் இது குறித்துத் தங்களது பொறுப்புகளைக் கூட்டுறவு வளர்ச்சிப் பணி அலுவலர்கள் தெளிவாகத் தெரிந்துகொள்ளுமாறு செய்ய வேண்டும்."

பதிவாளர்.

2.20.1. கூட்டுறவு இயக்க வளர்ச்சியில் பதிவாளர் ஏற்க வேண்டிய பங்கு, அவரது பொறுப்புகளை ஆற்றுவதற்கு அவருக்கு இருக்க வேண்டிய நிலை, தகுதி, அனுபவம் முதலியவற்றைப் பல்வேறு அதிகாரமன்றங்களும், குழுக்களும் அவ்வப்போது பரிசீலனை செய்துள்ளன.

2.20.2. "கூட்டுறவு-சட்டமும் கொள்கைகளும்" (Law and Principles of Co-operation) என்ற தமது புத்தகத்தில் பதிவாளர் 'கூட்டுறவு இயக்கத்தின் அச்சாணி' என்று கால்வர்ட் குறிப்பிட்டுள்ளார்.

2.20.3. சர் ஈ. டி. மெக்லகான் என்பவர் தலைமையில் 1915-ல் இந்திய அரசு, கூட்டுறவு குறித்த குழு ஒன்றை அமைத்தது. அக்குழு பதிவாளர் ஆற்ற வேண்டிய அலுவல்கள் பற்றி, கீழ்க்காணும் கருத்துக்களை வெளியிட்டுள்ளது :—

"பதிவாளர் தமது கடமைகளை நிறைவேற்றுவதற்கு, தற்போது பெருமளவில் வெளிவரும் கூட்டுறவு வெளியீடுகளைத் தொடர்ந்து படித்துவர வேண்டும். இந்தியா முழுவதும், பதிவாளரது மாநிலத்திலும், பொருளாதார நிலைமைகளையும் நடைமுறைகளையும் அவர் அறிந்திருக்க வேண்டும். கூட்டுப் பங்கு முதலீட்டு வங்கியியல் குறித்த கோட்பாடுகளையும் முறைகளையும் பதிவாளர் நன்கு அறிந்திருக்க வேண்டும்; சிக்கனமாக செலவு செய்யும் முறையை உணர்த்துதல், கூட்டுறவு இயக்கம் குறித்து உணர்த்துதல் ஆகியவை குறித்து பிற நாடுகள் பின்பற்றும் முறை குறித்தும் பரிசீலனை செய்ய வேண்டும். கூட்டுறவுக் கல்வி பயிற்சி நிறுவனங்களின் தலைவராகவும் இவர் உள்ளார். மேலும், மக்கள் கூட்டுறவு குறித்த உண்மையான அறிவைப் பெறுவதற்கான சிறந்த வழிமுறைகளைப் பதிவாளர் வகுக்க வேண்டும். இவர், பெருமளவுப் பணியாளர்களை நிர்வகிக்க வேண்டும். மாதிரித் துணைச் சட்டங்களையும், விதிகளையும் இயற்ற வேண்டும்; புள்ளிவிவரங்களைத் திரட்ட வேண்டும்; பல்வேறு பொருட்கள் குறித்து அறிக்கைகள் தயாரித்து அரசுக்கு ஆலோசனை வழங்கவேண்டும்; மாநில வங்கிகள், மத்திய வங்கிகள் நிர்வகித்துவரும் இயக்கத்தின் உயரளவு நிதிகள் குறித்து நெருங்கிய தொடர்பு வைத்துவர வேண்டும். இவற்றுடன், இவர், கூட்டுறவு, வேளாண்மை மாநாடுகளில் கலந்து கொள்ளவேண்டும்; அங்காடிகளுடனும், கௌரவ அமைப்பாளர்கள், நல்லெண்ணம் கொண்டவர்கள், அரசின் பல்வேறு துறைகள் ஆகியவற்றுடன் தொடர்ந்து தொடர்பு வைத்து வர வேண்டும்; அலுவலக பத்திரிகைகளையும் கூட்டுறவுப் பத்திரிகைகளையும் படிப்பதுடன், அவற்றில் கட்டுரைகள் எழுதும் பணியையும் மேற்கொள்ள வேண்டும். பதிவாளர் ஓர் அதிகாரியாக மட்டுமல்லாமல், சங்கங்களின் நண்பனாக, நல்லாசானாக, வழிகாட்டியாக இருப்பதற்கென அரசினால் நியமிக்கப்பட்டு சம்பளம் வழங்கப்படுபவர் என்ற முறையில் அவர் பணியாற்ற வேண்டும். பதிவாளரின் பணிக்கு முடிவே இல்லை என்றும், நாளது தேதி வரையில் எல்லாப் பணிகளையும் செய்து முடித்துவிட்டதாகக் கருத முடியாது என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். பதிவாளர், கூட்டுறவு இயக்கம் பற்றி படிப்பதன் அவசியம் குறித்தும், சங்கங்களை மேற்பார்வையிட்டு அவற்றிற்கு கூட்டுறவு இயக்கம் பற்றி விளக்கும் அவசியத்தையும் பதிவாளர் எப்போதும் உணர வேண்டும். புதிய இலட்சியங்களை அடைவதற்கான புதிய வழிகள், முறைகள் ஆகியவை பற்றி தொடர்ந்து விவாதித்து அவற்றை வகுக்க வேண்டும். பொதுமக்கள் வைப்பீடு செய்யும் பெருந்தொகையைக் கண்காணித்து வருவது, ஒரு மாநிலத்தின் பொருளாதார நிலைமை குறித்த பொறுப்பில் பங்கு வகிப்பது போன்ற—

பெரும் பொறுப்புகள் அவருக்கு உண்டு. பதிவாளருக்கு ஒப்படைத்துள்ள அளவிற்கு மிகவும் கடுமையான அல்லது மிகுதியான உழைப்பு தேவைப் படுகிற பணி வேறெந்த அதிகாரிகளுக்கும் ஒப்படைக்கப்படவில்லை என்பதை நன்கு அறியலாம்".

2.20.4. கூட்டுறவு இயக்கம் 1915-லிருந்து எதிர்பார்த்த அளவுக்கு மேல் வளர்ச்சியடைந்து பல்வகைப்படுத்தப்பட்டு, பொருளாதார நடவடிக்கை, வேளாண்மை, தொழில், வணிகம் ஆகிய பெரும்பாலான துறைகளிலும் கிளைகிளையாக வளர்ச்சியடைந்திருந்த போதிலும், மெக்லகான் குழு குறிப்பிட்ட மேற்கூறிய கருத்துக்கள் தற்போதைய நிலைமைக்கும் பெரும்பாலும் பொருந்தக்கூடியதாய் உள்ளன.

2.20.5. இந்திய அரசினால் 1963-ல் நியமிக்கப்பட்ட கூட்டுறவு நிர்வாகம் பற்றிய குழு கீழ்க்கண்ட கருத்துக்களைத் தெரிவித்துள்ளது :—

"கூட்டுறவு இயக்கம் பல்வகைப்படுத்தப்பட்டமையாலும், இதற்கு, தேசிய திட்ட அமைப்பில் முக்கியமானதோர் இடம் வழங்கப்பட்டதாலும், பதிவாளரின் பொறுப்புகள் பெருமளவு பெருகியுள்ளன. குடியாட்சி அரசுகள் பல அதிகாரிகள் மூலம் தங்களது சமூக, பொருளாதார நோக்கங்களுக்குச் செயல்வடிவம் கொடுக்க வேண்டியுள்ளது. அந்த அதிகாரிகளில் பதிவாளர் மிக முக்கியமானவராகிறார். இவர் அரசின் இலட்சியங்களை நன்கு அறிந்து கொண்டு, அரசுச் சார்பற்ற தலைவர்களைக் கலந்தாலோசித்து, அவற்றிற்குத் திட்டவட்டமான செயல்வடிவம் கொடுக்க வேண்டும். அதே சமயத்தில், நிர்வாக நடைமுறையைச் செவ்வனே நடத்தி, குடியாட்சி அரசுகளுக்குச் சரியான ஆலோசனையை அவர் நல்க வேண்டும். சட்டப்படி பார்த்தால், பதிவாளர், கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தை நிர்வகிக்கவும், அச்சட்டத்தின் கீழ் அவர் ஆற்றுவதற்காக குறிப்பிடப்பட்டுள்ள கடமைகளை, அதாவது பதிவுசெய்தல், துணை விதிகளைத் திருத்துதல், கணக்குகளைத் தணிக்கை யிடுதல், சங்கங்களைப் பார்வையிடுதல், அவை செயல்படுவது குறித்து விசாரணைசெய்தல், தகராறுகளில் நடுவர் தீர்ப்பு வழங்குதல், நீதிமன்றத் தீர்ப்புகளை நிறைவேற்றுதல், சங்கங்களைக் கலைத்தல் முதலிய பணிகளைச் செய்ய மாநில அரசால் நியமிக்கப்பட்ட அதிகாரியாவார். துறையின் இந்த அடிப்படை அலுவல்கள் புறக்கணிக்கப்படுமேயாயின், கூட்டுறவு இயக்கத்தின் நல்ல வளர்ச்சியை நினைத்துப் பார்க்க முடியாது. அதே சமயத்தில், அடுத்தடுத்து நிறைவேற்றப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்கள், கூட்டுறவுத் துறையின் ஆக்கப் பொறுப்புகளையும் வளர்ச்சிப் பொறுப்புகளையும் நன்கு புலப்படுத்தியுள்ளன. அரசின் துறை ஒன்று செயல்படும் திறன், அத்துறைத் தலைவரின் தனித் திறமையையும் தகுதியையும் கணிசமான அளவு பொறுத்துள்ளது. எனவே, பதிவாளர் அனுபவம் முதிர்ந்த நிர்வாகியாக இருக்க வேண்டும்; கூட்டுறவு இயக்கத்தில் நம்பிக்கை கொண்டவராகவும் நிதியாளர் வைத்து வரும் நிறுவனக் கணக்குகள் குறித்து நன்கு அறிந்தவராகவும் இருக்க வேண்டும்; மேலும், ஒரு வணிகத்தின் அடிப்படை கூறுகளைக் கண்டறிய ஒரு மேலாளருக்குள்ள திறமை அவரிடமிருக்க வேண்டும். தகவல்கள் அனைத்தையும் அறிந்துகொள்ள விழைபவராக அவர் இருக்க வேண்டும். அத்துடன், பொதுப் பணியாளர்களின் கருத்துக்களையும் ஆர்வங்களையும் கருத்திற்கொண்டு அவர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

2.20.6. ஐ.ஏ.எஸ். தரத்திலிருந்துதான் பதிவாளர்கள் நியமிக்கப்பட வேண்டுமா என்ற வினாவுக்கு குழு வெவ்வேறான இரு கருத்துக்களைக் குறிப்பிட்டுள்ளது. பிற துறைகளில் உள்ளவாறு ஐ.ஏ.எஸ். பதவித் தரத்திலிருந்து கூட்டுறவுப் பதிவாளர் நியமிக்கப்பட்டால், பல்வேறு வளர்ச்சித் துறைகள், நிர்வாகத்தின் பிற பிரிவுகள் ஆகியவற்றின் ஒத்துழைப்பை அவர் எளிதில் பெறலாம் என்பது ஒரு கருத்தாகும். மேலும், தனது பணிக் காலத்தில் ஓர் ஐ.ஏ.எஸ். அதிகாரி பொதுவாக பெற்ற பல அனுபவங்களினால் துறைக்கட்டுப்பாடற்ற, பரந்த நோக்குடனும்

பதிவாளரது அலுவல்களை ஆற்ற அவரால் இயலும். சாதாரணமாக, கூட்டுறவுத் துறையில் பணிபுரியும் ஓர் அதிகாரி இவ்வாறு செயல்படமுடியும் என்று எதிர்பார்க்க முடியாது. பதிவாளர் தனது பணியைத் திறம்பட ஆற்ற இயலக் கூடியவராக இருக்க வேண்டுமாயின் அவர் அத்துறையில் பல ஆண்டு அனுபவம் பெற்றவராக இருக்க வேண்டும் என்பது மற்றொரு கருத்தாகும். பாராட்டத்தக்க அளவிற்குப் பணி புரிந்த துறை அதிகாரிகளின் கோரிக்கைகளை ஒதுக்கி விடக் கூடாது.

2.20.7. மேற்சொன்ன இரண்டு குறிப்புரைகளையும் பரிசிலித்த பின்னர், பதிவாளர் பதவிக்கு ஐ.ஏ.எஸ். பதவித் தரத்தில் ஒருவரை நியமிப்பதன் மூலம் தேவையான நிர்வாக அனுபவம் உறுதியாகக் கிட்டும் என்று குழு கருத்து தெரிவித்தது. துறையின் தலைவரான பதிவாளர் பதவிக்கு ஐ.ஏ.எஸ். அதிகாரி நியமிக்கப்பட்டால் ஏனைய துறைகளுடன் தொடர்பு கொள்வதற்கு எளிதாக இருக்கும். ஐ.ஏ.எஸ். தரத்தைச் சேர்ந்த ஓர் அதிகாரி அந்தஸ்தும் கௌரவமும் உள்ளவராக இருப்பதால், அரசின் ஏனைய துறைகளுடனும் ஏனைய பொது முகவாமைப்புகளுடனும் தொர்டர்பு கொண்டு பணியை நல்ல முறையில் நிறைவேற்ற இயலும். ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நல்ல கல்வி அறிவையும் பலதிரப்பட்ட அனுபவத்தையும் உடையவர்களாகவும் இளைஞர் களாகவும் இருப்பதால், புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்ப நடந்து கொள்வதும் புதிய கோட்பாடுகளை ஏற்பதிலும் அவர்கள், துறையிலேயே தங்களது முழு அலுவலக வாழ்வைக் கழித்துவிட்ட அதிகாரிகளைக் காட்டிலும் மேலானவர்களாக இருப்பார்கள். எனவே, "புதிய பலன்களைப் பெறுவதில் புதிய வழிமுறைகள் நடைமுறைகள்" என்று மெக்லகான் குழு குறிப் பிட்டவாறு, அத்தகைய வழிமுறைகளையும் நடைமுறைகளையும் வகுப்பதில் அவர்கள் துறை அதிகாரிகளைக் காட்டிலும் மேலானவர்களாக இருப்பர். திட்டமிடும்போது, சூழ்நிலைக்கேற்ப அதனை அணுகுவது அவசியம் என்று குழு தெரிவித்தது. பதிவாளர் பதவிக்கு வேறு ஒருவரைக் காட்டிலும் ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவரை நியமிப்பதன் மூலம் அந்த முறையில் அணுகுவது உறுதிப்படும்.

2.20.8. ஐ.ஏ.எஸ். அதிகாரி எவர் வேண்டுமானாலும் பதிவாளர் பதவிக்கு நியமிக்கப்படத் தகுதியுள்ளவர் என்று குழு கூறுவதாகப் பொருள் கொள்ளக் கூடாது என்று குழு மேலும் தெரிவித்தது. அதன்படி, கூட்டுறவுக் கொள்கையில் போதிய நம்பிக்கை அல்லது அனுதாபமோ கொள்ளாமல் பதிவாளர்களாக தங்களது பதவிக் காலத்தைக் கழித்த ஐ.ஸி.எஸ்./ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பலர் உள்ளனர். பதிவாளர் பதவிக்கு ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவர் தெரிந்தெடுக்கப்படும் முன்னர், கூட்டுறவு இயக்கத்தின் கொள்கைகளையும் குறிக்கோள்களையும் ஏற்கும் ஒத்த மனப்பான்மை உடையவரா என்பதை அக்குழுவின் கருத்துப்படி கவனிக்க வேண்டியது அவசியமாகிறது. பல்வேறு வகை வணிக நடவடிக்கைகளின் முக்கியமான கூறுகளை அறிந்து கொள்வதில் ஆர்வம், அரசு சார்பிலாதவர்களுடன் திறமையாக தொடர்பு கொள்ளுதல் ஆகியவையும் அவருக்கு இருக்க வேண்டிய முக்கிய தகுதிகளாகும். குழுவின் கருத்துப்படி, ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை மாவட்டங்களிலும் தலைமைச் செயலகத்திலும் உள்ள பதவிகளில் நியமிக்கும் முறையைப் போலவே, ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பலரை கூட்டுறவுத் துறையில் உள்ள பதவிகளில் நியமிப்பதன் மூலம் மேலே குறிப்பிட்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப் பட்டனவா என்பதை சோதித்து அறியலாம். அதைவிடச் சிறந்த முறை இல்லை என்று குழு கருதுகிறது. கூட்டுறவுத் துறையில் தாம் வகிக்கும் பதவிகளில் அவர்கள் எவ்வாறு பணிபுரிகிறார்கள் என்பது கண்காணிக்கப் பட்டு குறித்துக் கொள்ளப்பட வேண்டும்.

2.20.9. இந்த நடைமுறையில், கூட்டுறவுத் துறையில் அனுபவம் பெற்றுள்ள ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை மாநில அரசு தெரிந்தெடுப்பது உறுதி யாகும் என்பது குழுவின் கருத்தாகும். பதிவாளராக நியமிக்கத் தேவை யான அனுபவமும், மனநிலை, ஆர்வம், வல்லமை ஆகியவை பொருந்தியுள்ள ஒருவர் பதிவாளர் பதவிக்குத் தெரிந்தெடுக்கப்படலாம். கூட்டுறவுத்

துறையில் முன் அனுபவம் இல்லாத ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பதிவாளர்களாக தெரிந்தெடுக்கப்படுவதற்கு குழு இணங்கவில்லை. அதே சமயத்தில், குறிப்பிட்ட ஒரு சமயத்தில் ஐந்து அல்லது ஆறு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் ஒரு மாநிலத்தில் கூட்டுறவுத் துறைப் பயிற்சி பெறும் நிலை ஏற்படுவதற்கு சில ஆண்டுகள் ஆகும். அப்போது பதிவாளர் பதவிக்கு காலியிடம் ஏற்படும் போது அடுத்த பதிவாளரை அந்த நபர்களிலிருந்து தெரிந்தெடுக்க வேண்டும். இடைக்கால ஏற்பாடாக, தற்போது பதிவாளர் பதவியில் உள்ள அதிகாரி பிற ஒரு பதவிக்கு மாற்றப்படு முன்னர், தேவையான முது நிலையில் உள்ள ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவர் கூட்டுப் பதிவாளராக அல்லது இணைப் பதிவாளராக நியமிக்கப்பட வேண்டும். அந்த அதிகாரி பதிவாளராக நியமிக்கப்படு முன்னர் அவருக்கு குறைந்தது 1½ ஆண்டுகள் முதல் 2 ஆண்டுகள் வரை பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

2.20.10. பதிவாளர்கள் பதவிக்கு துறை அதிகாரிகளும் தகுதியுள்ளவர்கள் என குழு கருதுகையில், அத்தகைய அதிகாரிகள் ஐ.ஏ.எஸ். தரத்துக்கு நியமிக்கப்படுவதற்கு பரிவுரை செய்யப்படுவது நன்மை பயக்கும் என அது கருத்து தெரிவித்தது. அப்பதவியில் அவர்கள் சேர்க்கப்படுவதால் அரசின் ஏனைய துறைகளுடன் தொடர்பு கொள்ள வேண்டிய அலுவல்களைச் செவ்விய முறையில் நிறைவேற்றத் தேவைப்படும் அந்தஸ்தை அவர்களுக்கு அளிப்பதோடு மட்டுமல்லாமல், அத்தகைய அதிகாரிகள் ஐ.ஏ.எஸ். பதவி உயர்வு பெற்ற பின்னர் கூட்டுறவுத்துறை அல்லாத ஏனைய துறைகளிலும் அனுபவம் பெறுவர். பதிவாளர்களாக நியமிக்கப்படு முன்னர் இது அவர்களுக்குப் பரந்த மனப்பான்மையை உண்டாக்கும்.

2.20.11. தமிழ்நாட்டில், 1940 முதல் 1949-ம் ஆண்டு வரையில் கூட்டுறவுப் பணியில் அனுபவமும், பயிற்சியும் அளிக்கும் நோக்குடனும், பின்னர் அவர்களைக் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்களாக நியமிக்கத் தயாராக வைக்கும் பொருட்டும், ஐ.சி.எஸ். அல்லது ஐ.ஏ.எஸ். அல்லது அதிகாரிகள் இணைப் பதிவாளர்களாக நியமிக்கப்பட்டு வந்த நேர்வுகள் பல உள்ளன. 1959–63-ல் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளராக இருந்த ஐ.ஏ.எஸ். அதிகாரி (திரு. ப. பாலசுந்தரம்) கூட்டுறவுத் துறையில் முன்பு சில காலம் இணை பதிவாளராகப் பணியாற்றினர். 1947-54, 1954-59, 1963-66, ஆண்டுகளில், துறையின் முதுநிலை அதிகாரிகள் பதிவாளர்களாக நியமிக்கப்பட்டனர். அவாகள் அனைவரும் பின்னர் ஐ.ஏ.எஸ். பதவித் தரத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். எனினும், 1966-க்கு பின்னர் செய்யப்பட்ட நியமனங்களில், துறையில் முன் அனுபவம் பெற்றுள்ளவர்களை நியமிக்கும் வழக்கமான நடைமுறை பின்பற்றப்படவில்லை.

2.20.12. பதிவாளராக நியமிக்கப்பட்ட அதிகாரியின் பதவிக் காலத்தைப் பொறுத்தவரை, ஒருமுறை நியமிக்கப்பட்டு திறமையானவர் என மெய்ப்பிக்கப்பட்ட பதிவாளர் ஒருவர் கூட்டுறவுக் கொள்கையைத் தொடர்ந்து செயல்படுத்துவதனல் ஏற்படும் முழுப் பயனும் கிடைக்கும் வரையில், அப்பதவியிலிருந்து மாற்றப்படக் கூடாது என்று வேளாண்மை குறித்த ராயல் ஆணைக் குழுவின் கருத்துரையைக் கூட்டுறவு நிர்வாகம் பற்றிய குழு சுட்டிக்காட்டி அதனை ஏற்றுக்கொண்டது. அவர் அப்பதவியைத் தொடர்ந்து வகிக்கும் குறைந்த கால அளவு ஐந்து ஆண்டுகளுக்குக் குறையக் கூடாது. ஒரு பக்கம், நீண்ட அனுபவத்தின் பயன் பெறுவது இயல வேண்டும்; மறு பக்கம் ஒரு தனி நபரின் பொறுப்பில் கூட்டுறவு இயக்கம் விடப்படக் கூடிய காலத்திற்கு மேற்பட்டு அதை விடுவது தவிர்க்கப்பட வேண்டும். பதிவாளர் தமது பதவிக் கால அளவில், ஆணையாளர் பதவி போன்ற ஏதேனும் உயர் பதவியைப் பெறும் வாய்ப்பு ஏற்பட்டால், அந்த உயர் பதவிக்குரிய ஊதியங்களையும், பதவித் தரத்தையும் கொடுத்து அவரைப் பதிவாளராகவே தொடர்ந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

கூட்டுறவு நிர்வாகம் குறித்த குழு மொத்தத்தில் இக்கருத்தைக் கொண்டிருந்தது; பதிவாளர் பதவியை வகிக்க ஓர் அதிகாரியைத் தெரிந்தெடுப்பதில் பெருமளவு கவனம் செலுத்தப்பட வேண்டுமென்று அக்குழு

தெரிவித்தது. மேலும், அக்குழு பரிவுரை செய்த நடைமுறையை மேற்கொண்ட பிறகு, அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட அதிகாரி பதவி உயர்வு காரணமாக மாற்றப்பட வேண்டியிருக்கும் ஒரு சூழ்நிலை ஏற்படுமாயின் அந்த அதிகாரியைத் தெரிந்தெடுத்து பயிற்சியளிக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் அனைத்தும் வீணாகிவிடுமென்று அக்குழு கருத்து தெரிவித்தது. இத்தகைய சந்தர்ப்பம் எழுமாயின், அதிகாரியின் எஞ்சிய பதவிக் காலத்திற்கு அப்பதவித் தரம் உயர்த்தப்படலாம் என்று குழு கருதியது. கூட்டுறவுத் துறையின் தற்போதைய செயல் முறையைத் தொடர்ந்து பேணி வருவதே மாநில அரசின் நோக்கமாக இருக்க வேண்டும். இதனை உறுதிப்படுத்தும் வகையில், அடிக்கடி மேல் தரப் பதவிகளுக்கு மாற்றம் செய்யப்படுவது பெருமளவுக்குத் தவிர்க்கும் வகையில் பதிவாளர் பதவியின் தகுதி அரசினால் வரையறுக்கப்பட வேண்டும். ஓர் அதிகாரி நியமிக்கப்பட்டு அவர் தகுதியுடையவர் என்று கருதப்பட்டால், அவர் அப்பதவியில் 3 ஆண்டுகளுக்குக் குறையாமலிருத்தல் வேண்டும்; அவர் அப் பதவியில் 4 முதல் 5 ஆண்டுகள் வரையில் இருப்பது விரும்பத்தக்கதாகும்.

2.20.13. தமிழ் நாட்டில் 1966 ஆம் ஆண்டு வரையில் பதிவாளராக நியமிக்கப்பட்ட அதிகாரிகளின் பதவிக் காலம் நியாயமான அளவுக்கு நீண்டதாகவே இருந்தது 1947–66 வரையிலான கால அளவில் 4 பதிவாளர்களே பணி புரிந்தனர். முதல் நபர் 7 ஆண்டுகளும், இரண்டாவது நபர் 5 ஆண்டுகளும், 3-வது நபர் 4 ஆண்டுகளும், 4-வது நபர் 3 ஆண்டுகளும் பதவியில் இருந்தார். 1966-க்குப் பின்னர், (தற்காலிகமாகப் பதவிப் பொறுப்பு வகித்த 3 அதிகாரிகள் நீங்கலாக) 6 பதிவாளர்கள் பணி புரிந்துள்ளனர். அவர்கள் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

4–5–1963—19–5–1966—கூட்டுறவுத் துணைச் செயலாளர், கூடுதல் பொறுப்பு.

20–5–1966—12–7–1966—இணைப் பதிவாளர், கூடுதல் பொறுப்பு.

13–7–1966—5–3–1967—திரு. ஆர். பசுபதி, ஐ.ஏ.எஸ்.

6–3–1967—19–4–1967—இணைப் பதிவாளர், கூடுதல் பொறுப்பு.

20–4–1967—12–9–1968—திரு. வி. கே சி. நடராஜன், ஐ.ஏ.எஸ்.

13–9–1968—25–10–1968—இணைப் பதிவாளர், கூடுதல் பொறுப்பு.

26–10–1968— 5–7–1969—திரு. கே. எஸ். நரசிம்மன், ஐ.ஏ.எஸ்.

6–7–1969—4–7–1970—திரு. P. B. கிருஷ்ணசாமி, ஐ.ஏ.எஸ்.

5–7–1970—3–11–1970—கூடுதல் பதிவாளர் (கடன் வசதி) கூடுதல் பொறுப்பு.

4–11–1970—24– 4–1971—திரு. கே. ஜே. எம். ஷெட்டி, ஐ.ஏ.எஸ்.

25–4–1971—21–8–1973—திரு. P. M. பெல்லியப்பா, ஐ.ஏ.எஸ்.

27–8–1973—திரு. B. விஜயராகவன், ஐ.ஏ.எஸ். (தொடர்ந்து இருந்து வருகிறார்).

2.20.14. பதிவாளராக நியமிப்பதற்கு அதிகாரிகளைத் தெரிந்தெடுத்தல், அவர்களது பயிற்சி, பதவிக்காலம் ஆகியவை குறித்து இந்திய அரசினால் 1963-ல் நியமிக்கப்பட்ட கூட்டுறவு நிர்வாகம் பற்றிய குழு தெரிவித்த கருத்துக்களை நாங்கள் முழுவதும் ஏற்றுக் கொள்கிறோம். இவற்றைப் பொறுத்தமட்டில் இக்குழு தெரிவித்துள்ள அடிப்படை கோட்பாடுகளை, 1966 வரையில் இம்மாநிலம் பொதுவாகப் பின்பற்றி வந்தது. அடுத்து ஏற்பட்டுள்ள நிகழ்வுகளிலிருந்து முந்தைய நடைமுறையைப் பின்பற்றியுள்ளதாக தெரியவில்லை . . . கூட்டுறவு நிர்வாகம் பற்றிய குழு தெரிவித்த கருத்துக்கள் பதிவாளர் நியமனம், அவரது பயிற்சி, பதவிக் காலம் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் பின்பற்றப்பட வேண்டுமென்று நாங்கள் பரிவுரை செய்கிறோம்.

சங்கங்கள் மீது நிர்வாகக் கட்டுப்பாடு; ஒரே துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இருப்பதும் பல துறைகளின் கட்டுப்பாட்டின்கீழ் இருப்பதும்.

2.21.1. தமிழ்நாட்டில், இந்தியாவின் பிற பகுதிகளைப் போலவே, பெரும் பாலும் வேளாண்மைக் கடன் வழங்கும் பொருட்டே கூட்டுறவு இயக்கம் தொடங்கப்பட்டது. கடன் வழங்குவது கூட்டுறவு இயக்கத்தின் தலையாய பணியாக இருந்த வரையில், மறைமுகமாக வேளாண்மைத் துறையைத் தவிர மற்ற எந்தத் துறையும் கூட்டுறவு நிறுவனங்களின் அன்றாட அலுவலில் தொடர்பு கொள்ளவில்லை. எனவே, சங்கங்கள் செயல்படுவதை முறைப்படுத்துவதற்குக் கூட்டுறவுத் துறையின் தகுதி குறித்து தொடக்கத்தில் எந்தத் துறையும் கேள்வி கேட்க வேண்டிய நேர்வு ஏற்பட வில்லை. வேளாண்மையைத் தவிர பொருளாதார நடவடிக்கைகளில் கூட்டுறவு இயக்கம் பரவியதும், அலுவல் முறையில் அமைந்த சங்கங்கள் தங்களுக்கு நிகரான அரசுத் துறைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டன. இச்சங்கங்கள் அலுவல் அடிப்படையில் சம்பந்தப்பட்டுள்ள துறைகளின் நிர்வாகத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்டால், அது அச்சங்கங் களின் வளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணையாயிருக்கும் என்ற கருத்து படிப் படியாக உருவாயிற்று. வளர்ந்துவரும் இக்கருத்தின் அடிப்படையில், தமிழ்நாட்டில் அலுவல் அடிப்படையில் செயல்படும் வெவ்வேறு வகை சங்கங்கள் 1956-லிருந்து 1969 வரை 8 வேறு துறைகளின் நிர்வாகக் கட்டுப் பாட்டின்கீழ் மாற்றப்பட்டன. அவை பற்றிய விவரம் 2.7.1. பாராவில் கொடுக்கப்பட்டுள்ளது.

2.21.2. எல்லா வகையான சங்கங்களும் ஒரே துறைத் தலைவரின் கட்டுப் பாட்டின்கீழ்க் கொண்டு வரப்பட வேண்டுமா அல்லது அந்தந்த அலுவல் துறைகளின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட வேண்டுமா என்ற வினா அவ்வப்போது எழுந்துள்ளது. முக்கியமான மாநிலங்களில் மஹாராஷ்டிரம், இராஜஸ்தான் போன்ற மாநிலங்களைத் தவிர, அலுவல் அடிப்படையிலான சங்கங்களின் நிர்வாகக் கட்டுப்பாடு சம்பந்தப்பட்ட தொழில் நுட்ப துறைகளிடம் மாற்றப்படும் போக்கு நிலவியது.

2.21.3. அத்தகைய மாற்றத்திற்கு ஆதரவாகக் கூறப்படும் கருத்துக்கள் வருமாறு :—

(i) கூட்டுறவு ஒரு நிறுவன அமைப்பாகும். கூட்டுறவுத் துறை சங்கத்தின் அமைப்பு கூறுகள் பற்றி அறிந்திருப்பதாக உரிமை கொண்டாடலாம். ஆனால், ஒரு சங்கம் தொடங்கப்பட்டு விட்டதும் அது அன்றாடம் செயல்படுவதற்காகச் சம்பந்தப்பட்ட தொழில் நுட்பத் துறையின் உதவியை நாட வேண்டியிருக்கும். அத்துறை சங்கத்தின் நிர்வாகப் பொறுப்பை தானே ஏற்றுக் கொண்டால், அச்சங்கம் செயல்படுவது குறித்த தனது பொறுப்பை மேலும் நன்கு உணர்ந்து அதன் வளர்ச்சிக்காக முயற்சிகள் மேற்கொள்ளும். எனினும், கூட்டுறவு இயக்கம் தொடர்பாக அவசியமான சிறப்பறிவை நல்க கூட்டுறவுத் துறை அதிகாரிகள் இச் சங்கத்திற்குப் பணி புரியலாம்.

(ii) எல்லாத் துறைகளிலும் நிபுணத்துவம் வாய்ந்தவர்களை ஒரே துறை பெற்றிருக்க முடியாது.

கொடுக்கப்பட்டுள்ள கால வரம்பிற்குள், எல்லா வகை சங்கங்களையும் மேற்பார்வையிட கூட்டுறவுத் துறைக்கு இயலுவதாயிருந்தாலும், மேற்பார்வைப் பணிக்கு உயரளவிலான சிறப்பு நாட்டம் தேவைப் படுகையில் இதேபோன்று செவ்வியமுறையில் தொடர்ந்து மேற்பார்வையிட கூட்டுறவுத் துறைக்கு இயலாது. (iii) தொழில் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில், மூலப் பொருள்கள் வழங்குதல், வேலை நிறைவு பெற்ற பொருட்களை விற்பனை செய்தல், தொழில் நுட்ப உத்திகளுக்கு வகை செய்தல் ஆகியவை சம்பந்தப்பட்ட பிரச்சினைகளே பெரும் பிரச்சினைகளாகும். இப்பிரச்சினைகளைச் சமாளிப்பதில் தொழில்- வணிகத் துறையே நல்ல வகையில் உதவி செய்ய இயலும். (iv சில வகை தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், கைத்தறி வாரியம், கைவினைப் பொருள்கள்

வாரியம், கதர்-கிராமத் தொழில் வாரியம், தென்னை நார் வாரியம் போன்ற அனைத்திந்திய வாரியங்களிடமிருந்து தொழில் நுட்ப உதவியையும் நிதி யுதவியையும் பெறுகின்றன. அந்தந்த தொழில் நுட்ப துறைகள் மேற்படி சங்கங்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருக்கின்றன. அந்தந்த தொழில் களுக்குரிய கூட்டுறவுச் சங்கங்கள், இந்த அமைப்புகள் அந்தத் துறை களுக்குப் பொறுப்பு வகிக்குமாயின் அவற்றிடமிருந்து அதிக உதவியைப் பெறுமெனத் தோன்றுகிறது.

2.21.4. ஒரு துறை நிர்வாகக் கட்டுப்பாட்டுக்குச் சாதகமாக அளிக்கப்படும் விவாதங்கள் பின்வருமாறு :—

(i) நிர்வாகக் கட்டுப்பாட்டைப் பிரிப்பதனுல் கூட்டுறவு இயக்கத்தின் ஒருங்கிணைந்த அமைப்பும் ஒழுங்குமுறையும் பாதிக்கப்படும். எடுத்துக்காட்டாக, கூட்டுறவுத் துறையிலிருந்து தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் பிரித்துவிடப்பட்டுள்ள மாநிலங்களில் தற்போதுள்ள நிதியுதவி நிறுவனங்களுடன் போட்டி போட்டுக் கொண்டு தனியான வங்கி அமைப்புகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது.

(ii) இவ்வகைச் சிறப்புச் சங்கங்களின் நேர்வில் கூட்டுறவு அம்சம் முக்கியத்துவம் வாய்ந்ததல்ல என்று கூறுவது அவ்வளவு சரியல்ல. உண்மையான சங்கங்கள் மட்டுமே அமைக்கப்படுகின்றனவேயன்றி கூட்டுறவு நிறுவனங்கள் அளிக்கும் சலுகைகளையும் முன்னுரிமைகளையும் பயன்படுத்திக் கொண்டு சொந்த ஆதாயத்திற்காக எவரும் போலிச் சங்கங்களை அமைக்கவில்லையென்பதை உறுதி செய்ய வேறு எந்தத் துறையைக் காட்டிலும் கூட்டுறவுத் துறையில் போதிய வசதிகள் உள்ளன.

(iii) கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தொடக்க நிலைகளில் பிற துறைகளிடமிருந்து கிடைக்க வேண்டிய பரிவு அவற்றிற்குக் கிடைக்காது. ஏனெனில், தனியார் துறையிலுள்ளவர்களுக்கு அவர்கள் திறமையில் நிகராகமாட்டார்கள். அவர்கள் கூட்டுறவுத் துறையில் இருப்பார்களே யானுல், கூட்டுறவுத் துறை பிற துறைகளுடன் போராடி அவர்களுக்கு நியாயத்தைப் பெற்றுத் தரும்.

(iv) கூட்டுறவு இயக்கத்திற்குச் சொந்தமாக வங்கி அமைப்பு உள்ளது. இது பல ஆண்டுகளாக உருவாக்கப்பட்டு வந்துள்ளது. தற்போது இதற்கென்றே சொந்தமாகக் கணிசமான அளவு நிதி உள்ளது. எல்லா வகைக் கூட்டுறவுச் சங்கங்களும் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து நிதியுதவி பெற வேண்டும். இந்த நிறுவனங்களை நலிவுறச் செய்ய எச்செயலும் செய்யப்படக்கூடாது. இவ்வகைகளுக்குப் போதிய நிதி வாயில்கள் இல்லாமையினுலோ அல்லது இவ்வகை புதிய சங்கங்கள் குறித்து போதிய அக்கறை காட்டப்படாததனுலோ மேற்படி சங்கங்கள் இந்த வங்கிகளிடமிருந்து போதிய நிதியுதவி பெறுமலிருக்கலாம். அந்தந்தத் தொழிலுக்குரிய கூட்டுறவுச் சங்கங்கள், நிதியுதவி வங்கிகள்மீது நிர்வாகக் கட்டுப்பாடு வைத்துள்ள அதே துறையின்கீழ் இருக்குமேயானுல், அச்சங்கங் களின் பணிகளுக்கு நிதியுதவியளிக்க வசதியாக இருக்கும்.

(v) பல தொழில் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில், குறிப்பாக, கைத்தறித் தொழில், குடிசைத் தொழில், கிராமத் தொழில் ஆகியவை சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப்படும் தொழில் நுட்ப உதவியும் ஆலோசனையும் பெரிதும் பயிற்சி பெற்றவர்களால் வழங்கப்பட வேண்டுமென்பதில்லை. முறையாகப் பயிற்சி பெற்ற கூட்டுறவுப் பணியாளர்களே இந்த உதவியை அளிக்க இயலும்.

2.21.5. தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் குறித்த முதல் செயற்குழு (1957), இது குறித்து எல்லா மாநிலங்களும், பின்பற்ற வேண்டிய அளவுக்கு ஒரே சீரான நிர்வாக முறையை அமைப்பதும் கடினமானதாகும் என்று தெரிவித்தது.

இரு பதிவாளர்கள் அல்லது இருவருக்கு மேற்பட்ட பதிவாளர்கள் இருப்பார்களேயானால், அவர்கள் பணி, தலைமைப் பதிவாளர் ஒருவரை நியமிப்பதன் மூலம் அல்லது முதுநிலைப் பதிவாளர் ஒருவரைத் தலைமைப் பதிவாளராகப் பதவிப் பெயரிடுவதன் மூலம் அல்லது இரு பதிவாளர்களை அல்லது இருவர்க்கு மேற்பட்ட பதிவாளர்களை ஒரு குழுவாக அமைத்து அக் குழுவிற்கு முதுநிலைப் பதிவாளரைத் தலைவராக நியமிப்பதன் மூலம், முறையாக ஒருங்கிணைக்கப்பட வேண்டுமென்று மேற்படி செயற்குழு கூறியது. தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் குறித்து 1963-ல் நியமிக்கப் பட்ட இரண்டாவது செயற்குழு கூறியதாவது :—தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பான பணி கூட்டுறவுத் துறையிலேயே இருக்க வேண்டுமா அல்லது அது தொழில் துறைக்கு மாற்றப்படவேண்டுமா என்ற பிரச்சினையைக் கூட்டுறவுச் சங்கங்களின் உள்ளூர் தேவைகளுக்கும் வெவ்வேறு நிர்வாகத் துறைகளின் அமைப்பிற்கும் ஏற்றவாறு முடிவு செய்யப்படும் வகையில், மாநில அரசின் விருப்பத்திற்கே விட்டுவிட வேண்டும். இப்பணிக்குப் பதிவாளர் பொறுப்பு வகிப்பாரேயானால், அவருக்குத் தொழில் துறை இணை இயக்குநர் பதவித்தரத்திலான தொழில்நுட்ப அதிகாரி ஒருவர், அதுவும் தொழில் துறையிலிருந்து முகமையில் அனுப்பப்படும் அதிகாரி உதவி செய்ய வேண்டும். பதிவாளர், தொழிற் பணிக்கென்றே சில ஆய்வாளர்களை அமர்த்த வேண்டும். தொழிற்சாலை சம்பந்தமாகத் தொழில்நுட்பப் பிரிவில் அவர்கள் சிறப்புப் பயிற்சி பெறவேண்டும். இப்பணிக்குத் தொழில் துறை இயக்குநர் பொறுப்பு வகிப்பாரேயானால் அவருக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் ஒருவர் உதவி செய்ய வேண்டும். இச்சங்கங்களை மேற்பார்வையிடுவதற்காக வென்றே நேரிடைப் பணியாளர்களையும் அவர் வைத்திருக்க வேண்டும். இத்தகைய நேர்வுகளில், ஆய்வாளர்கள் கூட்டுறவுப் பணியில் பயிற்சி பெற வேண்டும்.

2.21.6. கூட்டுறவு குறித்து ஆய்வு செய்ய 1969-ல் நியமிக்கப்பட்ட சந்தானம் குழு இதுபற்றி பரிசீலித்து கீழ்க்காணும் கருத்துக்களையும் பரிவுரைகளையும் அளித்தது :—

(i) நிர்வாக மேற்பார்வை, தொழில்நுட்ப மேற்பார்வை, நிதியுதவி மேற்பார்வை ஆகியவை சம்பந்தப்பட்ட பணி ஓர் அதிகாரியிடம் இருக்கின்ற வரையில், கூட்டுறவுச் சங்கங்கள் தொழில்நுட்பத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளனவா அல்லது கூட்டுறவுத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளனவா என்பது பிரச்சினையல்ல. ஆனால், தற்போது பல துறைகளிடம் உள்ள வெவ்வேறு வகை கூட்டுறவுச் சங்கங்களுக்கு இணையான இரு வேறு அதிகார அமைப்புகளை உருவாக்குவது பயனற்றதாகும். கூட்டுறவுத் துறையி லிருந்து பிற துறைகளுக்கு அதிகாரிகளைத் தற்காலிகமாக முகமையில் அனுப்புவதானது நிறைவு தரும் ஓர் ஏற்பாடாகாது. ஒரு சங்கத்திற்கும் மற்றொரு சங்கத்திற்கும் தொழில்நுட்ப உதவியும், மேற்பார்வைப் பணியும் வேறுபடுகின்றன. இவற்றைத் தலைமைச் சங்கமும் சம்பந்தப்பட்ட துறையுமே அளிக்க இயலும். தகுதிபெற்ற தொழில்நுட்பப் பணியாளர் களின் பணிகள் முழு நேரத்திற்கும் தேவைப்படுகிற சர்க்கரை ஆலைகள், நூற்பாலைகள் போன்ற பெரிய சங்கங்கள் தாங்களே அவர்களை வேலைக் கமர்த்திக்கொள்ள வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களின் தொழில்நுட்ப மேற்பார்வைக்கு ஏதாவதொரு அரசுத்துறை பொறுப்பு வகிப்பதைக் காட்டிலும் அந்தந்த தலைமைச் சங்கங்களே பொறுப்பு வகிக்க வேண்டும்.

(ii) நிதியுதவி வங்கிகளுக்கு எந்தத் துறை பொறுப்பு வகிக்கின்றதோ அந்தத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் இந்தச் சங்கங்கள் இருப்பது சாலப் பொருத்தமாயிருக்கும்.

தற்போதைக்கு இச்சங்கங்கள் சிலவற்றிற்கு அரசு அல்லது பிற முகவரமைப்புகள் நிதியுதவி அளிக்கலாம் என்றிருந்தாலும், அவை நாளடைவில் தங்களது கடன் தேவைகளுக்காக கூட்டுறவு நிதியுதவும் நிறுவனங்களையே எதிர்நோக்க வேண்டும். இந்தச் சங்கங்களுக்கு நிதியுதவி அளிப்பதற்காக தனி கூட்டுறவு நிதியுதவி வங்கிகள் இருப்பது சாத்தியமுமல்ல உகந்ததுமல்ல. தொழில் கூட்டுறவு வங்கி தொடர்ந்து சிறப்புப் பங்கை

ஏற்கலாம் என்றிருந்தபோதிலும், தற்போதுள்ள மாநில, மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மட்டுமே அவற்றிற்கு நிதியுதவி வழங்க வேண்டும். இவ் வங்கிகளின் முக்கியமான பணி, வேளாண்மைக் கடன் வழங்கு—விற்பனைச் சங்கங்களுக்கு நிதியுதவி அளிப்பதாயிருப்பதால், இந்த வங்கிகள் கூட்டுறவுத் துறையின் நிர்வாகப் பொறுப்பின்கீழ் இருக்க வேண்டும். கூட்டுறவு இயக்கம் முழுவதும் ஒரே ஒரு பதிவாளரின்கீழ் ஒருங்கிணைந்த அமைப்பாக இருக்க வேண்டும். (iii) எனினும், சங்கங்களின் பொறுப்பை அலுவல் அல்லது தொழில்நுட்பத் திறமைக்குப் பாதகம் ஏது மின்றி அப்படியே பதிவாளரிடம் மீண்டும் மாற்ற வேண்டும். நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மத்திய வங்கிகள் நிதியுதவி அளிக்கின்றன. இச்சங்கங்களுக்குத் தலைமைச் சங்கம் ஒன்றும் உள்ளது. இவற்றைத் தொழில்நுட்ப வகையில் மேற்பார்வையிடும் பணி எதனையும் நடைமுறையில் கைத்தறித் துறை மேற்கொள்ளவில்லை. அதுபோன்றே, இத் துறையின்கீழ் உள்ள நூற்பாலைகளுக்கு மாநில, மத்தியக் கூட்டுறவு வங்கிகள் நிதியுதவி அளிக்கின்றன. அந்த நூற்பாலைகள் தமக்குச் சொந்தமான தொழில்நுட்பப் பணியாளர்களைக் கொண்டுள்ளன. (iv) பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் நிதியுதவிக்கு மத்திய வங்கிகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. கூட்டுறவுத் துறையில் முன்னர் அமர்த்தப்பட்டுள்ள அதே தொழில்நுட்பப் பணியாளர்கள், ஆணையாளரின்கீழ் இச் சங்கங்களுக்குத் தொடர்ந்து ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர். (v) வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்கள் மாநில வீட்டுவசதி வாரியத்திற்கு மாற்றப்படுவதற்கு முன்னர், எவ்வித இடையூறுமின்றி செயல்பட்டு வந்தன. தற்போதுள்ளது போலவே பொதுப் பணித்துறை அவற்றைத் தொழில்நுட்ப முறையில் மேற்பார்வை யிட்டது. இச்சங்கங்களுக்கு நிதியுதவி அளிக்கப்படுவதைப் பொறுத்த வரையில், தற்போதுங்கூட அப்பணி மாநில வீட்டுவசதி வாரியத்தின் பிற நடவடிக்கைகளிலிருந்து தனிப்பட்டு உள்ளது. அவற்றிற்கு வீட்டு வசதி தலைமைக் கூட்டுறவுச் சங்கம் மூலம் நிதியுதவி அளிப்பதில் இடர்ப்பாடு ஏதும் இராது. (vi) நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நூற்பாலைகள், பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள், வீட்டு வசதிச் சங்கங்கள் ஆகியவை உடனடி யாக பதிவாளரின் கட்டுப்பாட்டிற்கு மீண்டும் மாற்றப்படலாம். பிறவகைச் சங்கங்கள், மத்திய வங்கிகள் மூலம் நிதியுதவி அளிக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்படும்போதும் திறம்படச் செயல்படும் தலைமைச் சங்கங்கள் நிறுவப் படும்போதும் மாற்றப்படலாம்.

2.21.7. சந்தானம் குழுவின் மேற்குறிப்பிட்ட பரிவுரைகளை அரசு ஒப்புக்கொள்ளவில்லை என்றும், முன்பிருந்த நிலையே தொடர்ந்து இருந்து வரலாம் என்று அரசு ஆணையிட்டுள்ளது என்றும் தெரிய வருகிறது.

2.21.8. பல்வேறு தொழில்நுட்பத் துறைகளிடம் நிர்வாகக் கட்டுப் பாட்டை மாற்றிய பின்னர், இச் சங்கங்களின் நிர்வாகத்தை மேற்கொள்வதற் காகவும் மேற்பார்வையிடும் பணியைச் செய்வதற்காகவும் தனிப் பதவித்தரம் ஒன்றைத் தொழில் துறை ஏற்படுத்தியுள்ளது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தமட்டில், தனிப் பதவித்தரம் ஒன்றை ஏற்படுத்து வதற்கு அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. அவை செயற்படுத்தப்பட்டு வருகின்றன. ஏனைய வகைச் சங்கங்களைப் பொறுத்தமட்டில், மாற்றப்பட்ட சங்கங்களின் நிர்வாகப் பணியை மேற்கொள்வதற்கும் அவற்றை மேற் பார்வையிடுவதற்குமான பணியாளர்களை இன்னமும் கூட்டுறவுத் துறையே வழங்கி வருகிறது.

2.21.9. அலுவல் அடிப்படையில் அமைந்த வெவ்வேறு வகைச் சங்கங்களின்மீதான நிர்வாகக் கட்டுப்பாட்டை பிரித்துக் கொடுப்பதற்கு ஆதரவாகவும், எதிராகவும் வழங்கப்பட்ட கருத்துக்களிலிருந்து, அவ்வப்போது மாறுபட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். இப் பிரச்சினை பற்றி ஒரு கருத்து நல்லது என்றோ, மற்றொன்று தவறானது என்றோ திட்டவட்டமாகக் கூற இயலாது. இரண்டு விதமான கருத்துக்களை ஆதரித்து அறிவார்ந்த வாதங்கள் வழங்கப்படலாம். தற்போது நிர்வாகக் கட்டுப்பாட்டு அதிகாரம் வெவ்வேறு துறைகளிடம் மாற்றப்பட்டுள்ளது. பெரும்பாலான நேர்வுகளில் இந்த ஏற்பாடு

பல ஆண்டுகளாக செயலில் இருந்து வருகிறது. எனவே, இப் பிரச்சினையை நடைமுறைக்கு ஏற்ற வகையில் அணுகுவது உகந்ததாகும். கூட்டுறவுத் துறைப் பதிவாளரின் கட்டுப்பாட்டில் இன்னும் இருந்து வருகிற கூட்டுறவுப் பிரிவுகளைப் பொறுத்தமட்டில்கூட, கடந்த பத்தாண்டுகளில் பணிச் சுமை பெருமளவு உயர்ந்துள்ளது. வேளாண்மைக் கடன் வழங்கும் துறையில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் ஓராண்டில் சுமார் ரூ. 30 கோடி அளவிற்கே கடன்கள் வழங்கப்பட்டன. தற்போது அத்தொகை இருமடங்காகி, 1972–73-ல் ரூ. 65 கோடியாக உயர்ந்தது. நீண்ட கால ஆண்டுக் கடன் 1960–61-ல் சுமார் ரூ. 2 கோடியே வழங்கப் பட்டது. ஆனால், இக் கடன் தற்போது சுமார் ரூ. 20 கோடியாக உயர்ந்துள்ளது. மாநில நிலவள வங்கியால் வழங்கப்பட்ட கடனீட்டுறுதிப் பத்திரங்களின் மதிப்பு ரூ. 2 கோடியாக இருந்தது, தற்போது ரூ. 20 கோடியாக உயர்ந்துள்ளது. நுகர்வோர் கூட்டுறவு வேளாண்மைப் பொருள் விற்பனை போன்ற பிரிவுகளிலும் இதுபோன்ற வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. ஏராளமான செய்முறைப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. விற்பனைத் துறையில் மேற்கொண்டும் தொழிற் பிரிவுகளை ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்புகள் உள்ளன. கடந்த இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் ஆயிரக்கணக்கான இறைவைப் பாசனச் சங்கங்களும், வேளாண்-தொழில் சங்கங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பெரும்பாலானவை செயலற்று முடங்கி உள்ளன; அவை செவ்வனே செயற்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். குறுகிய கால, நீண்ட காலக் கடன் வழங்குவதில் ஈடுபட்டுள்ள நிதியுதவும் வங்கிகளின் (மத்திய வங்கிகள், மாநிலக் கூட்டுறவு வங்கி, மாநில நிலவள வங்கி) அலுவல்கள் பெருகியுள்ளதால், அவை செயல்படுத்துவதிலுள்ள பிரச்சினைகள், இந்திய ரிசர்வ் வங்கி, வணிக வங்கிகள், வேளாண்மை மறு நிதியுதவிக் கழகம், தேசீயக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் முதலியவற்றுடன் இவற்றின் தொடர்பு பற்றிய பிரச்சினைகள் யாவும் பெருகி வருகின்றன. கூட்டுறவு இயக்கத்தின் இத் துறைகள் தொடர்பான நடைமுறைகள், கொள்கைகள், பிரச்சினைகள் ஆகியவற்றைப் பதிவாளர் தொடர்ந்து ஆய்வு செய்ய வேண்டியுள்ளது. இதனால் அவரது பணிச் சுமை பெரிதும் கூடியுள்ளது. கூட்டுறவு இயக்கத்தின் தனித்தனி பிரிவுகள் யாவும் பதிவாளரின் கட்டுப்பாட்டு அதிகாரத்தின்கீழ் இன்னும் இருந்து வந்தால், இணைப் பதிவாளர்கள், தொழில்நுட்ப அதிகாரிகள் பலர் இவருக்கு உதவி புரிந்து வந்தாலும் பதிவாளரால் கூட்டுறவு இயக்கத்தின் ஒவ்வொரு பிரிவு தொடர்பான பிரச்சினைகளையும் கவனிப்பதில் அவர் ஒருமுகமான நாட்டத்தைச் செலுத்துவது சாத்தியமாகாது. கூட்டுறவு இயக்கம் கடந்த பத்தாண்டில் பிரம்மாண்டமான அளவிற்கு வளர்ச்சியடைந்துள்ளது. அது காரணமாக, கூட்டுறவு இயக்கத்தின் பல்வேறு துறைகள் தொடர்பான பிரச்சினைகள் பற்றி அறிந்துகொள்ளக்கூட துறைத் தலைவர் ஒருவருக்கு நேரம் கிடைக்காதபோது, அவரால் கட்டளையிடவோ ஆலோசனை வழங்கவோ வழியேது, இச் சூழ்நிலையில், அலுவல் அடிப்படையில் அமைந்துள்ள சங்கங்கள் அந்தந்தத் துறைத் தலைவர்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள தற்போதைய நடைமுறையே தொடர்ந்து இருக்கலாம் என்று நாங்கள் கருதுகிறோம். எனினும், கூட்டுறவு இயக்கம் 9 பதிவாளர்களால் நிர்வகிக்கப்பட்டு வருவதாலும், கூட்டுறவு இயக்கத்தின் பல பிரிவுகளின் பணிகள் ஒன்றோடொன்று இணைந்துள்ளமையாலும், அவற்றை ஒருங்கிணைப்பதற்குச் சிறந்ததோர் ஏற்பாடு அவசியமாக உள்ளது. அத்தகைய ஏற்பாடு எதுவும் தற்போது இல்லை.

குறிப்பிட்ட தொழிலுக்குரிய சங்கங்களை நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் **வைத்துள்ள பல்வேறு துறைகளுக்கிடையே ஒருங்கிணைப்பு.**

2.22.1 குறிப்பிட்ட தொழிலுக்குரிய சங்கங்கள் மீதான நிர்வாகக் கட்டுப்பாடு பல்வேறு துறைகளுக்கிடையே பிரித்துக் கொடுக்கப்பட்ட போதிலும், அவற்றின் நடவடிக்கைகளுக்கிடையே தொடர்பற்ற நிலை

இருக்க இயலாது. அவ்வாறு இருக்கவும் கூடாது. கூட்டுறவுத் துறையின் எல்லாப் பிரிவுகளின் வளர்ச்சியின் நலனுக்கு அவற்றிடையே ஒத்துழைப்பு நிலவுவது அவசியமாகிறது. அவ்வாறு ஒத்துழைப்பு நிலவ வேண்டிய பிரிவுகள் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன. கைத்தறித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் உள்ள நெசவாளர் சங்கங்களுக்குக் கூட்டுறவுத் துறையின் நிர்வாகத்தின் கீழ் உள்ள மத்திய வங்கிகள் நிதி உதவி அளிக்கின்றன. தமிழ் நாடு மாநிலக் கைத்தறி நெசவாளர் சங்கத்திற்கு மாநிலக் கூட்டுறவு வங்கி நேரிடையாக நிதி உதவி அளிக்கிறது. நெசவாளர் சங்கங்களுக்குத் தேவைப்படும் நிதி உதவியின் பெரும் பகுதி ரிசர்வ் வங்கியால் திருப்பிக் கொடுக்கப்படுகிறது. மாநிலக் கூட்டுறவு வங்கி நெசவாளர் சங்கங்களுக்கு நேரிடையாக அல்லது மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிகள் மூலமாக நிதி உதவி அளித்த பின்னர், அந்த வங்கிக்கு மட்டுமே இவ்வாறு தொகை திருப்பிக் கொடுக்கப்படுகிறது. (கைத்தறி இயக்குநரின் நிர்வாகத்தின் கீழ் உள்ள) கூட்டுறவு நூற்பு ஆலைக்கும், (சர்க்கரைத் துறை இயக்குநர் நிர்வாகத்தின் கீழ் உள்ள) சர்க்கரை ஆலைகளுக்கும் தேவைப்படும் நடைமுதல் மூலதனத்தை மத்திய வங்கிகளும் மாநிலக் கூட்டுறவு வங்கியும் அளிக்கின்றன. கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் பதிவு செய்துகொண்டுள்ள கரும்பு உற்பத்தியாளர்களுக்கு வேளாண்மை தொடக்கக் கடன் வழங்கு சங்கங்கள் நிதி உதவி அளிக்கின்றன. அவற்றிற்கு மாவட்ட மத்திய வங்கிகளும் மாநிலக் கூட்டுறவு வங்கியும் நிதி உதவி அளிக்கின்றன. இங்கும், மாநிலக் கூட்டுறவு வங்கியின் மூலம் இந்திய ரிசர்வ் வங்கி தொகையைத் திருப்பிக் கொடுக்கிறது. கரும்பு உற்பத்தியாளர்களுக்கு உரிய நேரத்தில் போதிய கடன் உதவி அளிக்கப்பட்டாலன்றி மற்றப்படி, சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு முறையாக வழங்கப்படுவது தடைப்படும். உண்மையில், ஆலைகளுக்கு கொண்டு செல்லப்படும் கரும்புக்கு போதிய அளவிலும் உரிய நேரத்திலும் நிதி உதவி அளிக்கப்பட வேண்டும் என்று நம்மிடம் கருத்து தெரிவிக்கப்பட்டது. அது தொடர்பாக இயன்ற நடவடிக்கைகள் அனைத்தும் எடுக்கப்பட்டதாக கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளரிடமிருந்து வரப்பெற்ற புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன (பால் வழங்கு பாற்பண்ணை வளர்ச்சி ஆணையாளர் நிர்வாகத்தின் கீழ் உள்ள பால் வழங்கு சங்கங்களுக்கு மாவட்ட மத்திய வங்கிகள் நிதி உதவி அளிக்கின்றன. பால் வழங்குபவர்களுக்கு (உழவர்களுக்கு) வேளாண்மைத் தொடக்கச் சங்கங்கள் மூலமே கடன் வழங்கப்பட வேண்டும் என்றும் தனிப்பட்ட பால் வழங்கு சங்கங்கள் மூலமாக வழங்கப்படக்கூடாது என்றும் ரிசர்வ் வங்கி வலியுறுத்தி வந்துள்ளது. இம் மாநிலத்திற்கே உரிய நிலைமைகளில் பால் வழங்குபவர்களுக்கு பால் வழங்கு சங்கங்கள் மூலமாகத்தான் கடன் வழங்கப்பட வேண்டும் என்று இந்திய ரிசர்வ் வங்கிக்கு அவ்வப்போது எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அது இன்னும் பரிசீலனையில் உள்ளது. பால் வழங்கு சங்கங்கள் கொடுத்த கடன் தொகையைத் திருப்பிக் கொடுக்கும் வசதி இராதபோதும், மத்திய வங்கிகள் தங்களுடைய சொந்த நிதி வாயில்களிலிருந்து அச் சங்கங்களுக்கு நிதி உதவி அளிக்கின்றன. (கால்நடை வளர்ப்புத் துறை இயக்குநர் நிர்வாகத்தின் கீழ் உள்ள) கோழி வளர்ப்புச் சங்கங்கள், செம்மறியாடு வளர்ப்புச் சங்கங்கள், (மீனளத் துறை இயக்குநர் நிர்வாகத்தின் கீழ் உள்ள) மீனளச் சங்கங்கள் ஆகியவற்றிற்கு கூட்டுறவுத் துறையின் கீழ் உள்ள கூட்டுறவு வங்கிகள் நிதி உதவி அளிக்கின்றன. அண்மையில், வேளாண்மை மறுநிதி உதவிக் கழகம் அளித்த நிதி உதவியைக் கொண்டு, கோழி வளர்ப்பு, மீனள மேம்பாடு குறித்த சில திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சில திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இத் திட்டங்களுக்கான கடனுதவியைக் கூட்டுறவு வங்கிகள்தாம் அளிக்க வேண்டும். திட்டங்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்ட பின்னர், வேளாண்மை மறு நிதி உதவிக் கழகம் மாநிலக் கூட்டுறவு வங்கிக்கு அத் தொகையைத் திருப்பிக் கொடுக்கும். தொழில் துறையில் (தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி அளிக்க) தனிப்பட்ட தொழில் கூட்டுறவு வங்கி ஒன்று இருந்தபோதிலும், கொடுத்த கடன் தொகையைத் திருப்பிக் கொடுக்கும் காரியத்திற்கு அந்த வங்கிக்கு இந்திய ரிசர்வ் வங்கி ஏற்பளிக்கவில்லை. (இக் காரியத்திற்காக தலைமைக்

கூட்டுறவு வங்கிகள் மட்டுமே ஏற்பளிக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக, கொடுத்த கடனுதவியைத் திருப்பிப் பெறும் வசதியைப் பயன்படுத்திக் கொண்டு, தேவையான நிதி உதவியைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் பெற இயலவில்லை. சில ஆண்டுகளுக்கு முன்னர் நசிப்பட்ட தொழில் கூட்டுறவு வங்கியைத் தொடங்குவதற்கு எவ்வித நியாயமிருந்தபோதிலும், தற்போது நிலைமை மாறியுள்ளது. தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் பெருகிவரும் நிதிவாயில்களை ஒட்டியும், கடன் தொகை திருப்பிக் கொடுக்கப்படுவதற்கான வசதிகள் அவற்றிற்குக் கிடைப்பதையொட்டியும் வழக்கமாக உள்ள நிதி வழங்கு வாயில்கள் மூலமாக தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி அளிப்பது பரிசீலிக்கப்பட வேண்டும். நிதி உதவி அளிப்பது தவிர, பணியாளர்கள் நியமனம் குறித்த பிரச்சினையும் உள்ளது. தொழில் துறை, அண்மையில் கைத்தறித் துறை நேர்வுகள் தவிர ஏனையவற்றின் நேர்வில், பல்வேறு பதிவாளர்கள் நிர்வாகத்தின் கீழ் உள்ள சங்கங்களின் நிர்வாகக் கட்டுப்பாடு, மேற்பார்வை குறித்த பணியாளர்களைக் கூட்டுறவுத் துறையே இன்னும் வழங்கி வருகிறது. இந்த ஏற்பாடு நிலையான நடைமுறையாக அல்லது நீண்ட காலத்திற்குத் தொடர்ந்து இருக்க வேண்டிவரும். ஏனெனில், சங்கங்களுக்கென்றே உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு பிரிவிலும் தனிப்பட்ட பதவித் தரத்தை ஏற்படுத்துமளவிற்கு அதிகமாக இருக்காது. பதிவாளர்கள் அனைவரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சங்கங்களின் தணிக்கைப் பணியை தலைமைத் தணிக்கை அதிகாரி தலைமையின் கீழ் உள்ள கூட்டுறவுத் துறை தணிக்கைப் பிரிவு நடத்துகிறது. பதிவாளர்கள் சிலர் தமது நிர்வாகத்தின் கீழ் உள்ள சங்கங்களின் தணிக்கை தங்களுடைய பொறுப்பாக இருக்க வேண்டும் எனக் கருதுவதாகத் தெரிகிறது. இத் துறை ஒருங்கிணைப்பு இருந்தாக வேண்டியதொரு துறையாகும். அடுத்ததாக, அரசுச் சார்புள்ள அரசுச் சார்பற்ற பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பது குறித்த பிரச்சினை உள்ளது. கூட்டுறவுத் துறையில் பல்வேறு பதவித் தரத்திலுள்ள பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக, கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியும், கூட்டுறவுப் பயிற்சிப் பள்ளியும் செயல்படுகின்றன. கூட்டுறவு நிலையங்களில் உள்ள அரசுச் சார்பற்ற பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகவும் சில நிலையங்கள் உள்ளன. கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியும், பல்வேறு நிலையங்களும் தமிழ் நாடு மாநிலக் கூட்டுறவு யூனியனின் நிர்வாகத்தின் கீழ் செயல்படுகின்றன. இந்த நிலையங்களை நடத்துவதற்காக இந்த யூனியனுக்கு இந்திய அரசும், மாநில அரசும் மானியங்கள் அளிக்கின்றன. கூட்டுறவு நிலையங்களிலிருந்து உதவித் தொகைகள் பெறுவதன் மூலமாகவும் யூனியன் தன்னுடைய நிதி வாயிலைத் திரட்டுகிறது. தமிழ் நாடு கூட்டுறவு யூனியன் கூட்டுறவுத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகிறது. பல்வேறு பதிவாளர்களின் கீழ் உள்ள சங்கங்களை நிர்வகிப்பதற்கும் மேற்பார்வை யிடுவதற்கும் பொறுப்பாக உள்ள அரசுச் சார்புள்ள, அரசுச் சார்பற்ற பணியாளர்களுக்கு, தொழில் நுட்பத் துறைகளில் அவர்களது சிறப்பு வகைப் பணி தொடர்பான பொருள்களில் தகுந்த மறு பயிற்சியைச் சிறப்பாக அளிப்பதைக் கருத்தில்கொண்டு கூட்டுறவுப் பணியில் பயிற்சி அளிப்பது அவசியமாகிறது. இரு வேறு இடங்களில் பயிற்சியளிப்பதற்குப் பதிலாக, பல்வேறு பதிவாளர்களின்கீழ் பணியாற்றும் கூட்டுறவுப் பணியாளர்களுக்குத் தற்போதுள்ள கல்லூரிகளிலும் நிலையங்களிலும் பயிற்சி வசதிகளை அளிக்கலாம். கூட்டுறவு இயக்கத்திற்கு அடிப்படையாகப் பொதுவான சில கொள்கைகள் இருக்கலாம். ஒருங்கிணைந்த அணுகுமுறை தேவைப்படுகிற சில பொருள்களில் கூட்டுறவு குறித்த சட்டம் இயற்றுதல் ஓர் எடுத்துக்காட்டாகும்.

2.22.2. மேலே குறிப்பிடப்பட்டவற்றில் பரஸ்பர ஆலோசனைக்கும், ஒருங்கிணைப்புக்கும் அவசியம் இருந்தபோதிலும், தொடர்புள்ள துறைத் தலைவர்கள் அளவில் ஒருங்கிணைப்பு நிலவுவதற்கான அமைப்பு தற்போது இல்லை.

2.22.3. தலைமைச் செயலகத்தில் கூட, ஓரே துறை எல்லா வகையான கூட்டுறவுச் சங்கங்களையும் கவனிப்பதில்லை. பதிவாளரின் கீழ் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பான பொருள்கள் கூட்டுறவுத் துறையால் கவனிக்கப்படுகின்றன. மீனளத் துறை இயக்குநர், கால்நடை வளர்ப்புத் துறை இயக்குநர் ஆகியோரின் கீழ் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பான பொருள்கள் வேளாண்மைத் துறையால் கவனிக்கப்படுகின்றன. பால் உற்பத்தி, பாற்பண்ணை வளர்ச்சி ஆணையாளரின் கீழ் இயங்கும் சங்கங்களின் பொருள்கள் பொதுத் துறையால் கவனிக்கப்படுகின்றன. வீட்டு வசதி வாரியத் தலைவரின் கீழ் இயங்கும் வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்களின் பொருள்கள் தலைமைச் செயலக வீட்டு வசதித் துறையால் கவனிக்கப்படுகின்றன. கதர்-கிராமத் தொழில்கள் தலைமை நிர்வாக அதிகாரியின் கீழ் இயங்கும் கிராமத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் பொருள்கள் ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறையால் கவனிக்கப்படுகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளரின் கீழ் உள்ள கிராமதான, பூதானச் சங்கங்கள் தொடர்பான பொருள்கள் ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறையால் கவனிக்கப்படுகின்றனவேயன்றி கூட்டுறவுத் துறையால் அல்ல. அரிசனங்களுக்காகவென்றே அமைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பான பொருள்கள் தலைமைச் செயலகத்தின் சமூக நலத் துறையால் கவனிக்கப்படுகின்றன.

2.22.4. சில ஆண்டுகளுக்கு முன்னர் வரை, மாநிலக் கூட்டுறவு ஆலோசனைக் குழு என்ற ஓர் அமைப்பு செயல்பட்டு வந்தது. இது முதலில் 1947 இல் அமைக்கப்பட்டது. (அப்போது அது மாகாண கூட்டுறவு ஆலோசனைக் குழு என்றழைக்கப்பட்டது.) இதில் கூட்டுறவுத் துறை அமைச்சர் தலைவராக இருந்தார். மாநிலக் கூட்டுறவு வங்கி, மாநிலக் கூட்டுறவு யூனியன் ஆகியவற்றின் தலைவர்கள், அரசுச் சார்பற்ற உறுப்பினர்கள் ஐவர், பதிவாளர் ஆகியோரும் இருந்தனர். கூட்டுறவுச் சங்கங்கள் இணைப் பதிவாளர் ஒருவர் அலுவல் முறையில் அதன் செயலாளராக நியமிக்கப்பட்டார். இந்த குழு அவ்வப்போது மாற்றி அமைக்கப்பட்டு வந்தது. கடைசியாக, இக்குழு 1965 ஆம் ஆண்டில் கூட்டுறவு அமைச்சரைத் தலைவராகக் கொண்டு 37 உறுப்பினர்களுடன் மாற்றி அமைக்கப்பட்டது. தமிழ் நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தில் பொருத்தமான விதித்துறை இயற்றுவதன் மூலம், இக் குழுவிற்கு சட்டப்படிக்கான அடிப்படை ஒன்றைக் கொடுப்பது அவசியம் என்று கூட்டுறவு குறித்த சந்தானம் குழு கருத்து தெரிவித்தது. கீழ்க்கண்ட முறையில் இக் குழு அமைக்கப்பட வேண்டும் என்றும் அது தெரிவித்தது :—

(i) கூட்டுறவு இயக்கத்தைச் சேர்ந்த 10 பிரதிநிதிகள், (ii) மாநிலச் சட்ட மன்றத்தின் 5 பிரதிநிதிகள், (iii) தமிழ் நாட்டிலிருந்து நாடாளு மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 2 பிரதிநிதிகள், (iv) கூட்டுறவு இயக்கத்தில் குறிப்பிடத்தக்க பணியாற்றியுள்ளவர்களும் சங்கம் எதிலும் பதவி வகித்திராதவர்களும் அரசுச் சார்பில்லாதவர்களும் ஆன 3 பேர், (v) கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளர், அரசுச் செயலாளர் அல்லது தொடர்புள்ள துணைத் தலைவர்கள். கூட்டுறவு அமைச்சர் தலைவராக இருக்கலாம் என்று குழு கருத்து தெரிவித்தது.

2.22.5. சந்தானம் குழு கருத்து தெரிவித்தவாறு குழுவின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு இருக்கும் :—

(i) கூட்டுறவு இயக்கம் தொடர்பான சட்டம் உட்பட கொள்கை குறித்த பொதுவான எல்லா பிரச்சினைகளிலும் அரசுக்கு ஆலோசனை நல்குதல்.

(ii) கூட்டுறவு இயக்கம் செயல்படுவதைச் சீர்தூக்கி செய்தல்.

(iii) கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகப் பொறுப்புள்ள துறைகளின் கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்தல்.

(iv) சங்கங்கள் தங்களது நிர்வாகத்தில் ஏற்படும் இடர்ப்பாடுகளைக் களைய அவற்றிற்கு வழிவகைகளைத் தெரிவித்தல்.

(v) சங்கங்களை நிர்வகித்தல் தொடர்பான பொருள் எதிலும் அரசுக்கு தானாகவே பரிவுரை செய்தல்.

(vi) அரசு தனது கருத்துக்காக அனுப்பக்கூடிய பொருள்கள் குறித்து அறிக்கை அளித்தல்.

2.22.6. ஆலோசனைக் குழுவின் அமைப்பிலும் அலுவல்களிலும், பல்வேறு வகைச் சங்கங்களின் நிர்வாகப் பொறுப்புள்ள தொடர்புள்ள துறைகளின் கொள்கைகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் இடமளிக்க வேண்டும் என்பதற்குச் சந்தானம் குழுவின் பரிவுரையில் வகை செய்யப்பட்டுள்ளது தெரிய வரும். எனினும், இப் பரிவுரையை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. (கூட்டுறவுத் துறையின் 8—2—72 நாளிட்ட 53 ஆம் எண் அரசாணையைப் பார்க்கவும்.) இப் பரிவுரையை ஏற்றுக்கொள்ளாததற்குக் கூறப்பட்ட காரணங்கள் பின்வருமாறு :—

இக் குழு ஆலோசனை நல்கும் ஓர் அமைப்பாக மட்டுமே செயல்படுவதால் அது தெரிவிக்கும் கருத்துரைகள் அரசைக் கட்டுப்படுத்தாது ; பதிவாளரின் அதிகாரங்களை 8 துறைத் தலைவர்கள் செலுத்துவதால் குழுவின் பரிவுரைகள் நடைமுறையில் செயல்படுத்தப்பட முடியாது. ஆலோசனைக் குழுவே பல ஆண்டுகளாக கூடவில்லை என்பதும், அது செயலற்றிருப்பதாகவும் தெரிகிறது. பதிவாளரின் அதிகாரங்களைச் செலுத்தும் 8 துறைத் தலைவர்கள் (தற்போது ஒன்பது) இருப்பதானது, (ஒருங்கிணைப்பு குழுவிற்கான தேவைக்கு எதிராக இதனை ஒரு காரணமாகக் கொள்வதற்குப் பதிலாக.) ஒருங்கிணைப்புக் குழு என்ற ஒன்று ஏன் இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு முக்கியமான காரணமாகும்.

2.22.7. (i) கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளர், (ii) குறிப்பிட்ட தொழிலுக்குரிய சங்கங்களின் மீது நிர்வாகக் கட்டுப்பாடு செலுத்தும் துறைத் தலைவர்கள் அனைவரும், (iii) மாநிலக் கூட்டுறவு வங்கி, மாநில நிலவள வங்கி ஆகியவற்றின் நிர்வாக இயக்குநர்கள் ; (iv) ரிசர்வ் வங்கியின் வேளாண்மைக் கடன் வழங்கு துறையைச் சேர்ந்த உள்ளூர் அதிகாரி, (v) வேளாண்மைத் துறை இயக்குநர் ஆகியோரைக் கொண்ட ஒருங்கிணைப்புக் குழு ஒன்றை அமைக்க வேண்டுமென நாங்கள் பரிவுரை செய்கிறோம். ஊராட்சி வளர்ச்சி குறித்த ஆணைக் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட வேளாண்மை உற்பத்தி ஆணையாளர் இதற்குத் தலைமை வகிக்கலாம். அரசுத் துணைச் செயலாளர் ஒருவர் இக் குழுவின் செயலாளராகப் பணியாற்றலாம்.

2.22.8. குழு, சட்டப்படி அமைந்த ஒரு குழுவாக இருக்க வேண்டிய அவசியமில்லை. அரசின் நிர்வாக ஆணை ஒன்றின் மூலம் அது அமைக்கப்படலாம்.

2.22.9. நிதி, தணிக்கை, பணியாளர்கள், பயிற்சி வசதிகள் முதலிய துறைகளில் ஒருங்கிணைப்பு நிலவுவதை உறுதி செய்யும்பொருட்டு, நெருக்கடிகளைத் தவிர்க்கும் நோக்குடனும், கூட்டுறவுச் சங்கங்கள், சட்டம், விதிகள், துணை விதிகள் ஆகியவற்றின் விதித் துறைகளுக்கு விளக்கம் கொடுப்பதில் அல்லது விதித் துறைகளைச் செயல்படுத்துவதில் ஒரு சீரான முறையைக் கொண்டுவரவும் வேண்டி, நடைமுறைகள், கொள்கைகள் பற்றி விவாதிப்பதும் அவற்றை முடிவு செய்வதும் குழுவின் அலுவல்களாகும்.

2.22.10. குழுவின் முடிவுகள் ஆலோசனை வழங்கும் வடிவில் இருக்கும். இக் குழு செய்யும் பரிவுரைகள் மீது அரசு ஆணை பிறப்பிக்கும்.

2.22.11. நிகழ்ச்சிநிரலில் உள்ள குறிப்பிட்ட ஒரு பொருள் பற்றி விவாதிப்பதற்காகக் குறிப்பிட்ட அதிகாரி அல்லது பிரதிநிதி ஒருவர் அச்சமயத்தில் இருப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்குமானால், அவரைக் கூட்டத்தில் கலந்துகொள்ள வருமாறு அழைக்கலாம். உதாரணமாக, ஒரு சர்க்கரை ஆலையில் உறுப்பினர்களாக உள்ள கரும்பு பயிரிடுவோருக்கு மத்தியக் கூட்டுறவு வங்கி ஒன்று நிதியுதவி அளிப்பது பற்றிய சிக்கல் இருக்குமானால், அந்த இரு நிறுவனங்களைச் சேர்ந்த நிர்வாக இயக்குநர்களை அதுபற்றிப் பேசுவதற்கு அழைக்கலாம்.

2.22.12. குழு காலாண்டுக்கு ஒரு முறையேனும் அல்லது விவாதத்திற்காக உறுப்பினர்களால் அறிவிக்கப்படும் பொருள்களின் தன்மையைப் பொறுத்து அவசியமாயின் அடிக்கடி கூடலாம். துறையில் ஏற்படும் இடையூறுகளை அகற்றுவதற்கு எளிதில் செயல்படுத்தப்படக்கூடிய தீர்வுகளை வகுக்கவும், கூட்டுறவு இயக்கத்தின் வெவ்வேறு துறைகளிலும் பல்வேறு அரசுத் துறைகளிலும் கூட்டுறவுப் பிரிவைக் கவனிக்கும் அலுவலர்களின் நடவடிக்கைகள் குறித்த நோக்கத்தில் ஒருமைப்பாட்டைக் கொண்டுவரவும் ஓர் அலுவல் குழுவாக இக் குழு செயல்பட வேண்டும்.

2.22.13. மேற்குறிப்பிட்டவாறு ஒருங்கிணைப்புக்கான ஏற்பாடு தவிர, கூட்டுறவுச் சங்கப் பதிவாளர்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட கூட்டுறவுத் துறைகளுக்கும் நிதியுதவி நிறுவனங்களுக்கு மிடையே நல்லுறவையும் ஒருவருக்கொருவர் நன்கு புரிந்துகொள்ளும் மனப்பான்மையையும் உருவாக்கும் வகையில் வேறு சில நடைமுறைகளைத் தெரிவிக்க நாங்கள் விழைகிறோம். தமிழ் நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியின் நிர்வாகக் குழுவில் தற்போது (i) மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் தலைவர்கள், (ii) விதிகளில் குறிப்பிடப்பட்ட 8 தலைமைச் சங்கங்களின் தலைவர்களால் தங்களுக்குள் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று உறுப்பினர்கள், (iii) மேலே (ii) இனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தலைமைச் சங்கங்களோடு இணைக்கப்பட்டிராத சங்கங்களின் உறுப்பினர்களிடையேயிருந்து பதிவாளரால் நியமனம் செய்யப்படும் மூன்று உறுப்பினர்கள், (iv) கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டுப் பதிவாளர் ஆகியோர் உள்ளனர். (ii) இனத்தில் குறிப்பிடப்பட்ட எட்டு தலைமைச் சங்கங்கள், நெசவாளர் சங்கங்கள், நுகர்வோர் பண்டகசாலைகள், விற்பனைச் சங்கங்கள், சர்க்கரை ஆலைகள், எண்ணெய்ச் சங்கங்கள், வீட்டு வசதிச் சங்கங்கள், இறைவைப் பாசனச் சங்கங்கள், வேளாண்-பொறியியல் பணி நிலையங்கள் ஆகியவற்றின் மாநில அளவிலான கூட்டமைப்புகளாக இருக்கின்றன. இந்தத் தலைமைச் சங்கங்கள் தங்களுக்கும் தங்களுடன் இணைந்துள்ள சங்கங்களுக்கும் வேண்டிய நிதித் தேவைகளை நிறைவு செய்யும் என்ற காரணத்தினால் இத் தலைமைச் சங்கங்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டுள்ளது போலும். இந்த முறையினால் பிரதிநிதித்துவத்தின் நோக்கம் முழுவதும் நிறைவேறவில்லையென்பது எங்கள் கருத்தாகும். ஒரு விஷயத்துக்காகிலும், மூன்று உறுப்பினர்கள், தங்களது நிதித் தேவைக்கு வங்கியையே பெரிதும் நம்பியிருக்கும் கைத்தறி ஆலை, சர்க்கரை ஆலை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களாயிருக்க வேண்டுமென்கிற அவசியமில்லை. (தங்கள் நிதித் தேவைக்கு வங்கியை நம்பியிருக்காத) அல்லது மிகக் குறைந்த அளவுக்கே நம்பியுள்ளன. வீட்டு வசதி, எண்ணெய்ப் பொருட்கள், இறைவைப் பாசனம் அல்லது வேளாண்-பொறியியல் பணி நிலையங்கள் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களாக அவர்களிருக்கலாம். இரண்டாவதாக, பாற்பண்ணைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், மீனளக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற சில துறைகளுக்கு இந்த வகையான மறைமுகப் பிரதிநிதித்துவம் கூட இல்லை. அந்தந்த துறைத் தலைவர்களைக் குழுவின் உறுப்பினர்களாக ஆக்குவதே மிகவும் பயனுள்ள ஓர் ஏற்பாடாக இருக்கும் என்று நாங்கள் கருதுகிறோம். மாநில, மத்தியக் கூட்டுறவு வங்கிகள் வழங்கும் வேளாண்மைக் கடனில் கணிசமான பகுதி கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு வழங்கப்படுகிறது. தொழில் கூட்டுறவு வங்கியை முறையான கூட்டுறவு

வங்கி அமைப்பில் இணைக்கவும் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கூட்டுறவு வங்கி நிதியுதவி செய்யவும், நாங்கள் பரிவுரை செய்கிறோம். பாற்பண்ணைத் தொழில் வேளாண்மைத் தொழிலின் ஒரு பகுதியாகும். மாநிலத்தில் இத் தொழில் வளர்ச்சி பெற வேண்டுமானால் பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பெருமளவில் நிதியுதவி செய்ய வேண்டியது அவசியமாகிறது. கைத்தறித் துறைக்கு ஏற்கெனவே பெருமளவில் நிதியுதவி செய்யப்பட்டு வருகிறது. மேற்குறிப்பிட்ட பிரிவுகள் சம்பந்தப்பட்ட துறைகளின் நான்கு தலைவர்களையும் அதாவது சர்க்கரை துறை இயக்குநர், தொழில் துறை இயக்குநர், பால் வழங்கு, பாற்பண்ணை வளர்ச்சி ஆணையாளர், கைத்தறித் துறை இயக்குநர் ஆகிய நால்வரையும் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ வகுக்கப்பட்ட விதிகளில் தகுந்த திருத்தத்தைச் செய்வதன் மூலம் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம். ஏனைய பிரிவுகளுக்கான துறைத் தலைவர்கள், கால்நடை வளர்ப்புத் துறை இயக்குநர், மீனளத் துறை இயக்குநர், கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் நிர்வாக அலுவலர், வீட்டு வசதி வாரியத் தலைவர் ஆகியோராவர். கோழி வளர்ப்பு, செம்மறியாடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களும் மீனளக் கூட்டுறவுச் சங்கங்களும் வளர்ப்புத் துறை இயக்குநரும் மீனவத் துறை இயக்குநரும் மேற்படி வங்கியின் நிர்வாகக் குழு கூட்டத்தில் கலந்துகொள்ளக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின், 73-B (3) (b) பிரிவின் கீழ் அவர்கள் அரசினால் முகமையில் அனுப்பப்பட்டால் அது மிகவும் பயனுள்ளதாக இருக்குமென்று நாங்கள் கருதுகிறோம். கிராமத் தொழில் சங்கங்களும் வீட்டு வசதிச் சங்கங்களும் தங்கள் நிதித் தேவைக்கு மாநிலக் கூட்டுறவு வங்கியை நம்பியிருப்பதில்லை. ஆகவே, இவை சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள், வங்கியின் நிர்வாகக் குழுவில் உறுப்பினர்களாக இருக்க வேண்டியது அவசியமில்லையென நாங்கள் கருதுகிறோம்.

2.22.14. மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் நிர்வாகக் குழுவில் கூட்டுறவுத் துறை வட்டார இணைப் பதிவாளர் அரசுச் சார்புடைய உறுப்பினராகத் தற்போது இருக்கிறார். மாநிலக் கூட்டுறவு வங்கியின் நிர்வாகக் குழுவில் துறைத் தலைவர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டுள்ளது போலவே, தொழில் துறை, பாற்பண்ணை வளர்ச்சித் துறை, கைத்தறித் துறை ஆகிய துறைகளைச் சேர்ந்த பொருத்தமான அதிகாரிகளையும், கூட்டுறவுச் சங்க விதிகளில் தகுந்த திருத்தம் செய்வதன் மூலம் குழுக்களில் உறுப்பினர்களாக நியமிக்கலாம் என்று நாங்கள் பரிவுரை செய்கிறோம். சர்க்கரைத் துறைக்கு உள்ளூர் அதிகாரி எவருமிலர். எனவே, அந்த அளவில் மேற்படி துறைக்குப் பிரதிநிதித்துவம் ஏதும் அளிக்கப்படவியலாது. கால்நடை வளர்ப்பு, மீனளம் ஆகிய துறைகளைச் சேர்ந்த பொருத்தமான அதிகாரிகள், கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 73-B (3) (b) பிரிவின் கீழ் மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் குழுக் கூட்டங்களில் கலந்துகொள்ள முகமையில் அனுப்பப்படலாம்.

2.22.15. துறைத் தலைவர்களும் அவர்களது அதிகாரிகளும் மேலே தெரிவித்துள்ள ஏற்பாட்டில் குறிப்பிட்டுள்ளவாறு மாநிலக் கூட்டுறவு வங்கி நிர்வாகக் குழுவுடனும் மத்தியக் கூட்டுறவு வங்கிக் குழுக்களுடனும் தொடர்பு கொள்வது, முறையான கூட்டுறவு வங்கித் துறையும், கூட்டுறவுத் துறையின் கீழ் வராத கூட்டுறவுப் பிரிவுகளும் ஒன்றுக்கொன்று தொடர் பற்றவை என்ற எண்ணத்தை நீக்குவதுடன் பரஸ்பரம் அவர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஒருங்கிணைந்த அணுகு முறை ஒன்றையும் ஏற்படுத்தும்.

அதிகாரங்களைப் பிரித்துக் கொடுத்தல்.

2.23.1. சட்ட, நிர்வாக, நிதி சம்பந்தப்பட்ட பொருட்களைப் பொறுத்த மட்டில் துறையின் பல்வேறு நிலைகளில் அதிகாரங்களைப் பிரித்து கொடுப்பது பற்றி நாங்கள் பரிசிலனை செய்துள்ளோம்.

2.23.2. சட்டம் தொடர்பானவை.—கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் பதிவாளருக்குள்ள அதிகாரங்கள் யாவும் இணைப் பதிவாளருக்கு வழங்கப் பட்டுள்ளன.

இச்சட்டத்தின் சில பிரிவுகளில் குறிப்பிட்டுள்ளதைத் தவிர, பதிவாளரின் அதிகாரங்கள் அனைத்தும் துணைப் பதிவாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்டுள்ளவாறு தவிர்க்கப்பட்ட சில பிரிவுகள் சங்கத்தின் துணைவிதிகளைத் திருத்துவதற்குக் கட்டளையிடுதல், வரையறுக்கப்படாத பொறுப்புகளுடைய ஒரு சங்கத்தில் நிதிகளை முதலீடு செய்ய ஒப்புதல் வழங்குதல், சங்கத்தின் ஓர் அதிகாரியை அல்லது ஒரு பணியாளரைத் தற்காலிகமாக வேலையிலிருந்து நிறுத்தி வைக்கக் கட்டளையிடுதல், சங்கத்தின் குழுவைக் கலைத்து விடுதல், விசாரணை அல்லது ஆய்வை நடத்திய பின்னர் சங்கத்தைக் கலைத்து விடுமாறு ஆணையிடுதல் ஆகியவற்றிற்கான அதிகாரங் களைக் குறிப்பிடுகின்றன. பிரித்துக் கொடுக்கப்படாத இந்த அதிகாரங்கள் பதிவாளர், இணைப் பதிவாளர்களுக்காக ஒதுக்கப்படுமளவிற்கு போதிய முக்கியத்துவம் வாய்ந்தவை.

இச்சட்டத்தின் சில பிரிவுகளின்கீழ் சங்கங்களின் பொதுக் குழு கூட்டங்களை நடத்துதல், தணிக்கை செய்தல், விசாரணை செய்தல் (ரூபாய் 3,000-க்கு மேற்படாமல்) இழப்புப் பொறுப்புத் தொகை வசூல் தீர்ப்புகளை நடுவர் தீர்ப்பு, நிறைவேற்றுதல் ஆகியவை தொடர்பான அதிகாரங்கள் கூட்டுறவு உதவிப் பதிவாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. வட்டார வளர்ச்சி அதிகாரிகளாகவுள்ள கூட்டுறவு உதவிப் பதிவாளர்கள் மேற்குறிப் பிட்ட அதிகாரங்களுடன், கிராமக் கடன் வழங்கு சங்கங்களின் துணை விதி களுக்கான திருத்தங்களைப் பதிவு செய்யும் அதிகாரங்கள் உடையவர்களாவர்.

தணிக்கைசெய்யும் அதிகாரம், நிகர ஆதாயங்களை அறிவிக்கும் அதிகாரம் ஆகியவை தணிக்கைத் தலைமை அதிகாரிக்கும் மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

2.23.3. நிர்வாகம் தொடர்பானவை.—இணைப் பதிவாளரைப் பொறுத்த மட்டில், நியமிப்பது, பணிமாற்றம் செய்வது, சிறிய, பெரிய தண்டனைகளை விதித்தல் ஆகியவற்றைச் செய்யத் தகுந்த அதிகாரி அரசேயாகும்.

துணைப் பதிவாளர்களைப் பொறுத்தமட்டில், நியமிக்க, பெரிய தண்டனைகளை விதிக்கத் தகுதி வாய்ந்த அதிகாரி அரசு ஆகும். அவர்களைப் பணியிடமாற்றம் செய்ய, சிறிய தண்டனைகளை விதிக்க பதிவாளர் தகுதி யுடையவராவார்.

கூட்டுறவு உதவிப் பதிவாளர்களைப் பொறுத்தமட்டில், நியமிக்க, பணியிடமாற்றம் செய்ய, பெரிய தண்டனைகளை விதிக்கத் தகுதி வாய்ந்த அதிகாரி இணைப் பதிவாளர் ஆவார். துணைப் பதிவாளர் சிறிய தண்டனைகளை விதிக்கலாம்.

முதுநிலை, இளநிலை ஆய்வாளர்களின் நேர்வில், நியமிக்க, பணியிட மாற்றம் செய்ய, சிறிய, பெரிய தண்டனைகளை விதிக்கத் தகுதியுள்ள அதிகாரி துணைப் பதிவாளர் ஆவார்.

2.23.4. நிதித் தொடர்பானவை.—தமிழ்நாடு நிதி விதிமுறைக் கோவை, ஓய்வூதிய விதிமுறைக் கோவை, வருங்கால வைப்புநிதி விதிகள், எழுது பொருள் நடைமுறை நூல் முதலியவற்றின்கீழ் பல்வேறு அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள், பிற துறைகளில் இதுபோன்ற அதிகாரங்கள், வழங்கப்பட்டுள்ள அடிப்படையிலேயே பொதுவாக அமைந் துள்ளன.

2.23.5. துறையின் பல்வேறு நிலைகளில் சட்ட, நிர்வாக, நிதி அதிகாரங்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது பொதுவாக போதுமானது என்று நாங்கள் கருதுகிறோம்.

அத்தியாயம் 3.

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின்கீழ் துறையின் சட்டப்படிக்கான அலுவல்கள்.

சட்டப்படிக்கான முக்கிய அலுவல்கள்.

3.1. கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின்கீழ் பதிவாளரின் சட்டப்படிக்கான முக்கிய அலுவல்களாவன : சங்கங்களைப் பதிவு செய்தல் (பிரிவு 4), துணை விதிகளுக்குத் திருத்தங்களைப் பதிவு செய்தல் (பிரிவு 11), தணிக்கை (பிரிவு 64). விசாரணைகள் (பிரிவு 65), ஆய்வு (பிரிவு 66), இழப்புப் பொறுப்புத் தொகை வசூல் (பிரிவு 71), குழுக்களைக் கலைத்தல் (பிரிவு 72), தீர்ப்பு வழங்குதல் (பிரிவு 73), சங்கங்களைக் கலைத்தல் (பிரிவு 85), தீர்ப்புகளையும் தீர்ப்பாணைகளையும் நிறைவேற்றுதல் (பிரிவுகள் 91, 94).

3.2. மேற்குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவுகளையொட்டி துறையின் அலுவல்களை நாங்கள் பரிசீலனை செய்துள்ளோம். தணிக்கை, சங்கங்களைக் கலைத்துவிடுதல் ஆகியவற்றைத் தவிர மற்றவை குறித்து தெரிவிக்க வேண்டிய கருத்துக்கள் ஏதுமில்லை.

தணிக்கை : நற்போதுள்ள நிலை.

3.3.1. ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்தின் கணக்குகளும் ஆண்டுக்கொரு முறையாவது தணிக்கை செய்யப்பட வேண்டுமென்ற பொறுப்பு, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் 64-வது பிரிவின் கீழ் பதிவாளருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. தணிக்கை, சங்கத்தின் கணக்குகள் எழுதப்படும் போது உடனுக்குடன் அல்லது ஒவ்வொரு ஆண்டும் முடிவடைந்த பின்னர் செய்யப்படுகிறது. தணிக்கை செய்வதற்காகவே தனியாக அல்லது தொகுதியாக தணிக்கையாளர்களை நியமித்துள்ள நிறுவனங்களில் முதலில் குறிப்பிட்ட முறை (உடன் தணிக்கை) பொதுவாகப் பின்பற்றப்படுகிறது. பெரும்பாலான சங்கங்கள் இம்முறையைப் பின்பற்ற முடியாது. அச்சங்கங்களது கணக்குகள் ஆண்டு முடிவடைந்த பின்னர் தணிக்கை செய்யப்படுகின்றன.

3.3.2. தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 64 (1) பிரிவின்கீழ் பதிவாளர், துறையின் தணிக்கைப் பிரிவைச் சேர்ந்த கூட்டுறவு உதவிப் பதிவாளர்கள், முதுநிலை ஆய்வாளர்கள், இளநிலை ஆய்வாளர்கள் அனைவருக்கும் கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்ய பொது ஆணை ஒன்றின் மூலம் அதிகாரமளித்துள்ளார்.

3.3.3. தணிக்கைப் பணியை நிர்வாகத்தினின்று தனியாக பிரிப்பது பற்றி இருபது ஆண்டுகளாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது. முழுவதும் தனித்து இயங்கக்கூடிய தணிக்கைப் பிரிவு ஒன்றிற்கும், துறையின் ஒருங்கிணைந்த பகுதியாக உள்ள தணிக்கைப் பிரிவு ஒன்றிற்கும் இடையில் இணக்கமான ஒரு பிரிவை ஏற்படுத்தும் வகையில் சீரமைப்பது பற்றி, கூட்டுறவு குறித்த நாராயணசாமிபிள்ளை குழு (1956) கருத்துத் தெரிவித்தது. அரசு அப்பரிவுரையை ஏற்றுக்கொண்டு 1958-ல் பின்வருமாறு ஆணையிட்டது :—

(i) துறையின் தணிக்கைப் பிரிவு தனிப் பிரிவாக அமைக்கப்பட வேண்டும்,

(iii) தலைமைத் தணிக்கை அதிகாரி (கூட்டுறவுத் துறை) என்ற பதவிப் பெயரிடப்பட்ட தணிக்கைப் பிரிவுத் தலைவர், பதிவாளரின் பொது மேற்பார்வையின்கீழ் பணிபுரிவார்.

(iii) தலைமைத் தணிக்கை அதிகாரி கணக்குத் துறைத் தலைவர் அலுவலகத்திலிருந்து வரவழைக்கப்பட்ட கணக்கு அதிகாரியாக இருக்க வேண்டும். நிர்வாகத்திலிருந்து தணிக்கைப் பணியைத் தனியாகப் பிரிக்கும் இத்திட்டம் 15—12—1958-லிருந்து செயலில் உள்ளது.

3.3.4. பதிவாளர் நீங்கலாக துறைத் தலைவர்கள் நிர்வாகத்தின் கீழ் உள்ள சங்கங்கள் உட்பட மாநிலத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கைப் பணி தலைமைத் தணிக்கை அதிகாரியின் கீழ் நடைபெறுகிறது. தலைமை யிடத்தில் தலைமைத் தணிக்கை அதிகாரிக்குத் தலைமை துணைக் கணக்கு அதிகாரி உதவி செய்கிறார். அவர் ஒரு பட்டயக் கணக்கர் ஆவார். மாநிலத்தில் உள்ள 14 மாவட்டங்கள் 14 தணிக்கை வட்டங்களின் கீழ் வருகின்றன. நீலகிரி, தருமபுரி, கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள வட்டங்கள், முறையே கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி ஆகிய அண்டை மாவட்டங் களில் உள்ள சிலபகுதிகள் மீது அதிகாரவரம்பு கொண்டுள்ளன. தணிக்கை வட்டம் ஒவ்வொன்றும் மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அதிகாரி ஒருவரின் பொறுப்பில் உள்ளது. அவர் துணைப் பதிவாளர் தரத்தில் உள்ள ஓர் அதிகாரி யாவார். ஒவ்வொரு வட்டமும் 2 முதல் 6 தணிக்கைக் கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தணிக்கை கோட்டமும் கூட்டுறவு உதவிப் பதிவாளர் ஒருவரின் பொறுப்பில் உள்ளது. இருபத்தைந்து முதல் முப்பது தணிக்கையாளர்களின் பணியை முறைப்படுத்துவதும், நிர்வகிப்பதும் ஒவ்வொரு உதவிப் பதிவாளரின் பொறுப்பாகும். வேளாண்மைத் தொடக்கக் கடன் சங்கங்கள் அனைத்திற்கும் இவர் தணிக்கைச் சான்றிதழ்களை வழங்கி, அவற்றின் நகல்களை மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அதிகாரிக்கு அனுப்புகிறார். ஏனைய சங்கங்களைப் பொறுத்தவரை, அவற்றை வழங்க மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அதிகாரிக்கு அறிக்கைகளை அவர் அனுப்ப வேண்டும். துணைப் பதிவாளர்கள் அல்லது இணைப் பதிவாளர்கள் செயலாளர்களாக அல்லது வணிக மேலாளர்களாக உள்ள நிலையங்களின் தணிக்கைச் சான்றிதழ்களும், மத்திய வங்கிகள் அனைத்தின் சான்றிதழ்களும் பதிவாளரால் வழங்கப்படுகின்றன. எந்தச் சங்கங்களின் பங்கு மூலதனத்தில் அரசு பங்கு கொண்டுள்ளதோ அச்சங்கங்களின் ஐந்தொகைக் கணக்கு ஆதாய-விரயக் கணக்கு ஆகியவற்றின் நகல்கள் மாநில அரசு கணக்குத் துறைத் தலைவருக்கு அனுப்பப்படுகின்றன.

3.3.5. துறையின் தணிக்கை, நிர்வாகப் பிரிவுகளின் பணியாளர்கள் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மாற்றப்படுவதற்குட்பட்டவர்களாவர்.

நிர்வாகத் துறையிலிருந்து தணிக்கைப் பிரிவைத் தனியே பிரிப்பது பற்றி பல்வேறு குழுக்களின் கருத்துக்கள்.

3.4.1. நிர்வாகத் துறையிலிருந்து தணிக்கைப் பிரிவைத் தனியே பிரிப்பது பற்றிய பிரச்சினை அவ்வப்போது எழுந்துள்ளது. இப்பிரச்சினை பற்றி 1956-ல் கூட்டுறவுத் துறை குறித்து நாராயணசாமிபிள்ளை குழு தெரிவித்த பரிவுரை 3.3.3. பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3.4.2. கூட்டுறவுத் துறை நிர்வாகம் குறித்து 1963-ல் இந்திய அரசு காலஞ்சென்ற திரு. மேத்தா தலைமையில் நியமித்த குழு ஒன்று இப் பிரச்சினை குறித்தும் பரிசீலித்தது. கூட்டுறவுச் சங்கங்களின் அன்றாடப் பொறுப்பைக் கவனிக்கும் துறையாக கூட்டுறவுத் துறை இருப்பதால், இந்த நிலையங்கள் செயல்படுவதை கூட்டுறவுத் துறையல்லாத நிறுவனம் ஒன்று மதிப்பிட வேண்டும் என்று சிலர் விரும்புவதை அது குறிப்பிட்டது. துறையிலேயே தணிக்கைப் பணி செய்வதால் விருப்பு வெறுப்பின்றியும் தனித்தும் செயல்படமுடியாது என்று சொல்லவியலாது. தலைமைத் தணிக்கை அதிகாரி ஒருவரின் தலைமையில் பதிவாளரது கட்டுப்பாட்டின் கீழ்த் தணிக்கைப் பணி நடத்துவதன் மூலம் அத்தகைய நிலையைக் கொண்டு வரலாம். தலைமைக் கணக்கு அதிகாரிக்கு உயர் அதிகாரியாக பதிவாளர் இருப்பதால் தலைமைக் கணக்கு அதிகாரி, அவருக்குக் கீழ் உள்ள பணியாளர்

ஆகியோரது அன்றாடப் பணியில் தமது செல்வாக்கைப் பதிவாளர் பயன் படுத்த முடியும் என்று வாதிப்பது பொருத்தமல்ல. இவ்வாறு அக்குழு கருத்துத் தெரிவித்தது. கூட்டுறவு இயக்கத்தோடு பதிவாளர் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்க இயலும் வகையில், தணிக்கைப் பணி அவரது சட்டப்படிக்கான நிர்வாகத்தின்கீழ் இருக்க வேண்டும் என்று குழு கருத்து தெரிவித்தது. அரசிதழ் பதிவு பெறாத பணியாளர்களைப் பொறுத்தவரை, நிர்வாக, தணிக்கைப் பிரிவுகளுக்கிடையே மாற்றுதல் ஏற்பாடு இருக்க வேண்டும் என்றும், அரசிதழ் பதிவு பெற்ற பணியாளர்களைப் பொறுத்தவரை இரண்டு வெவ்வேறு பதவித்தரங்களை வைத்து வருவது நன்மை பயக்கும் என்றும், நிர்வாகத்திலிருந்து தணிக்கையை எந்த அளவுக்குப் பிரிப்பது என்பது தொடர்பாக அது கருத்து தெரிவித்தது.

3.4.3. திரு. ராமநிவாஸ் மிர்தாவைத் தலைவராகக் கொண்டு கூட்டுறவுச் சங்கங்களின் உண்மைத் தன்மைக்கான தரங்களையும் கூறுகளையும் வரையறுக்க இந்திய அரசு 1964-ல் நியமித்த மற்றொரு குழுவும் தணிக்கை பற்றி பரிசிலித்தது. கூட்டுறவு இயக்கத்தின் தொடக்க நிலைகளில், இயக்கத்தின் நண்பராகவும், நல்லாசானாகவும், வழிகாட்டியாகவும் விளங்கிய பதிவாளரின் கீழ் தணிக்கைப் பிரிவையும் நிர்வாகப் பிரிவையும் ஒன்று சேர்ப்பது தவிர்க்கமுடியாததாயிற்று. ஆனால் தணிக்கைப் பணி வரையறை யற்ற கால அளவுக்கு அவரது சட்டப்படிக்கான பொறுப்பாக இருக்க வேண்டும் என்று பொருள் கொள்ளக்கூடாது. குழுவின் கருத்துப்படி, கூட்டுறவுத் துறையின் பெரும்பாலான பிரிவுகளில் உள்ள சங்கங்கள் பதிவாளரால் மேற்பார்வையிடப்பட்டன. எந்தச் சங்கங்களின் பணியை மேம்படுத்தி வளர்ச்சி அடையச் செய்வதற்கென பதிவாளர் முக்கியமான பங்கு வகித்துள்ளாரோ அச்சங்கங்கள் தொடர்பான தணிக்கை செய்யும் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்படுமானால், அவரது நிர்வாகப் பணிகளும் அவர் ஆற்ற வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிற உருவாக்கி வளர்க்கும் பணிகளும் பெருமளவுக்குப் பாதிக்கப்படும் என்று குழு மேலும் கருத்து தெரிவித்தது. தணிக்கைப் பணியானது பதிவாளரின் கட்டுப்பாட்டில் இல்லாமல், மாநில நிதித்துறையின் மேற்பார்வைக்குட்பட்ட, முகவரமைப்பு ஒன்றால் செய்யப்பட வேண்டும் என்று குழு பரிவுரை செய்தது.

3.4.4. மேற்சொன்ன பரிவுரை, 1965-ல் பதிவாளர்கள், மாநிலங்களின் கூட்டுறவுத் துறை அமைச்சர்கள் மாநாட்டில் ஆலோசிக்கப்பட்டது. மாநாட்டில் வைக்கப்பட்ட குறிப்பில், தனிப்பட்ட முகவர் மூலம் தணிக்கை செய்யும்போது, பதிவாளர் பரிவுடன் கூறும் ஆலோசனை கிட்டாது என்றும், அத்தகைய தணிக்கை சங்கம் ஒன்றின் அலுவலை குறித்துப் பொதுவாக நாட்டம் செலுத்தலாம் என்றும், கூட்டுறவுத் தன்மை நிலவ வேண்டும் என்ற நோக்கம் எய்தப் பெறுமற்போகும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. கூட்டுறவு நிலையங்கள், இத் துறையால் நேரடியாக நிர்வகிக்கப்படவில்லை என்றும், ஆனால் அவற்றின் குழுக்கள் அதிகாரிகள் ஆகியோரால் நிர்வகிக்கப் படுகின்றன என்றும், அவ்வாறு நோக்கின் தணிக்கை, நிர்வாகம் ஆகிய அலுவல்களை இணைந்திருக்கவில்லை என்றும் குறிப்பிடப்பட்டது. தணிக்கைப் பணியைத் தனிப்பட்ட தணிக்கைப் பிரிவு ஒன்றின் கீழ் பதிவாளரே பார்த்துக்கொள்ள வேண்டும் என்று மாநாடு இறுதியில் முடிவு செய்தது.

3.4.5. தமிழ்நாட்டில், தணிக்கை பணிக்கு பதிவாளர் முடிவான பொறுப்பு வகிக்க வேண்டும் என்று கூட்டுறவு குறித்து சந்தானம் குழு (1969) பரிவுரை செய்தது. ஆயினும், விருப்பு வெறுப்பின்றியும் பிறர் கட்டுப்பாடின்றியும் தணிக்கை செய்யும் முறையை மேம்படுத்த வேறு சில பரிவுரைகளையும் அக்குழு செய்தது. அக்குழுவின் பரிவுரைகள் சுருக்கமாகக் கீழே கொடுக்கப் பட்டுள்ளன :—(i) தணிக்கை, பதிவாளரின் முடிவான பொறுப் பில் தொடர்ந்து இருந்து வர வேண்டும் என்றாலும், பதிவாளரின் கீழுள்ள தணிக்கைப் பிரிவும் நிர்வாகப் பிரிவும் எல்லா நிலைகளிலும் உள்ள அவற்றின் பணியாளர்களும் தனித்தனியே இயங்கக்கூடிய பிரிவுகளாக்கப்பட வேண்டும். இவ்விரு பிரிவுகளிலும் கீழ்மட்டத்தில் பொதுவான ஆள்தேர்வு இருக்கலாம். அவ்வாறு தேர்வு செய்து அடிப்படை பயிற்சியளித்த பின்னர், ஆய்வாளர்கள்,

அவர்களது தகுதிகாண் பணிக்காலத்தில் ஆறு திங்களுக்கு நிர்வாகப் பிரிவிலும் ஆறு திங்களுக்குத் தணிக்கைப் பிரிவிலும் பணியாற்ற வேண்டும். தகுதிகாண் பணிக்காலம் முடிவடைந்த பின்னர், பதிவாளர்களின் விருப்பப் படி அவர்கள் ஏதாவதொரு பிரிவில் நிலையாக அமர்த்தப்பட வேண்டும். (ii) துணைப் பதிவாளர் பதவிக்கான நேரடித் தேர்வு ஒவ்வொரு பிரிவிற்கும் தனித் தனியே செய்யப்பட வேண்டும். தணிக்கைப் பிரிவிற்கான துணைப் பதிவாளர் பதவிக்கு ஆள் தேர்வு செய்யும்போது, தகுதி பெற்ற பட்டயக் கணக்கர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படலாம். (iii) துறையில் தற் போதுள்ள பணியாளர்கள், பதிவாளரின் ஒப்புதலுடன் ஒரு பிரிவிற்கோ அல்லது மற்றொரு பிரிவிற்கோ விரும்பிச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும். தணிக்கைத் தலைமை அதிகாரியுடன் கலந்தாலோசித்தே தணிக்கைப் பிரிவில் எவரும் அமர்த்தப்பட வேண்டும். அதன் பின்னர் இவ்விரு பிரிவுகளுக்கு மிடையே பணியாளர் எவரும் மாற்றப்படக் கூடாது. உயர் பதவிகளுக் கான பதவி உயர்வு அந்தந்த பிரிவிற்குள்ளேயே இருக்க வேண்டும். (iv) சாதாரணமாக தணிக்கைப் பிரிவிலிருந்து பதவி உயர்வு அளிக்கப்பட்டுத் தணிக்கைத் தலைமை அதிகாரி நியமிக்கப்பட வேண்டும். வெளியிலிருந்து ஒருவர் நியமனம் செய்யப்படுவாரேயாகில், அவர் இந்தியத் தணிக்கை-நிர் வாகப் பணி அதிகாரியாக இருக்க வேண்டும்.

குழுவின் மேற்கண்ட பரிவுரை குறித்து அரசு இன்னும் ஆணை பிறப்பிக்க வில்லை.

3.5.1. எல்லா வகையிலும் இது பற்றி நாங்கள் ஆழ்ந்து பரிசீலித்து கீழ்க் காணும் முடிவுக்கு வந்துள்ளோம் :—கூட்டுறவுச் சங்கப் பதிவாளரின் கட்டுப் பாட்டிலுள்ள கூட்டுறவுத் துறையிலிருந்து தணிக்கைப் பிரிவு தனியாகப் பிரிந்து செயலாற்றுவது அவசியமாயுள்ளது. கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கி வளர்ப்பதில் ஆற்றும் பணிக்கு அண்மை ஆண்டுகளில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. முழுவதும் நியமனம் மூலம் அமையும் நிர்வாகக் குழுக்களை அமைத்தல், கலைக்கப்பட்ட சங்கங்களை நிர்வகிக்கத் துறையின் முதுநிலை அதிகாரிகளைச் சிறப்பு அதிகாரி களாக நியமித்தல் போன்ற நடைமுறைகளைத் துறை பரவலாக மேற் கொண்டதன் விளைவாகப் பெரிய கூட்டுறவு நிறுவனங்களை அமைத்து அவற்றை நிர்வகிப்பதில் கூட்டுறவுச்சங்கப் பதிவாளரும் அவரது அதிகாரி களும் நேரடியாகவும் தீவிரமாகவும் ஈடுபடுவது அதிகமாகிவிட்டது. கூட்டுறவுத் துறை முதுநிலை அதிகாரிகள், சிறப்பு அதிகாரிகளாகவோ நிர் வாக இயக்குநர்களாகவோ இருந்து கொண்டு தலைமைச் சங்கங்கள் பெரும் பாலானவற்றையும் பெரிய அளவிலான வாணிபம், தயாரிப்புத் தொழில் ஆகியவற்றை நடத்தும் சங்கங்களையும் நிர்வகித்து வருகின்றனர். இச் சூழ் நிலையில், கூட்டுறவுத் துறையின் பதவித் தரங்களில் ஒரு பகுதியாகத் தற் போது இருக்கும் கூட்டுறவுத் தணிக்கைப் பணியாளர்கள் தணிக்கைப் பணியைக் காய்தல் உவத்தல் இன்றியும் விருப்பு வெறுப்பின்றியும் கவனிக்க இயலாது. தணிக்கையாளர்கள், கணக்குகளில் காணும் முறைகேடுகளைச் சுட்டிக் காட்டினாலும் அவை குறித்துக் கூட்டுறவுச் சங்கப் பதிவாளரும் அவரது முதுநிலை அதிகாரிகளும் எடுக்கக்கூடிய தொடர் நடவடிக்கை விரைந்து எடுக்கப்படுவதாகவும் உறுதியானதாகவும் இருக்க வாய்ப்பில்லை. ஏனெனில், முறைகேடான விவகாரங்களில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள், மேல் நடவடிக்கையையும் பரிகார நடவடிக்கையையும் மேற்கொள்ளப் பொறுப்பு வகிக்கும் அதிகாரிகள் பதவித் தரத்தைச் சேர்ந்தவர்களாகவும், அந்த அதிகாரிகள் பதவித்தரத்திற்கு மாற்றப்படுபவர்களாகவும் இருக்கின்றனர்.

3.5.2. தற்போதுள்ள முறையில் இத்தகைய ஒரு நிலைக்கு வழிவகுக்கப் பல கூறுகள் இருப்பதோடு, தணிக்கை பிறர் கட்டுப்பாடின்றியும் விருப்பு வெறுப்பின்றியும் செய்யப்பட வேண்டியதன் நோக்கத்தைப் பெருமளவிற்குக் குறைத்தும் வருகின்றன. அக்கூறுகள் வருமாறு :—

(a) தணிக்கைத் தலைமை அதிகாரி, தணிக்கைத் துணைத் தலைமை அதிகாரி ஆகியோர் நீங்கலாக அரசிதழ் பதிவு பெற்ற, அரசிதழ் பதிவு பெறாத தணிக்கைப் பணியாளர்கள் கூட்டுறவுத் துறையில் அரசிதழ் பதிவு பெற்ற

அரசிதழ் பதிவு பெருத நிர்வாகப் பணியாளர்கள்—இவர்களில் பலர் கூட்டுறவுச் சங்கங்களில் நிர்வாகப் பதவிகளிலும் மேலாளர் பதவிகளிலும் கணக்காளர் பதவிகளிலும் உள்ளனர்—பதவித் தரத்தைச் சேர்ந்தவர்களா யிருப்பதோடு அப்பணியாளர்கள் பதவித்தரத்தில் எல்லா நிலைகளிலும் பரிமாற்றம் செய்து கொள்ளப்படுபவர்களாயிருக்கின்றனர்.

(b) துணைப் பதிவாளர்கள் அல்லது உயர்நிலை அதிகாரிகள் நிர்வாகப் பதவிகளை அல்லது மேலாளர் பதவிகளை வகித்துவரும் சங்கங்கள் அனைத்திற்கும் தணிக்கைச் சான்றிதழ்கள் தணிக்கைத் தலைமை அதிகாரியால் கொடுக்கப்படாமல் பதிவாளரால் கொடுக்கப்படுகின்றன.

(c) அரசிதழ் பதிவு பெருத தணிக்கைப் பணியாளர்களுக்குப் பெரும் தண்டனை விதிக்கும் அதிகாரம் மாவட்டத் தணிக்கை அதிகாரியாலோ தணிக்கைத் துணைத் தலைமை அதிகாரியாலோ தணிக்கைத் தலைமை அதிகாரி யாலோ செலுத்தப்படுவதில்லை. ஆனல், அதனை முறையான நிர்வாக இணைப் பதிவாளர் செலுத்துகிருர். இவரே மேற்கண்ட பணியாளர்களை நியமிக்கும் அதிகாரியாகவும் இருக்கிருர்.

(d) மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அதிகாரிகளுக்குப் பெரிய அல்லது சிறிய தண்டனை விதிக்கும் அதிகாரம் தணிக்கைத் தலைமை அதிகாரி யால் செலுத்தப்படுவதில்லை. மாருக, கூட்டுறவுச் சங்கப் பதிவாளருக்கே, அந்த அதிகாரம் இருக்கிறது.

(e) மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அதிகாரிகள் சம்பந்தப்பட்ட ரகசிய அறிக்கை தணிக்கைத் தலைமை அதிகாரியால் எழுதப்படுவதில்லை. அதற்கு மாருக வட்டார நிர்வாக இணைப் பதிவாளர்களே அதனை எழுது கின்றனர். கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் அதனைச் சீர்தூக்கிப் செய்கிருர். மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அதிகாரிகள் குறித்த அறிக்கையில் (கடன் வழங்கு) கூட்டுப் பதிவாளரும் தமது குறிப்புகளை எழுதிவைக்கக் கூட்டுறவுத் துறையின் 19—6—1971 ஆம் நாளிட்ட 300 ஆம் எண் அரசு ஆணை அனுமதிக்கிறது.

(f) தணிக்கைத் தலைமை அதிகாரி குறித்த ரகசிய அறிக்கை (கடன் வழங்கு) கூட்டுப் பதிவாளரால் தயாரிக்கப்பட்டு அதற்குக் கூட்டுறவுச் சங்கப் பதிவாளரால் மேலொப்பமிடப்படுகிறது: இவைபோன்ற நிலைமைகள், தணிக்கை பிறர் கட்டுபாடின்றிச் செய்யப்படும் அல்லது விருப்பு வெறுப் பின்றிச் செய்யப்படும் என்ற நம்பிக்கையைத் தோற்றுவிப்பதாக இல்லை.

3.5.3. ஆகவே, அரசிதழ் பதிவுபெற்ற, அரசிதழ் பதிவு பெருத தணிக்கைப் பணியாளர் அமைப்பு முழுவதும் கூட்டுறவுத் துறையிலிருந்து தனியாகப் பிரிக்கப்பட்டு ஒரு தனிப்பட்ட துறையாக அமைக்கப்படலா மென்று ஆணைக்குழு பரிவுரை செய்கிறது. இத்துறைக்கு முதுநிலை உதவி கணக்காய்வுத் தலைவர் அல்லது துணைக் கணக்காய்வுத் தலைவர் ஒருவர் தலைவராக இருக்கலாம். இவர், இந்தியத்தணிக்கை—கணக்குப் பணியிலிருந்து முகமையில் பெறப்படலாம். இத்துறை தமிழ்நாடு அரசு நிதித்துறையின் கட்டுப்பாட்டில் இருக்கலாம். இத்தகைய ஏற்பாட்டினல் அந்தந்த பணி களுக்காகவுள்ள பதிவாளர்கள் எட்டு பேருக்கும் சிக்கல் ஏதும் ஏற்படாது. ஏனெனில், தற்போது கூட, தணிக்கைப்பணி, அந்தந்த பணிகளுக்கான பதிவாளர்களின் கட்டுப்பாட்டின்கீழ் இல்லை. கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளரது நேர்வில், அத்தகைய பிரிவினை ஒன்று ஏற்படுத்துவதன் அவசியத்தை நாங்கள் ஏற்கெனவே விளக்கியுள்ளோம்.

3.5.4. நிதித் துறையின் அதிகாரத்தின்கீழ் செயல்படும் கூட்டுறவுத் தணிக்கைத் துறை 9 பதிவாளர்களின் கட்டுப்பாட்டின் கீழுள்ள சங்கங்கள் அனைத்தையும் தணிக்கை செய்யும். ஒவ்வொரு பதிவாளரின் கீழுள்ள

242705
X-M"Y

சங்கங்களைத் தணிக்கைச் செய்வதற்குத் தனித் தணிக்கைத் துறைகளை அமைக்க வேண்டிய தேவை ஏதுமில்லை என்று நாங்கள் கருதுகிறோம். அத்தகைய ஒரு வேண்டுகோள், பணிச்சுமை அளவின் அடிப்படையிலோ நிர்வாக அமைப்புத் தேவையின் அடிப்படையிலோ நியாயமானதல்ல. இம் மாநிலத்தில் மொத்தமுள்ள 20,383 கூட்டுறவுச் சங்கங்களுள் 12,338 சங்கங்கள் பதிவாளரின் கட்டுப்பாட்டு அதிகாரத்தின்கீழ் உள்ளன. எஞ்சியுள்ள 8,045 சங்கங்கள், தொழில் அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ள 8 பதிவாளர் களினால் நிர்வகிக்கப்படுகின்றன. தணிக்கைப் பணி கூட்டுறவுச் சங்கப் பதிவாளரின்கீழ்க் கொண்டுவரப்பட்டுள்ளதால், மேற்கூறிய 8 பதிவாளர்கள ஒவ்வொருவருக்கும் தனி தணிக்கைத் துறைகள் ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. கூட்டுறவுச் சங்கப் பதிவாளரிடமிருந்து தணிக்கைப் பணியைப் பிரிக்கும் நேர்வில் இக்கோரிக்கை சிறப்பு முக்கியத்துவம் எதுவும் வாய்ந்ததாக இல்லை. எனவே, அக்கோரிக்கை புறக்கணிக்கப்படலாம்.

3.5.5. கூட்டுறவு நூற்பாலைகள், சர்க்கரை ஆலைகள் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில், அந்தந்த அலுவல் துறைப் பதிவாளர்களுடன் கலந் தாலோசித்து தனிப்பட்ட தணிக்கையாளர்களின் பட்டி ஒன்றைக் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் தற்போது தயாரித்து வருகிறார். கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் ஊதியத்தை நிர்ணயித்து தணிக்கைச் சான்றிதழ்களை வழங்கு கிறார். வருங்காலத்தில் நிதித் துறையினால் அல்லது பதிவாளர்களின் ஒருங் கிணைந்த குழுவினால் தனிப்பட்ட தணிக்கையாளர்களது பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டு ஊதியம் வரையறுக்கப்படலாம். தணிக்கைச் சான்றிதழ்கள் கூட்டுறவுத் தலைமைத் தணிக்கை அதிகாரியால் வழங்கப்படலாம்.

கூட்டுறவு நிறுவனங்களை வணிக முறையில் தணிக்கை செய்தல்.

3.6.1. பெரிய நிறுவனங்கள், வணிகம் அல்லது தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் உட்பட கூட்டுறவு நிறுவனங்கள் அனைத்தையும் எப்போதும் துறைத் தணிக்கையாளர்களே தணிக்கை செய்து வந் துள்ளனர். பெரிய கூட்டுறவு நிறுவனங்களைப் பொறுத்தமட்டில் வணிகத் தணிக்கையை அனுமதிக்கும் கருத்துரைகள் அவ்வப்போது தெரிவிக்கப் பட்டுவருகின்றன. பெரிய கூட்டுறவு நிறுவனங்கள் நிதிச் சட்டம், வருமான வரிச் சட்டம் முதலியவற்றின் செயல் வரம்பிற்குள் வருவதால், வாணிகம் பற்றிய தணிக்கை, வருமான வரிச் சட்டம் ஆகியவற்றை நன்கு அறிந்த நபர்களால் அவை தணிக்கை செய்யப்பட வேண்டுமென்று அரசு கருதியது. மேலும், தொழில்-தொழிலாளர் நல கூட்டுறவுத் துறையின் 2—3—1967 ஆம் நாளிட்ட 824-ஆம் எண் ஆணையில், கூட்டுறவு நூற்பாலைகள், சர்க்கரை ஆலைகள் ஆகியவற்றைக் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு, வணிக முறையில் தணிக்கை செய்யும் முறையைக் கொண்டுவர அரசு கட்டளை யிட்டது :—

(i) பதிவாளர் தணிக்கையாளர்களது பெயர் பட்டியலைத் தயாரித்து, கைத்தறி இயக்குநர்/சர்க்கரை ஆலை இயக்குநரைக் கலந்தாலோசித்து தணிக்கையாளர்களை நியமிப்பார்;

(ii) தணிக்கையாளர்களது ஊதியம் பதிவாளரால் ஏற்பளிக்கப்படும்; அவ்வப்போது பதிவாளர் பிறப்பிக்கும் கட்டளைகளுக்குட்பட்டு தணிக்கை நடத்தப்பட வேண்டும்;

(iii) வணிகமுறை தணிக்கையாளர்கள் செய்த தணிக்கைப் பணியை சோதனைத் தணிக்கை செய்த பின்னர் பதிவாளரால் தணிக்கை அறிக்கைகள் தொடர்ந்து வழங்கப்படும்;

(iv) கூட்டுறவு நூற்பாலைகளும் சர்க்கரை ஆலைகளும் தங்களது மாதாந்தர அறிக்கைகளையும், அவ்வப்போது கேட்கப்படும் விவரங்களையும் பரிசீலனைக்காகப் பணிந்தனுப்ப வேண்டும்.

3.6.2. தணிக்கைத் துறைத் தலைமை அதிகாரியால் தயாரிக்கப்பட்ட தற்போதைய பெயர்ப் பட்டியலில் 97 பெயர்கள் உள்ளன. சென்னை, பட்டயக் கணக்கர்கள் நிறுவனத்தின் தென்னிந்திய வட்டாரக் குழு மூலம் பெற்ற விவரங்களையொட்டி இப்பெயர்ப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. பெயர்ப் பட்டியலில் நிறுவனங்கள் தனிப்பட்ட நபர்கள் ஆகியவர்களின் பெயர்கள் சேர்க்கப்பட்டிருந்த போதிலும் தற்போதுள்ள நடைமுறைப்படி, நிறுவனங்களிடம் மட்டுமே தணிக்கைப் பணி ஒப்படைக்கப்படுகின்றது. குறிப்பாக ஒரு நேர்வில், தணிக்கையாளர்களை மாற்றுவதற்குத் திட்டவட்டமான காரணங்கள் இருந்தாலன்றி, ஒரு முறை நியமிக்கப்பட்ட தணிக்கையாளர்கள் தொடர்ந்து 3 ஆண்டுகள் அமர்த்திக் கொள்ளப்படுகின்றனர். தணிக்கையாளர்களது ஊதிய விதம், கதிர் திறன் ஆலையாடப்பட்ட கரும்பின் அளவினையொட்டி வரையறுக்கப்படுகிறது.

3.6.3. வணிகமுறை தணிக்கையாளர்களை நியமிப்பது குறித்து, கூட்டுறவு பற்றிய சந்தானம் குழு கருதிப் பார்த்தது. பெரிய கூட்டுறவு நிறுவனங்கள் சிலவற்றைத் தணிக்கை செய்யும் பணி பட்டயக் கணக்கர்களிடம் ஒப்படைப்பதில் குறிப்பிடத்தக்க அனுகூலங்கள் உள்ளன என்று குழு கருதியது. கூட்டுறவு நூற்பாலைகள், சர்க்கரை ஆலைகள் ஆகியவற்றைத் தணிக்கை செய்வது குறித்த அரசு ஆணையை அவர்கள் ஏற்றுக்கொண்டனர். தலைமை நிறுவனங்கள் ரூ. 50 லட்சத்திற்குக் குறையாத வைப்பீட்டுத் தொகையை வைத்துவரும் நகர்ப்புற வங்கிகள், மத்திய வங்கிகள் ஆகியவற்றைத் தணிக்கை செய்யும் பணி பட்டயக் கணக்கர்களிடம் ஒப்படைக்கப்படலாம் என்றும், பதவிக் காலம் பற்றிய நடைமுறையைப் பதிவாளர் முடிவு செய்யலாம் என்றும் அக்குழு பரிவுரை செய்தது.

3.6.4. பெரிய கூட்டுறவு நிறுவனங்களைத் தணிக்கை செய்வதற்குத் தொழில் முறை தணிக்கையாளர்களை நியமிக்கும் முறை சரியானதேயாகும். தமிழ்நாடு நுகர்வோர் கூட்டமைப்பு, தமிழ்நாடு விற்பனைக் கூட்டமைப்பு, தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் போன்ற வாணிக நிறுவனங்களுக்கும் இம்முறையைப் பின்பற்றுமாறு நாங்கள் பரிவுரை செய்கிறோம். தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி, மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிகள், தமிழ்நாடு மாநில நிலவள வங்கி போன்ற உயர்மட்ட வங்கி நிறுவனங்களைப் பொறுத்தமட்டில், தற்போதுள்ள துறைத் தணிக்கை முறையே தொடர்ந்து இருப்பது விரும்பத்தக்கதாகும். இந்த வங்கிகளின் கணக்குகள், வணிக, தயாரிப்பு நிறுவனங்களின் கணக்குகளைப்போல் அவ்வளவு சிக்கல் வாய்ந்தவையாக இல்லை. வருமான வரி, பிற நிதி விஷயங்கள் குறித்து வல்லுநர்களின் ஆலோசனையைப் பெறுவதற்குத் தலைமை நிறுவனங்கள் (தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி, மாநில நிலவள வங்கி) ஆலோசகர்களைத் தாங்களே நியமித்துக் கொள்ளலாம். அவற்றுடன் இணைந்துள்ள வங்கிகளுக்கும் அந்த ஆலோசனை கிட்டுமாறு செய்யலாம்.

தணிக்கைப் பணியாளரது எண்ணிக்கையை முறைப்படுத்துவதற்கு முடிவு செய்யப்பட்ட கோட்பாடுகள்.

3.7.1. தணிக்கைக்காக வரையறுக்கப்பட்ட கோட்பாடுகள் 1968-ல் மாற்றியமைக்கப்பட்டன. முதலில் இருந்த கோட்பாடுகள், 1968-ல் மாற்றியமைக்கப்பட்ட கோட்பாடுகள் ஆகியவற்றைக் காட்டும் விவர அறிக்கை ஒன்று இணைப்பு **IX** -ல் கொடுக்கப்பட்டுள்ளது.

3.7.2. தற்போதுள்ள கோட்பாடுகளே போதுமானவை என்று கூறப்படுகிறது. மேற்கொண்டும் அவற்றை மாற்றியமைக்க வேண்டிய தேவை எதுமில்லை. ஆயினும், 31—12—1972 அன்றுள்ளவாறு, உதவிப் பதிவாளர் தரத்தில் 19 தணிக்கையாளர் பதவிகளும், முதுநிலை ஆய்வாளர்கள் தரத்தில் 68 பதவிகளும், இளநிலை ஆய்வாளர்கள் தரத்தில் 6 பதவிகளும் காலியாக இருந்தன எனத் தெரிய வருகிறது. அத்தகைய அதிக அளவிலான காலியிடங்கள், வரையறுக்கப்பட்ட கோட்பாடுகளின் செயல்திறனைப் பாதிக்கின்றன. தணிக்கைப் பதவிகள் அனைத்தையும் நிரப்புவதன் அவசியத்தை நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

தணிக்கைப் பணி முன்னேற்றம்.

3.8.1. தணிக்கை உரிய நேரத்தில் நடைபெற உறுதி செய்ய, வெவ்வேறு வகை நிலையங்களுக்குரிய தணிக்கையை முடிப்பதற்கான கால வரையறையை பதிவாளர் முடிவு செய்துள்ளார். உதாரணமாக, மாநிலக் கூட்டுறவு வங்கி, நிலவள வங்கி போன்ற தலைமை நிலையங்கள், ஜூன் 30 ஆம் நாளோடு தணிக்கை முடிவடைகிற மத்திய வங்கிகள் போன்ற மாவட்ட நிலையங்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரை, தணிக்கைப் பணி முடிப்பதற்குரிய நாள் செப்டம்பர் 30 ஆம் நாள் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. விற்பனைச் சங்கங்கள், வீட்டு வசதிச் சங்கங்கள் முதலியவற்றைப் பொறுத்தவரை, டிசம்பர் 31 ஆம் நாள் தணிக்கை முடிப்பதற்குரிய நாள் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், நூற்பாலைகள் போன்ற செய்முறைச் சங்கங்களைப் பொறுத்தவரை, செப்டம்பர் 30 ஆம் நாள் தணிக்கை முடிப்பதற்குரிய நாள் என வரையறுக்கப்பட்டுள்ளது. மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அதிகாரிகள் தங்கள் ஆண்டு தணிக்கை வேலைத் திட்டங்களை வகுக்கும்போது இந்தக் கால வரையறைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். இந்நிலைமையை ஒவ்வொரு மாதமும் ஒருமுறை ஆய்வு செய்து கால அட்டவணைகள் முறையாகப் பின்பற்றப்படுகின்றனவா என்று பார்த்துக் கொள்ளுமாறு வட்டார இணைப் பதிவாளர்கள் கட்டளையிடப்பட்டுள்ளனர்.

3.8.2. வரையறுக்கப்பட்ட கால வரையறைகள் வழக்கமாக, அதிலும் குறிப்பாக, பெரிய நிலையங்கள் நேர்வில் பின்பற்றப்படுகின்றன. எனினும், தணிக்கை செய்யப்பட வேண்டிய 20,383 சங்கங்களில், 30—11—1972 அன்றுள்ளவாறு 1,139 சங்கங்கள் தணிக்கை செய்யப்படாமல் இருந்தன. அவற்றில் சில 1963-64-லிருந்து தணிக்கையிடப்படாமல் உள்ளன. அவை கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன :—

கணக்குகள் எழுதப்படாத சங்கங்களின் எண்ணிக்கை	73
கணக்குகள் கிடைக்காத சங்கங்களின் எண்ணிக்கை	1,019
செயல் முடங்கிய சங்கங்களின் எண்ணிக்கை	33
தணிக்கைப்பணி மேற்கொள்ளப்படாத சங்கங்களின் எண்ணிக்கை.	14
மொத்தம்	1,139

இவ்வளவு அதிக அளவிலான சங்கங்கள் குறித்த கணக்குகள் ஏன் கிடைக்கவில்லை என்பதற்கான காரணங்கள் பற்றி விரிவாகப் பரிசீலனை செய்ய வேண்டும். அத்தகைய பரிசீலனை செய்ய விரைந்து நடவடிக்கை எடுக்கப்படலாம் என நாங்கள் பரிவுரை செய்கிறோம்.

சங்கங்களைக் கலைத்தல்.

3.9.1. 85-வது பிரிவின் கீழ் சங்கங்களைக் கலைப்பதற்கான அதிகாரம், இணைப் பதிவாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. சங்கம் கலைக்கப்படும் போது அதிகார பூர்வமான கலைப்பு அதிகாரி ஒருவர் நியமிக்கப்படுகிறார். வழக்கமாக, துணைப் பதிவாளர் ஒருவர் அல்லது கூட்டுறவு உதவிப் பதிவாளர் ஒருவர் கலைப்பு அதிகாரியாக நியமிக்கப்படுகிறார். கலைப்பு பணியைக் கவனிக்க, 13 உதவிப் பதிவாளர்கள், 6 முதுநிலை ஆய்வாளர்கள், 31 இளநிலை ஆய்வாளர்கள் ஆகியோரைக் கொண்ட தனிப்பட்ட சார்நிலைப் பணியாளர்கள் உள்ளனர். இவர்கள் தவிர, கலைக்கப்பட்ட சங்கங்கள் கடன் பட்டுள்ள கூட்டுறவு மத்திய வங்கிகளின் செலவில் பணியாளர்கள்

அவ்வப்போது நியமிக்கப்பட்டுள்ளனர். சங்கம் கலைக்கப்பட்டவுடன், வசூல்களின்மீது 12½ சதவீதக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அதில் 10 சதவிதம் அரசுக் கணக்கிற்குச் செலுத்தப்படுகிறது. 30—11—1972 அன்றுள்ளவாறு, 1,661 சங்கங்கள் கலைப்பில் உள்ளன (30—6—1971 அன்றுள்ளவாறு) வசூலாகாமல் உள்ள மொத்த சொத்துகளின் மதிப்பு ரூ. 254.86 லட்சமாகும்.

3.9.2. கலைப்புப் பணியை விரைவுபடுத்தும் நோக்குடன், மத்திய வங்கிகளுக்கு முகமையில் அனுப்பப்பட்டுள்ள இணைப் பதிவாளர்கள், துணைப் பதிவாளர்கள் பதவித் தரத்தில் உள்ள துறை அதிகாரிகள், வங்கிகளிடம் கடன்பட்டுள்ள சங்கங்களைப் பொறுத்தவரை அதிகார பூர்வமான கலைப்பு அதிகாரிகளாக நியமிக்கப்படலாமென்று நாங்கள் கருதுகிறோம். கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழான அதிகாரங்கள், நடுவர் மன்ற, நிறைவேற்றல் நடவடிக்கைகளைப் பொறுத்தவரை அத்தகைய அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவர்களைக் கலைப்பு அதிகாரியாக நியமிப்பதற்கு எவ்வித மறுப்பும் இருப்பதற்கில்லை. சங்கங்கள் நிதி வழங்கு வங்கிகளிடம் கடன்பட்டிருப்பதால், இந்த அதிகாரிகள் கலைப்பு அதிகாரிகளாக நியமிக்கப்படும் போது, தொகைகளை வசூலிப்பதில் மேலும் சிறந்த முறையிலும், தனிப்பட்ட முறையிலும் நாட்டம் செலுத்துவர் என எதிர்பார்க்கலாம்.

அத்தியாயம் 4.

கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர் பதவியும் நிர்வாகக் குழுக்களின் அமைப்பும்.

பொதுவான நிலை.

4.1. கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர் பதவிகளும் நிர்வாகமும் சில பிரிவினரின் ஏகபோக உரிமையாகியுள்ளது என்றும், அவர்கள் நாளடைவில் தனி உரிமை பெறத் தலைப்பட்டனர் என்றும் அவர்கள் தாம் வகித்த பதவிகளைப் பயன்படுத்திப் பெற இயன்ற செல்வாக்கையும் ஆதரவையும் கொண்டு தங்களை (அல்லது தங்களது நண்பர்களை, குடும்பத்தினரை அல்லது உறவினர்களை) பதவியில் நீடித்திருக்குமாறு செய்ய இயன்றது என்றும் அவ்வப்போது குறைகள் கூறப்பட்டு வந்துள்ளன. இவற்றை அரசு கருதிப் பார்த்து கூட்டுறவுச் சங்கங்களில் ஏகபோக உரிமைக்கான அல்லது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளை ஒழிப்பதற்காக அல்லது குறைப்பதற்காக, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்திலும் அதன் கீழ் செய்யப்பட்ட விதிகளிலும் விதித்துறைகள் செய்து வந்துள்ளது. இந்த வகையில் அரசால் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதைக் கருதிப் பார்ப்பது பயனுள்ளதாய் இருக்கும்.

பரந்த அடிப்படையில் உறுப்பினர் பதவி அமைவதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள்.

4.2.1. 1959 ஆம் ஆண்டு வரை, சங்கங்களில் உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்வது துணை விதிகள் மூலம் முறைப்படுத்தப்பட்டது. ஒருவரை உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ள அல்லது காரணம் எதும் கூறாமல் அவரைச் சேர்த்துக் கொள்ள, மறுக்க சங்கம் ஒன்றின் நிர்வாகக் குழுவிற்கு உரிமை இருந்தது.

சங்கத்தில் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ள அனுமதி மறுக்கப்படும் நேர்வில் பதிவாளருக்கு மேல்முறையீடு ஒன்றைச் செய்து கொள்ள, தமிழ் நாடு 1932 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் வகுக்கப் பட்ட விதிகளில் (விதி VIII-AA) விதித்துறை ஒன்று 1959 ஆம் ஆண்டில் செய்யப்பட்டது. ஒரு சங்கத்தின் துணை விதிகளையொட்டி அந்தச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்வதற்குத் தகுதியுடைய ஒவ்வொருவரும், விண்ணப்பம் செய்து கொள்வதன் பேரில், உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்; ஆனால், சரியானதும் போதுமானதுமான காரணங்களுக்காக அவரை உறுப்பினராகச் சேர்த்துக் கொள்வதற்கு மறுக்கக் குழுவிற்கு உரிமையுண்டு. அதற்கான காரணங்களை கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்பில் அக்குழு எழுதிவைக்க வேண்டும். இவ்வாறு அந்த விதி குறிப்பிடுகிறது. அக்காரணங்கள் விண்ணப்பதாரருக்குத் தெரிவிக்கப் பட வேண்டும். குழுவின் முடிவிற்கெதிராகப் பதிவாளருக்கு மேல் முறையீடு செய்து கொள்ள அவருக்கு உரிமை அளிக்கப்பட்டது.

4.2.2. வரையறுக்கப்படக் கூடிய வகையைச் சேர்ந்த பதிவான சங்கங்கள் நேர்வில் மேற்படி சங்கத்தில் உறுப்பினராகச் சேருவதற்குத் தகுதியுடைய ஒவ்வொருவரும் விண்ணப்பம் செய்து கொள்வதன் பேரில் மேற்படி சங்கத்தின் நிர்வாகக் குழுவினர் அவரை உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று நிபந்தனை விதிக்கத் தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (இப்புதிய சட்டம் 1963-ல் செயலுக்கு வந்தது) விதித்துறை ஒன்று (17-வது பிரிவு) செய்யப் பட்டது. இப்பிரிவின் நோக்கத்திற்காக, கடன் வழங்கு சங்கங்கள், பண்டீட்டுச் சங்கங்கள், விற்பனைச் சங்கங்கள் ஆகியவை "குறிப்பிட்ட வகைச் சங்கங்களாக (Class societies) வரையறுக்கப்பட்டன. ஏனைய வகைச்

சங்கங்களின் நேர்வில், குழுவில் உறுப்பினராகப் சேருவதற்குரிய விண்ணப் பத்தை கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்பில் சரியானதும் போதுமானது மான காரணம் எழுதிவைத்து ஒருவரை உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ள மறுப்பதற்கான விருப்ப உரிமையை நிர்வாகக் குழுவிற்கு இப் பிரிவு அளித்தது. அக்காரணத்தை விண்ணப்பதாரருக்குத் தெரிவிக்க வேண்டும். முந்திய வகைச் சங்கங்களின் நேர்வில், ஒருவரை உறுப்பினர் பதவியிலிருந்து அகற்ற குழு விரும்பினுல் அதற்குப் பதிவாளரின் ஒப்புதலைப் பெற வேண்டும். பிந்திய நேர்வில், விண்ணப்பதாரர் விரும்பினுல் அவர் மேல்முறையீடு ஒன்றைச் செய்து கொள்ளலாம்.

4.2.3. சங்கத்தில் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்வதனுல் மட்டும் அதன் நோக்கம் நிறைவேருது என்று கருதப்பட்டது. ஏனெனில், சங்கத்தின் பணிகளை உறுப்பினருக்கு அளிக்க மறுப்பதனின்றும், விருப்ப மற்ற நிர்வாகக் குழுவை இது தடை செய்யாது. எனவே, ஒரு சங்கத்தின் ஒவ்வோர் உறுப்பினரும் அச் சங்கத்தின் துணை விதிகளைச் சேர்ந்த விதித் துறைகளின் கீழ் உறுப்பினர்களுக்குக் கிடைக்கக் கூடிய பணிகளைப் பெற உரிமையுள்ளவராவர் என்றும், உறுப்பினர் எவருக்கும் அத்தகைய பணி மறுக்கப்படின் அவர் அக்குறையைச் சரி செய்ய வேண்டுமெனக் கேட்டுக் பதிவாளருக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாமென்றும் வகை செய்யும் விதித்துறை ஒன்று (19-வது பிரிவு) புதிய சட்டத்தில் சேர்க்கப்பட்டது.

4.2.4. மேற்படி சட்டத்தின் 20-வது பிரிவில் மற்ருெரு விதித்துறை செய்யப்பட்டது. அதன்படி, ஒரு சங்கத்தின் உறுப்பினர் (அச்சங்கத்தின் நலனுக்கு விரோதமாகச் செயலாற்றினுர் என்று கருதப்பட்டால்), அதற்காகச் சிறப்பாகக் கூட்டப்பட்ட கூட்டமொன்றில், வந்திருந்து வாக்களிக்கிற உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பகுதிக்குக் குறையாத பெரும்பான்மை உறுப்பினர்கள் நிறைவேற்றும் தீர்மானத்தின் மூலம் அவர் விலக்கப்படலாமேயன்றி மற்றப்படி, பொதுக் குழுவின் தீர்மானம் ஒன்றின் மூலம் உறுப்பினர் எவரும் விலக்கப்படலாகாது. மேலும், அத்தீர்மானம் பதிவாளரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்னரே, செல்திறன் உடைய தாகும் என்ற மற்ருெரு பாதுகாப்புக்கும் வகை செய்யப்பட்டது.

4.2.5. மேற்படிச் சட்டத்தின் 21-வது பிரிவின் கீழ், சங்கத்தின் உறுப்பினர் எவருக்கும் சங்க விவகாரங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்கு கிடையாது (இது முன்னரே உள்ள விதித் துறையாகும். இதை அப்படியே புதிய சட்டத்தில் பின்பற்றப்பட்டது).

நிர்வாகக் குழுக்கள் பரந்த அடிப்படையில் அமைந்திருப்பதை உறுதி செய்ய நடவடிக்கை எடுத்தல்.

4.3.1. நிர்வாகக் குழுவின் உறுப்பினர்கள் பொதுக்குழு உறுப்பினர் களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்பது கூட்டுறவு இயக்கத்தின் முக்கியக் கோட்பாடுகளுள் ஒன்ருகும். நிர்வாகக் குழு அமைப்பு முறை பற்றி பழைய சட்டத்தில் (சட்டம் 6/1932) குறிப்பேதுமில்லை; ஆனுல், அச்சட்டத்தின் கீழ்ச் செய்யப்பட்ட விதிகளில் இதுபற்றிக் குறிப்பிடப் பட்டிருந்தது. அந்த விதிகளில்கூட, சங்கத்திஞல் வகுக்கப்பட்டு பதிவாளரால் ஏற்பளிக்கப்படும் துணை விதிகளில் வகை செய்யப்படுவதற் காக அப்பொருள் விடப்பட்டது. II (U) விதியின்கீழ் 'குழுவின் நியமன முறையும் குழுவைக் கலைக்கும் முறையும் என்ற பொருள் சங்கத்தின் துணை விதிகள் மூலம் கவனிக்கப்பட வேண்டிய பொருள்களில் ஒன்ருகும். பின்னர், 1957-ஆம் ஆண்டில், விதிகளில் (விதி 25-) விதித்துறை ஒன்று சேர்க்கப்பட்டது. அதன்படி, சங்கத்தின் பங்கு மூலதனத்தில் அரசு அல்லது நிதியுதவி செய்யும் வங்கி பங்கு மூதலீடு செய்திருக்கும் அல்லது சங்கத்திற்கு நிதியுதவி ஏதும் அளித்திருக்கும் நேர்வில், குழுவின்

உறுப்பினர் எண்ணிக்கையில் மூன்றிலொரு பங்குக்கு மேற்படாமல் குழுவின் உறுப்பினர்களை நியமனம் செய்ய மாநில அரசுக்கு அல்லது நிதியுதவி செய்யும் வங்கிக்கு மேற்கண்ட விதித்துறை அதிகாரம் அளிக்கிறது.

4.3.2. புதிய சட்டத்தில் 27-வது பிரிவின்கீழ், ஒரு சங்கத்தின் பொதுக் குழு, துணை விதிகளையொட்டி குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும், துணை விதிகளில் குறிப்பிடப்படக் கூடிய கால அளவுக்குக் குழுவின் உறுப்பினர்கள் அனைவரையும் அல்லது உறுப்பினர் எவரையும் அரசு அல்லது பதிவாளர் நியமனம் செய்யலாம் என்றும் அந்த துணை விதிகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. குழுவின் உறுப்பினர்களில் மூன்றிலொரு பங்கு உறுப்பினர்களை அரசு அல்லது நிதியுதவி செய்யும் வங்கி நியமனம் செய்ய வகை செய்யும் பழைய விதித்துறை அப்படியே வைத்துக் கொள்ளப்பட்டது. ஆனால், அவ்வாறு நியமனம் செய்யப்படும் உறுப்பினர்களின் உயரளவு எண்ணிக்கை 3 பேருக்கு மேற்படக் கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டே அந்த விதித்துறை வைத்துக் கொள்ளப்பட்டது.

4.3.3. ஒரே சமயத்தில் பல சங்கங்களின் குழுக்களில் ஒருவரே உறுப்பினராவதைத் தடுக்கும் பொருட்டும் கூட்டுறவு இயக்கத்தில் முனைப்பாகப் பங்கெடுத்துக் கொள்ள பிறருக்கும் வாய்ப்புக் கொடுக்கவும், புதிய சட்டத்தில் விதித்துறை ஒன்று (பிரிவு 28) செய்யப்பட்டது. இந்த விதித்துறையின்படி எவரும் ஐந்துக்கு மேற்பட்ட சங்கங்களின் குழுவில் ஒரு சமயத்தில் உறுப்பினராயிருத்தல் கூடாது; இந்த ஐந்து சங்கங்களில், இரண்டுக்கு மேற்படாத தலைமைச் சங்கங்களிலும் இரண்டுக்கு மேற்படாத மத்தியச் சங்கங்களிலும் அவர் உறுப்பினராயிருக்கலாம்.

4.3.4. சட்ட மன்றத்தின் முன் வைக்கப்பட்ட மூலச் சட்ட வரைவில் விதித்துறை ஒன்று செய்யப்பட்டதை இது தொடர்பாக ஈண்டுக் குறிப்பிடலாம். அதன்படி, ஒவ்வொரு முறையும் மூன்றாண்டுகள் என்ற அளவில் இரு முறைக்கு மேற்பட்டு நிர்வாகக் குழுவில் ஒருவர் தொடர்ந்து உறுப்பினராக இருக்க முடியாது; மேலும், ஆறு ஆண்டுகள் கழித்தே அவர் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகுதியுடையவராவார். ஆனால், இந்தக் கட்டுப்பாடு குறித்து எழுப்பப்பட்ட மறுப்புரைகள் சட்ட ஆய்வுக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு பின்னர் அந்த விதித்துறை விட்டுவிடப்பட்டது. இதற்குப் பதிலாக வேறு ஒரு விதித்துறை (பிரிவு 27) சேர்க்கப்பட்டது. அதன்படி குழுவின் உறுப்பினர்களில் மூன்றிலொரு பங்கு உறுப்பினர் ஒவ்வோர் ஆண்டும் உறுப்பினர் பதவியிலிருந்து விலக வேண்டும். கூட்டுறவு இயக்கத்தில் அவ்வப்போது புதியவர்களைச் சேர்த்துக் கொள்ள வாய்ப்பளிப்பதே மேற்படி விதித்துறையின் நோக்கமாகும். அதே சமயத்தில் நிர்வாகத்தில் ஓரளவு தொடர்ச்சி இருக்குமாறும் இதனால் பார்த்துக் கொள்ளப்படுகிறது. இந்த விதித்துறையில் உள்ள ஒரு குறை பாடு யாதெனில், உறுப்பினர் பதவியிலிருந்து விலகுபவர்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகுதியற்றவராகமாட்டார் என்பதேயாகும். இதனால் அநேகமாக எல்லா சங்கங்களிலிருந்தும் உறுப்பினர் பதவியிலிருந்து விலகுபவர்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டு முன்பிருந்தது போலவே தொடர்ந்து உறுப்பினராயிருக்க ஏதுவாயிற்று.

ஆண்டுதோறும் வெளியேறுகிற உறுப்பினர்களுக்குப் பதிலாக புதிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்ற நோக்கம் நிறைவேறவில்லை.

4.3.5. பிறர் கட்டுப்பாடற்ற தேர்தல்கள் நடைபெறுவதை உறுதிப் படுத்தும் பொருட்டு குழு உறுப்பினர்களை வாக்குப்பதிவு மூலம் தேர்ந் தெடுக்க வேண்டுமென்ற விதித்துறை பிரிவு [27-(4)], ஒன்று செய்யப் பட்டது. தேர்தல்கள் நடத்துவதில் பின்பற்றப்படும் நடைமுறைக்குப் பொருந்தும் விரிவான விதிகள் இப்பிரிவின்கீழ் செய்யப்பட்டன.

4.3.6. குழு உறுப்பினர் ஒருவர் தனது அதிகாரத்தைத் தவறுன முறையில் பயன்படுத்துவதைத் தவிர்க்கும் பொருட்டு, சங்கத்தின் சம்பளம் பெறும் பணியாளர் ஒருவர் அவருக்கு நெருங்கிய உறவினராக யிருப்பின் (விதிகளில் நெருங்கிய உறவினர் பற்றி வரையறுக்கப் பட்டுள்ளது) அவர் குழுவின் உறுப்பினராகத் தெரிந்தெடுக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்து உறுப்பினராக இருப்பதற்குத் தகுதியில்லை என்று 28-வது பிரிவில் விதிக்கப்பட்டது.

4.3.7. ஓர் உறுப்பினர் நம்பிக்கைத் துரோகம் செய்ததாக, கையாடல் செய்ததாக அல்லது பிற மோசடி ஏதும் செய்ததாக, ஒரேயடியாக அல்லது தொடர்ந்து கடமைகளைப் புறக்கணித்து வருவதாக இருந்தால் அவ்வுறுப் பினரைக் குழுவினின்று நீக்க அல்லது அவர் உறுப்பினராக இருப்பதற்குத் தகுதியில்லை என்று குறிப்பிட 28(A) பிரிவின் மூலம் பதிவாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

4.3.8. சட்டப் புத்தகத்தில் இவ்வளவு விதித் துறைகள் இருந்த போதிலும் கிட்டத்தட்ட அதே நபர்கள் தொடர்ந்து வர உறுப்பினர்களாக எப்படியாவது இருந்து வந்திருக்கின்றனர்.

சந்தானம் குழுவின் பரிவுரைகள்.

4.4.1. சந்தானம் குழுவின் ஆய்வு வரம்புகளில் ஒன்றில் பின்வருவன அடங்கும்:—

(i) கூட்டுறவு நிறுவனங்களின் அமைப்பு, (ii) குழுக்களின் அமைப்பு, உறுப்பினர்களின் பதவிக்காலம் குழுக்களுக்கு உறுப்பினர் களைத் தேர்ந்தெடுத்தல் ஆகியவை பற்றி தற்போதுள்ள விதித்துறைகளைப் பரிசீலனை செய்தல்; குறிப்பாக, கூட்டுறவு நிறுவனங்கள் செயல்படு திறனை உயர்த்துவதிலும், தனியார் அல்லது தொகுதி நபர்களிடம் அளவு மீறிய அதிகாரங்களும் செல்வாக்கும் குவியும் வாய்ப்பை அறவே நீக்க அவசிய மானவை என்றும் உகந்தவையென்றும் கருதுகிற வகையில் விதித்துறை களில் மாற்றங்களைப் பரிவுரை செய்தல் ஆகியவையாகும். கூட்டுறவு நிறுவனங்களில் உள்ள பதவிகளில் தனிப்பட்டவர்கள் அல்லது தொகுதி நபர்கள் தாமே முழுவதும் இடம் பெறுவதைத் தவிர்க்க இச்சட்டத்தில் செய்துள்ள விதித் துறைகள் அந்நோக்கத்தை எய்துவதில் எந்த அளவுக்குப் பயனளித்துள்ளன என்பது குறித்துப் பரிசீலனை செய்வது அவசியமாகும் என்று இக்குழுவை நியமித்துப் பிறப்பித்த ஆணையில் அரசு விளக்கியுள்ளது.

4.4.2. இக்குழு அமைக்கப்பட்ட இரண்டு திங்களுக்குள், மேற்கூறிய ஆய்வு வரம்புபற்றி அதாவது கூட்டுறவு நிறுவனங்களின் அமைப்பு, குழுக் களின் அமைப்பு, பதவிக்காலம், குழுக்களுக்கான தேர்தல் முதலியவை பற்றி இச்சட்டத்தின் விதித்துறைகளில் மாற்றம் ஏதேனும் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து இடைக்கால அறிக்கையைக் குழு பணிந் தனுப்ப வேண்டுமென்று அரசு குறிப்பாகக் கேட்டுள்ளது.

4.4.3. 20—6—1968 ஆம் நாளிட்ட தனது இடைக்கால அறிக்கையில் சந்தானம் குழு பல பரிவுரைகளைச் செய்தது. முக்கியமான பரிவுரைகள் கீழே சுருக்கிக் கொடுக்கப்பட்டுள்ளன :—

(i) நிர்வாகக் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை சட்டப்படிக்கு வரையறுக்கப்பட்டதாக இருக்க வேண்டும். உறுப்பினர்களின் எண்ணிக்கை என்னவாயிருக்க வேண்டும் என்று சங்கங்கள் தம் விருப்பப்படி துணை விதிகளில் முடிவு செய்யலாம். குறைந்த அளவு உறுப்பினர்களின் எண்ணிக்கை, எடுத்துச் சொல்வதற்கான பலதரப்பட்ட கருத்துக்களுக்கும் அனுபவத்திற்கும் வாய்ப்பளிப்பதாக இருக்க வேண்டும். விரைவாக முடிவுகள் எடுப்பதையும் அலுவலை உரிய காலத்தில் செய்து முடிப்பதையும் தடைசெய்யாத வகையில் உறுப்பினரின் உயர்ந்த அளவு எண்ணிக்கை

அமைந்திருக்க வேண்டும். தொடக்கச் சங்கங்களைப் பொறுத்தமட்டில் ஒரு குழுவில் உள்ள உறுப்பினர்களின் குறைந்த அளவு உயரளவு எண்ணிக்கை முறையே) 7, 15 ஆகவும் மத்திய, தலைமைச் சங்கங்களைப் பொறுத்தமட்டில் முறையே 9, 21 ஆகவும் இருக்கலாம்.

(ii) மத்திய, தலைமைச் சங்கங்களின் சிறந்த நிர்வாக நலனை முன்னிட்டு, அத்தகைய சங்கங்களின் இயக்குநராக தேர்ந்தெடுப்பதற்கு அல்லது நியமனம் செய்யப்படுவதற்கு முன் அனுபவம் ஒரு தகுதியாக விதிக்கப்பட வேண்டும். கூட்டுறவுச் சங்கம் ஒன்றில் மூன்று ஆண்டு களுக்குக் குறையாமல் உறுப்பினராக இருந்தாலன்றி மற்றப்படி எவரும் மத்தியச் சங்கத்தின் இயக்குநராக இருக்க தகுதியுடையவராகமாட்டார்; மத்தியச் சங்கம் ஒன்றில் மூன்று ஆண்டுகளுக்குக் குறையாமல் இயக்குநராக இருந்தாலன்றி மற்றப்படி எவரும் தலைமைச் சங்கத்தின் இயக்குநராக இருப்பதற்குத் தகுதியுடையவராகமாட்டார்.

(iii) இயக்குநர்களை நியமனம் செய்யும் முறை, கூட்டுறவு இயக்கத் தின் உண்மையான நோக்கத்திற்கு முரணாக இருந்தாலும், அரசு, தனது நலனைப் பாதுகாப்பதற்காக அவர்களை நியமனம் செய்ய வேண்டும் என்ற அவசியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. எனினும், நியமனம் செய்யப்படுபவர்களின் எண்ணிக்கையைக் குறைத்து, தேர்ந்தெடுக்கப்படும் இயக்குநர்களுக்கு அதிகமான வாய்ப்புகளை அளிப்பது உகந்ததாகும். நியமனம் செய்யப்படும் இயக்குநர்களின் எண்ணிக்கை, தொடக்க அல்லது மத்தியச் சங்கத்தின் நேர்வில் ஒன்றாகவும், தலைமைச் சங்கத்தின் நேர்வில் இரண்டாகவும் வரையறுக்கப்படலாம். அவ்வாறு நியமனம் செய்யப்படும் இயக்குநர்கள் அரசு அலுவலர்களாயிருக்க வேண்டும். அரசு சார்பற்ற வர்கள் தேர்தல் மூலம் மட்டுமே குழுவின் உறுப்பினராக ஆக வேண்டும். கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், நூற்பாலைகளின் நேர்வில் உள்ளதுபோல் குழு உறுப்பினர்கள் அனைவரும் காலவரையறையின்றி நியமனம் செய்யப் படின், அச்சங்கம் கூட்டுறவுத் தன்மையை இழக்கிறது. மேலும், அதன் உறுப்பினர்கள் கணிசமான அளவுக்குப் பங்கு மூலதனம் செலுத்தி அதன் அலுவலில் பங்கெடுத்துக் கொண்டபோதிலும், அது ஒரு பொதுத் துறை நிறுவனமாக ஆகிவிடுகிறது. ஆயினும், தொடக்க ஆண்டுகளில் அத்தகைய சங்கங்களின் நிர்வாகத்தில் அரசு பெரும்பங்கு ஏற்க வேண்டிய அவசியத்தை முன்னிட்டு, முதல் மூன்றாண்டுகளுக்கு மட்டுமே குழு உறுப்பினர்கள் நியமனம் செய்யப்படலாம். இக்கால அளவுக்குப் பின்னர் 2/3 பங்குக்குக் குறையாத எண்ணிக்கையுடைய இயக்குநர்கள் தேர்ந் தெடுக்கப்பட வேண்டும்.

(iv) சங்கங்களின் நிர்வாகத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கு கொள்வது விரும்பத்தக்கதல்ல. அவர்கள் தங்களது பதவிக்குரிய பணிக்கு நேரத்தை ஒதுக்குவது அரிதாயிருக்கும் என்பது தவிர, கூட்டுறவு இயக்கத்தின் முடிவான நடுவராக அவர்கள் செயல்படுவது, குறிப்பிட்ட சங்கம் ஒன்றிற்கான நேரடிப் பொறுப்பிற்கு முரணாக இருக்கும். எந்தச் சங்கத்தின் தலைவராக அல்லது நிர்வாகியாகச் சட்ட மன்ற உறுப்பினர் உள்ளாரோ அச் சங்கத்தின் நடவடிக்கைகள், அரசியல் துறையில் அவருக்கெதிராக உள்ள உறுப்பினர்களது சிறப்பு நாட்டத்தை ஈர்க்கக்கூடும். எந்த ஒரு சங்கத்திலும் நிர்வாகியாகப் பதவி எதையும் அவர் வகிப்பது தடுக்கப்படலாம். எனினும், அவர்கள் நிர்வாகக் குழுவில் உறுப்பினர்களாய் இருக்கலாம்.

(v) புதிய சட்டத்தில் ஆண்டுதோறும் விலகுவதற்கு வகை செய்யப் பட்டிருப்பது நடைமுறையில் மிகவும் தொல்லையாக உள்ளதுடன், வீணான செலவும் ஏற்படுகிறது; அத்துடன், பணி நிலைகுலைந்துவிடுகிறது. தேர்தல் நடப்பது போன்ற சூழ்நிலை ஒவ்வோராண்டும் ஏற்படுகிறது. இதனால் சங்கம் செவ்வனே செயல்படுவது பாதிக்கப்படுகிறது. எனவே, இந்த நடைமுறை நீக்கப்பட்டு, முழுக்குழுவும் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படலாம்.

(vi) ஒருவர் குழு ஒன்றில் உறுப்பினராக இருக்கக்கூடிய கால அளவுக்கு வரையறை இருக்க வேண்டும். சங்கம் ஒன்றில் ஒருவருக்கு அபரிமிதமான செல்வாக்கு வளர அனுமதிக்கப்பட்டால், மறு தேர்தல் நடத்தும் நடைமுறை சாரமற்ற சடங்காகிவிடுகிறது. ஒருவர் தொடர்ந்து பதவியில் இருப்பதற்கு வரையறையும் கால இடைவெளிக்கான விதித் துறையும் செய்யப்பட்டால், சங்க நிர்வாகத்தில் புதிய உறுப்பினர்கள் சேருவதற்கும் புதுக் கருத்துக்கள் உருவாவதற்கும் வாய்ப்பு இருக்கும். குழு ஒன்றிற்கு ஒவ்வொன்றும் மூன்றுண்டுகள் கொண்ட இரண்டு பதவிக் காலத்திற்கு ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால், அடுத்த மூன்றுண்டுகள் முடிவடையுமுன்னர் அவர் அதே சங்கத்திற்கு மீண்டும் தேர்ந்தெடுப் பதினின்றும் தடை விதிக்க வேண்டும்.

(vii) ஒருவர் 5 சங்கங்களில் உறுப்பினராக இருக்கலாம் என்ற வரையறை உள்ளது. இதில், சங்கம் ஒன்றின் குழுவில் அரசு அல்லது பதிவாளர் அவரை உறுப்பினராக நியமிப்பது அடங்கவில்லை. (உண்மையில் அலுவல் ஆற்றுமல், ஆனுல் கூட்டுறவு இயக்கத்தை வளர்க்கும் நிலையங் களாக மட்டுமே செயல்படுகின்ற, கூட்டுறவு யூனியன்கள், கூட்டுறவுப் பயிற்சி நிலையங்கள், சர்க்கரை ஆலைகள் கூட்டமைப்பு போன்ற சில வகைச் சங்கங்களுக்கும் இந்த வரையறையிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. ஒருவர் மற்றவர்களுக்கு வாய்ப்பளிக்காமலேயே 10 சங்கங்களின் குழுக் களில் கூட உறுப்பினராக இருப்பதற்கு இது உதவுகிறது. பல சங்கங்களின் இயக்குநராகப் பணியாற்ற ஒருவருக்குப் போதிய நேரம் இருக்காது. ஒரு நபர் கௌரவப் பணியாற்ற சாதாரணமாக ஒதுக்கக் கூடிய நேரத்தையும் நிர்வாகத்தில் அவர் செவ்விய முறையில் பங்கு கொள்ள வேண்டிய அவசியத்தையும் கருத்தில் கொண்டு பார்த்தால், ஐந்து சங்கங்கள் என்ற வரையறை மூன்றுகக் குறைக்கப்படலாம். மூன்று சங்கங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட சங்கம் மத்தியச் சங்கமாக இருக்கக்கூடாது. ஒன்றுக்கு மேற்பட்ட சங்கம் தலைமைச் சங்கமாக இருக்கக் கூடாது. நியமனம் மூலம் நிரப்பப்பட வேண்டிய இயக்குநர் பதவி தொடர்பாகவும், மூன்று சங்கங்கள் என்ற வரையறை கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

(Viii) சங்க நிர்வாகிகள் (தலைவர், உதவித் தலைவர், கௌரவ செயலாளர் முதலியோர்) தங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட சில கடமைகளை ஆற்ற வேண்டும். அப் பணிகளை ஆற்ற இயக்குநர்களைக் காட்டிலும் அதிக காலமும் நாட்டமும் அவர்களுக்குத் தேவைப்படுகிறது. ஒரு சங்கத்திற்குமேல் பல சங்கங்களில் அவர்கள் நிர்வாகிகளாக இருந்தால் தங்கள் கடமைகளில் போதிய நாட்டம் செலுத்த முடியாது. எனவே, ஒருவர் நிர்வாகியாக இருக்கப்போகும் சங்கங்களின் எண்ணிக்கை ஒன்றிற்கு மேற்படக் கூடாது.

(ix) விதிகளில் வரையறுக்கப்பட்ட நடைமுறைப்படி, தலைமைச் சங்கங்கள், மத்திய சங்கங்கள் முதலியவற்றிற்கான தேர்தல்கள் சங்கங் களால் தொடர்ந்து நடத்தப்படலாம். எனினும், தேர்தல்கள் நடத்தியது பற்றி தெரிவிக்க பதிவாளர் பார்வையாளர் ஒருவரை அச்சங்கங்களுக்கு அனுப்பலாம். ஆயினும், பதிவாளரால் நியமிக்கப்படும் தேர்தல் அதிகாரி ஒருவரால் தொடக்கச் சங்கத்தில் தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஏராளமான சங்கங்களில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டியதைக் கருத்தில் கொண்டு, பதிவாளர், தம்மிடம் உள்ள பணியாளர்கள் தவிர, ஊராட்சி ஒன்றியங்கள், ஏனைய துறைகள், கல்வி நிறுவனங்கள் போன்ற பொது நிறுவனங்கள் ஆகியவற்றின் பணியாளர்களையும் நியமிக்கலாம். தேர்தல் அதிகாரிகள் நடத்தவேண்டிய தேர்தல் நாட்களை தக்கவாறு சங்கத்துக்குச் சங்கம் மாற்றியமைத்துக் கொள்வதன் மூலம் தொடக்கச் சங்கங்களின் தேர்தல்கள் மூன்று மாதங்களில் நடத்தப்படலாம்.

(x) இம் மாநிலத்தில் உள்ள உழவர் பெருமக்கள் பெரும்பாலும் சிறிய உழவர்களாகவும், குத்தகைக்காரர்களாகவும் உள்ளனர். இந்த வகை உழவர்களுக்குப் போதிய உதவி அளிப்பது வலியுறுத்தப்பட்டு

வருகிறது. அவர்களுடைய தேவைகளுக்கும் பிரச்சினைகளுக்கும் சங்கங்கள் உரியவாறு மதிப்பளிப்பது அவசியமாகிறது. அவர்களுடைய பிரதிநிதிகள் குழுவில் இருந்தால்தான் இது முடியும். இரண்டு ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலத்திற்குக் குறையாமல் உள்ளவர்கள், குத்தகை உழவர்கள், நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள் நலிந்த பிரிவினர் என்றழைக்கப்படலாம். வேளாண்மைக் கடன் வழங்கு சங்கத்தின் குழுவிற்கு அவர்களிடையே இருந்து இருவருக்குக் குறையாமல் தேர்ந் தெடுக்கப்பட வேண்டும்.

(xi) கூட்டுறவு மத்திய வங்கிக் குழுவில் நான்கில் மூன்று பங்கு உறுப்பினர்கள் அக்குழு உறுப்பினர்களாக உள்ள வேளாண்மைக் கடன் வழங்கு சங்கங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். எஞ்சிய நான்கில் ஒரு பகுதியினர் (நியமனம் செய்யப்படும் உறுப்பினர்கள் நீங்கலாக), இணைக்கப்பட்ட ஏனைய சங்கங்களிடையே நியாமான அளவில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். தனிப்பட்டவர்களுக்கு அல்லது (தொகை) வைப்பீடு செய்தவர்களுக்கு பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டிய அவசியம் இல்லை.

பரிவுரைகளிலிருந்து வேறுபடும் வகையில் பின்னர் ஏற்பட்ட நிகழ்வுகள்.

4.5.1. சந்தானம் குழு தெரிவித்த பரிவுரைகள் (மேலே சுருக்கிக் கூறப் பட்டவை) பரிசீலிக்கப்படவில்லை எனத் தெரிகிறது. எனினும், மத்திய தலைமைச் சங்கங்களின் குழுக்களை அமைப்பது குறித்து முழுவதும் வேறான முறைகளில் 1970-லிருந்து சில நிகழ்வுகள் ஏற்பட்டுள்ளன. இந்த நிகழ்வுகளால் பெரும்பாலும் இந்த நிலையங்கள் அனைத்திலும் உள்ள குழுக்களில் உள்ளவர்கள் தொடர்பாக முழுமாறுதல் ஏற்பட்டுள்ளது. எம்முறையில் இம்மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன என்பது கீழே குறிப்பிடப் பட்டுள்ளது :—

மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கி.

4.5.2. முன்னர், மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியின் குழு உறுப் பினர்கள், அதனுடன் இணைந்த சங்கங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். உறுப்பினர்களில் பெரும்பான்மையானோர் வேளாண்மைக் கடன் வழங்கு சங்கங்களின் பிரதிநிதிகள் ; ஏனையோர் பிறவகை சங்கங்களைச் சேர்ந்த வர்கள். குழுவிற்கு நியமனம் செய்யப்படும் உறுப்பினரான துணைப் பதிவாளர் தவிர, தனிப்பட்டவர்களின் பிரதிநிதி ஓரிருவர் இருந்தனர். இந்தப் பிரதிநிதித்துவம் முறை கீழே விவரிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மூலம் மாற்றப்பட்டுள்ளது :—

) சுமார் ஓராண்டில் இம் மாநிலத்தில் ஏராளமான இறைவைப் பாசனச் சங்கங்கள் (2,000-க்கும் மேற்பட்டவை) அமைக்கப்பட்டன. முதல் மூன்றாண்டுகளில் குழுவின் உறுப்பினர்கள் அனைவரையும் நியமனம் செய்வதற்காகவும், நியமிக்கப்பட்ட குழுவின் கால அளவை மேற்கொண்டும் ஒரு முறை நீட்டிக்கவும் இச்சங்கங்களின் துணைவிதிகளில் விதித் துறை செய்யப்பட்டது.

(ii) குழுவின் உறுப்பினர்கள் அனைவரையும் நியமனம் செய்வதற்கு இதேபோன்ற ஏற்பாட்டுடன், கூட்டுறவுப் பண்ணைப் பணிச் சங்கங்கள் என்றழைக்கப்படும் பல சங்கங்கள் (சுமார் 500) அமைக்கப்பட்டன.

(iii) 1970 ஆம் ஆண்டில் ஓர் அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அதே ஆண்டில் இந்த அவசரச் சட்டத்திற்குப் பதிலாகத் தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தினைத் திருத்தும் வகையில்

திருத்தச் சட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டது. இச் சட்டம் (அத்தியாயம் (IX-A) ஒரு மத்திய வங்கிக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை, ஒவ்வொரு சங்கத்திலிருந்தும் அல்லது ஒருவகைச் சங்கங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை, நியமனம் செய்யப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை, தேர்தல் அல்லது நியமன முறை ஆகியவை குறித்து விதிகள் இயற்றவும் மாநில அரசுக்கு அதிகாரம் அளித்தது.

(iv) சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டதையொட்டி அரசு இயற்றிய விதிகள், மத்திய வங்கிக் குழுவின் உறுப்பினர்களை எவ்வகைச் சங்கங்கள் தேர்ந்தெடுக்கும் என்பதையும் ஒவ்வொரு சங்கமும் எத்தனை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் என்பதையும் குறிப்பிட்டன.

(i) (ii) துணைப் பத்திகளில் குறிப்பிடப்பட்ட இறைவைப் பாசனச் சங்கங்களுக்கும் பண்ணைப் பணிச் சங்கங்களுக்கும் மத்திய வங்கிக் குழுவில் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டது. ஒவ்வொரு மத்திய வங்கிக் குழுவிலும் அத்தகைய பிரதிநிதிகள் இருவரிலிருந்து ஏழுபேர் வரை இருந்தனர். பெரும்பாலான மத்திய வங்கிகளைப் பொறுத்தமட்டில் பண்ணைப் பணிச் சங்கங்களுக்கான பிரதிநிதி ஒருவர் என்றும் ஒரு வங்கியைப் பொறுத்த மட்டில் இருவர் என்றும் முடிவு செய்யப்பட்டது. இவ்விருவகைச் சங்கங்களின் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட போதிலும், இச் சங்கங்களின் குழுக்களில் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்கள் மட்டுமே இருப்பதால், அது மத்திய வங்கியின் குழுவிற்கு மறைமுகமாக நியமனம் செய்யப்படுவதற்கு ஒப்பாகும்.

(v) தொடக்க நிலவள வங்கிகளும் மத்திய வங்கிகளின் குழுவிற்குப் பிரதிநிதிகள் அனுப்பத்தகுதியுடைய வகையைச் சேர்ந்த சங்கங்களாகக் குறிப்பிடப்பட்டன. இவற்றிற்கான பிரதிநிதிகளின் எண்ணிக்கை பெரும்பாலான மத்திய வங்கிகளைப் பொறுத்தமட்டில் இருவர் என்றும் சில மத்திய வங்கிகளைப் பொறுத்தமட்டில் ஒருவர் முதல் மூவர் என்றும் முடிவு செய்யப்பட்டது. நீண்டகாலக் கடன் துறையில், சுமார் 117 நிலவள வங்கிகள் புதிதாக அமைக்கப்பட்டன. இந்த வங்கிகளின் குழுக்களில் உறுப்பினர்கள் அனைவரையும் தொடக்க ஆண்டுகளில் நியமனம் செய்ய மேற்படி வங்கிகளின் துணை விதிகளில் வகை செய்யப்பட்டிருந்தது. முன்னர் இருந்த தொடக்க நிலவள வங்கிகளிலும், நிர்வாகிகள், அமைப்பு முறை மாற்றியமைக்கப்பட்டது. அதுபற்றி பின்னர் இந்த அத்தியாயத்தில் கூறப்படுகிறது. மத்திய வங்கிக் குழுவிற்கு தொடக்க நிலவள வங்கிகளின் பிரதிநிதி தேர்ந்தெடுக்கப்பட்டாலும், அவர், இறைவைப் பாசனச் சங்கங்கள், பண்ணைப் பணிச் சங்கங்கள் ஆகியவற்றைப் போலவே, மறைமுகமாக நியமனம் செய்யப்பட்டு வந்துள்ளதாக கருதப்பட வேண்டும்.

(vi) விதிகளின்கீழ், நூற்பு ஆலைகளுக்கும் சர்க்கரை ஆலைகளுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டது. இவற்றிற்கான பிரதிநிதிகளின் எண்ணிக்கை 1 முதல் 3 ஆக நிர்ணயிக்கப்பட்டது. இந்த நிறுவனங்களின் குழுக்களில் நியமனம் செய்யப்பட்ட இயக்குநர்களே இருந்து வந்ததால், இங்கும் கூட, மத்திய வங்கிக் குழுவிற்கு இந்த நிறுவனங்களிலிருந்து வரும் பிரதிநிதிகள் மறைமுகமாக நியமனம் செய்யப்பட்டவர்களாகக் கருதப்படுவர்.

(vii) கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள எண்ணெய்ப் பொருட்கள் கூட்டுறவுச் சங்கங்கள் எனப்படும் ஒரு வகைச் சங்கங்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டது. இச் சங்கங்கள் தொடக்கத்தில், நியமனம் செய்யப்பட்ட நிர்வாகக் குழுக்களுடன் அமைக்கப்பட்டதால், இங்கும் கூட, மத்திய வங்கிக் குழுவிற்கு இச் சங்கங்களிலிருந்து வருகிற பிரதிநிதிகள் மறைமுக நியமனம் மூலம் வந்துள்ளதாகவே கருதப்பட வேண்டும். இச் சங்கங்களுக்கான பிரதிநிதிகளின் எண்ணிக்கை பெரும்பாலான மத்திய வங்கிகளைப் பொறுத்த வரையில் ஒன்று என்றும், ஒரு வங்கியைப் பொறுத்த வரையில் இரண்டு என்றும், மற்றொரு வங்கியைப் பொறுத்தவரையில் மூன்று என்றும் நிர்ணயிக்கப்பட்டது.

(viii) மேற்படிச் சட்டத்தில் விதித்துறை ஒன்று (அத்தியாயம் XI-A) செய்யப்பட்டது. அதன்படி, வரையறுக்கப்படக் கூடிய வகையைச் சேர்ந்த பதிவான ஒவ்வொரு சங்கமும், விண்ணப்பம் செய்துகொள்வதன் மேல், அந்த விண்ணப்பம் மத்திய வங்கியில் பெற்றுக்கொள்ளப்படும் நாள் முதற் கொண்டு அந்த வங்கியில் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்படுவதாகக் கருதப்பட வேண்டும் [பிரிவு 73-B (5)]. இப்பிரிவின் செயல் நோக்கத்திற்காக, இறைவைப் பாசனச் சங்கங்கள், பண்ணைப் பணிச் சங்கங்கள், தொடக்க நிலவள வங்கிகள், நூற்பு ஆலைகள், சர்க்கரை ஆலைகள், எண்ணெய்ப் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவை, விதிகளில் வரையறுக்கப்பட்ட வகையைச் சேர்ந்த சங்கங்களில் சேர்க்கப்பட்டன; அதாவது அவை, விண்ணப்பம் செய்துகொள்வதன் மேல், மத்திய வங்கியில் உறுப்பினராகிவிடுகின்றன.

(ix) சிறு உழவர்கள், அரிசனங்கள், பழங்குடி மக்கள், மகளிர் போன்ற மக்களில் எளிய பிரிவினர், தேர்தல் மூலம் பிரதிநிதித்துவம் பெற்றிராத ஏனைய பிரிவினர் ஆகியோரின் பிரதிநிதிகளை மத்திய வங்கியின் குழுவிற்கு நியமனம் செய்ய மேற்படி விதிகளின்கீழ் அதிகாரம் பெறப்பட்டது. அவ்வாறு நியமனம் செய்யப்படும் பிரதிநிதிகளின் மொத்த எண்ணிக்கை 3 முதல் 7 ஆக முடிவு செய்யப்பட்டது. முந்திய சட்டத்தில் குழுவிலுள்ள உறுப்பினர்கள் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கினர், 3 பேர் இவற்றில் எது குறைவாக உள்ளதோ அந்த அளவுக்கு அத்தகைய பிரதிநிதிகளின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டது. புதிய சட்டத்தில், நியமனம் செய்யப்படுவதற்கான உறுப்பினர்களின் உயர்ந்த அளவு எண்ணிக்கை 5-ல் 1 பங்காக முடிவு செய்யப்பட்டது. நியமனம் செய்வதற்கான உறுப்பினர் எண்ணிக்கை குறைந்த விகிதாசாரத்தில் முடிவு செய்யப்பட்டிருப்பதாகத் தோன்றியபோதிலும், மூன்று என்ற உயர் வரம்பு நீக்கப்பட்டிருப்பதால், புதிய அமைப்பில் குழுவிற்கு அதிக எண்ணிக்கையில் அத்தகைய உறுப்பினர்களை நியமனம் செய்ய ஏதுவாயிற்று.

(x) வட்டார இணைப் பதிவாளர் மத்திய வங்கியின் குழுவிற்கு அலுவல் முறையில் உறுப்பினராக்கப்பட்டுள்ளார்.

(xi) வேளாண்மைக் கடன் வழங்கு சங்கங்களின் எண்ணிக்கை, அலுவல் ஆகியவற்றின் காரணமாக இச் சங்கங்களுக்குத் தொடக்கத்திலிருந்தே அதிகப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டது. இச் சங்கங்கள் தேர்ந்தெடுக்க வேண்டிய பிரதிநிதிகளின் எண்ணிக்கை விரிவுபடுத்தப்பட்ட குழுவில் சிறுபான்மையாகக் குறைக்கப்படுவதற்கேற்ற முறையில் வரையறுக்கப்பட்டுள்ளது.

4.5.3. (a) நியமனம் செய்யப்பட்ட இயக்குநர்கள், (b) நியமனம் செய்யப்பட்ட நிர்வாகிகளுள்ள சங்கங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர்கள், (c) தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளுள்ள சங்கங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர்கள் ஆகியோரின் எண்ணிக்கையை ஒப்பிட்டுப் பார்க்கும் விவர அறிக்கை 10 ஆம் எண் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி சட்டத்திலும் மேலே குறிப்பிட்ட விதிகளிலும் செய்யப்பட்ட பல்வேறு திருத்தங்களின் ஒட்டுமொத்த விளைவாக மத்திய வங்கிகள் குழுவின் அமைப்பு எவ்வாறு உள்ளது என்பதை இது காட்டும். (சென்னை மாநகர் நீங்கலாக) ஏனைய இடங்களிலுள்ள மத்திய வங்கிகள் அனைத்தும், முக்கியமாக அல்லது அதிக அளவில் நியமனம் செய்யப்பட்ட குழுக்களுடன் செயல்படுகின்றன என்பதை அதிலிருந்து நன்கு தெரிந்து கொள்ளலாம்.

தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி.

4.5.4. திருத்தப்பட்ட சட்டத்தின் [பிரிவு 73-B (3) (a)] கீழ், மாநிலக் கூட்டுறவு வங்கியின் குழுவில் பின்வருவோர் உறுப்பினர்களாக இருப்பர்:—

(a) கூட்டுறவு மத்திய வங்கிகள் அனைத்தின் தலைவர்கள், மாநில நிலவள வங்கியின் தலைவர்,

(b) வரையறுக்கப்படக் கூடியவாறு தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய நியமனம் செய்யப்பட வேண்டிய உறுப்பினர்கள்,

(c) விதிகளில் குறிப்பிடப்படும் அலுவல் முறையிலான உறுப்பினர். மக்களில் எளிய வகுப்பினருக்குப் பிரதிநிதித்துவம் அளிப்பதற்கும் (இந்த நியமனம் குழுவின் மொத்த உறுப்பினர்களில் 1/5 பாகத்திற்கு மேற்படக்கூடாது) இப்பிரிவு வகை செய்கிறது.

4.5.5. எல்லா மத்திய வங்கிகளின் தலைவர்களுக்குக் கூடுதலாக, தமிழ்நாடு நிலவள வங்கி, தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், தமிழ்நாடு மாநில நுகர்வோர் கூட்டுறவுக் கூட்டமைப்பு, தமிழ்நாடு கூட்டுறவுச் சர்க்கரை கூட்டமைப்பு, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு, தமிழ்நாடு மாநில எண்ணெய் துணைப் பொருட்கள் கூட்டுறவு சம்மேளனம், சென்னை வீட்டு அடைமானக் கூட்டுறவுச் சங்கம் போன்ற தலைமைச் சங்கங்களின் மூன்று பிரதிநிதிகளை நியமிப்பதற்கும் இந்த விதிகள் வகை செய்கின்றன. அவற்றின் தலைவர்களால் அவர்களிடையேயிருந்து இவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். மேற்குறிப்பிட்ட தலைமைச் சங்கங்கள் எதனுடனும் இணைக்கப்படாத பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் உறுப்பினர்களிலிருந்து பதிவாளர் மூன்று உறுப்பினர்களை நியமனம் செய்யவும் இவ்விதிகள் வகை செய்கின்றன. கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டுப் பதிவாளர் அலுவல் முறையிலான இயக்குநர் ஆவார்.

4.5.6. தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியின் குழுவும் பெரும்பாலும் நியமன உறுப்பினர்களைக் கொண்டுள்ளது என்பதே பல்வேறு மாற்றங்களின் விளைவாகும். எல்லா மத்திய வங்கிகளின் தலைவர்களும், அவர்கள் தலைவர்களாக உள்ளதன் காரணமாக தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியின் இயக்குநர்களாயுள்ளனர். முன்னரே குறிப்பிட்டுள்ளவாறு, பெரும்பாலும் நியமனம் செய்யப்பட்ட மத்திய வங்கிகளின் குழுக்களிலிருந்து அவர்கள் வந்துள்ளமையால் அவர்கள் மாநிலக் கூட்டுறவு வங்கிக்கு மறைமுகமாக நியமனம் செய்யப்பட்டுள்ளதாகக் கருதப்பட வேண்டும். தமிழ்நாடு மத்திய வீட்டு அடைமான சங்கம், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றைத் தவிர பிற தலைமைச் சங்கங்கள் அனைத்தின் குழுக்களில் நேரடியாகவோ மறைமுகமாகவோ நியமனம் செய்யப்பட்ட இயக்குநர்கள் உள்ளனர். தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் ஒரு சிறப்பு அதிகாரியின்கீழ் செயல்படுகிறது. எனவே, அவற்றின் பிரதிநிதிகள் மாநிலக் கூட்டுறவு வங்கிக்கு மறைமுக நியமனம் மூலம் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளதாகக் கருதப்பட வேண்டும். மொத்தமுள்ள 23 இயக்குநர்களில் 22 இயக்குநர்கள் நேர்முகமாக அல்லது மறைமுகமாக நியமனம் செய்யப்பட்டுள்ளதாகக் கருதப்பட வேண்டும்.

தொடக்க நிலவள வங்கிகள்.

4.5.7. தொடக்க நிலவள வங்கிக் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் முன்னர் அதன் உறுப்பினர்களால் தெரிந்வெடுக்கக்கப்பட்டவர். இச்சட்டத்திற்கும், விதிகளுக்கும் (85 cc விதிகள்) செய்யப்பட்ட திருத்தத்தின்கீழ் பின்வரும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது :

ஏழு உறுப்பினர்கள் தொடக்க நிலவள வங்கி உறுப்பினர்கள் அனைவரும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்;

வங்கி செயல்படும் பகுதியில் இறைவைப் பாசனச் சங்கங்களின் தலைவர்கள் மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்;

வங்கி செயல்படும் பகுதியில் வேளாண்-பொறியியல்-பழுதுபார்க்கும் கூட்டுறவு நிலையங்களின் குழு உறுப்பினர்கள் ஒரு உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்;

சம்பந்தப்பட்ட பகுதியின் மீது அதிகார வரம்புள்ள மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஒரு உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்;

தமிழ்நாடு மாநில நிலவள வங்கியின் நிர்வாகக் குழு ஒரு உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் (மொத்தம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர் 13 பேர்).

அரிசனங்கள், பழங்குடியினர் தேர்தல் மூலம் பிரதிநிதித்துவம் இல்லாத பிற பிரிவினர் ஆகியோருக்காக பதிவாளர் மூன்று நபர்களை நியமனம் செய்யவேண்டும். அரசால் அலுவல் முறையில் வங்கி மேலாளர் எவரேனும் நியமிக்கப்பட்டிருப்பின், அவர் (நியமனம் செய்யப்பட்டவர் அலுவல் முறையில் நியமிக்கப்பட்டவர் ஆகியோர் மொத்தம் 4 பேர்).

4.5.8. பதினேழு இயக்குநர்களில் 13 பேர் தேர்ந்தெடுக்கப்படுவதாக மேலெழுந்த வாரியாகத் தோன்றினும், அவர்களில் நால்வர் இறைவைப் பாசனச் சங்கங்களாலும், வேளாண்மை-பொறியியல்-பழுபார்க்கும் பணிக் கூட்டுறவு நிலையங்களாலும் (அவற்றின் இயக்குநர்கள் அனைவரும் நியமனம் செய்யப்பட்டவர்களாவர்) தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஒருவர் மத்திய வங்கியால் (அதன் பெரும்பாலான இயக்குநர்கள் அல்லது அவர்களில் அதிகமான பேர் நேரடி அல்லது மறைமுக நியமனம் மூலம் பதவிக்கு வந்தவர்களாவர்) தேர்ந்தெடுக்கப்படுகிறார். எஞ்சிய ஒருவர் மாநில நிலவள வங்கியால் (அதன் பெரும்பாலான இயக்குநர்கள் நேரடி அல்லது மறைமுக நியமனம் மூலமாகப் பதவிக்கு வந்தவர்களாவர்) தேர்ந்தெடுக்கப்படுகிறார். இந்த அத்தியாயத்தின் பிற்பகுதியில் இதுபற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறாக தொடக்க நிலவள வங்கியின் 17 இயக்குநர்களில், 10 இயக்குநர்கள் நேரடி அல்லது மறைமுக நியமனம் மூலம் பதவிக்கு வந்துள்ளவர்களாகக் கருதப்பட வேண்டும்.

4.5.9. வட்டார அளவிலான புதிய தொடக்க நிலவள வங்கியைப் பொறுத்தமட்டில், தேர்ந்தெடுக்கப்படும் முறை அறவே பின்பற்றப்படவில்லை. அவற்றின் நேர்வில் இயக்குநர்கள் அனைவரும் 3 ஆண்டுக் காலத்திற்குப் பதிவாளரால் நியமனம் செய்யப்படுகின்றனர். விரும்பினால் மேற்கொண்டும் 3 ஆண்டுக் காலத்திற்கு இந்த நியமனத்தைத் தொடர்ந்து வைத்துக் கொள்வதற்கும் ஏற்பாடு உள்ளது.

மாநில நிலவள வங்கி.

4.5.10. மாநில நிலவள வங்கியின் 3 இயக்குநர்களைத் தவிர மற்ற இயக்குநர்கள் அனைவரும் முன்னர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இம்மூவருள் இருவர் கடனீட்டுப் பத்திரங்களை வைத்திருப்பவர்களின் பிரதிநிதியாக இருப்பதற்குப் பதிவாளரால் நியமனம் செய்யப்பட்டனர். மூன்றாமவர் பதிவாளரேயாவார். அவர் அலுவல் முறையில் இயக்குநராய் இருந்தார்.

4.5.11. தமிழ்நாடு மாநில நிலவள வங்கிகள் சட்டம், விதிகள் (அத்தியாயம் (I-A) ஆகியவற்றிற்குத் திருத்தம் கொண்டு வந்ததன் மூலம், குழுவின் அமைப்பு மாற்றியமைக்கப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட, நியமனம் செய்யப்பட்ட, அலுவல் முறையிலுள்ள இயக்குநர்களின் மொத்த எண்ணிக்கை 56 ஆகும். இவர்களுள் 45 பேர் ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள தொடக்க நிலவள வங்கிகளின் தலைவர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வரையறுக்கப்பட்டுள்ள எண்ணிக்கைக்கிணங்க அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். (ஒரு மாவட்டத்திலுள்ள தொடக்க நிலவள வங்கிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் 1 முதல் 4 பேர் வரை தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.) எஞ்சிய 11 இயக்குநர்களுள், கடனீட்டுப் பத்திரங்களை வைத்துள்ளவர்களில் பிரதிநிதிகளாக மூன்று பேர் பதிவாளரால் நியமனம் செய்யப்படுகின்றனர், சிறு உழவர்களின் பிரதிநிதி

களாக மூவரும், அரிசனங்களுக்காக மூவரும், அட்டவணையில் கண்ட வகுப்பினருக்காகவும் பழங்குடியினருக்காகவும் ஒருவரும் உள்ளனர். எஞ்சிய ஒருவர் அலுவல் முறையிலுள்ள கூட்டுப் பதிவாளர் ஆவார்.

4.5.12. மாநில நிலவள வங்கிக் குழுவின் மொத்த இயக்குநர்களான 56 பேரில் 45 பேர் தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர்களாய் இருப்பதாகத் தோன்றினும், தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர்கள் மறைமுக நியமன முறை மூலம் வந்தவர்களாகக் கருதப்பட வேண்டும். ஏனெனில், 4.5.7. முதல் 4.5.9. வரையிலுள்ள பாராக்களில் விளக்கியுள்ளவாறு, தொடக்க நிலவள வங்கிகளில் அவர்கள் அம் முறையிலேயே பதவிவகிக்கின்றனர். இவ்வாறாக, 56 இயக்குநர்களும் நேரடியாகவோ மறைமுகமாகவோ நியமனம் செய்யப்படுகின்றனர்.

4.5.13. கூட்டுறவு யூனியன்களைப் பொறுத்தவரை, புதிய அத்தியாயம் ஒன்று (அத்தியாயம் IX-C) சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. திருத்தச் சட்டத்தின்கீழ் விதிகளும் இயற்றப்பட்டுள்ளன. 85-3 விதியின்கீழ், தமிழ் நாடு கூட்டுறவு யூனியனின் நிர்வாகம், குழு ஒன்றிடம் நிலை பெற்றிருக்கும். அக்குழுவில் (a) மாவட்டக் கூட்டுறவு யூனியன் ஒவ்வொன்றின் குழு உறுப்பினர்கள் தங்களுக்குள்ளேயே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உறுப்பினர்கள் இருவர், (b) யூனியனின் உறுப்பினர்களாய், தமிழ்நாடு மாநில நிலவளவங்கி, தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி நீங்கலான பிற தலைமைச் சங்கங்களின் தலைவர்கள் தங்களுக்குள்ளேயே தேர்ந்தெடுத்துக்கொள்ளும் 6 உறுப்பினர்கள் (c) தமிழ்நாடு மாநில நிலவள வங்கி, தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி ஆகியவற்றின் தலைவர் (அவர் பதிவாளரால் நியமிக்கப்பட்டால்), (d) குழுவில் பிரதிநிதித்துவம் அளிக்கப்பெறாமல் உள்ள அரிசனங்கள், பழங்குடியினர், பெண்கள், ஏனையோரின் பிரதிநிதிகளாகப் பதிவாளரால் நியமிக்கப்படும் 3 உறுப்பினர்கள் (e) அலுவல் முறையில் நிர்வாக அதிகாரி.

4.5.14. மேற்சொன்ன (a) முதல் (c) வரையில் குறிப்பிடப்பட்ட நிறுவனங்களில், (தமிழ்நாடு வீட்டு அடைமானச் சங்கம் நீங்கலாக) பிற சங்கங்கள் அனைத்தின் நிர்வாகிகளும் நேரடி நியமனம் மூலம் அல்லது மறைமுக நியமனம் மூலம் பதவிக்கு வந்துள்ள இயக்குநர்களின் கீழ் அமைக்கப்பட்டுள்ளனர். எனவே, தமிழ்நாடு கூட்டுறவு யூனியனின் நிர்வாகக் குழு நியமனம் மூலம் அமைக்கப்பட்டுள்ளதாகக் கருதப்பட வேண்டும்.

4.5.15. மாவட்டக் கூட்டுறவு யூனியன்கள், வட்டக் கூட்டுறவு யூனியன்கள் ஆகியவற்றின் துணைவிதிகளின்கீழ், பதிவாளர், 3 ஆண்டுக் கால அளவிற்கு இயக்குநர்களை நியமனம் செய்யலாம். அந்த நியமனத்தை மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டிக்கலாம்.

இறைவைப் பாசனச் சங்கங்களும், அவற்றின் கூட்டமைப்பும் வேளாண்—பொறியியல் பணிக் கூட்டுறவு நிலையங்களும் அவற்றின் கூட்டமைப்பும்.

4.5.16. இந்த நான்கு வகைச் சங்கங்களைப் பொறுத்தவரை, (தலைவர், துணைத் தலைவர் உட்பட) இயக்குநர்கள் பதிவாளரால் மூன்றாண்டுக் கால அளவிற்கு நியமிக்கப்படுவாரெனவும் அந்த நியமனம் மேலும் 6 ஆண்டுக் கால அளவிற்கு நீட்டிக்கப்படலாம் என்றும் துணை விதிகள் வகை செய்கின்றன.

மாநில விற்பனைக் கூட்டமைப்பும், நுகர்வோர் கூட்டமைப்பும்.

4.5.17. துணைவிதிகளின் கீழ், இந்த 2 கூட்டமைப்புகளின் இயக்குநர்கள் பதிவாளரால் நியமிக்கப்படுகின்றனர். நியமிக்கப்பட்ட குழுக்கள் இந்நிறுவனங்கள் தொடங்கப்பட்ட நாளிலிருந்து செயல்படும்.

கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள்.

4.5.18. இயக்குநர்கள் அனைவரும் நியமிக்கப்படுகின்றனர். இந்த ஆலைகள் தொடங்கப்பட்டதிலிருந்து இந்த நிலைமையே உள்ளது.

கூட்டுறவு நூற்பாலைகள்.

4.5.19. பன்னிரண்டு நூற்பாலைகளில் 10 ஆலைகளின் இயக்குநர்கள் முற்றிலும் நியமனம் செய்யப்பட்டவர்கள்.

4.5.20. நடைபெற்றுள்ள மேற்சொன்ன நிகழ்வுகளிலிருந்து தலைமை அளவிலும், மாவட்ட அளவிலும் உள்ள முக்கியக் கூட்டுறவு நிறுவனங்கள், தொடக்க அளவில் உள்ள பெரிய நிறுவனங்கள் ஆகியவற்றின் நிர்வாகங்களில் உள்ளவர்கள் நியமனம் செய்யப்படும் நடைமுறை மூலம் முழுவதும் மாற்றப் பட்டுள்ளனர் என்பது தெரியவரும். கூட்டுறவு இயக்கத்தின் வேளாண்மைப் பிரிவிலும், பிற பிரிவுகளிலும் உள்ள தொடக்கச் சங்கங்களில் பெரும்பாலும் தேர்தல் முறை நடைபெறுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்களுடன், மாவட்டக் கூட்டுறவு வழங்கல்-விற்பனைச் சங்கங்கள் போன்ற சில மாவட்ட அளவிலான சங்கங்கள் விற்பனை, நுகர்வோர் சங்கங்களிடையே உள்ள பெரிய தொடக்கச் சங்கங்கள் ஆகியவற்றில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுக்கள் உள்ளன. தற்போதைய போக்கு தொடர்ந்து நீடிக்குமானால், அந்த நிறுவனங்களில் உள்ள நிர்வாகிகளின் நியமனமுறையும் கூடிய விரைவில் மாற்றப்பட ஏதுவாகும்.

நியமன முறையால் ஏற்படும் நன்மை, தீமைகள்.

4.6.1. இந்நடை முறைக்கு எதிராகத் தெரிவிக்கப்பட்ட குறிப்புகள் பின் வருமாறு :—ஜனநாயக முறையிலான நிர்வாகத்தின் கூட்டுறவுக் கொள்கை களுக்கும் நியாயமான தேர்தல்கள் நடத்துவதற்கும் இந்நடைமுறை முரணாக இருக்கிறது. சங்கங்கள் செயல்படுவதில் பற்றுள்ள உறுப்பினர்களுக்கு நிர்வாகக் குழுவை நியமிப்பதில் எவ்வித உரிமையும் இல்லை. நியமனம் மூலம் நிர்வாகத்திற்கு வருபவர்கள் தங்களுடைய பதவி காரணமாக ஏற்படும் செல்வாக்கையும் ஆதரவையும் பயன்படுத்திக் கொண்டு அதிகாரத்தில் தங்களை நிலை நிறுத்திக் கொள்வதில் வெற்றி பெறக்கூடும்.

4.6.2. இந்நடைமுறைக்கு ஆதரவாகத் தெரிவிக்கப்பட்ட குறிப்புகள் பின்வருமாறு :—கூட்டுறவு இயக்கத்தின் முக்கியமான துறைகளில் உள்ள சங்கங்களின் நிர்வாகக் குழுவில் இருப்பவர்கள் நியமிக்கப்படும் முறை சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்கள் மூலம் சட்டப்படி மாற்றப் பட்டுள்ளது. பின்பற்றப்படும் நடைமுறையின் பொருத்தம் என்னவா பிருப்பினும், சில வழிகளில் அதன் விளைவு நன்மை பயப்பதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. பதவியில் நீண்டகாலமாக இருந்து வந்தவர்களும், தாங்கள் வகிக்கும் பதவிகள் மூலம் கிடைத்த செல்வாக்கு, ஆதரவு ஆகியவற்றைப் பயன்படுத்தி நிர்வாகத்தில் நீண்டகாலம் தொடர்ந்து இருந்துவந்தவர் களுமான சில நபர்களை அது நீக்கியுள்ளது. அரிசனங்கள், பழங்குடியினர், சிறு உழவர்கள், பெண்கள் போன்ற நலிந்த பிரிவினரைச் சேர்ந்த பலரை பிரதிநிதிகளாக்கியுள்ளது. இயக்கத்தில் சேர்ந்துள்ள புதியவர்கள் பெரும்பாலும் இளைஞர்களாகக் காணப்பட்டனர். எனவே, தங்கள் பணி குறித்து ஆர்வம் காட்டினார்கள்; புதிய கருத்துக்களை அவர்கள் ஏற்றுக் கொண்டனர். அரசும் நிர்வாகமும் ஒன்றுக்கொன்று முரணைகச் செயல் படாமல் ஒருமுகமாக செயல்படுகின்றன; அரசின் பயனுள்ள கொள்கை களைச் செயல்படுத்துவதில் அரசுடன் ஒத்துழைக்கின்றனர். இது மற்றொரு பலனாகும்.

குழுக்களை அமைப்பதில் பின்பற்றப்பட வேண்டிய கோட்பாடுகள்.

4.7. தற்போதுள்ள நடைமுறையின் நன்மை தீமைகளைப் பரிசீலனை செய்த பின்னர், கூட்டுறவுச் சங்கங்களில் நிர்வாகக் குழுக்களை அமைக்கும் போது கீழ்க்காணும் கோட்பாடுகளைப் பின்பற்றலாம் என்று ஆணைக்குழு பரிவுரை செய்கிறது :—

(i) அடிப்படையில், நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்படும் தன்மை பாதுகாக்கப்பட வேண்டும்.

(ii) அதே சமயத்தில், ஒவ்வொரு தேர்தலும், ஒரே நபர் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டு நிலையாக தமது பதவிகளை வகிப்பதற்கான போர்வை ஆகிவிடக் கூடாது.

(iii) குழுவின் உறுப்பினர் பதவி பரந்த அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும். சங்கம் செயல்படுவதில் ஈடுபட்டுள்ள பல்வேறு பிரிவுகளின் பிரதிநிதிகள் குழுவில் இடம் பெற வேண்டும். வெவ்வேறு பிரிவினருக்கான அத்தகைய பிரதிநிதித்துவம், பொதுவாக, அவர்களது எண்ணிக்கை முக்கியத்துவம், சங்க நடவடிக்கைகளில் அவர்களது பங்கின் அளவு ஆகியவற்றின் விகிதாச்சாரத்திற்கேற்ப இருக்க வேண்டும்.

(iv) சங்கக் குழுவிற்கு நியமனம் செய்வது ஓரளவு பயனுள்ளதே. ஆனால், குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் அடிப்படை முறையை மாற்றுவதற்கும், சங்க உறுப்பினர்களின் பேரவைக்குச் சங்கச் செயல் முறைகளைக் குழு விளக்கிக் கூறும் பொறுப்பைக் குறைப்பதற்கும் ஒரு கருவியாக நியமன முறை இருக்கக்கூடாது.

(v) நியமன முறை ஒரு குறிப்பிட்ட கால அளவிற்கு மட்டுமே தற்காலிக நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட வேண்டும். கீழ்க்கண்ட நேர்வுகளில் மட்டுமே நியமன முறை மேற்கொள்ளப்படலாம். சங்கத்தின் பணிகள் தேவைப்படுகிற எளிய மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்க; சங்க அலுவல்கள் தொடர்பாகத் தேவைப்படுகிற வல்லுநர்கள் அளிக்க; அரசின் நலன்களைக் கவனித்துக் கொள்வதற்காக; கூட்டுறவு இயக்கத்தின் பல்வேறு துறைகளிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்காக; இளஞ் சங்கம் ஒன்றிற்கு அதன் தொடக்க ஆண்டுகளில் செய்முறைப் பணித் திட்டங்களை அல்லது தயாரிப்புத் திட்டங்களை நல்ல முறையில் தொடங்குவதற்காக (சர்க்கரை ஆலைகள், நூற்பாலைகள் போன்றவை).

(vi) ஒருவர் நிலையாகப் பதவியில் ஒட்டிக்கொள்ள தேர்தல் ஒரு போர்வையாக இருக்கக் கூடாது என்பது போல, நியமனமும் ஒருவர் அவ்வழியில் பல சங்கங்களில் கால வரையறையின்றி இருந்து வருவதற்கு வழிகோலும் முறையாக இருக்கவுங் கூடாது. வேறு வகையில் சொல்லப் போனால், எவ்வளவு காலத்திற்கு எத்தனை சங்கங்களில் ஒருவர் இயக்குநராகவோ நிர்வாகியாகவோ இருக்கலாம் என்பது குறித்த கட்டுப் பாடுகள் எவையும், அரசுச் சார்புள்ள நியமனதாரர்கள் நீங்கலாக, நியமனம் செய்யப்பட்ட இயக்குநர்களுக்கும் தாமாகவே பொருந்த வேண்டும்.

4.8. மேற்கண்ட கோட்பாடுகளைக் கருத்திற்கொண்டு, கீழ்க்காணும் திட்டவட்டமான பரிவுரைகளை நாங்கள் செய்கிறோம் :—

(i) மூன்றுக்கும் மேற்பட்ட சங்கங்களின் நிர்வாகக் குழுக்களில் எவரும் உறுப்பினராக இருத்தல் கூடாது; இந்த மூன்று சங்கங்களில் ஒன்றுக்கு மேற்படாத சங்கம் தலைமைச் சங்கமாகவும் ஒன்றுக்கு மேற்படாத சங்கம் மத்திய சங்கமாகவும் இருக்கலாம்.

(ii) ஒவ்வொரு முறையும் மூன்றாண்டுகள் என்ற வகையில் தொடர்ந்து இருமுறைகளுக்கு மேற்பட்டு ஒரு சங்கத்தின் நிர்வாகக் குழுவில் எவரும் உறுப்பினராக இருக்கலாகாது. அவர் அக்குழுவின் உறுப்பினராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட விழைவதற்கு முன்பு, குறைந்தது இருதடவைகளாவது

(ஆறு ஆண்டுகள்) இடைவெளி இருக்கவேண்டும். நேர்மையற்றவர் எவரும் இந்த இடைப்பட்ட காலத்தில் தமக்காக ஒரு நியமனதாரரைக் குழுவில் சேர்க்கும் வாய்பைக் குறைக்க வேண்டி சந்தானம் குழு கருத்துத் தெரிவித்த ஒரு தடவைக்குப் பதிலாக (3 ஆண்டுகள்) இரு தடவைகள் (அதாவது ஆறு ஆண்டுகள்) இடைவெளி இருக்கலாமென்று நாங்கள் கருத்துத் தெரிவிக்கிறோம்.

(iii) கூட்டமைப்பில் ஒன்றுக்கு மேற்பட்ட சங்கங்களில் நிர்வாகியாக இருப்பது தவிர்க்க முடியாததாயிருக்கும் பட்சத்திலன்றி மற்றப்படி (உதாரணமாக, மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் தலைவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட மாநிலக் கூட்டுறவு வங்கியின் நிர்வாகக் குழுவில் மத்தியக் கூட்டுறவு வாங்கித் தலைவர்களில் ஒருவர் மாநிலக் கூட்டுறவு வங்கியின் நிர்வாகக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர் இருசங்கங்களுக்குத் தலைவரா இருக்கவேண்டியது அவசியமாகிறது.) எவரும் ஒன்றுக்கு மேற்பட்ட சங்கங்களில் நிர்வாகியாக இருக்கக் கூடாது.

(iv) மத்திய வங்கிகளின் நிர்வாகக் குழுக்களில் பண்ணைப் பணிச் சங்கங்கள், கிராமத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், இறைவைப் பாசனச சங்கங்கள், ஏனைய கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற செயலற்ற அல்லது முடங்கிக்கிடக்கும் சங்கங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பிரதிநிதித்துவம் கணிசமான அளவு குறைக்கப்பட வேண்டும். வேளாண்மைக் கடனின் முக்கியத்துவம், கிராமக் கடன் வழங்கு சங்கங்களின் எண்ணிக்கை, அவற்றின் அலுவல்கள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, அவற்றிற்குத் தற்போதுள்ள பிரதிநிதித்துவ விகிதாச்சாரம் கணிசமான அளவு உயர்த்தப் படவேண்டும். கிராமத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி முழுவதும் கதர்-கிராமத் தொழில் வாரியத்தினால் வழங்கப்படுகிறது. கதர்-கிராமத் தொழில் வாரியத்தின்கீழ்த் தொடங்கப்பட்ட பண்ணைப் பணிச் சங்கங்கள் அனைத்தும் செயல்படா நிலையில் இருக்கின்றன. இவற்றிற்குப் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. இறைவைப் பாசனச் சங்கங்களின் தற்போதைய அலுவல்களைக் கருதிப் பார்க்கையில், ஒவ்வொரு மத்திய வங்கி இருக்கும் பகுதியில் பொதுவாக இவ்வகைச் சங்கங்களுக்கு ஒரு பிரதிநிதி இருப்பது போதுமானதாகும். அவர்கள் குறுகிய காலக் கடன் (மத்திய வங்கிகள்) பணிகளைக் காட்டிலும் நீண்டகாலக் கடன் (நிலவள வங்கிகள்) பணிகளைக் கவனிக்க வேண்டும் என்பது இங்கு தொடர்பாக ஈண்டு குறிப்பிடலாம்.

(v) தொடக்க நிலவள வங்கிகள், இறைவைப் பாசனச் சங்கங்கள் போன்ற புதிய சங்கங்களின் நிர்வாகக் குழுவில் உறுப்பினர் அனைவரின் நியமனமும், மூன்றாண்டுகள் என்ற ஒரு தடவைக்கு மேற்பட்டுத் தொடர்ந்து செயலில் இருக்கக் கூடாது. இரண்டாவது தடவை முதற்கொண்டு, சிறப்புப் பிரிவினர்க்காக ஒதுக்கப்படும் இடங்கள் தவிர, ஏனைய இடங்களுக்குத் தேர்தல் நடைபெற வேண்டும்.

(vi) செய்முறை அல்லது தயாரிப்புத் துறைகளில் உள்ள பெரிய கூட்டுறவுப் பிரிவுகளின் ,சர்க்கரை ஆலைகள் நூற்பாலைகள் போன்றவை). நேர்வில் நிர்வாகக் குழுவின் நியமனம், திட்டம் உற்பத்தியைத் தொடங்கிய பின்னர் சுமார் இரண்டு ஆண்டுகள் முடிவடையும் வரையில் தொடர்ந்து செயலில் இருக்கலாம். அதன்பின்னர், சிறப்புப் பிரிவினர்க்காக ஒதுக்கப்படும் இடங்கள் தவிர, ஏனைய இடங்களுக்குத் தேர்தல் நடைபெற வேண்டும்.

4.9. கீழ்க்கண்டவை குறித்து சந்தானம் குழுவின் ஏனைய பரிவுரைகளை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

(i) நிர்வாகக் குழு உறுப்பினர்களின் குறைந்த அளவு, உயரளவு எண்ணிக்கைகளை வரையறுத்தல். (பரிவுரையின் கோட்பாட்டினை நாங்களும் ஏற்றுக் கொள்கிறோம். ஆயினும், உறுப்பினர்கள் அலுவலின் தன்மை, பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டிய பல்வேறு பிரிவினர் ஆகியவற்றைப் பொறுத்து உறுப்பினர் எண்ணிக்கையை முடிவு செய்ய வேண்டும்.)

(ii) சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு சங்கத்தில் நிர்வாகப் பதவி எதனையும் வகிப்பதற்குத் தடை விதித்தல். ஆயினும், அவர்கள் நிர்வாகக் குழுவில் உறுப்பினர்களாக இருக்கலாம்.

(iii) ஆண்டுதோறும் உறுப்பினர் பதவியிலிருந்து ஓய்வு பெறும் முறைக்குப் பதிலாக குழுவின் உறுப்பினர் பதவிகள் அனைத்திற்கும் மூன்றாண்டுகளுக்கு ஒரு தடவை தேர்தல் நடத்தும் முறையைக் கொண்டு வருதல்.

(iv) தொடக்கச் சங்கங்களில் தேர்தல், பதிவாளரால் நியமனம் செய்யப்பட்ட தேர்தல் அதிகாரிகளால் நடத்தப்படவேண்டும். இந்தப் பரிவுரைக்கு நாங்கள் சிறப்பு முக்கியத்துவம் அளிக்கிறோம். ஏனெனில், தொடக்க நிலையில்தான், குறிப்பாக கிராமச் சங்கங்களில்தான் உறுப்பினர்கள் விஷய ஞானம் உள்ளவர்களாக இருப்பதில்லை என்பதுடன், உள்ளூரில் செல்வாக்குள்ள சூழ்ச்சியாளர்களின் வலையில் அவர்கள் எளிதாகச் சிக்கி விடுகின்றனர். தலைமைச் சங்கங்கள், மத்தியச் சங்கங்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில், தற்போது செயலில் உள்ள சட்டப்படிக்கான விதித் துறைகளை மாற்ற வேண்டியதில்லை.

(v) கிராமக் கடன் வழங்கு சங்கங்களின் குழுக்களில் பயிரிடு குத்தகைக்காரர்களுக்கும் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும் பிரதி நிதித்துவம் அளித்தல்.

இப்பரிவுரைகளுக்குச் செயல்வடிவம் கொடுக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம், விதிகள் ஆகியவற்றில் தகுந்த திருத்தங்கள் செய்யப்படலாம்.

அத்தியாயம் 5.

வேளாண்மையில் (குறுகிய காலக் கடன் பிரிவில்) கூட்டுறவு அமைப்பு.

5.1. இம் மாநிலத்தில் வேளாண்மைக் காரியங்களுக்குக் குறுகிய கால (நடுத்தரக் காலக்) கடன்கள் வழங்குவதற்காகவுள்ள கூட்டுறவு அமைப்பு மூன்று அடுக்குகளைக் கொண்ட ஓர் அமைப்பாக உள்ளது. கிராம அளவில் கடன் வழங்கு சங்கங்களும் மாவட்ட அளவில் மத்திய வங்கிகளும் தலைமையிட அளவில் மாநிலக் கூட்டுறவு வங்கியும் ஆக மூன்று அடுக்குகள் மேற்படி அமைப்பில் உள்ளன. இந்த மூன்று அடுக்கு அமைப்பு செயல் படுவதைக் காட்டும் விவர அறிக்கைகள் xi முதல் xiv வரையிலான இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

கிராமச் சங்கங்களின் அளவு அவற்றின் தனித்தியங்கக் கூடிய தன்மையும்.

5.2.1. கிராமக் கடன் வழங்கு சங்கங்களின் அளவு குறித்த கொள்கை 1955-ஆம் ஆண்டு முதற்கொண்டே அடிக்கடி மாற்றப்பட்டு வந்துள்ளது. இந்த ஆண்டுக்கு முன்பெல்லாம், வரையறையற்ற பொறுப்பு, கௌரவ நிர்வாகம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு கிராமத்திற்கு ஒரு சங்கம் என்ற நடைமுறை பன்னெடுங்காலமாக இருந்து வந்தது. இந்திய ரிசர்வ் வங்கியினால் நியமிக்கப்பட்ட கிராமக் கடன் ஆய்வுக் குழுவின் பரிவுரைகளின் அடிப்படையில் இம் மாநிலத்தில் 1956 முதல் 1959 வரை வேளாண்மை வங்கிகள் எனப்படும் பெரிய அளவிலான 330 சங்கங்கள் அமைக்கப்பட்டன. சுமார் 5 மைல் சுற்றளவிற்குள் அமைந்துள்ள 5 முதல் 10 வரையிலான கிராமங்களுக்கு ஒரு வேளாண்மை வங்கி இருந்தது. உறுப்பினர்களது பொறுப்பு அவர்களது பங்குத் தொகையின் 10 மடங்கு என வரையறுக்கப் பட்டது. வேளாண்மை வங்கியில் சம்பளம் பெறும் செயலாளர் ஒருவர் இருந்தார். இது பெரும்பாலும் 3 அல்லது 4 சிறிய சங்கங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் அமைக்கப்பட்டது. இப் பெரிய சங்கங்கள் மனநிறைவளிக்கும் வகையில் வளர்ச்சி அடையத் தொடங்கி பிரபலமாகி வந்தபோது இந்திய அரசின் கொள்கை மாற்றம் அடைந்தது. இச் சங்கங்கள் மிகப் பெரிய அளவினவாகவும் பொது முறையானவையாகவும் ஆகி அச் சங்கங்கள் கூட்டுறவுத் தன்மையை இழக்கத் தொடங்கின என்றும் இந்திய அரசு கருதியது. ஒரு கிராமத்திற்கு ஒரு சங்கம் என்ற பழைய கொள்கையை மீண்டும் கொண்டுவரலாமென இந்திய அரசு கருத்துத் தெரிவித்தது. சிறிய சங்கங்களின் நிர்வாகப் பணியாளர்களை நியமிப்பதற்காக ஆகும் செலவுக்கு உதவித் தொகை வழங்கவும் இந்திய அரசு முன்வந்தது. மாற்றியமைக்கப்பட்ட கொள்கை செயல்படுத்தப்பட்டபோது, தமிழ்நாடு உட்பட பல மாநிலங்கள் இதனை எதிர்த்தன. இந்திய அரசினால் நியமிக்கப் பட்ட கூட்டுறவுக் கடன் வசதி பற்றிய குழு (1960) தனது அறிக்கையைப் பணிந்தனுப்பிய பின்னர் புதிய கொள்கை நேர்மாறாக மாற்றப்பட்டது. ஒரு சங்கம் ஆதாயம் தரத்தக்கதாயும் தனித்தியங்கக்கூடியதாகவும் இருக்க வேண்டுமென்று அக்குழு பரிவுரை செய்தது. அதாவது சங்கம் மிகப் பெரியதாகவோ மிகச் சிறியதாகவோ இல்லாமல் சம்பளம் பெறும் பணியாளர்களுடன் பணிபுரிய போதுமான அளவு நிதி வசதி உள்ளதாகவும் பங்கு மூலதனத்திற்கு நியாயமான தொகை செலுத்துமளவுக்குப் போதுமான ஆதாயம் ஈட்டித் தரக்கூடியதாகவும் அமைந்திருக்க வேண்டும். தகுந்த கூரங்களைப் பின்பற்றி, கிராமச் சங்கங்களைச் சீரமைப்பதற்கான செயல் திட்டம் ஒன்றை மாநில அரசுகளுக்கு இந்திய அரசு 1964-ல் தெரிவித்தது. ஒரு சங்கம் தனித்தியங்கக்கூடியதாய்க் கருதப்பட வேண்டுமானால் 2,000 முதல் 3,000 ஏக்கர் பகுதிவரை செயல்வரம்பு உடைதாய் இருப்பதுடன் ஆண்டுதோறும் ரூ. 2 லட்சம் அளவிற்குக் கடன் வழங்கும் நிலையிலும் இருக்க

வேண்டும் என்பதே கொள்கையாகக் கொள்ளப்பட்டது. மத்திய வங்கிகளுடன் கலந்தாலோசித்து 1965-66-ல் சீரமைப்புத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது. அச்சமயத்தில் சுமார் 11,000 வேளாண்மைக் கடன் வழங்கு சங்கங்கள் இருந்தன. அவற்றின் எண்ணிக்கை தற்போது, 5,243-ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. அவற்றுள் 4,584 சங்கங்கள் தனித்தியங்கக் கூடியவையென அல்லது தனித்தியங்கும் ஆற்றல் உள்ளவையெனக் கருதப்படுகின்றன. எஞ்சிய 659 சங்கங்களை 139 சங்கங்களாக ஒருங்கிணைக்கக் கருதப்பட்டுள்ளது.

5.2.2. தற்போதுள்ள நிறுவனங்கள் தங்களது அதிகாரத்தையும், செல்வாக்கையும் இழந்துவிடுவோம் என்றும் பெரிய நிறுவனம் ஒன்றில் தமக்கு நியாயம் கிட்டாமற்போகக்கூடும் என்றும் அஞ்சுவது காரணமாக, சங்கங்களைச் சீரமைப்பதில் மந்தமான போக்குள்ளதென்று கூறப்படுகிறது. ஒரு சங்கத்தின் செயல்படு திறன் அதன் தனித்தியங்கக் கூடிய நிலையைப் பொறுத்திருக்கிறது. சங்கம் தனித்தியங்கக் கூடியதாய் இருந்தால்தான், உரிய காலத்தில் கடன்கள் வழங்கவும், பிற பணிகள் புரியவும் இயலும். எனவே, சங்கங்களை அமைக்கும்போது அல்லது சீரமைக்கும்போது, தனித்தியங்கக் கூடிய தன்மை முக்கியமாகக் கருத்திற்கொள்ளப்பட வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம்.

5.2.3. 1961-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்னர், சங்கங்களைக் கண்டிப்பாக ஒருங்கிணைப்பதற்கு 1932-ஆம் ஆண்டுச் சட்டத்தில் விதித்துறை ஒன்று இருந்தது. பழைய சட்டத்தின் 13 (c) பிரிவின்கீழ், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சங்கங்களை ஒருங்கிணைப்பது அவற்றின் செயல்படு திறனை அல்லது பயனை உயர்த்துவதற்கு அவசியமாக அல்லது உகந்ததாக உள்ளதென்று பதிவாளர் கருதினால், அவர் நிதியுதவும் வங்கிகளுடன் கலந்தாலோசித்த பின்னர், அச்சங்கங்களை குறிப்பிடக்கூடிய கால அளவுக்குள் ஒரு சங்கமாக ஒருங்கிணையுமாறு கேட்கலாம். குறிப்பிடப்பட்ட கால வரையறைக்குள் அச்சங்கங்கள் ஒருங்கிணையாவிட்டால், சங்கங்கள் அவ்வாறு இணைக்கப்படத் தங்களது ஆட்சேபணைகளைச் சொல்லிக்கொள்ள வாய்ப்பளித்த பின்னர், அச்சங்கங்களை ஒருங்கிணைக்குமாறு கட்டளையிட பதிவாளருக்கு அதிகாரமுண்டு. கண்டிப்பு என்று கூறி கூட்டுறவு இயக்கக் கோட்பாட்டுக்கு முரணாக உள்ளதாகக் கருதப்பட்டதால் 1961-ஆம் ஆண்டு புதிய சட்டத்தில் இந்த விதித்துறை நீக்கப்பட்டது. கண்டிப்பாக ஒருங்கிணைப்பது குறித்த விதித்துறை செயலில் இருந்தபோதிலும், உண்மையில் அது பயன்படுத்தப்படவில்லை என்றும், 1956-59 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட பெரிய சங்கங்கள், அவற்றை இணங்கச் செய்வதன் மூலம் அமைக்கப்பட்டன என்றும் அறிகிறோம். இச்சட்டத்தில் உள்ள இந்த வகையான விதித்துறை, சங்கங்களை ஒருங்கிணைப்பதை நியாயமற்ற முறையில் எதிர்ப்பதற்குத் தடுப்பு நடவடிக்கையாக அமைந்தது. எஞ்சியுள்ள பெரும்பாலான சங்கங்கள் ஒருங்கிணைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. அந்தச் சங்கங்களை ஒருங்கிணைத்து சீரமைப்பதற்கென பழைய விதித்துறையை மீண்டும் செயலுக்குக் கொண்டுவருவது அவசியமில்லையா என்பது குறித்து நாங்கள் கருதிப் பார்த்தோம். சங்கங்களை இணங்கச் செய்வதன் மூலம் அவற்றைச் சீரமைக்க முடியுமென்றும், கடினமான நேர்வில், கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 119-A பிரிவின் மூலம் தம்மிடம் ஒப்படைக்கப் பெற்றுள்ள அதிகாரத்தைத் தாம் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் பதிவாளர் எங்களிடம் கூறினர். இப் பிரிவு பொதுத் தன்மை வாய்ந்ததாக உள்ளது என்பதையும், பழைய சட்டத்தின் 13 (c) பிரிவில் உள்ளது போன்று, சங்கங்களை ஒருங்கிணைப்பது பற்றிய நிறைவான விதிமுறைகளைக் கொண்ட நடைமுறை இதிலடங்கவில்லை என்பதையும் நாங்கள் காண்கிறோம். இது காரியத்திற்காக இதனைப்பயனுறு வகையில் பயன்படுத்த முடியுமா என்பது ஐயத்துக்கிடமாயுள்ளது. உழவர்களுக்குப் போதுமான கடன் வழங்குவதிலும், உரங்கள் போன்ற பயிரிடு பொருட்களை வழங்குதிலும் தனது பங்கை ஒழுங்காகச் செய்ய கிராம சங்கத்திற்கு இருக்க வேண்டிய தனித்

இயங்கக் கூடிய தன்மையின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, சங்கங்களைக் கட்டாயமாக ஒருங்கிணைப்பதற்குச் சட்டப்படிக்கான விதித் துறை மீண்டும் கொண்டுவரப்பட வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம். இணைக்க முறைகள் அனைத்தும் பயன்படுத்தப்பட்டும் சங்கங்களை ஒருங் கிணைக்கும் காரியத்தில் வெற்றி பெருவிடின், கடைசி நடவடிக்கையாக சட்டப்படிக்கான விதித்துறை இருக்க வேண்டும்.

கிராமக் கடன் சங்கத்தின் உறுப்பினர்கள்.

5.3.1. மாநிலத்தின் கிராமப் பகுதி முழுவதிலும் கிராமக் கடன் வழங்குச் சங்கங்கள் செயல்படுகின்றன. உறுப்பினர்களைப் பொறுத்த வரையில், கடன் வழங்குச் சங்கங்களில் 51.7 சதவித உழவர் குடும்பங்கள் உறுப்பினர் களாக சேர்க்கப்பட்டுள்ளன. ஆயினும், 30—11—1972 அன்றுள்ளவாறு உறுப் பினர்களின் மொத்த எண்ணிக்கையில் 39.9 சதவிதமே தீவிர உறுப்பினர் களாக அதாவது, சங்கத்திடமிருந்து கடன் பெறும் உறுப்பினர்களாக இருந்தனர்.

5.3.2. 1969-70, 1970-71-ஆம் ஆண்டுகளில் சங்கத்தின் உறுப்பினர்களில் கடன் பெறும் உறுப்பினர்கள் முறையே 19.5 சதவிதமாகவும் 18.8 சதவித மாகவும் இருந்தனர். இந்நிலை 1971-72 இறுதியில் (30—6—1972) 36.7 சத விதமாக இருந்தது. சங்கங்கள் வகைசெய்யும் பணிகளில் உறுப்பினர் பங்குகொள்ளும் நிலையில் கணிசமான அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட் டுள்ளது. எனினும், இம்முன்னேற்றம் மாநிலம் முழுவதும் ஒரே சீராக இல்லை. உழவர்கள் அதாவது, உழவர் குடும்பங்கள் சங்க உறுப்பினர்களாக இருக்கும் சதவிதம் காஞ்சிபுரம் மத்திய வங்கி செயல்படும் பகுதியில் 31.5 சதவிதமாகவும், நாகர்கோயில் மத்திய வங்கி செயல்படும் பகுதியில் 98 சத விதமாகவும் உள்ளது. அதுபோன்றே, சங்கங்களில் கடன் பெறுகிற உறுப் பினர்களின் எண்ணிக்கை சதவிதம் காஞ்சிபுரம் மத்திய வங்கிப் பகுதியில் 24.5 சதவிதமாகவும் மதுரை மத்திய வங்கிப் பகுதியில் 63.3 சதவிதமாகவும் உள்ளது.

5.3.3. நாட்டில் கூட்டுறவுத் துறையில் மேம்பாடடைந்த மாநிலங்கள், இது தொடர்பாக அனைத்திந்திய சராசரி ஆகிய ஒப்புமைப் புள்ளிவிவரங்களை அளிப்பது பயனுள்ளதாய் இருக்கும். இந்திய ரிசர்வ் வங்கி இரண்டாண் டுக்கு ஒருமுறை வெளியிடும் ஆய்வில் 1969-70 ஆம் ஆண்டுக்காக மட்டுமே அண்மைக் கால புள்ளிவிவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. குஜராத், மகாராஷ்டிரா, பஞ்சாப் ஆகியவற்றைப் பொறுத்தவரை, அவற்றில் உள்ள கடன்வாங்கும் உறுப்பினர்களின் சதவிதம் மொத்த உறுப்பினர்களில் 52.7, 44.9, 84.1 சதவிதமாக இருந்தது. தமிழ்நாட்டில் அந்த ஆண்டில் இது 19.5 சதவிதமாக இருந்தது. அனைத்திந்திய சதவிதம் 39.4 ஆக இருந்தது.

5.4.1 போதிய உறுப்பினர்கள் இல்லாததற்கான காரணங்கள்.

5.4.1. கிராமக் கடன் வழங்கு சங்கங்களில் போதிய உறுப்பினர்கள் இல்லாததற்கான முக்கியமான காரணங்களில் ஒன்று, அவற்றில் பெரும் பாலானவற்றின் துணை விதிகளில் உள்ள வரையறையற்ற பொறுப்பு குறித்த விதித்துறையைத் தொடர்ந்து வைத்திருப்பது ஆகும் என்று எங்கள் நாட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டது. 30—6—1973 அன்றுள்ளவாறு, 3,392 சங்கங்கள் வரையறையற்ற பொறுப்புடன் இருந்தன. 1,641 சங்கங்கள் வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் இருந்தன. ஏற்படக்கூடிய இப் பொறுப்பு, அதன் விளைவுகள் ஆகியவற்றால் ஏற்படும் அச்சம் காரணமாக ஏனைய உழவர்கள் அச்சங்கங்களில் உறுப்பினராகச் சேரத் தயங்குகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. அந்த அச்சம் இல்லாவிடில், அவர்கள் அச் சங்கங்களில் சேர்ந்திருப்பர். இச்சங்கங்கள் சிறியவையாகவும் தெரிந் தெடுத்த ஒரு சிலரே உறுப்பினராகவும் தொடக்கக் காலத்தில் இருந்த

இந்த ஏற்பாடு இருக்க வேண்டியதன் அவசியமும், தெளிவு, அப்போது உறுப்பினர்களின் குண நலன்களும் நாணயமும் உறுப்பினர் அனைவராலும் நன்கு அறிந்து கொள்ளப்பட்டிருந்தன. ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் அன்றாட மாற்றங்களைப் புரிந்துகொண்டு தங்களது "வரையறையற்ற பொறுப்பு" காரணமாகத் தங்களுக்குப் பாதகமேற்படக்கூடிய வரையில் மாற்றம் ஏதும் ஏற்பட்டால் உரிய நேரத்தில் பொருத்தமான நடவடிக்கையை அவர்கள் எடுக்க இயன்றது. மேலும், கிராமச் சங்கங்களுக்கு வேளாண்மைக் கடன் அளிப்பதற்கென அமைக்கப்பட்ட மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கிகள், தங்கள் நிதிவாயில்களுக்கு நகர்ப்புற முதலீட்டாளர்களையே முழுதும் நம்பியிருந்தன. அச்சங்கங்களின் துணை விதிகளில் உள்ள வரையறையற்ற பொறுப்பு பற்றிய விதித்துறை அவரது வைப்பீடுகளின் பாதுகாப்பு குறித்து அவரது அச்சத்தைப் போக்கும் எனக் கருதப்பட்டது. (எனினும் "வரையறையற்ற பொறுப்பு" விதித்துறையை முதலீடு செய்பவர் நன்கு புரிந்து கொண்டதால் மத்திய வங்கிகளில் வைப்பீடுகள் செய்வதற்குக் காரணமாயிருந்ததா அல்லது இந்த வங்கிகள் அரசுக் கட்டுப்பாட்டில் உள்ளதால் தங்களது நிதிகள் பாதுகாப்பாக உள்ளன என்பதைப் பொதுமக்கள் கருதியது அதற்குக் காரணமா என்பது நீண்ட விவாதத்திற்குரிய கேள்வியாகும்). நிலைமைகள் தற்போது பெருமளவு மாறியுள்ளன. எல்லாரும் உறுப்பினர்களாக ஆகும் ஏற்பாட்டுடன் தற்போது பெரிய அளவிலான சங்கங்கள் உள்ளன. உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் நெருங்கிப் பழக அல்லது ஒருவரின் நடவடிக்கைகளை இன்னொருவர் கண்காணிக்க இனிமேல் இயலாது. உற்பத்தியை நோக்கமாகக் கொண்டவைகளுக்கு மட்டும் கடன் வசதி அளிக்கப்படுகிறது. கடன்களைக் கொடுப்பதும் அதை வசூலிப்பதும் குறித்த நடைமுறைகள் சீரமைக்கப்பட்டு, செவ்விய முறையில் செயல்படுபவையாக ஆக்கப்பட்டுள்ளன. இதனால் சங்கங்களுக்குச் சொந்தமான மூலதனத்திற்கும், நிதிகளுக்கும் அதிகமாக விரயம் ஏற்படும் அபாயம் இல்லை. தவிர, சங்கங்களிலும் மத்திய வங்கிகளிலும் அதிக அளவில் பொது, குறிப்பிட்ட சேமநிதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன; இவை இறுதியில் "வரையறையற்ற பொறுப்பிற்கு" உட்படுவதற்குரிய தேவையைத் தவிர்க்கும் வகையில் விரயத்தைத் தடுப்பவையாகச் செயல்படுகின்றன. மத்திய வங்கியில் வைப்பீடு செய்யும் நகர்ப்புற முதலீட்டாளருக்கு வரையறையற்ற பொறுப்பு" பற்றி ஒன்றும் தெரியாது; வங்கியின் ஐந்தொகைக் கணக்கு பற்றி அவர் மனநிறைவடைகிறார்; இந்த வங்கி அரசுக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது என்று அவர் அறிகிறார். இதுவே அவர் அந்த வங்கியில் முதலீடு செய்வதற்குக் காரணமாகும். இவ்வாறு, சங்கங்கள் செயல்படுகிற மாறுபட்ட நிலைமைகளில் "வரையறையற்ற பொறுப்பு" இனிமேல் எவ்விதத்திலும் பொருந்தாது. "வரையறையற்ற பொறுப்பில்" உட்கிடக்கையாயுள்ள உறுப்பினர்களின் பொறுப்பு, பயனுள்ளதாக இருப்பதைக் காட்டிலும், தகுதியுள்ள உழவர்கள் பலர் இச்சங்கங்களில் உறுப்பினர்களாக சேருவதற்குத் தடையாக உள்ளது. அதை அகற்றுவதால், அதிக அளவில் உழவர்கள் இந்த நிறுவனங்களில் உறுப்பினர்களாவது இயலும் என்று நாங்கள் கருதுகிறோம்.

5.4.2. இந்திய ரிசர்வ் வங்கி 1954-ல் அமைத்த கிராமக் கடன் வழங்கு ஆய்வுக்குழு, மாநில அரசால் 1956-ல் அமைக்கப்பட்ட கூட்டுறவு குறித்த நாராயணசாமி பிள்ளைக் குழு, 1969-ல் அமைக்கப்பட்ட கூட்டுறவு குறித்த சந்தானம் குழு போன்ற வல்லுநர்கள் குழுக்கள் பல, "வரையறையற்ற பொறுப்பு" பற்றிய விதித்துறையை வைத்திருப்பதற்கு மறுப்பு தெரிவித்தன. 1932-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்திற்குப் பதிலாக 1961-ஆம் ஆண்டுச் சட்டம் இயற்றப்பட்டபோதுகூட, இந்த விதித்துறையை அகற்றுவதற்கான அவசியம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1932-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி, பதிவாளரால் அனுமதியளிக்கப்பட்டாலன்றி மற்றப்படி, "வரையறையற்ற பொறுப்பு" அடிப்படையிலேயே வேளாண்மைக் கடன் வழங்கு சங்கம் பதிவு செய்யப்பட முடியும் என்றிருக்கையில் அச்சங்கங்கள் வரையறைக்குட்பட்ட அல்லது வரையறையற்ற பொறுப்பின் கீழ்ப் பதிவு செய்யப்படலாம் என்று 1961-ம் ஆண்டு சட்டம் விதிக்கிறது. பல்வேறு

குழுக்கள் தெரிவித்த பரிவுரைகள், சட்டத்தில் செய்யப்பட்ட விதித்துறை ஆகியவை இது குறித்து வகுக்கப்பட்ட கொள்கையில் பிரதிபலிக்கவில்லை இதன் காரணமாக, பெரும்பாலான சங்கங்கள் "வரையறையற்ற பொறுப்பின்" அடிப்படையில் செயல்படுகின்றன. தற்போதுள்ள நிலைமையில் மாற்றம் ஒன்றைக் கொண்டு வருவதற்கான முனைப்பான கொள்கை ஒன்று, மாற்றல்களை கொண்டுவரும் விருப்பத்தைச் சங்கங்களுக்கு விட்டுவிடலாம், துறையால் பின்பற்றப்படலாம் என்று நாம் கருத்து தெரிவிக்கிறோம்.

5.4.3. கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 5-வது பிரிவின்கீழ், சங்கம் ஒன்று, தனது துணை விதிகளுக்குத் திருத்தம் செய்வதன் மூலம், தனது எண்ணத்தைப்பற்றிய அறிவிப்பை தனது உறுப்பினர்களுக்கும் கடன் கொடுப்பவர்களுக்கும் பின்னர், தனது பொறுப்புதன்மையை மாற்றலாம். இதற்கு முரணுயுள்ள துணைவிதி அல்லது ஒப்பந்தத்தில் முரணுக என்ன சொல்லியிருப்பினும், உறுப்பினர் அல்லது கடன் கொடுத்தவர் ஒருவர், அறிவிப்பு சேர்ப்பிக்கப்பட்டதிலிருந்து இரண்டு மாதங்களுக்குள், தனது பங்குகளை அல்லது வைப்பீடுகளை அல்லது கடன்களைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். பெரும்பாலான சங்கங்களில், மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கி மட்டுமே கடன் கொடுக்கும் நிறுவனமாக உள்ளது. வைப்பீடுகள் உறுப்பினர்களிடமிருந்தே பெரும்பாலும் கிடைக்கின்றன. மத்திய வங்கி களும் உறுப்பினர்களும் தாமே முன்வந்து ஒத்துழைக்க வேண்டும். அப் போதுதான், குறிப்பிட்ட கால அளவிற்குள் பொறுப்பின் தன்மையில் மாறு தலை ஏற்படுத்தும் கொள்கையை செயல்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதும் இருக்காது.

5.4.4. 5.2.1. பத்தியில் குறிப்பிடப்பட்ட வேளாண்மை வங்கிகளைப் பொறுத்தவரை, உறுப்பினர் ஒருவரின் பொறுப்பு அவரது பங்கு மூலதனத்தைப்போல் பத்து மடங்கென வரையறுக்கப்பட்டுள்ளது. இது 'உத்தரவாதம் அளிக்கப்பட்ட பொறுப்பு' எனப்படும். இது 'வரை யறையற்ற பொறுப்புக்கும்' உள்ள பங்குகளுக்கேற்ப வரையறுத்த பொறுப் புக்கும் இடையே ஓர் இணக்க ஏற்பாடாகும். கூட்டுறவுத் துறையில் பழைய கோட்பாடுகளைப் பின்பற்றி வந்தவர்கள், வரையறையற்ற பொறுப்பு நிலையி லிருந்து வரையறுத்த நிலைக்கு மாற்றம் செய்வதானது மிகக் கடுமையான தாகும் என்று கருதிய சமயத்தில் இந்த இடைநிலை இணக்க ஏற்பாடு பற்றி எண்ணிப் பார்க்கப்பட்டது போலும். 'உத்தரவாத பொறுப்பையும்' எளிய, வரையறுத்த பொறுப்பாக மாற்றுவதற்கு உரிய தருணம் வந்து விட்டதென நாங்கள் கருதுகிறோம். முன்னரெல்லாம், ஓர் உறுப்பினருக்கு வரையறுக்கப் பட்ட உயரளவு கடன் வரம்பு மிகவும் குறைவாக இருந்தது. ஒரு சங்கத்தில் அவர் முதலீடு செய்ய வேண்டிய பங்கு மூலதனம் அவர் வாங்கும் கடனில் 10-ல் 1 பங்கு மட்டுமேயாகும். இப்போது தனி நபரின் கடன், வரம்பு கணிசமான அளவு உயர்த்தப்பட்டுள்ளது. கரும்பு ஏனைய பயிர்களுக்குச் சொந்தப்பிணையத்தின் மேல் ரூ. 25,000 வரையும், அடமானப் பிணையத்தின் மேல் ரூ. 35,000 வரையும் (5.10 பத்தியைக் காண்க) குறுகிய காலக் கடன் களை அவர் பெறலாம். தற்போது, இவர் வாங்கும் கடனில் 8-ல் 1 பங்குக்குப் பங்குத் தொகையை அவர் முதலீடு செய்ய வேண்டும். இது 5-ல் 1 பங்காகப் படிப்படியாக உயர்த்தப்படும். (சங்கத்தின் நிதி வாயில்களை உயர்த்தவும் அதே சமயத்தில் ஓர் உறுப்பினர் தமது வருமானத்தைச் சேமித்து அந்த நிகர் வருமானத்திலிருந்து பங்குத் தொகைக்கு முதலீடு செய்யவும் வேண்டி இந்த வரம்பு உயர்த்தப்படுவதாக நாங்கள் அறிகிறோம். இந்த நிலையில் உயர் வகுப்பைச் சேர்ந்த ஓர் உழவர் முதலீடு செய்ய வேண்டிய பங்கு மூலதனம் ஓரளவு கூடுதலாகும். உத்தரவாதம் அளிக்கப்பட்ட அவர் பொறுப்பு அவரது பங்கு மூலதனத்தைப்போல் 10 மடங்காகும். இது "வரையறையற்ற பொறுப்பிலிருந்து" மிகவும் வேறுபட்டதல்ல. 5.4.1. பத்தியில் கூறப்பட்டுள்ள காரணங்களுக்காக வேளாண்மை வங்கிகளின் உத்தரவாதம் அளிக்கப்பட்ட பொறுப்பும் வரையறுத்த பொறுப்பாக மாற்றப்பட வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம்.

5.4.5. பொறுப்பின் தன்மையை மாற்றுவது தவிர, சங்கங்களில் உழவர்கள் உறுப்பினராகச் சேருவதற்கு அவர்களுக்குள்ள சட்டப்படிக்கான உரிமைகள் பற்றி அவர்களுக்கு எடுத்துக்கூறவும் தகுதியுள்ள நபர்களை உறுப்பினராகச் சேர்த்துக்கொள்வது சட்டப்படிக்கான கடமையாகும் என்பதை நிர்வாகத்தினருக்கு எடுத்துக் கூறவும் வேண்டி, உறுப்பினர் எண்ணிக்கை குறைவாகவுள்ள பகுதிகளில் உறுப்பினர் எண்ணிக்கையை உயர்த்தும் நோக்குடன் நேரிடப் பணியை மேற்கொள்வதும் அதுபற்றி விளம்பரம் செய்வதும் அவசியமாகும் என்று நாங்கள் கருதுகிறோம். (4-வது பத்தியில் கூறப்பட்டுள்ளவாறு) சங்கங்களில் உறுப்பினர்களைப் பரந்த வகையில் சேர்த்துக்கொள்வதற்குத் தகுந்தவாறு சட்டம் திருத்தப்பட்டிருந்தாலும், சமூகத்திலும் பொருளாதாரத்திலும் வளம் பெற்று சங்கங்களில் வாய்ப்பான இடங்களைப் பிடித்துக்கொண்டு உள்ளவர்களுக்கு எதிராக இச் சட்டத்தின் விதித் துறைகள் இன்னும் செயலற்றவையாகவே உள்ளன என்று நாங்கள் எண்ணுகிறோம். இது தொடர்பாக, சங்க நிர்வாகிகளை அவ்வப் போது மாற்றம் செய்வதுபற்றி 4-வது அத்தியாயத்தின் 4.8 பத்தியில் நாங்கள் பரிவுரைகள் செய்துள்ளதை ஈண்டுக் குறிப்பிட விழைகிறோம். இவ்வாறு நிர்வாகத்தில் உள்ளவர்களை மாற்றம் செய்வதனுல் புதியவர்கள் நிர்வாகிகளாக ஆவதற்கு ஏதுவாயிருப்பதோடு, புதிய விண்ணப்பதாரர்களை உறுப்பினராகச் சேர்த்துக்கொள்வதில் நிர்வாகத்தினர் மிகவும் தாராளமான போக்கை மேற்கொள்ளவும் வழி கோலும். ஏனைய பணிகளுக்கிடையே உறுப்பினரைச் சேர்த்துக்கொள்வது குறித்து (கூட்டுறவு) நல வளர்ச்சி அதிகாரியின் பங்கினை நாங்கள் ஏற்கெனவே வலியுறுத்தியுள்ளோம். (2-வது அத்தியாயத்தின் 2.19.7. பத்தியைக் காண்க.) முக்கியமாக கூட்டுறவுக் கல்விக்குப் பொறுப்பு வகித்து வரும் மாநிலக் கூட்டுறவுச் சங்கமும் அதன் மாவட்ட, வட்டக் கூட்டுறவுச் சங்கங்களும் இதில் முக்கிய பணியாற்ற வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிகளில் அவற்றின் பகுதிகளிலுள்ள சங்கங்கள் அனைத்தையும் பார்வையிடுவதற்காக அதிக எண்ணிக்கையில் நேரிடப் பணியாளர்கள் வைத்திருப்பதால் அத்தகைய வங்கிகள், சங்கங்களில் உறுப்பினராயிராதவர்களைக் கண்டறிந்து அவர்களைக் கூட்டுறவு இயக்கத்தின் கீழ்க் கொண்டுவரும் பெரும் பொறுப்பை மேற்கொள்ள வேண்டும்.

ஆயினும், உறுப்பினர் எண்ணிக்கையைப் பெருக்குவதற்கான இயக்கம், ஒருவருக்கு அல்லது தொகுதியினருக்குச் சாதகமாக அல்லது எதிராக ஆதரவைத் திரட்ட வேண்டும் என்ற நிலைக்குத் தாழ்ந்துவிடக் கூடாது. சங்கத்தின் பணிகள் தேவையாயிருப்பவர்களுக்கு அப் பணிகளை அளிப்பதே இதன் நோக்கமாயிருக்க வேண்டுமேயல்லாது, உறுப்பினர் எண்ணிக்கையை உயர்த்துவதனுல் நாளடைவில் நிகழக்கூடிய ஏனைய விளைவுகளை நோக்கமாகக் கொள்ளக் கூடாது. உறுப்பினர்கள் எண்ணிக்கையை செயற்கையான முறையில் பெருக்க வேண்டுமென்கிற வகையில் புள்ளிவிவரக் கண்ணோட்டத்துடனும் இத்திட்டம் நிறைவேற்றப்படக் கூடாது.

பயன் கொள்ளும் உறுப்பினர்கள் எண்ணிக்கை போதுமானதாயிராததற்கான காரணங்கள்.

5.5.1. உழவர் குடும்பத்தினரை உறுப்பினராகச் சேர்த்துக் கொள்வதாலேயே, உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட அனைவரும் சங்கத்திடமிருந்து உற்பத்திக் கடன்களைப் பெற இயன்றதாகக் கொள்ள முடியாதென்று எங்கள் நாட்டத்திற்குக் கொண்டு வரப்பட்டது. 5.3.1. பத்தியில் குறிப்பிட்டுள்ளதுபோல், சங்கத்திடமிருந்து கடன் பெறும் உறுப்பினர் எண்ணிக்கை சங்கத்தின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையை காட்டிலும் மிகவும் குறைவாக உள்ளது. இத்தகைய நிலைக்கு முக்கிய காரணம், பெற்ற கடனில் 50 சதவிதத்திற்கு மேற்பட்டு, மத்திய வங்கிக்குச் செலுத்தாமல் கடன்களை நிலுவையாக வைத்துள்ள சங்கங்களும், நிர்வாகம் மோசமாக உள்ளவையும் விசாரணை நடத்தப்பட்டு

வருபவையுமான சங்கங்களும் புதிதாகக் கடன் பெறத் தகுதியற்றவை யாகும்; எனவே, அத்தகைய சங்கங்களில் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட உறுப்பினர்களும் கடனை உரிய தவணைகளில் செலுத்தும் உறுப்பினர்களும் கடன் பெற முடிவதில்லை. அத்தகைய உறுப்பினர்களுக்கு இடர்ப்பாடு ஏற்பட்டுள்ளதாயும் அதனால் வேளாண்மை உற்பத்தி மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாயும் பரவலாகப் புகார் வந்ததன் காரணமாக, பதிவாளரிடமிருந்து இது சம்பந்தமான விவரங்களைக் கேட்டு, அவற்றின் மூலம் இச் சிக்கலின் அளவு, அதன் கடுமைத் தன்மை ஆகியவற்றை நாங்கள் மதிப்பிட முயன்றோம். இந்த வகையில் *1971–72, 1972–73* ஆம் ஆண்டுகளில் இருந்த நிலைமை பின்வருமாறு :—

	1971–72	1972–73
(i) சங்கங்களின் மொத்த எண்ணிக்கை ..	5,562	5,033
(ii) உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை (லட்சத்தில்)	33·28	34·12
(iii தவணை கடந்த நிலுவைகள் 50 சதவீதத்திற்கு மேற்பட்டிருப்பதன் காரணமாகக் கடன் பெறத் தகுதியற்ற சங்கங்களின் எண்ணிக்கை. ..	547	430
(iv) தவறான நிர்வாகம் காரணமாகக் கடன் பெறத் தகுதியற்ற சங்கங்களின் எண்ணிக்கை ..	122	149
(v) தகுதியற்ற சங்கங்களின் மொத்த எண்ணிக்கை [(iii + iv)]	669	579
(vi) v-வது பத்தியில் குறிப்பிட்டுள்ள சங்கங்களின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை (லட்சத்தில்)	199	165
(vii) vi-வது பத்தியில் உள்ள உறுப்பினர் எண்ணிக்கையில், புதிய உறுப்பினர்கள், கடனை உரிய தவணையில் செலுத்தும் உறுப்பினர்கள் ஆகியோர் எண்ணிக்கை (லட்சத்தில்)	1·47	1·17

1971–72, 1972–73 ஆம் ஆண்டுகளில், *13* சதவீத சங்கங்கள் கடன்களை உரிய தவணைகளில் செலுத்தாமல் நிலுவையாக வைத்திருப்பதனாலும், *12* சதவீத சங்கங்கள் தவறான நிர்வாகத்தினாலும் கடன் பெறத் தகுதியற்றவையாக இருந்தன என்பது புலனாகும். இதனால் கடன் பெற முடியாமற்போன புதிய உறுப்பினர்கள், உரிய தவணைகளில் கடன்களைச் செலுத்தும் உறுப்பினர்கள் ஆகியோரின் வீதாச்சாரம், இம் மாநிலத்தில் உள்ள சங்கங்கள் அனைத்தின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையைப் பொறுத்தவரையில் முறையே 4 சதவீதமும் 3 சதவீதமுமாகவே இருந்தாலும், தகுதியற்ற சங்கங்களின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையைப் பொறுத்தமட்டில் மேற்படி வீதாச்சாரம் இந்த இரு ஆண்டுகளில் முறையே 74 சதவீதமும் 72 சதவீதமுமாக உயர்ந்திருந்தது. சில பகுதிகளில் சங்கங்களின் உறுப்பினர் சிலர் கடனை உரிய தவணைகளில் செலுத்தத் தவறியதன் காரணமாக, அச் சங்கங்களின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் கடன் பெற முடியாமற் போயிற்று என்பது இதிலிருந்து புலனாகும். ஆகவே, இந்தப் பிரச்சினை புறக்கணிக்கத் தக்க அளவுக்கு சிறியதெனக் கூற இயலாது.

5.5.2. இப் பிரச்சினை குறித்து துறை பரிசீலித்து வந்துள்ளதென்பது எங்களுக்கு மகிழ்ச்சியைத் தருவதாக உள்ளது. கடன் தவணைகளைத் திருப்பிச் செலுத்தத் தவறுதவர்களுக்கு ஏற்படுகிற இன்னலைக் குறைக்கும் பொருட்டு, கடன் நடைமுறைகளை ஓரளவு தளர்த்தி வந்துள்ளது. இத் துறை அவ்வாறு தளர்த்திய விவரங்கள் வருமாறு :—

கடன் தவணைகளைச் செலுத்துவதில் தவறாத உறுப்பினர்களும், புதிய உறுப்பினர்களும் மிகு பயன் தரும் பயிர் வகைகள் திட்டத்தின் செயல்வரம்புக்குள் வந்தால் அல்லது அவர்கள் சர்க்கரை ஆலைகளுடன் பதிவு

செய்து கொண்ட கரும்பு பயிரிடுபவர்களாக இருந்தால் அவர்களுக்குக் கடன்கள் வழங்கும் பொருட்டு, சங்கங்கள் எந்த அளவுக்குக் காலங்கடந்த நிலுவைகளைச் செலுத்த வேண்டியுள்ளது என்பதை கருதிப் பாராமலேயே, மத்திய வங்கிகள் அச் சங்கங்களுக்குக் கடன்களை வழங்கலாம். சிறப்பு அதிகாரிகளால் அல்லது மேற்பார்வையாளர்-மேலாளர்களால் நிர்வகிக்கப் படும் சங்கங்களுக்கும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சங்கங்கள் ஒருங்கிணைந்ததால் அமைக்கப்பட்ட சங்கங்களுக்கும் கூட, அவற்றின் புதிய உறுப்பினர்களுக்கும் கடன் தவணைகளைத் திருப்பிச் செலுத்தத் தவறாத உறுப்பினர்களுக்கும் நிதியுதவி அளிப்பதற்கென, கடன்கள் வழங்கப்படலாம். இந்தப் பொதுவான விதிவிலக்குகளுக்கு மேலாக, சில நிபந்தனைகளுக்குட்பட்டு, உண்மையான காரணங்களை முன்னிட்டு தனிப்பட்ட நேர்வுகளில் காலங்கடந்த நிலுவைகள் வசூலிக்கப்படாமல் இருக்குமாயின், அத்தகைய நேர்வுகளில் நிபந்தனைகள் தளர்த்தப்படுகின்றன. ஆனால், அத்தகைய நேர்வுகளில் நடுவர் தீர்ப்புக்கான நடவடிக்கைகளையும், அவற்றை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்வதன் மூலம் காலங்கடந்த நிலுவைகளின் சதவிதத்தைக் குறிப்பிட்ட ஒரு கால அளவில் 50 சதவிதத்திற்குக் குறைவான அளவுக்குக் கொண்டு வர வேண்டும் என்பது போன்ற சில நிபந்தனைகள் நிறைவு செய்யப்பட வேண்டும்.

5.5.3. கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறும் சங்கங்களுக்குப் புதிதாக கடன்கள் வழங்க மறுப்பதற்கு அடிப்படை நியாயம் உள்ளது. அச் சங்கம் சட்டப்படி இணைக்கப்பட்ட பிரிவாகும். உறுப்பினர்களின் பரஸ்பர அறிவு, பொறுப்பு ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த தனித்தன்மை வாய்ந்த ஒரு நிறுவனமாக அது இருக்கிறது. அச் சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவரும் அச் சங்கத்தின் கூட்டுறவுத் தன்மை பேணி வரப்படுவதற்குக் கூட்டாகப் பொறுப்பாளி களாவர். இதுவே மேற்கூறிய நியாயமாகும். அத்தகைய சங்கங்களுக்குப் புதியக் கடன் வழங்குவது மறுக்கப்படுவதால், பிற கிராமவாசிகள் பாதகம் அடையாமலிருக்கும் வகையில், கடன் பாக்கிக்காரர்கள் தங்களது நிலுவைகளைச் செலுத்தித் தீர்ப்பதற்கு அது ஒரு தூண்டுகோலாக அமையும். ஏட்டளவில் பார்த்தால் கடன் தவணைகளைச் செலுத்தத் தவறும் தனிப்பட்ட உறுப்பினருக்கு எந்தக் காரணத்தைக் கொண்டு கடன் மறுக்கப்படுகிறதோ அதே காரணம், கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறும் சங்கத்திற்கும் பொருந்தும். ஆனால், இரண்டிலும் உள்ள நிலைமை வேறுபடுகிறது. தொடக்கக் காலத்தில் ஒரு சங்கத்தில் குறைவான, தெரிந்தெடுத்த உறுப்பினர்களே இருந்தனர். பரஸ்பர ஒத்துழைப்பின் முக்கிய தத்துவத்தை வலியுறுத்தும் கூட்டுறவு கோட்பாடு அப்போது நன்கு உணரப்பட்டது. அத்தகைய் சூழ்நிலையில், இந்த வரையறையை விதிப்பதற்கு ஓரளவு நியாயம் இருந்திருக்கக் கூடும். ஆனால், தற்போதுள்ள சங்கம், அதிக அளவிலான உறுப்பினர்களடங்கிய பெரிய பிரிவாகும். உண்மையாகக் கூறின், எவரை வேண்டுமானாலும் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ள சட்டம் வகை செய்கிறது. "வரையறுத்த பொறுப்பிற்கு" ஆதரவாக கொள்கை மாற்றம் ஏற்பட்டுள்ளதே, பரஸ்பர பொறுப்பு குறித்த கோட்பாடு கணிசமான அளவுக்குக் குறைந்துவிட்டது என்பதைத் தெளிவாக்குகிறது. இச் சூழ்நிலையில், கிராம அளவில் கூட்டுப் பொறுப்பு என்ற கோட்பாட்டின் அடிப்படையில் கடன் நடைமுறைகளை முறைப்படுத்துவது பிரத்யட்ச உணர்வுக்கு உகந்ததாக இருக்காது. இக் கோட்பாட்டைச் செயல்படுத்தினால் சுற்றி சுற்றி ஒரே நச்சு வட்டத்தையே ஏற்படுத்தும்' தமது நிலுவைகளைச் செலுத்த இயலும் உறுப்பினர்கள் கூட, அவற்றைச் செலுத்தமாட்டார்கள். ஏனென்றால், தமது நிலுவைகள் கொடுத்துத் தீர்க்கப்பட்டு விட்டால், தமக்குப் புதிய கடன்கள் கிடைக்காது என்று அவர்கள் அஞ்சுகிறார்கள். இதனால் சங்கத்தின் நிலுவைத் தொகைகள் பெருகுகின்றன. அதன் விளைவாக மத்திய வங்கியிலிருந்து மேற்கொண்டும் அச் சங்கங்கள் கடன்

பெறுவதற்கான வாய்ப்புகள் குறைகின்றன. சங்கத்திற்குப் புது உறுப்பினர்களும் சேர்வதில்லை. ஏனென்றால் தமக்குக் கடன்கள் கிடைக்காது என்று அவர்கள் அறிவர். இவ்வாறாக, இந்த வரையறை, பரந்த அளவில் உறுப்பினர்கள் அனுமதிக்கப்படுவதன் முன்னேற்றத்தைத் தடை செய்கிறது. அத்துடன், பிறரது தேவைகளைக் கருதிப் பாராமல, கடனை வாங்கிற, தங்கள் விருப்பம்போல் கடனைத் திருப்பிச் செலுத்துகிறவர்களே சங்கத்தில் உறுப்பினர்களாக இருப்பர். நிறுவன நிதியுதவியை வளர்ச்சியுறச் செய்வதே கொள்கையாகுமென்பதால், அரசுக் கடன்களும் (மும்முர உரமிடும் திட்டக் கடன்கள்), நிறுத்தப் பட்டுள்ளன என்பதை இத்தொடர்பாக நாங்கள் கூற விழைகிறோம். எனவே, கடன்கள் பெறத் தகுதியற்ற சங்கங்களின் புதிய உறுப்பினர்களும் கடன் தவணைகளை முறையாகச் செலுத்தும் உறுப்பினர்களும் இந்த மாற்று வாயிலைக் கடன் பெறுவதற்கு நம்பியிருக்க இயலாது. தனியாரிடமிருந்து கடன் பெற இயன்றாலும் அதற்குரிய வட்டி அதிகமாக இருக்கும். வணிக வங்கிகளுக்குச் சென்று கடன் பெறுவது என்பது எல்லோருக்கும் இயலாது. இப்பொருள் தொடர்பாக, கூட்டுப் பொறுப்பு கோட்பாட்டைச் செயல்படுத்துவதிலுள்ள நடைமுறை இடர்ப்பாடுகளை உணர்ந்துதான், சில நேர்வுகளில் துறை விதிவிலக்குகளை அனுமதித்துள்ளது. சாதகமான சூழ்நிலையில் மட்டுமே, பலனளிக்கும் ஒரு கோட்பாட்டினின்றும் விலகிச் செல்வதன் அவசியத்தை உணர்ந்ததன் மேல், சங்கங்களின் காலங்கடந்த நிலுவைகள் என்னவாயிருந்த போதிலும், புதிய உறுப்பினர்களுக்கும் கடன் தவணைகளை முறையாகச் செலுத்தும் உறுப்பினர்களுக்கும் கடன்கள் வழங்கும் குறிப்பிட்ட நோக்கத்திற்காக, அச்சங்கங்கள் அனைத்திற்கும் நிதியுதவி அளிப்பது விரும்பத்தக்கது என்று நாங்கள் கருதுகிறோம்.

5.5.4. தற்போதுள்ள வரையறையை முழுவதும் நீக்கிவிட்டால், கடன் தவணைகளைத் திருப்பிச் செலுத்தாத உறுப்பினர் கடன் தவணைகளை முறையாகச் செலுத்தும் உறுப்பினரின் பெயரில் கடன்களைப் பெற்று தங்களது காலங்கடந்த நிலுவைகளைத் தீர்ப்பது போன்ற சில முறைகேடுகள் நிகழ வாய்ப்பு ஏற்படக்கூடும். கடன் தொகைகள் தனிப்பட்ட நில உடைமைகளின் பரப்பிற்கேற்பவும், பயிரிடப்படும் பயிர் வகைக்கேற்பவும் (ஆண்டுக் கடன் வரையறைத் திட்டத்தின் கீழ்) வரையறுக்கப்படும் வரையில், அத்தகைய முறைகேடு நிகழ்வதற்கான வாய்ப்பு மிகக் குறைவே.

5.5.5. குறிப்பிட்ட ஒரு விகிதாச்சாரத்திற்கு நிலுவைகளைக் கொண்டுள்ள சங்கங்களுக்குப் புதிய கடன்கள் வழங்கப்படக் கூடாதென்று ரிசர்வ் வங்கி நிபந்தனை எதும் விதிக்கவில்லை என்று எங்களிடம் கூறப்பட்டுள்ளது. ஆனால், மத்திய வங்கிகளுக்கு அனுமதிக்கப்பட்ட கடன் வரையறைகள் குறித்து, அவற்றால் ரிசர்வ் வங்கியிடமிருந்து பெறப்படும் தொகைகள், கிராமச் சங்கங்கள் குறித்து நிலுவையாக உள்ள கடன்களால் (காலங்கடந்த நிலுவைகள் இல்லாதவை) ஈடுசெய்யப்பட வேண்டுமென்று ரிசர்வ் வங்கி வற்புறுத்துகிறது. கடன் தொகையில் 50 சதவீதத்திற்கு மேற்பட்டு நிலுவைகள் கொண்டுள்ள சங்கங்களுக்கு கடன் வழங்குவதைக் கட்டுப்படுத்துவது நடைமுறையில் நியாயமானது என்பதை இந்த நிலைமை மெய்ப்பிக்கிறது. இறுதியாக, குறிப்பிட்ட ஒரு வரையறைக்கு மேற்பட்ட நிலுவைகள் கொண்டுள்ள சங்கங்களுக்கு நிதியுதவி அளிப்பதில் கருதிப் பார்க்க வேண்டிய முக்கியமான கூறு என்னவென்றால், கிராமச் சங்கங்கள், மத்திய வங்கிகள், மாநிலக் கூட்டுறவு வங்கி ஆகியவற்றிற்கு, நிலுவைகளைத் தாங்கிக் கொள்ளும் திறனாகும். ஒரு மத்திய வங்கி அளிக்கும் கடனில் சுமார் 50 சதவீதம் ரிசர்வ் வங்கியிலிருந்து பெறப்பட்ட கடன் தொகையிலிருந்து அளிக்கப்படுகிறது என்றும், எஞ்சிய 50 சதவீதம்

அதன் சொந்த நிதிவாயில்களிலிருந்து (சொந்த நிதிகள், வைப்பீட்டுத் தொகைகள்) அளிக்கப்படுகிறது என்றும் எங்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. 10 சதவீதத்திற்கும் குறைவான சங்கங்களே, 1972–73 இல் கேட்புத் தொகையில் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட தொகையை மத்திய வங்கிகளுக்கு நிலுவையாகச் செலுத்த வேண்டியிருப்பதைக் கருத்தில் கொண்டு பார்த்தால், இச் சங்கங்களின் காலங்கடந்த நிலுவைத் தொகைகளைத் தங்களது நிதிவாயில்களைக் கொண்டே தாங்கிக்கொள்ள மத்திய வங்கிகளுக்கு இயல வேண்டும். கடன் தொகைக்கான வாயில்கள், எல்லா அளவுகளிலும் கிராமச் சங்கம், மத்திய வங்கி, மாநிலக் கூட்டுறவு வங்கி, அரசுப் பங்கு மூலதனம், அவைகளின் சொந்த பங்கு மூலதனம், வைப்பீடுகள் ஆகியவற்றின் மூலம் கணிசமாகப் பெருகியுள்ளன. வறட்சி காரணமாக பயிர்கள் பலன் தரத் தவறிய நேர்வில், குறுகியக் காலக் கடன்களை நடுத்தரக் காலக் கடன்களாக மாற்ற இயலும் வகையில் நிலைப்படுத்து நிதிகள் **Stalulisation Funds** ஏற்படுத்தப் பட்டுள்ளன. கடன் நிலுவைத் தொகைகளை வசூலிக்க திறமை மிக்க அமைப்பு ஒன்று துறையால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தவிர, வங்கிகளிடம் கடன்பட்டிருக்கிற சங்கங்களுக்கு உறுப்பினர்களிடமிருந்து வரவேண்டிய தொகை குறித்து டிக்ரிகளைப் பிறப்பித்து நிறைவேற்றுவதற்கான அதிகாரம், மத்திய வங்கிகளுக்கு முகமையில் அனுப்பப்பட்டுள்ள துறை அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைகள் என்னவாக இருப்பினும் அவற்றிற்கு கடன் தொகைகளைத் திருப்பிச் செலுத்தத் தவறாத உறுப்பினர்களுக்குக் கடன் வழங்குவதற்காக மத்திய வங்கிகள் அவற்றிற்கு நிதி உதவி அளிக்க இயலவேண்டும் என்று இது தொடர்பில் நாங்கள் கருத்து கொண்டுள்ளோம். ரிசர்வ் வங்கி அனுமதித்த கடன் வழங்கு வரையறைகள் குறித்து காலங் கடந்ததாயிராத நிலுவைத் தொகைக்கு ஈடு கட்டுவதற்கு மத்திய வங்கிக்கு நிதி வசதியைக் குறைக்காமல் இக் கொள்கை பெருக்கவே செய்யும். தொகை கட்ட தயக்கம் காட்டுகிற உறுப்பினர்கள் தங்களது கடன் தவணைத் தொகைகளைச் செலுத்த முன் வருவர். ஏனெனில், ஒருமுறை தாங்கள் தவணைத் தொகையைச் செலுத்திவிட்டால், சங்கம் செலுத்த வேண்டிய நிலுவை குறித்த இடர்ப்பாடான நிலை, அவர்கள் புதிய கடன்களைப் பெறுவதற்கு முட்டுக்கட்டையாக நிற்காது என்பதை அவர்கள் அறிவர். காலங்கடந்ததாயிராத தொகையை ஈடுகட்டுவதற்காக வங்கியில் நிதிவசதியை பெருக்கவும் இது உதவும். சங்கத்தில் சேராமலுள்ள ஏராளமானவர்கள் உறுப்பினர்களாகச் சேர்வார்கள். பரந்த அடிப்படையில் உறுப்பினர்கள் இருப்பதால் சங்கத்தின் கடமைகளையும் பொறுப்புகளையும் உணர்ந்து செவ்விய முறையில் சங்கங்கள் நிர்வகிக்கப்பட வழியேற்படும். இதனால் சங்கத்தின் நிலுவைத் தொகைகள் குறையும். மேற்சொன்ன கூறுகள் அனைத்தையும் கருத்தில் கொண்டு பார்த்தால் கடன் தவணைத் தொகைகளைச் செலுத்தத் தவறாத உறுப்பினர்களுக்குக் கடன் அளிப்பது நோக்கமாக இருக்கும் நேர்வில், காலங்கடந்த நிலுவைத் தொகைகள் உள்ள சங்கங்களுக்கு நிதி உதவி அளிப்பதில் உள்ள தடையை முற்றிலும் அகற்ற நாங்கள் தெரிவித்த பரிவுரைக்குச் செயல் வடிவம் கொடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

5.5.6. கேட்புத் தொகையில் 50 சதவிகிதத்திற்கு மேற்பட்ட அதிக நிலுவைகளைக் கொண்டுள்ள சில சங்கங்களுக்கு நிதி உதவி செய்யப் பட்டுள்ளதால், நிலுவைகளைச் செலுத்துவதில் மத்திய வங்கியே தவற வாய்ப்பு ஏற்படலாம். (மாநிலக் கூட்டுறவு வங்கியும் தனது நிதிவாயில்களிருந்து அந்த நிலுவையை ஈடுசெய்ய இயலாது) ஆனால், அத்தகைய ஒரு நிலைமை ஏற்படுமெனத் தோன்றவில்லை. அவ்வாறான நிலைமை உருவாகிவிட்டால், ரிசர்வ் வங்கி, கடன் கொடுப்பதை நிறுத்தி விட்டதால், பாதிக்கப்பட்டுள்ள அத்தகைய மத்திய வங்கிகளுக்கு தற்காலிக நிதி உதவி வழங்க அரசு முன்வரவேண்டும். ஏராளமான உழவர்களுக்கு உரிய காலத்தில் கடன் வழங்குவதனால் வேளாண்மை உற்பத்தி பெருகுவதைக் கருதிப் பார்க்கையில் அவசர நெருக்கடி காலத்தில் அரசு செய்யும் இந்த நிதி உதவி நியாயமானதே.

5.5.7. தவறான நிர்வாகம் காரணமாக விசாரணை நடந்து வருகிற சங்கங்களுக்கு புதியதாகக் கடன் வழங்குவதை நிறுத்துவதற்கு காரணம், புதியதாக வழங்கப்படும் கடன்கள் உரியவாறு பயன்படுத்தப் படாது என்ற அச்சமேயாகும். அத்தகைய நேர்வுகளில், நிர்வாகத்தைக் கலைத்துவிட்டு, தனி அதிகாரிகளை அல்லது மேற்பார்வையாளர்—மேலாளர்களை நியமிப்பதற்கு துறை விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியத்தை நாங்கள் வலியுறுத்துகிறோம். அப்போதுதான், செவ்விய முறையில் நிர்வாகம் நடைபெறாத சங்கங்களில் உள்ள நல்ல உறுப்பினர்கள் அதிக காலம் இடர் பாட்டையாமலிருப்பர்.

கடன்கள் வழங்குதல்.

5.6. நான்காவது திட்டம் தொடங்குகையில் அதாவது 1968-69-ல், மாநிலத்தில் உள்ள கிராமக் கடன் வழங்கு சங்கங்கள் ரூ. 44.12 கோடி மதிப்புள்ள குறுகிய காலக் கடன்களையும், நடுத்தரக் காலக் கடன்களையும் (குறுகிய காலக் கடன் ரூ. 39.24 கோடி, நடுத்தரக் காலக் கடன் ரூ. 4.88 கோடி) வழங்கியது. 1973-74 இறுதி ஆண்டில் ரூ. 70 கோடி அளவிற்குக் கடன்கள் வழங்கப்படவேண்டுமென நான்காவது திட்டம் கருதுகிறது. 1969-70 முதல் 1972-73 வரை முறையே ரூ. 42.77, 44.43, 57.34, 65 கோடி கடன் வழங்கப்பட்டது. 1969-70, 1970-71 ஆண்டுகளில் அதிக அளவில் கடன் வழங்கப்படவில்லை. வறட்சி நிலை காரணமாகக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதில் அதிக நிலுவைகள் இருந்ததே இதற்கு முக்கிய காரணமாகும். குறிப்பிட்ட உற்பத்திக் காரியங்களுக்கு மட்டுமே கடன்கள் வழங்கப்படுவதை உறுதி செய்யும் நோக்குடன், நடுத்தரக் காலக் கடன்களை வழங்குவது குறித்து சீரமைப்பு விதிமுறைகளை கொண்டுவரப்பட்டதும் இதற்கு ஓரளவு காரணமாகும்.

காலங்கடந்த நிலுவைகள்.

5.7.1. 1967-72 ஆண்டுகளில், தமிழ்நாட்டில் உள்ள கிராமக் கடன் வழங்கு சங்கங்கள், மத்திய வங்கிகள் செலுத்த வேண்டியிருந்த காலங் கடந்த நிலுவைகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

கால அளவு.	கேட்பு.	வசூல்.	நிலுவை.	நிலுவை சதவீதம்.
	(ரூபாய் கோடியில்)			
கிராமக் கடன் வழங்கு சங்கங்கள்—				
30—6—1967	48 20	35·33	12·87	26·7
30—6—1972	64·86	49·18	15·67	24·2
மத்திய வங்கிகள்				
30—6—1967	41·61	34·32	7·29	17·5
30—6—1972	62·08	55·35	6·73	10·8

கூட்டுறவுத் துறையில் மேம்பாடடைந்த மாநிலங்களில் காலங்கடந்த நிலுவைகள் அனைத்திந்திய அளவில் நிலுவைகள் ஆகியவை பற்றிய 1969-70-ஆம் ஆண்டுக்கான ஒப்பு நோக்குப்புள்ளி விவரங்கள் உள்ளன. இந்தப் புள்ளி விவரங்கள், நிலுவைக்கு உள்ள சதவீதமாகக் கொடுக்கப்பட்டுள்ளன; கேட்புக்கு உள்ள சதவீதமாகக் கொடுக்கப்படவில்லை. 1969–70 இறுதியில், பஞ்சாப், மகாராஷ்டிரா, குஜராத் ஆகிய மாநிலங்களில் உள்ள கிராமக் கடன் வழங்கு சங்கங்களின் நிலுவைத் தொகையின் சத வீதம் முறையே 39, 40, 21 ஆக இருந்தது; தமிழ்நாட்டில் அது 37 சதவீதமாக இருந்தது. அனைத்திந்திய சதவீதம் 38 ஆக இருந்தது. மத்திய

வங்கிகளின் அளவில் பஞ்சாப், மகாராஷ்டிரா, குஜராத் ஆகிய மாநிலங்களில் முறையே 36.6, 30.2, 14.1, சதவீதமாக இருந்தது; இது தமிழ் நாட்டில் 15.4 சதவீதமாக இருந்தது.

5.7.2. காலம் கடந்த நிலுவை வசூலிப்பதற்கு முக்கியப் பாதுகாப்பு வலுக்கட்டாய நடவடிக்கையை மேற்கொள்வது ஆகாது. மாறாக, கடன் வழங்கும் முறையைச் சீரமைப்பதே சிறந்த பாதுகாப்பாகும். கடன்கள் உரிய காலத்தில் அதாவது உற்பத்திக்காகத் தொகை தேவைப்படும்போது அது கொடுக்கப்படாவிட்டால், பின்னர் அத்தொகையைத் தவறான வழியில் வேறு காரியங்களுக்குப் பயன்படுத்த வழிகோலும். அதன் விளைவாகக் கடன் பெற்றவர் உரிய நாளில் கடன் தவணையைச் செலுத்த முடியாமற் போய் விடுகிறது. கடனில் ஒரு பகுதியை இரசாயன உரம், விதைகள் போன்ற வேளாண்மைப் பயிரிடு பொருள்கள் வழங்குவதனால் கடன் தொகை தவறான வழியில் பயன்படுத்தப்படுவது பெரிதும் குறையும். வான் பொய்த்தல், வறட்சி நிலைமை போன்ற உண்மையான காரணங்களை முன்னிட்டு கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறிவிடும் நேர்வில் அக் கடனைத் திருப்பிச் செலுத்த கால நீட்டிப்பு வழங்கப்பட வேண்டும். கடைசி முயற்சியாக மட்டுமே வலுக்கட்டாய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். நடுவர் தீர்ப்புக்கான மனுக்களையும் நிறைவேற்றல் மனுக்களையும் முடிவு செய்ய மத்திய வங்கிகளைச் சேர்ந்த துறை நிர்வாக அதிகாரிகளுக்கு அதிகாரம் அளித்து, அதன் மூலம், காலம் கடந்த தவணைத் தொகைகளை விரைந்து வசூலிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தாலும், நடுவர் தீர்ப்புக்கு அல்லது நிறைவேற்றுதலுக்கான மனுக்களை தாக்கல் செய்ய கிராமச் சங்கங்களின் நிர்வாகத்தினர் ஆர்வம் காட்டாமல் இருப்பதும், காலம் கடந்த தவணைத் தொகைகளை வசூலிப்பதில் தாமத மேற்படுவதற்குப் பெரிதும் காரணமாகும் என்று நாங்கள் அறிகிறோம். குறிப்பாகப் பொய்யான பெயரில் அல்லது மாற்றுப் பெயரில் கடன்கள் கொடுக்கப்பட்டிருக்கும் நேர்வில் இத்தகைய நிலை நிலவுகிறது. இத்தகைய நேர்வுகளில் சங்கங்களின் நிர்வாகத்தினர் வலுக்கட்டாய நடவடிக்கைக்கான மனுக்கள் தாக்கல் செய்வதைத் தவிர்க்கின்றனர் அல்லது ஒத்திப் போடுகின்றனர். கூட்டுறவு குறித்த சந்தானம் குழு இதுபற்றிப் பரிசிலித்தது. தொகை செலுத்துமாறு வேண்டுகோள் விடுத்து அது பலனளிக்காமற் போய்விட்டால் கடன் தவணைத் தொகையைச் செலுத்த வேண்டிய நாளிலிருந்து 3 திங்களுக்குள் வசூலிக்க நடவடிக்கை எடுக்கத் தொடங்குவது சங்கத்தின் நிர்வாகத்தினரது கடமையாகும் என்றும் இக்கால அளவுக்குள் நிர்வாகத்தினர் நடவடிக்கை எடுக்கத் தவறி விட்டால் சங்கத்தின் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அக் குழு பரிவுரை செய்தது. அடுத்த 3 திங்களுக்குள் செயலாளரும் நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டால், நிதியுதவி செய்யும் வங்கி அந்த நடவடிக்கையை எடுக்க தகுந்த சட்ட விதித் துறை ஒன்றின் மூலம் அந்த வங்கிக்கு அதிகாரமளிக்கப்பட வேண்டும் என்று அக் குழு கருத்துத் தெரிவித்தது. இப் பரிவுரை குறித்து ஆணை ஏதும் இதுவரை பிறப்பிக்கப்படவில்லை. குறிப்பாக, கடன் வசதிகள் விரிவுபடுத்தப்படும் நேர்வில் வேளாண்மை உற்பத்தியில் ஏற்படும் விளைவைக் கருதி, தவணைத் தொகைகள் காலம் கடந்து போவதைத் தவிர்க்கும் பொருட்டு, இப் பரிவுரை குறித்து உடனடி நடவடிக்கை எடுப்பது அவசியமாகும் என்று ஆணைக் குழு கருதுகிறது. இது தொடர்பாக, 5.5.5. பத்தியில் கூறியுள்ள எங்களது பரிவுரையைக் கவனத்துக்குக் கொண்டுவர விழைகிறோம். தவணைத் தொகைகளை உரிய காலத்தில் செலுத்தாது நிலுவையாக வைத்துள்ள சங்கங்களுக்கு நிதியுதவி செய்வதன் மீதான தடை முற்றிலும் நீக்கப்பட வேண்டுமென்று மேற்கண்ட பத்தியில் நாங்கள் பரிவுரை செய்துள்ளோம். இப் பரிவுரையினை முன்னிட்டு, சங்க உறுப்பினர்கள் செலுத்தாமலுள்ள தவணைத் தொகைகளை வசூலிப்பதற்கு நேரடி நடவடிக்கை எடுக்க சில நிபந்தனைகளின் கீழ் மத்திய வங்கிகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டுமென்ற கருத்து கூடுதல் முக்கியத்துவம் பெறுகிறது.

கடன் ஒப்பளிப்பு முறை—ஆண்டுக் கடன் வரம்புகள்

5.8.1. கடன்களுக்கு அனுமதி வழங்குதல், கடன் தொகையைக் கொடுத்தல் ஆகியவை சம்பந்தப்பட்ட விரிவான நடைமுறையை எளிதாக்க அவ்வப்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்துள்ளன. கடைசியாக வகுத்த நடைமுறையாகிய ஆண்டுக் கடன் வரம்பு முறை, சுமார் ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளுக்கு முன்பு செயலுக்கு வந்தது. இந்த நடைமுறையின்படி, ஒரு சங்கத்தின் ஒவ்வோர் உறுப்பினருக்கும், அவர் வைத்திருக்கும் வேளாண்மை நிலங்கள், ஒரு குறிப்பிட்ட பயிருக்கு ஏக்கர் ஒன்றுக்கு அளிக்கப்படும் நிதியுதவி அளவு ஆகியவற்றையொட்டி ஓர் ஆண்டிற்கான கடன் வரம்பு முடிவு செய்யப்பட்டு, கிராமச் சங்கத்தால் ஒருங்கிணைந்த விண்ணப்பம் ஒன்று மத்திய வங்கிக்கு அனுப்பப்படுகிறது. கடன் விண்ணப்பத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டு விட்டால், ஒவ்வோர் உறுப்பினருக்கும் முடிவு செய்யப்பட்ட உயரளவு வரம்புக்குட்பட்டு, உறுப்பினர் கடன் பெற அனுமதிக்கப்படுகிறது. உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட கடன் வரம்பு விவர அறிக்கை தொகுதி தொகுதியாக அவர்கள் இருக்கும்போது பொதுவாகத் தயாரிக்கப்படுகிறது. இந்த அறிக்கை தயாரிக்க 2 அல்லது 3 திங்கள் ஆகிறது. விண்ணப்பம் தயாரிக்கும் பணி ஒவ்வோர் ஆண்டும் மார்ச் திங்களுக்குள் முடிவடைய வேண்டும். விண்ணப்பங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கியது பற்றி சங்கங்களுக்கு மத்திய வங்கி உரிய காலத்திற்குள் தெரிவிக்க வேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது. அப்போதுதான், அடுத்துவரும் விளைச்சல் ஆண்டின் முதன்மைப் பயிருக்கு, அனுமதிக்கப்பட்ட கடன் வரம்புக்குள் கடன் தொகை பெற சங்கங்களுக்கு இயலும்.

5.8.2. ஆயினும், நடைமுறையில் பார்க்கும்போது, பணியை உரிய காலத்திற்குள் முடிப்பதில் தாமதம் ஏற்படுவதாகத் தோன்றுகிறது. கடன்கள் கொடுப்பதிலும் தாமதமேற்படுவதோடு கடன் மிகவும் அவசியமாகத் தேவைப்படும்போது கடன் கிடைக்காமற் போகிறது. இப்பொருள் பற்றி சந்தானம் குழு பரிசீலித்தபோது, பெரும்பாலான உறுப்பினர்கள் நேர்வில், நில உடைமைகளும் பயிரிடு செலவும் அடிக்கடி மாறுவதில்லையென்றும், ஒவ்வோர் ஆண்டும் எழுத்துப் பணி மிகுதியாகிற அளவிற்கு அதே கணக்கிடுகளை மீண்டும் மீண்டும் செய்வதிலும் விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்வதிலும் அனுகூலம் ஏதும் இருக்காது என்றும் அக் குழு குறிப்பிட்டது. ஒவ்வோர் உறுப்பினருக்கும் அவர் பயிர்த் தொழிலுக்காகச் செய்யும் செலவினையொட்டி கடன் வரம்புக்கு ஒரு முறை ஏற்பளிக்கப்பட்டு விட்டால், அது ஐந்து ஆண்டுகளுக்குச் செல்லுபடி யாவதாக இருக்க வேண்டும். இக்கால அளவிற்குள் நில உடைமைகளின் பரப்பிலும் பயிரிடு முறையிலும் மாற்றங்கள் (எவையேனும்) ஏற்பட்டால் அவற்றையொட்டி அந்த உறுப்பினருக்கான கடன் வரம்பு மாற்றி யமைக்கப்படலாம். அத்தகைய மாற்றங்கள் துணைக் கடன் வரம்பில் இடம் பெற வேண்டும். இவ்வாறு அக் குழு கருத்துத் தெரிவித்தது. குழு மேலும் தெரிவித்தாவது: இந்த நடைமுறையை மேலும் செவ்விய முறையில் செயல்படுத்தும் பொருட்டு, ஒவ்வோர் உறுப்பினருக்கும் கடன் குறித்த புத்தகம் ஒன்று (Credit book) கொடுக்கப்பட வேண்டும். அப் புத்தகம் ஐந்து ஆண்டுகளுக்குச் செல்லுபடியாவதாக இருக்க வேண்டும். அப் புத்தகத்தில், அந்த உறுப்பினருக்குச் சொந்தமாகவுள்ளதும் பயிரிடப்பட்டு வருவதுமான நிலம், பயிர் முறை, கடன் வரம்பு, பங்கு மூலதனம், பெறப்பட்ட தொகை, திருப்பிச் செலுத்தப்பட்ட தொகை ஆகியவை பற்றிய விவரங்கள் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

5.8.3. இப் பரிவுரை குறித்து இதுவரை ஆணையேதும் பிறப்பிக்கப் படவில்லை. ரிசர்வ் வங்கியின் கருத்துக்களைக் கருதிப் பார்த்த பின்னரே முடிவு எடுக்கப்பட வேண்டிய பொருளாகும் இது எனத் தோன்றுகிறது. இது பற்றி இறுதி முடிவு எடுக்கும் வரை, முந்திய ஆண்டில் சங்கங்களுக்கு

அனுமதிக்கப்பட்ட கடன் வரம்பின் அடிப்படையில் முதன்மைப் பயிருக்குக் கடன் தொகை பெற அனுமதிக்குமாறு மத்திய வங்கிகளுக்குக் கட்டளையிடலாம் என்று நாங்கள் பரிவுரை செய்கிறோம். இதற்கிடையில், ஒப்பளிப்பு வழங்கும் பணி முடிக்கப்படலாம். உழவர்களுக்குத் தொடர்ந்து முதன்மைப் பயிருக்கும் இரண்டாவது பயிருக்குமான கடன் வரம்புகளுக்கு கடன் வழங்கப்படுவதை இது உறுதி செய்வதோடு அடுத்த பயிருக்குத் தேவைப்படும் போதுமான கடனுதவியை உழவர்கள் பெற இதனால் ஏதுவாகும். தொடர்ந்தும் முறையாகவும் கடன் வழங்குவதானது கடன்களை உரிய காலத்திலும் ஒழுங்காகவும் திருப்பிச் செலுத்த ஊக்கமளிப்பதாக இருக்கும்.

கிராமச் சங்கங்களின் உறுப்பினர்கள் தங்கள் இயங்காச் சொத்தின் மீது சட்டப்படிக்கான பொறுப்பை ஏற்படுத்துதல்.

55.9.1. சங்கத்தின் ஓர் உறுப்பினருக்கு அவ்வப்போது கொடுக்கப்படக் கூடிய கடன்களைப் பொறுத்தமட்டில் அவர் தமது இயங்காச் சொத்தின் மீது சங்கத்திற்கு ஆதாரவாகப் பிணையப் பொறுப்பை ஏற்படுத்த கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. இது கடன் தொடர்பான நடைமுறைகளை எளிதாக்குவது குறித்த முக்கியக் கூறாகும். சட்டத்தின் 33-ஆவது பிரிவின் கீழ், ஓர் உறுப்பினர் கடன் கேட்டு கிராமச் சங்கத்திற்கு விண்ணப்பம் ஒன்றைச் செய்து கொள்வாரேயாகின், அவர் தமக்குச் சொந்தமாக நிலம் அல்லது பிற இயங்காச் சொத்து வைத்திருந்தால், சங்கம் அவருக்குக் கொடுக்கும் கடன்களைப் பொறுத்தமட்டில் அறிவிப்பு ஒன்றைச் செய்து அந்த அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளதுபோல், அந்த நிலத்தின் அல்லது பிற இயங்காச் சொத்தின் மீது சங்கத்திற்கு ஆதாரவாகப் பிணையப் பொறுப்பை இதனால் ஏற்படுத்துவதாக அவர் அறிவிக்க வேண்டும். ஒரு தடவை செய்யப்பட்ட அறிவிப்பு சங்கத்தின் அனுமதியின்றி மாற்றப்படவோ ரத்து செய்யப்படவோ இயலாது. அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தும், அந்த உறுப்பினர் தாம் வாங்கிய கடன் முழுவதையும் திருப்பிச் செலுத்தும் வரை பிறருக்கு மாற்றப்பட இயலாது. இந்த விதித் துறையை மீறி செய்யப்படும் சொத்துப் பரிமாற்றம் ஏதும் செல்லுபடியாகாது. உறுப்பினர் செய்த அறிவிப்பு பதிவு அஞ்சல் மூலம் வரப் பெற்றவுடன் அதனைத் துணைப் பதிவாளர் பதிவு செய்ய வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம், 1963-ல் செயலுக்கு வந்துவிட்டாலும் மேற்படி சட்டத்தில் கண்டுள்ள முக்கியமான, கட்டளைத் தன்மையுடைய இந்த விதித் துறை இன்னும் செயற்படுத்தப்படவில்லை. அறிவிப்புக் கொடுத்த உறுப்பினர் தமது உறுப்பினர் பதவியை விட்டு விலகும் வரை அல்லது அந்த அறிவிப்பை ரத்து செய்யும் வரை சொத்தின் மீதான பிணையப் பொறுப்பு தொடர்ந்து இருந்து வருவதை அந்த அறிவிப்பு உறுதி செய்யுமா என்ற ஓர் ஐயப்பாடு எழுந்தது. இக் குறைபாட்டைச் சரிசெய்ய இப் பிரிவிற்குத் தகுந்த திருத்தம் ஒன்றைச் செய்ய சந்தானம் குழு பரிவுரை செய்தது. நிலவரி குறித்து அரசின் உரிமைக்கும் நிலவள வங்கி பெயரில் பெறப்படும் அடைமானம் ஏதும் குறித்து அந்த வங்கி உரிமை கோருவதற்கும் உட்பட்டு, ஓர் உறுப்பினரின் கடனுக்காக, அல்லது அக் கடன் குறித்து எந்த அளவுக்கு அவர் தவணைத் தொகை செலுத்த வேண்டுமோ அந்த அளவுக்கு, அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள நிலத்தின் அல்லது பற்றின் மீது சங்கத்திற்கு ஆதாரவாக முதல் பொறுப்பு இருக்க வேண்டும் என்பதற்கு மேற்கண்ட திருத்தம் வகை செய்தது. இத் திருத்தம் இன்னும் அரசின் பரிசீலனையில் இருந்து வருவதாகத் தோன்றுகிறது. இதுபோன்ற கட்டளைத் தன்மையுடைய விதித் துறை மகாராட்டிரக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 48 ஆவது பிரிவில் உள்ளது. இந்த விதித் துறை அந்த மாநிலத்தில் செயலில் உள்ளது. இந்த விதித் துறை செயல்படுத்தப்பட்டால், உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் கடன்களுக்காக அவர்கள் சொந்தப் பிணையம் கொடுக்க வேண்டுமென்று சங்கங்கள் வற்புறுத்துவதற்கு

அவசியமிருககாது. இப்போதைய நடைமுறையின்படி, ஓர் உறுப்பினர் தமக்கென ஒரு பிணையதாரரைத் தேடிக்கொள்ள வேண்டுமென்று கோரப்படுகிறார். இந்த வகையில் ஒருவருக்கொருவர் பிணையம் அளிப்பது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. கடன் விண்ணப்பங்களைத் தயாரிப்பதிலும் அவை குறித்து நடவடிக்கை எடுப்பதிலும் காலதாமதம் ஏற்படுவதற்கு இதுவும் ஒரு காரணமாகும். இந்தக் காலதாமதம் இந்த விதித் துறையால் தவிர்க்கப்படும். மேலும், நிலத்தின் உடைமையாளர்கள் தான் அத்தகைய அறிவிப்பைச் செய்ய வேண்டுமென்பதல்ல. நிலத்தின் குத்தகைக்காரர்களும் கூட அந்த நிலத்தில் குத்தகைக்காரர் என்ற வகையில் தமக்குள்ள பற்று குறித்து அறிவிப்பு ஒன்றைச் செய்யலாம்.

5.9.2. கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 33 ஆவது பிரிவில் வகை செய்யப்பட்டு சந்தானம் குழு கருத்துத் தெரிவித்த திருத்தத்தின் மூலம் திருத்தியமைக்கப்படும் திட்டம். கடன் குறித்த நடைமுறையை எளிதாக்குவதோடு காலதாமதத்தையும் தவிர்க்குமாதலால் அத் திட்டம் உடனடியாகச் செயலுக்குக் கொண்டு வரப்பட வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம். ஆயினும், அறிவிப்புச் செய்து அதன் மூலம் பிணையப் பொறுப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்கு வகை செய்யும் இப்பிரிவு, கட்டளையிடும் வகையில் இருக்கக் கூடாது; மாறாக அவ்வாறு செய்யலாம் என்ற வகையில்தான் இருக்க வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம். சில உழவர்கள், அறிவிப்புச் செய்ய வேண்டுமென்ற நடைமுறையை விரும்ப மாட்டார்கள். சொந்தப் பிணையத்தின் பேரில் அல்லது பிற பிணையத்தின் பேரில் கடன் பெறும் விருப்ப உரிமை அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும். இந்த அறிவிப்பு குறித்த திட்டத்தின் நன்மைகள் பற்றி சங்கத்தின் உறுப்பினர்களுக்கு ஒழுங்காக ஒரு தடவை எடுத்துரைத்தால் அதன் பின்னர் பெரும்பாலோர் இந்த நடைமுறையைப் பின்பற்ற விரும்புவர். இந்த வகையில் ஒருவரைக் கட்டாயப்படுத்துவதானது அத்திட்டத்தின் உட்கிடைக் கூறுபாடுகளை தவறாகப் புரிந்துகொண்டு சில உறுப்பினர்கள் இப்புதிய நடைமுறையை விட்டு ஒதுங்கிச் செல்லச் செய்யும்.

உறுப்பினர்கள் கடன் வாங்குவதற்கான வரம்புகள்

5.10. ஓர் உறுப்பினர் சொந்தப் பிணையத்தின் பேரில் கரும்புப் பயிருக்கு ரூ. 15,000 வரையிலும் ஏனைய பயிர்களுக்கு ரூ. 10,000 வரையிலும் குறுகியக் காலக் கடன் பெறலாம். நிலத்தை அடைமானம் வைப்பதன் பேரில் இவ்வரம்பிற்கு மேற்பட்டு கரும்புப் பயிருக்கு ரூ. 20,000 வரையிலும் ஏனைய பயிர்களுக்கு ரூ. 15,000 வரையிலும் கடன் வாங்கலாம். (உயர்ந்த அளவு கடன் வரம்புகள் நிலப் பரப்புக்கும் குறிப்பிட்ட பயிருக்கு ஏக்கர் ஒன்றுக்கு அளிக்கப்படும் நிதியுதவி அளவு ஆகியவற்றுக்கும் உட்பட்டதாகும். இந்த நிதியுதவி அளவு வேளாண்மை அதிகாரிகளைக் கலந்தாலோசித்து முடிவு செய்யப்படுகிறது.) நடுத்தரக் காலக் கடன்களைப் பொறுத்தவரை பிணையத்தின் பேரில் வாங்குவதற்கான கடன் வரம்பு ரூ. 1,000-ம் நில அடைமானத்தின் பேரில் வாங்குவதற்கான கடன் வரம்பு ரூ. 10,000-ம் ஆகும். குறிப்பாக, நில உச்சவரம்புச் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட உச்சவரம்புச் சூழலில், இவ்வாறு குறுகிய கால, நடுத்தரக் காலக் கடன்களுக்கும் நிர்ணயிக்கப்பட்ட வரம்புகள் போதுமானவையே என்று நாங்கள் கருதுகிறோம்.

வேளாண்மை வல்லுநர்களை நியமித்தல்

5.11. கூட்டுறவு சங்கங்கள் பல காலமாக உழவர்களுக்குத் கடனுதவி செய்து வந்துள்ளன. கடந்த இருபதாண்டுக் காலத்தில் வேளாண்மைத் துறையில் ஏற்பட்ட தொழில் நுட்ப முன்னேற்றம் காரணமாக, வேளாண்மைக் காரியங்களுக்குக் கடன் வழங்குவதற்கான

விண்ணப்பங்களைத் தயாரிப்பதில் நவீன முறைகளையும் பழைய முறைகளில் மாற்றத்தையும் ஓரளவுக்குக் கொண்டு வருவது அவசியமாயுள்ளது. சங்கங்களின் உறுப்பினர்களுக்கு நல வளர்ச்சிப் பணிகளை அளிக்க வேளாண்மை வல்லுநர்களை நியமிப்பது அவசியம் என்று கூட்டுறவு மத்திய வங்கிகள் எவையும் இதுவரை கருதிப் பார்க்கவில்லை. நல வளர்ச்சிப் பணிக்கு அரசுத் துறைப் பணியாளர்கள் இருப்பது உண்மையே. ஆனாலும் கூட்டுறவுத் துறையில் கடன் வாங்கும் உறுப்பினர்களுக்காகவென்றே மேற்படி பணியாளர்கள் இருக்கவில்லை. இம் மாநிலத்தில் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்காகவே அவர்கள் உள்ளனர். வேளாண்மைக் கடன் வழங்கு பணியில் ஈடுபட்டுள்ள இந்திய ஸ்டேட் வங்கியாலும், நாட்டுடைமையாக்கப்பட்ட பிற வணிக வங்கிகளாலும் வேளாண்மை அறிவியல் பட்டதாரிகள் பலர் நியமிக்கப் பட்டுள்ளனர் என்பதை ஈண்டுக் குறிப்பிடலாம். தொழில் கடன்களைப் போல் வேளாண்மைக் கடன்களை வழங்கும் பணியையும் சரிவரச் செய்யும் பொருட்டு, நிதி வழங்கும் அளவு, பருவம் பயிர் நிலவரம், பயிரிடு பொருட்களின் வகை, தவணைகளில் கடன்களை வழங்குதல், அவற்றைப் பயன்படுத்துதலை மேற்பார்வையிடுதல் முதலியவை பற்றி நிதியுதவும் வங்கிக்கு ஆலோசனை அளிக்க அத்துறையில் வல்லுநர்களாயுள்ளவர்களை நிதியுதவும் வங்கி வேலைக்கமர்த்துவது அவசியமானதாகும் என்று நாங்கள் கருதுகிறோம். பல் பயிர் முறையை பொது பயிரிடு முறையாகப் பின்பற்றும் மாவட்டங்களில் முதற்கண் இதனைத் தொடங்கலாம் என்று நாங்கள் கருதுகிறோம்.

தலைமை, மத்திய வங்கிகள் பட்டயக் கணக்கர்களை நியமித்தல்

5.12.1. மாநில, மத்தியக் கூட்டுறவு வங்கிகள் செய்முறை (சர்க்கரை ஆலைகள், நூற்பாலைகள்) விற்பனைச் சங்கங்கள் பலவற்றிற்குப் பெருமளவில் தற்போது நிதியுதவி அளித்து வருகின்றன. மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிகள் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நிதியுதவி அளிக்க வேண்டுமென்று இந்த அறிக்கையின் 15 ஆவது அத்தியாயத்தில் நாங்கள் பரிவுரை செய்துள்ளோம். கடன் பெறும் இந்த நிறுவனங்களின் நிதி நிலைமையைச் சரியான முறையில் மதிப்பிடுவதற்கு அவற்றின் ஐந்தொகைக் கணக்குகள்/வணிகம்/தயாரிப்பு—ஆதாய—விரயக் கணக்குகள் ஆகியவற்றின் அடிப்படையில் அவை செயல்படுவதைப் பரிசீலனை செய்வது அவசியமாகும். நிதியுதவும் வங்கி, கடன் பெறும் நிறுவனங்களின் செயல்களை உன்னிப்பாக கவனிக்க வேண்டும்; மோசமான நிலைமை ஏற்படும்போது அவற்றை எச்சரிக்கவும் வேண்டும். கடன்களைத் திருப்பிச் செலுத்தும் பொறுப்புகளை முறையாகவும் ஒழுங்காகவும் கடன்பெறும் நிறுவனங்கள் நிறைவேற்ற வேண்டுமாயின், அவற்றின் ஆதாயத் தன்மை உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

5.12.2. மத்திய வங்கிகள் செயல்படுவது பற்றிக் கூட அவ்வப்போது மதிப்பிடுவதற்கான முறை எதும் இல்லை எனத் தோன்றுகிறது. இதன் விளைவாக, ஆண்டு முடிவடைந்த பிறகே வங்கிகளிலுள்ள திருப்திகரமற்ற நிதிநிலைப் போக்குகளைக் கண்டுபிடிக்க முடிகிறது. அவ்வப்போது மதிப்பீடுகள் செய்யப்படுமாயின், பரிகார நடவடிக்கைகளை உரிய காலத்தில் எடுத்து நியாயமான ஆதாயம் பெற வங்கிகளுக்கு இயலும். விவேகமான முறையில் நிதிகளை நிர்வகித்து நிதிவாயில்களை முழுமையாகவும் மேலும் சிறந்த முறையிலும் பயன்படுத்துவது குறித்து இன்னும் சிறந்த நாட்டம் செலுத்த வேண்டியது அவசியமாகிறது.

5.12.3. மாநில, மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் கணக்கு நடைமுறையும் சிறிது மாற்றியமைக்கப்பட வேண்டியது அவசியமென எங்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது இந்த வங்கிகளின் கிளை விரிவாக்கத் திட்டம் விரைவாக நடைபெற்று வருவதால், அன்றாட/வாராந்தர/மாதாந்தர விவரக் கணக்குகள் வரையறுக்கப்பட வேண்டும். தலைமை

அலுவலகக் கணக்குகளில் இவ்வங்கிகளின் கணக்குகள் வாரந்தோறும் தொகுக்கப்பட வேண்டும். வணிக வங்கிகளில் தற்போது நிலவும் நடைமுறை அடிப்படையில் கணக்கு நடைமுறைகள் எளிதாக்கி சீர்படுத்தப்படுமாயின், தேவையற்ற எழுத்து வேலை பெருமளவிற்குத் தவிர்க்கப்படலாம்.

5.12.4. வணிக வங்கிப் பணியில் சிறிது அனுபவம் உள்ள பட்டயக் கணக்கர்கள் மேற்சொன்ன வேலையினங்களைத் திறமையுடனும், சிந்தித்துச் செயலாற்றும் திறனுடனும் கவனிக்க முடியும். ஆகவே, தக்க தகுதி பெற்ற, பட்டயக் கணக்கர்களை மாநில, மத்தியக் கூட்டுறவு வங்கிகள் வேலையில் அமர்த்துமாறு அரசு அலுவலகத்திற்கு ஆலோசனை கூறலாம் என்று நாங்கள் பரிவுரைக்கிறோம். இத்தகைய வங்கிகளது பற்று-வரவுகளின் அளவும் வகைகளும் பெருமளவு அதிகரித்துவிட்டபோதிலும் கூட, மாநிலக் கூட்டுறவு வங்கியோ மத்தியக் கூட்டுறவு வங்கிகள் எதுவுமே இதுவரையில் பட்டயக் கணக்கர்களை வேலையிலமர்த்தவில்லை.

கூட்டுறவு வங்கிகள், நாட்டுடைமையாக்கப்பட்ட வணிக வங்கிகள் கடன் வழங்கு கொள்கைகளை ஒருங்கிணைத்தல்.

5.13.1. நாட்டுடைமையாக்கப்பட்ட வணிக வங்கிகள் வேளாண்மைத் துறையில் கடன் வழங்க முற்பட்டபின், இந்த வங்கிகளுக்கும் கூட்டுறவு வங்கிகளுக்குமிடையே முறையான ஒருங்கிணைப்பும் பரஸ்பர நல்லுறவும் இருக்க வேண்டியதன் அவசியம் எழுகிறது. வங்கிகள் நாட்டுடைமையாக்கப் பட்ட பிறகு, வணிக வங்கிகள், வேளாண்மை மறுநிதியுதவிக் கழகம், மாநிலக் கூட்டுறவு வங்கிகளின் கூட்டமைப்பு, மத்திய நிலவள வங்கிகள் யூனியன், தேசிய வேளாண்மைக் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகளைக் கொண்டு இதற்கென தேசிய அளவில் ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. வணிக வங்கிகளுக்கும், கூட்டுறவு வங்கிகளுக்கு மிடையே ஒருங்கிணைப்பு நிலவவேண்டிய விஷயங்களையும், முறைகளையும் கருதிப் பார்ப்பதும், விரும்பத்தகாத போட்டி உணர்வையும் வேலை இரட்டிப்பையும் தவிர்ப்பதற்கென இந்த இரு துறைகளின்கீழ் வங்கிகள் செயல்படுவதைத் தொடர்ந்து ஆய்வு செய்வதும் இக்குழுவின் முக்கிய அலுவல்களாகும்.

5.13.2. இந்த தேசிய அளவிலான குழுவின் ஆலோசனையையொட்டி, 1969, ஜூனில் தமிழ்நாட்டில் மாநில அளவில் ஒருங்கிணைப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. மாநிலக் கூட்டுறவு வங்கி, மாநில நிலவள வங்கி, மாநில விற்பனைச் சங்கம் ஆகியவற்றின் தலைவர்களையும், இந்திய வங்கி, இந்தியன் ஓவர்ஸீஸ் வங்கி பிரதிநிதிகளை உறுப்பினர்களாகவும் இக்குழு கொண்டுள்ளது. தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி கூட்டுநராக நியமிக்கப்பட்டது. மாநகரிலுள்ள ஏனைய வணிக வங்கிகளின் பிரதிநிதிகள், மாநில அரசின் வேளாண்மை, கூட்டுறவுத் துறைகள், ரிசர்வ் வங்கி, வேளாண்மை மறுநிதி யுதவிக் கழகம் ஆகியவை அழைப்பாளர்களாக இருப்பர். இந்த மாநிலக் குழுவின் முக்கிய நோக்கங்கள் கூட்டுறவு, வணிக வங்கி நிறுவனங்களுக் கிடையே பரஸ்பர நல்லுறவையும் நல்லெண்ணத்தையும் உருவாக்குவது, இரு துறைகளுக்கிடையே தகவல்களையும் அனுபவத்தையும் பரிமாற்றிக் கொள்ளுதல், வணிக வங்கிகளும் கூட்டுறவு வங்கிகளும் கூட்டாக நிதி வசதி வழங்கக்கூடிய பணிகள் அல்லது செயல்திட்டங்களைக் கண்டறிதல் ஆகியவை யாகும்.

5.13.3. கூட்டுறவு வணிக வங்கிகள் முன்பணங்கள் கொடுப்பதை ஒருங்கிணைப்பிற்காக, கீழ்க்காணும் நியதிகள் வகுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது: (i) கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து கடன் வாங்கிய உழவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் முன் அனுமதியின்றி வணிக வங்கிகள் கடன் வழங்கக்கூடாது: வணிக வங்கிகளிடம் கடன் வாங்கிய உழவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வணிக வங்கிகளின் முன் அனுமதி

யின்றி கடன் வழங்கக் கூடாது; (iii) கூட்டுறவுச் சங்கங்களின் சார்பில் தங்கள் நிலங்களின் மீது கடன் பொறுப்பு ஏற்படுத்தியுள்ள உழவர்களுக்கு முன்னதாகக் கலந்தாலோசிக்காமல் வணிக வங்கிகள் கடன் வழங்கக் கூடாது. (iii) கடன் வாங்காத உறுப்பினர்களுக்கு நிதி உதவி அளிக்கும்போது, அத்தகைய உறுப்பினர்களுக்கும் கடன் வழங்குவது குறித்த விவரத்தை வணிக வங்கிகள் மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் சம்பந்தப்பட்ட கிளைக்குத் தெரிவிக்க வேண்டும். (iv) அவ்வாறே, நீண்ட காலக் கடன்களை வழங்கும் போதும், அது குறித்த விவரத்தை வணிக வங்கிகள் மாநில நிலவள வங்கியின் சம்பந்தப்பட்ட கிளைக்கு அல்லது சம்பந்தப்பட்ட தொடக்க நிலவள வங்கிக்குத் தெரிவிக்க வேண்டும். (v) இயன்றவரை, உழவர்களுக்கு நடுத்தர கால, நீண்ட காலக் கடன்களை வழங்கும் நிறுவனமே அவர்களுக்கு உற்பத்தி சார்ந்த குறுகிய காலக் கடன்களையும் வழங்க வேண்டும்.

5.13.4. மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு தெரிவித்த கருத்துரையையொட்டி, கூட்டுறவு மத்திய வங்கிகளின் தலைமையிடத்தில் மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்புக் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வங்கிகள் அக்குழுக்களைக் கூட்டுவர். இந்த இரு பிரிவுகளிடையே ஒருங்கிணைப்பு நிலவுவது குறித்த பிரச்சினைகள் மாவட்ட நிலையில் மட்டுமே மிகவும் உணரப்பட்ட போதிலும், அவை முறையாக கூட்டுவதில்லை எனத் தெரிகிறது. மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்புக் குழுக்கள் செயல்படுவதை முனைப்பாக்கும் நோக்குடன், மாநில அளவிலான குழு பல்வேறு மாவட்டத் தலைமையிடங்களில் குறித்த காலத்திற்கொரு முறை கூடுவதென அது நீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

5.13.5. பண்ணைக் கடன் வழங்கு புத்தகம் (**Farm Credit Book**) ஒன்றைக் கொண்டுவருவதற்கான திட்டம் ஒன்றைத் தயாரித்து மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு செய்த பயனுள்ள பணிகளில் ஒன்றாகும். இத்திட்டம் வருவாய்த் துறை வாரியத்திற்கு 1971 ஆம் ஆண்டு ஆகஸ்டில் அனுப்பப்பட்டது. வேளாண்மைக் கடன் வழங்குவதில் அரசு, கூட்டுறவு வங்கிகள், வணிக வங்கிகள் ஆகியவை ஒருங்கிணைந்த அணுகுமுறையை ஊக்கி வளர்த்தல், அளவுக்கு மீறி நிதி உதவி அளித்தல் அல்லது இரட்டிப்பு நிதி உதவியளித்தல் ஆகியவற்றை நீக்குதல், பண்ணைக் கடன் வழங்கு புத்தகத்தில் பொருத்தமான பதிவுகளைச் செய்வதன் மூலம் வெவ்வேறு துறைகளிலிருந்து பட்டா, சிட்டா, அடங்கல், வில்லங்கச் சான்றிதழ் போன்ற நில ஆவணங்களை வரவழைப்பதில் தாமதத்தைத் தவிர்த்தல் ஆகியவை ஒருங்கிணைப்பு குழு தெரிவித்தவாறு உள்ள இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

5.13.6. "மாவட்ட வருவாய்—பொது நிர்வாகம்" குறித்த எமது அறிக்கையில், வருவாய்த் துறை வழங்கும் பட்டா விவரக் குறிப்பு புத்தகத்தின் மாதிரி ஒன்றை நாங்கள் தெரிவித்துள்ளோம். அதில் பத்திரப் பதிவுத் துறை சொத்து குறித்த கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்யவும் கடன் வழங்கு நிறுவனங்கள் கடன் வழங்கியது, கடன்களைத் திருப்பிக் கொடுத்தது குறித்த தகவல்களைப் பதிவு செய்யவும் கூடிய ஏற்பாட்டுடன், பட்டாதாரர்கள் வைத்துள்ள நிலங்களில் அளவை எண், பரப்பு, நீர்வை முதலிய தகவல் அதில் அடங்கியிருக்கும். மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு பண்ணைக் கடன் வழங்கு புத்தகம் கொண்டுவர கருத்து தெரிவித்துள்ளதன் நோக்கம், பட்டா விவரக் குறிப்புப் புத்தகத்தில் உள்ள பதிவுகள் மூலம் பெரும்பாலும் எய்தப் பெறும் என நாங்கள் கருதுகிறோம்.

அத்தியாயம் 6.

வேளாண்மையில் கூட்டுறவு (நீண்டகாலக் கடன்)

தொடக்கம்:

6.1. கூட்டுறவு இயக்கத்தின் தொடக்க ஆண்டுகளில், குறுகிய காலக் கடனுடன், நீண்ட காலக் கடன்களையும் வழங்குவதற்கு, கிராமக் கடன் வழங்கு சங்கங்கள் முயன்றன. ஆனால், அவைகளிடம் உள்ள நிதிவாயில்கள் குறுகிய கால, நடுத்தரக் காலக் கடன் வழங்கும் தன்மையதாக இருப்பதால், நீண்ட காலக் கடன்களை வழங்குவதற்கு தனிப்பட்ட கடன் வழங்கு நிறுவனங்கள் இருப்பது அவசியம் எனக் கருதப்பட்டது. இவ்வாறு, தொடக்க நில அடைமான வங்கிகள் (அண்மையில் இப்பெயர் தொடக்க நிலவள வங்கிகள் என மாற்றப்பட்டுள்ளது) தமிழ்நாட்டில் முதன்முதலாக 1925-ல் அமைக்கப்பட்டன.

அமைப்பு:

6.2.1. தொடக்க ஆண்டுகளில், கடனீட்டுறுதிப் பத்திரங்களை வெளியிடுவதன் மூலம் இந்த வங்கிகள் தனித்தனியே நிதி வாயில்களைத் திரட்டின. சிறிய தொடக்க நிறுவனங்களாக இருந்ததால், அவை வெளியிட்ட கடனீட்டுறுதிப் பத்திரங்களுக்கு போதிய ஆதரவு அவற்றிற்குக் கிடைக்கவில்லை. கூட்டுறவுத் துறை குறித்த டவுன்செண்டு குழுவின் பரிவுரைகளையொட்டி, நீண்ட கால கடனீட்டுறுதிப் பத்திரங்களை வெளியிடுவதன் மூலம் நிதி திரட்ட சென்னை கூட்டுறவு மத்திய நில அடைமான வங்கி (தற்போது தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு நிலவள வங்கி என அழைக்கப்படுகிறது) 1929-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. 1934-ல் தமிழ்நாடு கூட்டுறவு நில அடைமான வங்கிகள் சட்டம் நிறைவேற்றப் பட்டது. கடனீட்டுறுதிப் பத்திரங்களை வைத்துள்ளவர்களுக்கு அசல் தொகையையும் வட்டித் தொகையையும் திருப்பிக் கொடுப்பதுபற்றி மாநில அரசு அளிக்கும் உத்திரவாதத்தின் பேரில், மாநில நிலவள வங்கி கடனீட்டுறுதிப் பத்திரங்களை வெளியிட அச்சட்டம் மூலம் அதிகாரம் அளிக்கப்பட்டது. கடனீட்டுறுதிப் பத்திரங்கள் வைத்துள்ளவர்களுக்குப் பொறுப்பாளர் ஒருவரை நியமிக்கவும், சிவில் நீதிமன்றங்களின் தலையீடின்றி அடைமானங்களைச் செயல்படுத்துவதன் மூலம் பாக்கித் தொகைகளை சுருக்க வகையில் வசூலிக்கவும் சட்டம் வகை செய்தது. அண்மைக் காலம் வரை, கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளர், கடனீட்டுறுதிப் பத்திரங்கள் வைத்துள்ளவர்களுக்குப் பொறுப்பாளராக இருந்தார். தற்போது கூட்டுப் பதிவாளர் (கடன்) இவ்வாறு பொறுப்பாளராக இருக்கிறார்.

6.2.2. தமிழ்நாட்டில் நீண்ட காலக் கடன்களை வழங்குவது இரண்டடுக்கு அமைப்பாகும். தமிழ்நாடு மாநில நிலவள வங்கி தலைமை இடத்திலும், தொடக்க நிலவள வங்கி வட்ட அளவில் அல்லது வளர்ச்சி வட்டார அளவில் நீண்ட காலக் கடன்களை வழங்குகின்றன. 31—12—1972 அன்றுள்ளவாறு, 223 தொடக்க நிலவள வங்கிகள் இருந்தன. இவற்றில், 117 வங்கிகள், 1969–70-ல் அமைக்கப்பட்டன. தொடக்க வங்கிகள் வட்ட அளவில் அமைக்கப் படுவதற்குப் பதிலாக வளர்ச்சி வட்டார அளவில் அமைக்கப்பட வேண்டும் என்று அரசு முடிவு செய்ததையொட்டி மேற்படி வங்கிகள் அமைக்கப்பட்டன. தனித்தியங்கக்கூடிய நிலையைக் கருதிப்பாராமல், இக்கொள்கை பின்பற்றப்படக்கூடாது என்று ரிசர்வ் வங்கி கருத்துத் தெரிவித்ததால், வட்டார அளவில் அதிக வங்கிகளை அமைப்பது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. புதிய வங்கிகள் அமைக்கப்படாத வளர்ச்சி வட்டாரங் களில் புதிதாக 134 கிளைகளைத் தொடக்க வங்கிகள் தொடங்கவேண்டும் என்று தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது.

6.2.3. தமிழ்நாடு மாநில நிலவள வங்கியின் முன்னேற்றத்தைக் காட்டும் விவர அறிக்கை X ஆம் எண் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது

நிதிவாயில்கள் :

6.3.1. **மாநில நிலவள வங்கிக்கான முக்கியமான நிதிவாயில்கள் அதன் பங்கு மூலதனம், மாநிலக் கூட்டுறவு வங்கி, இந்திய ஸ்டேட் வங்கி ஆகியவற்றிடமிருந்து கிடைக்கும் இடைக்கால கடன்வசதி, கடனீட்டுறுதிப் பத்திரங்கள் வெளியிடுவதன் மூலம் கடன் பெறுதல் ஆகியவையாகும்.**

6.3.2. வங்கி, சாதாரண கடனீட்டுறுதிப் பத்திரங்கள், சிறப்பு மேம்பாட்டுக் கடனீட்டுறுதிப் பத்திரங்கள், கிராமக் கடனீட்டுறுதிப் பத்திரங்கள் என மூன்று வகைக் கடனீட்டுறுதிப் பத்திரங்களை வெளியிடுகின்றது. கடனீட்டுறுதிப் பத்திரங்கள் அனைத்திற்கும் அப்பத்திரங்களை வைத்திருப்பவர்களுக்கு அசலையும் அதற்கான வட்டியையும் கொடுப்பது குறித்து அரசு உத்தரவாதம் அளிக்கிறது. சாதாரணக் கடனீட்டுறுதிப் பத்திரங்கள் இரு தொகுதிகளாக வெளியிடப்படுகின்றன. ஒன்று, பத்தாண்டு நிறைவதன்மேல் தொகை திருப்பிக் கொடுக்கத்தக்க கடன் பத்திரங்களும் மற்றொன்று 15 ஆண்டு நிறைவின் பேரில் தொகை திருப்பிக் கொடுக்கத்தக்க கடன் பத்திரங்களும் ஆகும். இவற்றிற்கு வெவ்வேறு வட்டி வீதங்கள் கொடுக்கப்படுகின்றன. இக்கடனீட்டுறுதிப் பத்திரங்களைப் பெரும்பாலும் இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகம், இந்திய ஸ்டேட் வங்கி, வணிக வங்கிகள், இந்திய ரிசர்வ் வங்கி போன்ற பொதுத்துறை நிறுவனங்களே வாங்கிக் கொள்கின்றன. இந்த வங்கியின் தோழமை நிலையமான மாநில நிலவள வங்கிகளும் பரஸ்பர அடிப்படையில் அந்தக் கடனீட்டுறுதிப் பத்திரங்களுக்குத் தங்கள் கடனீட்டுறுதிப் பத்திரமீட்பு நிதியிலிருந்து கணிசமான அளவு தொகை அளிக்கின்றன. சிறப்பு மேம்பாட்டுக் கடனீட்டுறுதிப் பத்திரங்களை வேளாண்மை மறுநிதி உதவிக்கழகம் வாங்குகின்றது. சிறுபாசனத் திட்டங்களைப் பொறுத்தமட்டில் 9/10 என்ற அளவுக்கும் சிறுபாசனமல்லாத ஏனைய பாசனத் திட்டங்களைப் பொறுத்தவரையில் ¾ என்ற அளவுக்கும் கடனீட்டுறுதிப் பத்திரங்களை இது வாங்கிக் கொள்கிறது. எஞ்சியுள்ள 1/10, ¼-பாக கடனீட்டுறுதிப் பத்திரங்களை மாநில அரசு வாங்கிக்கொள்கின்றது. அனைத்து நாடுகள் வளர்ச்சி முகவர் நிறுவனத்திடமிருந்து கிடைக்கும் நிதிகளும் வேளாண்மை மறுநிதி உதவிக் கழகத்தின் மூலமாக வழங்கப்படுகின்றன.

கிராமக் கடனீட்டுறுதிப் பத்திரங்கள் இரு தொகுதிகளில் வெளியிடப்படுகின்றன. ஒன்று 7 ஆண்டுகள் நிறைவதன்மேல் தொகை திருப்பிக் கொடுக்கத்தக்க பத்திரங்களாகும். இவற்றைத் தனிப்பட்டோர் வாங்குவர். மற்றொன்று 15 ஆண்டுகள் நிறைவதன்மேல் தொகை திருப்பிக்கொடுக்கத்தக்க பத்திரங்களாகும். இவற்றை இந்திய ரிசர்வ் வங்கி வாங்கிக் கொள்ளும். தனிப்பட்டோர் வாங்கும் கடனீட்டுறுதிப் பத்திரத் தொகையில் 8 : 7 என்ற விதாச்சாரத்தில் கிராமக் கடனீட்டுறுதிப் பத்திரங்களை ரிசர்வ் வங்கி வாங்குகின்றது. 31—4—1972 அன்று புழக்கத்திலிருந்த கடனீட்டுறுதிப் பத்திரங்களின் மதிப்பு ரூ. 109.24 கோடியாகும். (சாதாரணக் கடனீட்டுறுதிப் பத்திரங்களின் மதிப்பு ரூ. 92.47 கோடி, சிறப்பு மேம்பாட்டுக் கடனீட்டுறுதிப் பத்திரங்களின் மதிப்பு ரூ. 14.52 கோடி, கிராமக் கடனீட்டுறுதிப் பத்திரங்களின் மதிப்பு ரூ. 2.25 கோடி).

6.3.3. கடனீட்டுறுதிப் பத்திரங்கள் நிறைவு பெறுவதன் மேல் அவற்றிற்கான தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்காக மாநில நிலவள வங்கி கடனீட்டுறுதி பத்திர மீட்பு நிதி (கடன் கரைப்பு நிதி) ஒன்றை வைத்து வருகிறது. ஒவ்வொரு வரிசை கடனீட்டுறுதிப் பத்திரங்களின் மதிப்பை அந்த வரிசைப் பத்திரங்கள் எத்தனை ஆண்டுகளுக்கு வெளியிடப் படுகின்றனவோ, அந்த ஆண்டு எண்ணிக்கையால் வகுத்து வரும் தொகைக்குச் சமமான தொகை ஒவ்வோர் ஆண்டும் இந்த நிதியில் சேர்க்கப் படுகிறது. கடனீட்டுறுதிப் பத்திரமீட்பு நிதிக்கணக்கில் போடப்படும் தொகை அரசு ஈட்டுறுதிப் பத்திரங்கள், பொறுப்புக் கழக ஈட்டுறுதிப் பத்திரங்கள், ஏற்பளிக்கப்பட்ட வங்கிகளில் குறித்த கால வைப்பீட்டுத் தொகை ஆகியவற்றில் முதலீடு செய்யப்படவேண்டும். கடன்கரைப்பு நிதியில் 31—4—1972 அன்று இருந்த தொகை ரூ. 25.44 கோடியாகும்.

கடன் கொடுத்தல் பற்றிய நடைமுறைகள்.

6.4.1. வங்கி கடன் கொடுப்பது குறித்துப் பின்பற்றும் கொள்கைகளும் நடைமுறைகளும் படிப்படியாகச் சிரமைக்கப்பட்டுள்ளன. ரிசர்வ் வங்கியின் ஆலோசனைக்கேற்ப, இம்மாநிலத்திலுள்ள நிலவள வங்கிகள் உற்பத்திக் காரியங்களுக்கே கடன் வழங்குவது என்பதை நோக்கமாகக் கொண்ட கொள்கைகளைப் பின்பற்றியுள்ளன. கடன்களில் 90 சதவிதத்திற்குக் குறையாத கடன்கள் தற்போது உற்பத்திக் காரியங்களுக்காக வழங்கப் படுகின்றன. இவற்றில் குறைந்தது 70 சதவீதக் கடன்கள் கிணறு தோண்டுதல், டிராக்டர் வாங்குதல் போன்ற எளிதில் தெளிவாகத் தெரியக் கூடிய காரியங்களுக்கு வழங்கப்படுகின்றன. 1971–72-ல் கடனாக வழங்கப்பட்ட ரூ. 19.64 கோடியில் ரூ. 18.67 கோடி எளிதில் தெளிவாகத் தெரியக்கூடிய காரியங்களுக்காக வழங்கப்பட்டது.

6.4.2. அனைத்துநாடுகள் வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட நிதிக்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகளில் ஒன்று யாதெனில், அந்த நிதியிலிருந்து வழங்கப்படும் கடன் குறித்த வரையறைகள், நிபந்தனைகள், திட்டப்பகுதிகளல்லாத பிற பகுதிகளில் வழங்கப்படும் அதுபோன்ற கடன் களுக்கும் பொருந்துமாறு செய்யப்படவேண்டும் என்பதாகும். அதன்படி, திட்டப்பகுதிகளல்லாத ஏனைய பகுதிகளில் உள்ள தொடக்க நிலவள வங்கிகளும் நிலநீர் ஒழுங்கு முறையைக் கடைப்பிடிக்க வேண்டியிருப்பதோடு மாநில நிலநீர் இயக்குநர் அலுவலகம் கொடுத்த இசைவிற்கு மேற்பட்டு சிறுபாசனத் திட்டங்களுக்குக் கடன் வழங்க இயலாது. நிலநீர் இயக்குநர் அலுவலகம் வரையறுத்துள்ளவாறு, ஒரு கிணற்றுக்கும் மற்றொரு கிணற்றுக்கு மிடையே குறிப்பிட்ட இடைவெளி இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டு மென்று கடன் வாங்குபவர்கள் கேட்கப்படுகிறார்கள். மேலும் அவர்கள் மேற்கொண்டுள்ள வளர்ச்சித் திட்டங்களில் தங்கள் சொந்த நிதியிலிருந்து ஓரளவுக்கு முதலீடு செய்யுமாறும் கேட்கப்படுகிறார்கள். இந்த வகையில் அவர்கள் செய்யும் முதலீடானது திட்டச் செலவில் 10 சதவீதம் முதல் 20 சதவீதமாகும். சிறு உழவர்கள் ஏனைய உழவர்கள் ஆகியோரைப் பொறுத்தவரையில் வெவ்வேறு சதவீதங்களில் முதலீடு செய்யப்படுகிறது.

6.4.3. கிணறு தோண்டுவதற்கான கடன் இரு தவணைகளில் வழங்கப் படுகிறது. முதல் தவணைத் தொகையைப் பயன்படுத்தியதற்கான சான்றிதழ் கிடைப்பதன்பேரில் இரண்டாவது தவணைத் தொகை வழங்கப்படுகிறது. டிராக்டர் எண்ணெய்ப் பொறிகள் அல்லது விசையேற்றங்கள் வாங்கு வதற்கான கடன் தொகை அந்த டிராக்டர் பொறி அல்லது விசையேற்றத்தை வழங்குபவர்களுக்கு நேரடியாகக் கொடுக்கப்படுகின்றது. திட்ட மதிப்பீடு களும் நிதியைப் பயன் படுத்தியது பற்றி விவரங்களும் வங்கியின் தொழில் நுட்ப மேற்பார்வையாளர்களால் சரிபார்க்கப்படுகின்றன.

6.4.4. கடன் வழங்கப்படுவதற்குரிய வரம்புகள் கடன் வழங்கப் படுவதற்கான நோக்கத்தைக் கொண்டு (பிணையம், கடனைத் திருப்பிச் செலுத்தும் திறன் முதலிய பிற கூறுகளின் அடிப்படையிலும்) முறைப் படுத்தப்படுகின்றன. விசையேற்றங்களை நிறுவுவதற்கும் விசையேற்றக் கொட்டகை கட்டுவதற்கும் கடன் வரம்பு ரூ. 5,000 ஆகும். டிராக்டர், துணைக் கருவிகள் வாங்குவதற்கான கடன் வரம்பு ரூ. 50,000 ஆகும்.

6.4.5. பிணையத்தை மதிப்பிடுவதற்காக 'மேம்பாட்டுக்குப் பின்னர் நிலத்திலிருந்து' கிடைக்கும் ஆண்டு நிகர வருமானத்தைப் போன்று 8 முதல் 10 மடங்குத் தொகை நிலத்தின் மதிப்பாகக் கொள்ளப்படுகிறது. கடன் பெறும் அளவு மேற்கண்டவாறு கணக்கிடப்பட்ட மதிப்பில் 50 சதவீதமாக நிர்ணயிக்கப்படுகிறது. கடனைத் திருப்பிச் செலுத்தும் சக்தியை முடிவு செய்வதற்காக மேம்பாட்டிற்குப்பின்னர் எதிர்பார்க்கப் படும் நிகர வருவாயிலிருந்து முதலீடு செய்வதற்கு முன்பிருந்த நிகர வருவாய் கழிக்கப்படுகிறது. இவ்விரு வருவாய்க்குமிடையேயான வித்தியாசத்தில் (இது பெருகிய வருவாய் என்றழைக்கப்படுகிறது).

90 சதவிதம், கடன்பெற்றவர் தவணைகளில் கடனைத் திருப்பிச் செலுத்து வதற்குரிய திறனாகக் கொள்ளப்படுகிறது. இத்திறனை மதிப்பிடுவதற்கு, பயிரிடு செலவு, வழக்கமான நடைமுறைகளைப் பின்பற்றினால் சராசரி உழவர் ஒருவருக்குக் கிடைக்கும் விளைச்சல் ஆகியவற்றின் அடிப்படையில் மாவட்ட வேளாண்மை அதிகாரிகள் வழிமுறைக் குறிப்புகளை வழங்கு கின்றனர்.

6.4.6. மாநில நிலவள வங்கி கடன் பெறுவதற்குத் தற்போது செலுத்தும் வட்டிவிதம் 6 சதவீதமாகும். கடன் வாங்குபவருக்கு வழங்கும் கடன் மீதான இறுதியான வட்டி விதம் 9 சதவீதமாகும். ஆதாயமான 3 சதவீதம் தலைமைச் சங்கங்களாலும், தொடக்கச் சங்கங்களாலும் முறையே 1¾ சதவீதம்; 1¼ சதவீதம் என்ற விதத்தில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

6.4.7. புதிய கிணறுகளுக்கான உதவித்தொகை வழங்கும் திட்டம், எண்ணெயினால் இயங்கும் பொறிகள், மோட்டார் விசையேற்றங்கள் ஆகியவற்றைத் தவணை முறையில் கொள்முதல் செய்யும் திட்டம் ஆகியவற்றின்கீழ் நேரடியாகக் கடன்கள் வழங்குவதை மாநில அரசு 1—4—1968-லிருந்து நிறுத்தியுள்ளது. இவற்றிற்கான கடன்கள் நிலவள வங்கிகள் மூலமே வழங்கப்பட வேண்டுமென்று மாநில அரசு ஆணையிட்டுள்ளது.

6.4.8. கடன் நடைமுறைகளை எளிதாக்கும் நோக்கத்துடன் முக்கியமான சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன: (i) மதிப்பீடுகளைத் தயாரிப்பதிலும் கடன் பெறுபவர்களுக்கு வழிமுறைக் குறிப்புகளை நல்கு வதிலும் உதவி செய்வதற்கு மாநில, மாவட்ட, தொடக்க நிலவள வங்கி நிலைகளில் தொழில்நுட்பப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். (ii) மாநில நிலவள வங்கியின் கிளைகள் ஒவ்வோர் மாவட்டத்திலும் திறக்கப் பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் உதவிச் செயலாளர் ஒருவரின் பொறுப்பின்கீழ் வைக்கப்பட்டுள்ளன. இவர் கடன் வழங்குவதற்கு ஒப்பளிப்பு அளிக்க அதிகாரமளிக்கப்பட்டுள்ளார். (பின்னர், மாநில நில வள வங்கி அவற்றிற்கு பின் ஏற்பு வழங்கும்). (iii) வில்லங்கச் சான்றி தழ்கள் பெறப்பட வேண்டிய கால அளவு 22 ஆண்டுகளிலிருந்து 13 ஆண்டு களாகக் குறைக்கப்பட்டுள்ளது. (iv) நிலவள வங்கிகள் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டுவந்ததன் மூலம், நிலவள வங்கியில் வைக்கப்பட்ட அடை மானத்திற்கு, நிலவரி நீங்கலாக ஏனைய கோரிக்கைகள் அனைத்திற்கும் மேலாக முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. (v) மாநில நிலவள வங்கிக்கு எழுதிக் கேட்காமலேயே, ரூ. 7,500 வரையிலான கடன் தொகைக்கு ஒப்பளிக் கவும் அதனை வழங்கவும் தொடக்க நிலவள வங்கிகளுக்கு அதிகாரமளிக்கப் பட்டுள்ளது. (vi) ரூ. 10,000 வரையிலான கடன் விண்ணப்பங்களை முடிவு செய்வதற்கான உயர்ந்த அளவு கால வரையறை 42 நாட்களாகவும் ரூ. 10,000-க்கு மேற்பட்ட கடன் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் அக்கால வரையறை 45 நாட்களாகவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. துணைப் பதிவாளர் அடைமானத்தைப் பார்வையிடுவதற்கு முன்னர், ரூ. 10,000-க்கு மேற்பட்ட கடன்கள் அனுமதிக்கப்படுவதற்கு ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது, எனினும், அடைமானத்தைத் துணைப் பதிவாளர் பார்வை யிடுவது, கடைசி கடன் தவணைத் தொகையை வழங்குவதற்கு முன்னர் நடத்தப்பட வேண்டும்.

6.4.9. மாநில நிலவள வங்கி கடன்களை வசூல் செய்யும் முறை மிகவும் திருப்தியளிக்கக் கூடியதாய் இருப்பதாகக் கூறலாம். இதனை கீழே கொடுக்கப்பட்டுள்ள 1971–72-ஆம் ஆண்டு புள்ளிவிவரங்களிலிருந்து காணலாம்:—

கடன்.	வசூல்.	எஞ்சிய தொகை.	நிலுவைத் தொகையின் சதவீதம்.
		(ரூ. லட்சத்தில்)	
12,01·99	11,78·25	23·74	1·97

ஆயினும் தொடக்க நிலவள வங்கிகளின் அளவில், 1971-72-ல் இருந்த நிலுவை தொகை, கடனில் 14 சதவீதமாக இருந்தது.

கடன்.	வசூல்.	எஞ்சிய தொகை.	நிலுவைத் தொகையின் சதவீதம்.
		(ரூ. லட்சத்தில்.)	
13,65·84	11,74·31	191·53	14

1972-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முப்தாம் நாள் அன்றுள்ளவாறு, நிலுவைத் தொகை சதவீதத்தின்படி தொடக்க நிலவள வங்கிகளின் வகைப்பாடு வருமாறு :—

நிலுவைத் தொகை சதவீதம்.	தொடக்க நிலவள வங்கிகளின் எண்ணிக்கை.
இல்லை	43
15 சதவீதத்திற்குக் குறைவாக	15
15% — 25%	15
25% — 40%	14

தொடக்க நிலவள வங்கிகள் 15 சதவீத வரையறைக்கு மேல் நிலுவைத் தொகை உடையனவாயிருப்பின், அவற்றின் கடன் வழங்கும் திட்டம், ரிசர்வ் வங்கி வரையறுத்துள்ளவாறு படிப்படியாகக் குறையும். பெரும்பாலான தொடக்க நிலவள வங்கிகள் இந்த எல்லைக்குள் தங்களது நிலுவைத் தொகைகளை வைத்து வந்துள்ளதைக் காணலாம்.

6.4.10. சிறு உழவர்களுக்குச் சிறு அளவுக் கடன்கள் வழங்குவதை ஊக்குவிக்க வேண்டும் என்பதை மாநில நிலவள வங்கி கொள்கையாகக் கொண்டுள்ளது. நிலம் வைத்திருக்கும் அளவு வாரியாக 1970-71-ல் கடன்கள் வழங்கப்பட்டதைக் காட்டும் விவர அறிக்கை ஒன்று இணைப்பு X ல் கொடுக்கப்பட்டுள்ளது. ஐந்து ஏக்கர் வரை நிலம் வைத்திருப்பவர்களுக்கு அந்த ஆண்டில் கிட்டத்தட்ட 2/3 பகுதிக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளதைக் காணலாம். வழங்கப்பட்ட கடன் தொகையைக் காட்டும் மற்றொரு விவர அறிக்கை இணைப்பு XVII-ல் கொடுக்கப்பட்டுள்ளது. ரூ. 5,000-க்குக் குறைவான கடன்களே பெருமளவு கொடுக்கப்பட்டுள்ளதை இந்த விவர அறிக்கையிலிருந்து காணலாம்.

6.4.11. பஞ்சம், வறட்சி அல்லது அத்தகைய பிற எதிர்பாரா நிகழ்ச்சிகளின் காரணமாக ஆண்டுக் கடன் தவணைத் தொகைகளைச் செலுத்துவதை கடன் வாங்கியவர்கள் ஒத்திப் போடுவதற்கு இயலும் பொருட்டு, மாநில வங்கி அளவிலும் தொடக்க வங்கி அளவிலும் வேளாண்மைக் கடன் சமன நிதி என்றழைக்கப்படும் நிதி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த வங்கிகள் தங்களது நிகர ஆதாயத்தில் 15 சதவீதத்தை இந்நிதிக்கு வழங்குகின்றன. வங்கிகளில் பங்குத் தொகைகளாக முதலீடு செய்வதன் மூலம் கிடைக்கும் ஆதாயத்தில் 3 சதவீதத்திற்கு மேல் உள்ள தொகையை மாநில அரசு இந்நிதிக்கு வழங்குகிறது. இந்நிதிக் கணக்கில் ரூ. 12.10 லட்சம் உள்ளது. மேலும், 1971-72 ஆம் ஆண்டிற்கான ஆதாயம் ஒதுக்கப்படும் போது ரூ. 14.02 லட்சம் இந்நிதியில் சேர்க்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

6.4.12. கிணறுகள் தோண்டுவதற்காகக் கடன்கள் வழங்கப்பட்டு அக்கிணறுகளில் நீர்கிடைக்காத நேர்வில் உழவர்களுக்கு உதவுவதற்காக நீர் பொய்த்த கிணறுகள் நிதி என்றழைக்கப்படும் மற்றொரு நிதியை மாநில நிலவள வங்கி ஏற்படுத்தியுள்ளது. மாநில நிலவள வங்கி தனது நிகர ஆதாயத்தில் 10 சதவீதத்தை இந்நிதிக்கு வழங்குகிறது. வங்கிகளில் முதலீடு செய்யும் பங்கு தொகைகளுக்குக் கிடைக்கும் ஆதாயத்தில் 3 சதவீதத்திற்கு மேற்பட்ட தொகையை இந்நிதிக்குச் செலுத்த மீண்டும் மாநில அரசு ஒப்புக்கொண்டுள்ளது. இந்நிதியை நிர்வகித்து வருவதற்கான விதிகளை மாநில அரசு வகுத்து வருகிறது. இந்நிதிக் கணக்கில் ரூ. 8.64 லட்சம் உள்ளது.

அனைத்து நாடுகள் வளர்ச்சி நிறுவனம் அளிக்கும் நிதி உதவி.

6.5.1. தமிழ்நாடு வேளாண்மைக் கடன் வழங்கு திட்டம் என்றழைக்கப் படும் திட்டம் ஒன்றிற்கு, 1971-ல் அனைத்து நாடுகள் வளர்ச்சி நிறுவனம் அனுமதி யளித்தது. இது உலக வங்கியுடன் இணைந்த அமைப்பாகும், மொத்தம் ரூ. 46.60 கோடி செலவிடுவதற்கு இத்திட்டம் வகை செய்கிறது. இதில், அனைத்து நாடுகள் வளர்ச்சி நிறுவனம் அளிக்கும் நிதி உதவி ரூ. 26.25 கோடியாகும். எஞ்சிய தொகை வேளாண்மை மறு நிதி உதவிக் கழகம், மாநில அரசு, கடன் பெறுபவர்கள் ஆகியோரால் அளிக்கப்படும். சிறு பாசனம், நிலத்தைச் சமப்படுத்தல், வடிகால், டிராக்டர், டிராக்டர் கருவிகள் முதலியவற்றிற்காக இந்த நிதி உதவி அளிக்கப்படுகிறது. நிதி ஒதுக்கத்தின் பெரும் பகுதி சிறு பாசனம் (ரூ. 27.41 கோடி), டிராக்டர்கள், டிராக்டர் கருவிகள் (ரூ. 4.57 கோடி) ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அனைத்து நாடுகள் வளர்ச்சி நிறுவனம் அளிக்கும் நிதி உதவி வேளாண்மை மறுநிதி உதவிக் கழகம் மூலமாக வழங்கப்படுகிறது. வேளாண்மை மறு நிதி உதவிக் கழகம் மாநில நிலவள வங்கிக்கு அந்த நிதிகளை வழங்குகிறது. பின் சொல்லிய அமைப்பு தொடக்க நிலவள வங்கிகள் மூலமாகத் திட்டங் களுக்கு நிதி உதவி அளிக்கிறது. பெரிய அளவிலான சிறு பாசன மேம்பாட்டிற்கு வண்டல்படிந்த பகுதிகளில் (தஞ்சாவூர், திருச்சிராப் பள்ளி, தென்னார்க்காடு மாவட்டங்களின் பகுதிகளில்) குழாய்க் கிணறுகள் அமைக்கவும் கெட்டியான பாறைப் பகுதிகளில் (செங்கற்பட்டு, வடாற்காடு, சேலம், தருமபுரி மாவட்டங்களில்) கிணறுகள் தோண்டவும் அனைத்து நாடுகள் வளர்ச்சி நிறுவனத்திட்டம் வகை செய்கிறது.

6.5.2. வேளாண்மை மறுநிதி உதவிக் கழகம் இதுவரை 26 சிறுபாசனத் திட்டங்களுக்கும், 7 சிறுபாசனத் திட்டமல்லாத பிற திட்டங்களுக்கும் அனுமதி வழங்கியுள்ளது. திட்டப்பயன் குறிக்கோள் அளவைப் பொறுத்த வரை, 7 சிறுபாசனத் திட்டங்களும், சிறுபாசனமல்லாத பிற 5 திட்டங்களும் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளன. XVIII -வது இணைப்பைப் பார்க்கவும்) பதினேழு சிறு பாசனத் திட்டங்களும், 2 மலைத்தோட்டத் திட்டங்களும நிறைவேற்றப்பட்டு வருகின்றன XIX -வது இணைப்பைப் பார்க்கவும்). ஐந்து சிறு பாசனத் திட்டங்கள், 6 மலைத் தோட்டத் திட்டங்கள், நிலம் பண்படுத்தும் திட்டம் ஆகியவற்றை நிறைவேற்ற வேளாண்மை மறுநிதி உதவிக் கழகம் தற்போது பரிசீலித்து வருகிறது XX -வது இணைப்பைப் பார்க்கவும்).

நீண்டகால கடன் வழங்கு அமைப்பில் துறைப் பணியாளர்களின் பங்கு.

6.6.1. நீண்ட காலக் கடன் தொடர்பாக துறைப் பணியாளர்களின் பங்கு பற்றி அவ்வப்போது முக்கியமான கருத்து எழுப்பப்படுகிறது. கடன் விண்ணப்பங்களில் நடவடிக்கை எடுத்தல், திட்டங்களை மதிப்பிடுதல், தொடர் நடவடிக்கை எடுத்தல், மேற்பார்வை ஆகிய பணிகள் அனைத்தையும் நெறிப்படுத்துவதும், செயல்படுத்துவதும், நிர்வகிப்பதும் துறை அலுவலர் களே. அவர்கள் மாநில நில வள வங்கியின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் இல்லை, திறமைமிக்க பணியாளரமைப்பை உருவாக்கி, அவர்களுக்குத் தகுந்த பயிற்சி அளிப்பதன் மூலம் அடைமானங்களை மதிப்பிடுதல், கடன் விண்ணப்பங்களை ஆய்வு செய்தல் ஆகிய பொறுப்பினை வங்கிகளே மேற் கொள்வதற்கான அவசியம் குறித்து, ரிசர்வ் வங்கி, கிராமக் கடன் வழங்கு ஆய்வுக் குழு (1952), அண்மையில் கிராமக் கடன் வழங்கு சீராய்வுக் குழு (1969) உட்பட பல்வேறு அதிகார மன்றங்கள் வலியுறுத்தியுள்ளன. வங்கியே அத்தகைய பணியாளரமைப்பு ஒன்றை ஏற்படுத்தும் வரை, தற்போதுள்ள துறைப் பணியாளர்கள் வங்கியின் நிர்வாகக் கட்டுப்பாட்டிற்கு மாற்றப் படலாம் என்று கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

6.6.2. இலட்சியக் கூட்டுறவு நிறுவனம் ஒன்று எல்லா வகையிலும் தன்னிறைவு பெற்றதாகவும், எந்த வடிவிலும் அது அரசு உதவியை எதிர் பார்க்காமலிருப்பதாகவும் இருக்க வேண்டும் என்ற எதிர்பார்க்கப்பட்

போதிலும், கூட்டுறவுகளுக்கு அரசு நிதிஉதவி அளிப்பது என்ற கொள்கை, நமது நாட்டின் நிலைமையில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதன் பங்கு மூலதனத்திற்குத் தொகை செலுத்துதல், கடன்களையும், உதவித் தொகைகளையும் வழங்குதல், அரசுப் பணியாளர்களை கூட்டுறவுச் சங்கங்களில் நியமிக்க ஆகும் செலவு முழுவதையும் அல்லது ஒரு பகுதியை அரசே அளித்தல் போன்ற வகையில், அவைகளுக்கு பல்வேறு வடிவில் உதவி அளிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு இயக்கத்தின் வேறு எந்தத் துறையிலும் நீண்ட காலக் கடன் வழங்கு துறையில் உள்ளதுபோல அரசுப் பணியாளர்கள் ஆற்றும் பணி அவ்வளவு பரவலாக இல்லை. (குறுகிய காலக் கடன் கொண்டுள்ளது.) நீண்ட காலக் கடன் வழங்கு அமைப்பில் அரசுப் பணியாளர்கள் அதிக அளவில் இருப்பது, மாநில நிலவள வங்கி தனக்கு முழுதும் பொறுப்புள்ள பணியாளர் பதவித்தரங்களைத் தானே ஏற்படுத்துவது விரும்பத்தக்கதல்லவா என்ற பிரச்சினையை எழுப்பியுள்ளது.

6.6.3. நீண்ட காலக் கடன் வழங்குதுறையில் அரசுப் பணியாளர்கள் அதிக அளவில் இருப்பதற்கு வரலாற்றுப் பின்னணி உள்ளது. சென்னை நில அடைமான வங்கிகள் சட்டம் 1934-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டபோது சென்னை மத்திய நில அடைமான வங்கி (அப்போது அது அவ்வாறு அழைக்கப்பட்டது) வெளியிட்ட கடனீட்டுறுதிப் பத்திரங்களுக்கு உத்தரவாதம் அளிக்க மாநில அரசுக்கு அதிகாரமளிக்கும் வகையில் விதித்துறை ஒன்று அதில் சேர்க்கப்பட்டது. இந்த விதித்துறையின் கீழ், வங்கியின் கடனீட்டுறுதிப் பத்திரங்களுக்கு மாநில அரசு அவ்வப்போது உத்திரவாதத்தை அளித்துள்ளது. அரசு உத்திரவாதத்தின் பேரில் தற்போது புழக்கத்தில் உள்ள கடனீட்டுறுதிப் பத்திரங்களின் மதிப்பு ரூ. 109.24 கோடியாகும். சட்டத்தின் விதித்துறைகளின் கீழ், கடனீட்டுறுதிப் பத்திரங்களை வைத்துள்ளவர்களுக்குப் பதிவாளர் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். வங்கி வழங்கும் கடனீட்டுறுதிப் பத்திரங்களுக்கு அரசு அதிக அளவில் உத்தரவாதம் அளித்து கடனீட்டுறுதிப் பத்திரங்களை வைத்துள்ளவர்களின் நலனைப் பாதுகாக்க பதிவாளரை அதன் பொறுப்பாளராக நியமித்துள்ளபோது, அடைமானத்தைப் பார்வையிட்டு கடன் விண்ணப்பங்களை தொடக்க வங்கிகளும், மாநில நிலவள வங்கிகளும் அனுமதி அளிப்பதற்காக அவற்றை ஆய்வு செய்து பரிவுரை செய்யவும் தனது பணியாளர்களைத் தானே நியமிப்பது அவசியமென அது கருதியது இயற்கையே. இந்த நடைமுறை பல ஆண்டுகளாக மனநிறைவு தரும் வகையில் செயல்பட்டது. நீண்ட கால்க்கடன் வழங்கு செவ்விய அமைப்டை ஏற்படுத்த அது பெரிதும் உதவியுள்ளது. அது நடைமுறைகளை சீரமைத்துள்ளது ; திறமைக்கான மரபை ஏற்படுத்தியுள்ளது. மாநில நிலவள வங்கி வெளியிட்ட நீண்டகால கடனீட்டுறுதிப் பத்திரங்களில் முதலீடு செய்யும் மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

6.6.4. தொடக்கத்தில், கடன் விண்ணப்பங்களை ஆய்வு செய்து, அடைமானத்திற்காகக் கொடுக்கப்படும் நிலத்தை மதிப்பிட, துணைப் பதிவாளர்கள் இருவர், 10 கூட்டுறவு உதவிப் பதிவாளர்கள் ஆகியோரது பணிகளை மூன்று ஆண்டுக் கால அளவிற்கு இலவசமாக வழங்க அனுமதி அளிக்கப்பட்டது. இத்தொடக்க காலத்திற்குப் பின்னர், துணைப் பதிவாளர்கள், அவரது அலுவலகப் பணியாளர்கள் ஆகியோருக்காகும் செலவை மாநில நிலவள வங்கியே முழுவதும் ஏற்றது. கூட்டுறவு உதவிப் பதிவாளர்களுக்காகும் செலவு முழுவதையும் அரசு ஏற்றுக் கொண்டது. இந்த நிலைமை 1—4—1963 வரை தொடர்ந்து நீடித்தது. அப்போது நிலவள வங்கிப் பணிக்காக 3 துணைப் பதிவாளர்கள், 49 கூட்டுறவு உதவிப் பதிவாளர்கள் இருந்தனர். 1963 ஆம் ஆண்டிலிருந்து, கூட்டுறவு உதவிப் பதிவாளர்களின் செலவையும் படிப்படியாக மாநில நிலவள வங்கியே ஏற்க வேண்டும் என்று அரசு ஆணையிட்டது. (வங்கியின் பங்கு ஐந்தாண்டுக் கால அளவில் 60 சதவீதத்திலிருந்து 100 சதவீதமாக உயர்ந்துவிடும். அதே கால அளவில் அரசின் பங்கு 40 சதவீதத்திலிருந்து படிப்படியாகக் குறைந்து அறவே இல்லாமற் போகும்.)

1968-ல் நிலவள வங்கிப் பணிக்காக 8 துணைப் பதிவாளர்களை நியமிக்க அரசு அனுமதி வழங்கியது. முதலாண்டில் இவர்களுக்காகும் செலவை அரசும் மாநில நிலவள வங்கியும் சமமாகப் பங்கிட்டுக் கொண்டன. இரண்டாவது ஆண்டிலிருந்து ஆறுவது ஆண்டுவரை மாநில நிலவள வங்கியின் பங்கு ஆண்டொன்றுக்கு 10 சதவீதம் உயர்த்தப்பட்டு வந்தது. அதற்கு நிகராக அரசின் பங்கு குறைக்கப்பட்டுவந்தது. 1970-ல் மேலும் 13 துணைப் பதிவாளர்கள் பதவிகளுக்கு (வேளாண்மை மறுநிதி உதவிக் கழகம் நிதி யுதவி செய்யும் திட்டங்களுக்கான திட்ட அதிகாரிகள்) அனுமதி வழங்கப் பட்டபோது இந்த நிலைமை இருந்தது. துணைப் பதிவாளர்கள் பதவி களுக்கு முன்னர் அனுமதி வழங்கப்பட்ட நேர்வில் அவர்களுக்கான செலவு எந்த வீதாசாரத்தில் ஏற்கப்பட்டதோ அதே வீதாசாரத்தில் இவர்களுக் காகும் செலவும் ஏற்கப்பட வேண்டும் என்று அரசு கட்டளையிட்டது. வேளாண்மை மறு நிதியுதவிக் கழகம், அனைத்து நாடுகள் வளர்ச்சி நிறுவனம் ஆகியவற்றின் திட்டங்களை வகுத்து செயல்படுத்தியதன் விளைவாக, நீண்ட காலக் கடனுதவி நீட்டிக்கப்பட்டதால் அதிக அளவிலும் வெவ்வேறு முறைகளில் செலவைப் பங்கிட்டுக் கொள்வதன் அடிப்படை யிலும், நிர்வாகத் தொழில் நுட்பப்பணியாளர்களையும் மேற்பார்வை, நிர்வாகப் பணியாளர்களையும் நியமிக்க அரசு அவ்வப்போது அனுமதி அளித்தது. பொதுவாகக் கூறப்போனால், தொழில் நுட்பப்பணியாளர்களுக் கான செலவு முழுவதையும் அரசு ஏற்றுக்கொள்வதோடு நிர்வாகப் பணி யாளர்களுக்கான செலவை படிப்படியான வீதத்தில் அரசும் மாநில நிலவள வங்கியும் ஏற்றுக் கொள்கின்றன. அரசின் பங்கு 4 அல்லது 5 ஆண்டு களுக்குப் பின்னர் முற்றுப் பெறும்.

6.6.5. நீண்டகாலக் கடன் பணிக்காகவென்றே அல்லது அப்பணிக்கு ஓரளவு சம்பந்தப்பட்ட அரசுப் பணியாளர்களையும் மேற்பார்வைப் பணி யாளர்களையும் நிர்வாகப் பணியாளர்களையும் (இவர்களுக்காகும் செலவை அரசு ஈடு செய்கிறது) காட்டும் விவர அறிக்கை இத்துடன் இணைக்கப் பட்டுள்ளது (XXI ஆம் எண் இணைப்பைக் காண்க).

6.6.6. பதிவாளர் பொறுப்பின்கீழ் நீண்டகாலக் கடன் பணியைக் கவனித்துவரும் துறைப் பணியாளர்களைக் குறிப்பிட்டுக் காட்டும் விளக்கப் படம் ஒன்று XXII ஆம் எண் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

6.6.7. மாநில அளவில், பதிவாளருக்கு அடுத்தபடியாகக் கூடுதல் பதிவாளர் ஒருவர் எல்லாக் கடனுக்கும் பொறுப்பு வகித்து வருகிறார். இவரது பணியில் ஒரு பகுதி நீண்டகாலக் கடன் குறித்ததாகும். இவருக்குக் கீழே ஓர் இணைப் பதிவாளர் இருக்கிறார். இவர், வேளாண்மை மறுநிதி யுதவிக் கழகத் திட்டங்களுக்குப் பொறுப்பு வகிக்கிறார் (அனைத்து நாடுகள் வளர்ச்சி நிறுவனம் உட்பட) வேளாண்மை மறு நிதியுதவிக் கழகம் வழங்கும் நீண்டகாலக் கடனுக்கு இவர் முதன்மைப் பொறுப்பு வகிக்கிறார். அதே கூட்டுறவு நிறுவனம் இயல்பான கடன்களை வழங்கு வதால், இயல்பான நீண்டகாலக் கடன் வழங்கும் பணியையும் இவர் கவனித்து வருகிறார். தொழில் நுட்பப் பிரிவில் மேற்பார்வை பொறி யாளர் பதவித்தரத்தில் சிறப்பு அதிகாரி (நில நீர் ஆய்வு) ஒருவர் உள்ளார். பொதுப்பணித்துறையைச் சேர்ந்த இந்த அதிகாரி பதிவாளரின் கீழ்ப் பணியாற்றுகிறார். செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தருமபுரி, சேலம் ஆகிய மாவட்டங்களில் வெவ்வேறு இடங்களிலுள்ள உதவிப் பொறியாளர்கள், புவியியல் உதவி வல்லுநர்கள், புவியியல் உதவியாளர்கள் ஆகியோரைக் கொண்ட ஆய்வுப் பணியாளர்கள் இவருக்கு உதவியாக இருக்கின்றனர். (மேற்குறிப்பிட்ட 4 மாவட்டங்களில் அனைத்து நாடுகள் வளர்ச்சி நிறுவனத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இத் திட்டப் பகுதிகள் கடினமான பாறைப் பகுதிகளாகும் சிறு பாசனப் பகுதிகளுக்காக இப் பகுதிகள் ஆய்வு செய்யப்பட வேண்டியுள்ளன.)

6.6.8. வட்டார அளவில், வட்டார இணைப் பதிவாளர்கள் உள்ளனர். இவர்கள் தங்கள் வட்டாரங்களில் நடைபெறும் கூட்டுறவுப் பணி முழுவதற்கும் (நீண்ட காலக் கடன் உட்பட) பொறுப்பு வகிக்கின்றனர்.

6.6.9. மாவட்ட அளவில், திட்ட அதிகாரிகள் (துணைப் பதிவாளர்கள்) உள்ளனர். இவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர்களின் உடனடிக் கட்டுப்பாட்டின்கீழும் வட்டார இணைப்பதிவாளர்களின் முடிவான கட்டுப்பாட்டின் கீழும் பணியாற்றுகின்றனர். (அனைத்துநாடுகள் வளர்ச்சி நிறுவனத்திட்டங்கள் உட்பட) வேளாண்மை மறுநிதி உதவிக் கழகத் திட்டங்களை வகுத்து அவற்றைச் செயல்படுத்தும் பொறுப்பு இத்திட்ட அதிகாரிகளுக்குண்டு. இவர்கள், மாவட்ட அளவில் உள்ள ஆய்வுக் குழுக்களின் உறுப்பினர்-செயலாளர்களாவர். மாவட்ட ஆட்சித் தலைவர்களே இக்குழுக்களுக்குத் தலைவராவர். நீண்ட காலக்கடன் வழங்கப்படும் திட்டங்களின் முன்னேற்றம் பற்றி இக்குழுக்கள் ஆய்வு செய்கின்றன. தொழில் நுட்பப் பிரிவில், மாவட்ட ஆட்சித் தலைவரின் கட்டுப்பாட்டின்கீழ் மாவட்டத் தொழில் நுட்பப் பிரிவு ஒன்று உள்ளது. வேளாண்மை உதவிப் பொறியாளர் ஒருவர், புவியியல் உதவி வல்லுநர் ஒருவர் ஆகியோர் மேற்படி பிரிவில் உள்ளனர். இவர்கள் திட்ட அதிகாரியுடன் இணைந்து செயலாற்றுகின்றனர். திட்டங்களைச் செயல்படுத்துவதில் உள்ள தொழில் நுட்பப் பணிகளைத் தொழில் நுட்பப் பிரிவு மேற்பார்வையிடுகிறது. இயல்பான திட்டங்கள் குறித்துப் பொதுவான ஆலோசனையும் நல்குகிறது. நிலநீர் ஆய்வு, சிறப்பு அதிகாரி தொழில் நுட்பப் பிரிவின்மீது பொதுவான தொழில் நுட்பக் கட்டுப்பாட்டு அதிகாரத்தைச் செலுத்தி வருகிறார். ஆனால், அப்பிரிவு மாவட்ட ஆட்சித் தலைவரின் பணியாளரமைப்பின் ஒரு பகுதியாக அமைந்துள்ளது.

6.6.10. வட்ட அளவில், வட்டத் துணைப் பதிவாளர் தமது அதிகார வரம்பில் நீண்டகாலக் கடன் உட்பட கூட்டுறவுப் பணி முழுவதற்கும் பொறுப்பு வகிக்கிறார். பொதுவாக இரு வட்டங்கள் வட்டத் துணைப் பதிவாளர் அதிகார வரம்பிற்குட்பட்டவையாகும். 1972 ஆகஸ்டு முதல் திருத்தியமைக்கப்பட்ட தற்போதைய அமைப்பில் 52 வட்டங்கள் இருக்கின்றன. 1972 ஆகஸ்ட் திங்களுக்கு முன்பு அலுவல் அடிப்படையில் நீண்ட காலக் கடனுக்காகவென்றே 11 துணைப் பதிவாளர்கள் இருந்தனர். (சென்னை மாநகர் நீங்கலாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு துணைப் பதிவாளர் இருந்தார். சிறு மாவட்டங்கள் அருகிலுள்ள மாவட்டங்களுடன் சேர்க்கப்பட்டன). சீரமைக்கப்பட்ட அமைப்பில் இந்த 11 அதிகாரிகளும் வட்டத் துணைப் பதிவாளர் பதவித் தரத்துடன் இணைக்கப்பட்டனர். இதன் விளைவாக, 52 வட்ட அதிகாரிகளும் தங்கள் பணியின் ஒரு பகுதியாக நீண்ட காலக் கடன் பணியைக் கவனித்து வருகின்றனர்.

6.6.11. மாவட்ட அளவில் திட்ட அதிகாரிகளுக்கும் வட்ட அளவில் துணை பதிவாளர்களுக்கும் உதவியாக நீண்ட காலக் கடனுக்காகவென்றே கூட்டுறவு உதவிப் பதிவாளர்கள் உள்ளனர். இயல்பான நீண்ட காலக் கடன் பணிக்காக 105 கூட்டுறவு உதவிப் பதிவாளர்கள் உள்ளனர். இவர்கள் வட்டத் துணைப் பதிவாளர்களின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளனர். வேளாண்மை மறு நிதி உதவிக் கழகம், அனைத்து நாடுகள் வளர்ச்சி நிறுவனம் ஆகியவற்றின் திட்டங்களுக்காக, கூட்டுறவு உதவிப் பதிவாளர்கள், முறையே, 100 பேரும் 29 பேரும் இருக்கின்றனர். இவர்கள் திட்ட அதிகாரிகளின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளனர்.

6.6.12. கூட்டுறவு உதவிப் பதிவாளர்களின்கீழ் 246 தொழில்நுட்ப மேற்பார்வையாளர்கள் பணிபுரிகின்றனர். வேளாண்மை மறுநிதியுதவிக் கழகத் திட்டங்கள் அனைத்துநாட்டு வளர்ச்சி நிறுவனத் திட்டங்களுக்காக அவர்கள் உள்ளனர். பெரும்பாலோர் சிறுபாசனத் திட்டங்களுக்காகவும் சிலர் சிறுபாசனம் அல்லாத பிற பாசனத் திட்டங்களுக்காகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்காகும் செலவு முழுவதையும் அரசு ஏற்கிறது

இவர்களைத் தவிர, தொழில் நுட்பஞ் சாராத 241 மேற்பார்வையாளர்கள் செலவை அரசும் நிலவள வங்கிகளும் பகிர்ந்துகொள்கின்றன. தொழில் தொடக்க நிலவள வங்கிகளுடன் இணைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்காகும் நுட்ப மேற்பார்வையாளர்கள் திட்ட அதிகாரிகளின் கட்டுப்பாட்டின் கீழும், தொழில் நுட்பஞ் சாராத மேற்பார்வையாளர்கள் தொடக்க நிலவள வங்கிகளின் கட்டுப்பாட்டின் கீழும் உள்ளனர்.

6.6.13. கடன் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்தல், திட்டங்களை மதிப்பிடுதல், அடைமானப் பொருளை மதிப்பிடுதல், கடன் தொகையைப் பயன்படுத்துதலைச் சரிபார்த்தல் ஆகியவை தொடர்பான பணியாளர்கள் கடன் வழங்கு நிறுவனத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்க வேண்டும் என்ற கொள்கை குறைகூறமுடியாத சிறந்ததோர் ஏற்பாடாகும் என்பதில் ஐயமில்லை. இப்பணி தற்போது மேலும் மேலும் நவீனமாகி வருவதுடன், நிபுணத்துவமும் அதற்குத் தேவைப்படுகிறது. இப்பணியைக் கவனித்துவரும் துறை அதிகாரிகள் பணியிடமாற்றம் செய்வதற்குட்பட்டவராவர். இவ்வாறு பணியிடமாற்றம் செய்யப்படுவது குறிப்பிட்ட பணியில் நிபுணத்துவம் பெறப் பாதகமாக அமைகிறது. இறுதியாக, வங்கியே கடன்களுக்கு ஒப்பளிப்பு வழங்க வேண்டியுள்ளதால், கடன்களுக்கு ஒப்பளிப்பு வழங்குவதற்கு முன்னர் மதிப்பீடு செய்யும் நிலையிலிருந்து கடன் ஒப்பளிக்கப்பட்ட பின்னர் முதலீடுகளைப் பாதுகாக்கும் நிலை வரையில் உள்ள பொறுப்பை அது ஏற்க வேண்டும். ஆனால், முழுப் பணியையும் ஒரு மொத்தமாக வங்கியிடம் உடனடியாக மாற்றுவது, வளர்ச்சிக்கும் செயல்படுதிறனுக்கும் தடையாக இருக்குமாதலால், அந்த நடவடிக்கை நடைமுறைக்கு உகந்ததாக இருக்குமா என்ற வினா உள்ளது.

6.6.14. பொதுவாக, நீண்ட காலக் கடன் வழங்குவது தொடர்பான பணி இரண்டு வகைகளைச் சேர்ந்ததாக உள்ளது. ஒரு வகைப் பணி, இயல்பான கடன்கள் சம்பந்தப்பட்டதாகவும், மற்றொரு வகை திட்டக் கடன்கள் வழங்குவதும் சம்பந்தப்பட்டதாகவும் உள்ளது. இவ்விருவகைப் பணிகளை, மேற்கொள்ளும் பணியாளர்கள், மேல் நிலைகள் நீங்கலாக, மற்ற நிலைகளில் பொதுவாகத் தனித்தனியாக உள்ளனர். இயல்பான கடன்கள் சம்பந்தப்பட்ட நடைமுறைகளும் செயல்களும், வங்கியின் வழக்கமான பணியின் ஒரு பகுதியாக உள்ளன. வங்கி பல ஆண்டுகளாக இப்பணியை மேற்கொண்டுள்ளது. திட்டக்கடன்கள் வழங்குவது அண்மையில் ஏற்படுத்தப்பட்ட ஒரு முறையாகும். திட்டங்களை (சிறுபாசனத் திட்டங்கள், மற்றும் ஏனைய திட்டங்கள்) வகுப்பதற்கும் செயற்படுத்துவதற்கும் அரசே கணிசமான அளவு முன்வந்து முயற்சி செய்ய வேண்டியுள்ளது. மேலும், பல்வேறு துறைகளிடையே ஒருங்கிணைப்பும் வேண்டியுள்ளது. தற்போதைய நிலையில், இது உருவாக்கி வளர்க்கும் தன்மை வாய்ந்ததாக உள்ளது. வேளாண்மை மறுநிதியுதவிக் கழகம், அனைத்துநாட்டு வளர்ச்சி நிறுவனம் போன்ற வெளி நிறுவனங்களிலிருந்து கிடைக்கக்கூடிய பெருமளவு நிதியுதவியைப் பெறுவதிலும், அத்தொகையை வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதில் ஆதாயமுள்ள வகையில் பயன்படுத்துவதிலும் அரசு முக்கியமாக நாட்டம் செலுத்துகிறது. அதனால், எல்லா நிலைகளிலும் பணியாற்றும் தொழில் நுட்பப் பணியாளர்களுக்காகும் முழுச் செலவையும் ஏற்க அரசு முன்வந்துள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ் தொழில்நுட்பப் பிரிவு ஒன்று செயல் படுமாறு ஏற்படுத்துவதன் மூலமும், திட்டங்களின் முன்னேற்றம் குறித்துத் தெரிந்துகொள்வதற்கு ஆய்வுக் குழுவின் தலைவராக அவரை நியமிப்பதன் மூலமும் திட்டங்களைச் செயற்படுத்தும் பணியில் மாவட்ட ஆட்சித் தலைவரை அரசு ஈடுபடுத்தியுள்ளது. எனவே, தற்போது துறை கவனித்து வரும் இயல்பான கடன் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்வது தொடர்பான பணி, மாநில நிலவள வங்கியிடம் மாற்றப்படலாமென்றும், அவ்வங்கியே அப்பணியின் பொறுப்பை ஏற்கலாம் என்றும் நாங்கள் கருதுகிறோம். திட்டக் கடன் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்வது தொடர்பான பணியும் இப்பணியைக் கவனித்து வரும் நிர்வாக, தொழில் நுட்பப் பணியாளர்களும்

தற்போதுள்ளவாறே துறையின் கட்டுப்பாட்டின்கீழ் தொடர்ந்து இருந்து வரலாம். புதிய ஏற்பாடு செயல்படும் அடிப்படையில், திட்டப் பணியாளர்கள் பணியிடமாற்றம் செய்யப்படுவது குறித்து மூன்றுண்டுகளுக்குப் பிறகு, கருதிப் பார்க்கலாம்.

6.6.15. மாநில நிலவள வங்கி தமக்குச் சொந்தமான பயிற்சி பெற்ற பணியாளர்களைக் கொண்டு இந்த இயல்பான பணியை மேற்கொள்ளத் தயாராக உள்ளதா என்ற வினு எழுகிறது. இப்பணிக்காக ஆட்களை நியமித்து அவர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டிய தேவை ஏதும் வங்கிக்கு இதுவரை ஏற்படவில்லை. எனவே, இப்பணியை உடனடியாக மேற்கொள்ளும் நிலையில் அதற்கு எப்பணியாளரும் இல்லை. அது வரையில், சாதாரணக் கடன்கள் தொடர்பான துறைப் பணியாளர்கள் வங்கிக் கட்டுப்பாட்டிற்கு மாற்றப் படலாம். இப்பணியாளர்களில் தொடக்க நிலையில் கூட்டுறவு உதவிப் பதிவாளர்களும், நீண்டகால கடன் குறித்து வட்டத் துணைப் பதிவாளர்கள், வட்டார இணைப் பதிவாளர்கள், தலைமையிட இணைப் பதிவாளர் ஆகியோரும் உயர்மட்டத்தில் கூட்டுப் பதிவாளரும் (கடன் வசதி) அடங்குவர். இப் பணியாளர்களில், நீண்ட காலக் கடன் பணியைக் (சாதாரணக் கடன்) கவனிப்பதற்காகவென்றே நியமிக்கப்பட்டுள்ள கூட்டுறவு உதவிப் பதிவாளர்களை, தொல்லை ஏதுமின்றி, வங்கிக் கட்டுப்பாட்டிற்கு மாற்ற இயலும். பிற பணிகளுக்குப் பொறுப்பு வகிக்கும் உயர்மட்ட அதிகாரிகளை (தலைமையிடத்திலுள்ள இணைப் பதிவாளர் நீங்கலாக) மாற்ற இயலாது. தலைமையிடத்திலுள்ள இணைப் பதிவாளர்களைப் பொறுத்தமட்டில், அவர்கள் தற்செயலாக நீண்டகாலக் கடன் தொடர்பான பிற பணிகளைக் கவனித்து வந்தபோதிலும் முக்கியமாக திட்டப் பணிகளையே கவனித்து வருகின்றனர். எனவே, அவர்களையும் பணியிட மாற்றம் செய்ய இயலாது. கூட்டுறவு உதவிப் பதிவாளர்களின் பணியை மேற்பார்வையிடுதல், கட்டுப்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்பவர்களும் அவர்களது நிலைக்கு அடுத்த உயர்மட்டத்தில் உள்ளவர்களுமான அதிகாரிகள், வட்டத் துணைப் பதிவாளர்களாவார். கூட்டுறவு உதவிப் பதிவாளர்கள் வங்கிக் கட்டுப்பாட்டிற்கு மாற்றப்படும்போது, அவர்களது பணியை மேற்பார்வையிடவும், கட்டுப்படுத்தவும் துணைப் பதிவாளர்களுக்கு நிகரான அதிகாரிகள் இருக்க வேண்டும். வங்கி எந்த அளவிற்கு மேற்பார்வை அதிகாரிகளைத் தனது பதவித் தரங்களிலிருந்து (உதாரணமாக உதவிச் செயலாளர் தரம்) நியமிக்க இயலுமோ அந்த அளவுக்கு நியமிக்கலாம். எஞ்சியுள்ளவர்களைப் பொறுத்தமட்டில், வங்கி தன் கட்டுப்பாட்டின் கீழ் மேற்பார்வை அதிகாரிகளை நியமிக்கும் வரையில், துணைப் பதிவாளர்கள் சிலரை மூகமையில் பெறுவது நலம் பயக்கும். அதுபோன்றே, மாற்று ஏற்பாடு எதனையும் வங்கி சொந்தமாகச் செய்ய இயலாவிடின், தலைமை அலுவலக மட்டத்தில் இணைப் பதிவாளர் தரத்தில் அதிகாரி ஒருவரை மூகமையில் பெறலாம்.

6.6.16. சாதாரணக் கடன் குறித்த பணி தொடர்பான கூட்டுறவு உதவிப் பதிவாளர்கள், மாநில நிலவள வங்கிக் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டு வரப்படலாம் என்று கருத்து தெரிவிக்கையில், நிதித் (அடிப்படை விதிகள்) துறையின் 29—3—70 ஆம் நாளிட்ட 302 ஆம் எண் அரசாணையில் அடிப்படை விதிகளின் 110-வது விதிக்கு வெளியிடப்பட்ட திருத்தத்திற்கிணங்க, அரசுப் பணியாளர் ஒருவர், அவரது விருப்பம் கேட்கப்படாமலேயே கூட்டுறவு நிறுவனங்களுக்கு மாற்றப்படலாம் என்பதையும் நாங்கள் கருத்திற் கொண்டுள்ளோம்.

6.6.17. கடன் விண்ணப்பங்களை ஆய்வு செய்தல், அடைமானங்களைப் பார்வையிடுதல், செய்யக் கருதியுள்ள முதலீடு குறித்து மதிப்பிடுதல், கடன் தொகை பயன்படுத்தியது குறித்து சரிபார்த்தல், அடைமானச் சொத்துக்களை இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை பார்வையிடுதல், கடனைத் திருப்பிச் செலுத்தியதற்கான கைச் சாத்துக் கோப்புகளுக்குச் சான்றளித்தல் போன்ற வழக்கமான இனங்கள் குறித்து மட்டுமே பணி மாற்றம் செய்யக்

கருதப்பட்டுள்ளது என்பதைத் தெளிவாக்க நாங்கள் விரும்புகிறோம். இப்பணிகள் தற்போது கூட்டுறவு உதவிப் பதிவாளர்களால் கவனிக்கப் படுகிறது; அவர்கள் வங்கியின் நிர்வாகத்திற்கு மாற்றப்பட்ட பின்னரும் அவை அவர்களால் தொடர்ந்து கவனிக்கப்படும். தொடக்க நிலவள வங்கிகளைக் குறித்த காலத்துக்கு ஒருமுறை பார்வையிடுதல், தீர்ப்பு நிறைவேற்ற மனுக்கள் மீது நடவடிக்கை எடுத்தல் போன்ற ஏனைய பணிகளும் உள்ளன. வங்கிக்கு மாற்றப்பட்ட பணி தொடர்பாகவும், கடனீட்டுறுதிப் பத்திரங்களை வைத்துள்ள பொறுப்பாளரான பதிவாளர், கடனீட்டுறுதிப் பத்திரங்களைத் திருப்பிச் செலுத்துவதற்காக உத்தரவாதம் அளித்துள்ள அரசு ஆகியோரின் பொறுப்புக்கு ஏற்ப, சோதனையாகச் சரிபார்த்தல் அவசியமாகும். இதற்காக நேரடியாகப் பொறுப்பு வகிக்க கூட்டுறவு உதவிப் பதிவாளர்கள் சிலரைத் துறை வைத்திருக்க வேண்டும்.

6.6.18. துறைப் பணியாளர்களான கூட்டுறவு உதவிப் பணியாளர்களைப் பணிக்கு எடுத்துக் கொள்ளும் அதேசமயத்தில் மாநில நிலவள வங்கி சொந்தமாகப் பணியாளர்களைப் பணிக்கு எடுத்துக் கொண்டு அவர்களுக்குப் போதிய பயிற்சி அளிப்பதற்கான செவ்விய கொள்கை ஒன்றை அந்த வங்கி உருவாக்க வேண்டும். வேலைக்குச் சேர்க்கப்படவிருக்கிற பணியாளர்களுக்கான உரிய கல்வித் தகுதிகளை வரையறுக்க வேண்டும். போட்டித் தேர்வுகள் நடத்தப்பட வேண்டும். பொது நிறுவனங்களுக்கென ஏற்றுக் கொள்ளப்பட்ட வரையறைகளுக்கேற்ப, நேரடித் தேர்வும் தெரிந்தெடுத்தலும் இருக்க வேண்டும். இத்திட்டம் தகுந்த முறையில் திட்டமிடப்பட்டு, திறமையானவர்களை ஈர்க்கும் வகையில் ஊக்கமும், பதவிக் காலம் நீடிக்கும் என்ற உத்தரவாதமும் கொடுக்கப்படுமேயானால், நீண்டகாலக் கடன் வழங்கு பணியில் தற்போது ஈடுபட்டுள்ள பல அரசுப் பணியாளர்கள், வங்கியின்கீழ் உள்ள புதிய பதவியில் சேர்வதற்கு விண்ணப்பித்துக் கொள்வர்.

அத்தியாயம் 7.

வேளாண்மை விளைபொருள் விற்பனையில் கூட்டுறவு தொடக்கமும் வளர்ச்சியும்.

7.1.1. உழவர்களுக்குக் கடன் வசதியை மட்டும் அளிப்பது, கூட்டுறவு முயற்சியின் அதிக அளவு பயனைப் பெற அவர்களை இயலச் செய்வதாகாது. ஆனால், அவர் உற்பத்தி செய்த வேளாண்மை விளைபொருளை அதிக அளவு ஆதாயம் தரும் வகையில் விற்பனை செய்வதில் அவருக்கு உதவ வேண்டும். கூட்டுறவு இயக்கத்தின் தொடக்க ஆண்டுகளில் இக் கருத்து ஒப்புக் கொள்ளப் பட்டது. இக் கருத்தின் அடிப்படையில்தான், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அமைக்கப்பட்டன.

7.1.2. இம்மாநிலத்தில் உள்ள விற்பனைச் சங்கங்கள் இரண்டு அடுக்குகளில் செயல்படுகின்றன. வட்ட அளவிலான அல்லது மண்டி அளவிலான தொடக்க விற்பனைச் சங்கங்கள், தலைமை நிலையில் மாநில விற்பனைக் கூட்டமைப்பு என்ற இரு அடுக்கு முறைகளாகச் செயல்படுகின்றன.

7.1.3. தொடக்க ஆண்டுகளில், நல்ல விலைக்கு விற்கும் வரை காத்திருப்பதற்கு உறுப்பினர்களுக்கு இயலும் வகையில், அவர்களது விளைபொருளை அடைமானம் வைப்பதன் பேரில் கடன்களை வழங்குவதற்காக மட்டுமே விற்பனைச் சங்கங்கள் செயல்பட்டன. படிப்படியாக, உறுப்பினர்கள் உற்பத்தி செய்த விளைபொருளை முகவர் அடிப்படையில் விற்பனை செய்யும் பணியை அவை மேற்கொண்டன. மேலும், இன்றியமையாத பயிரிடு பொருட்களை அளித்தல், போக்குவாத்து வசதி அளித்தல், விற்பனையை மேம்படுத்த செய்முறைப் பிரிவுகளை ஏற்படுத்தல் போன்ற ஏனைய தொடர்புள்ள பணிகளையும் அவை மேற்கொண்டன.

7.1.4. இம்மாநிலத்தில் 132 தொடக்க விற்பனைச் சங்கங்கள் உள்ளன. அவற்றில் 122 சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. பத்து சங்கங்கள் கலைக்கப்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் செயல்படுதலைக் காட்டும் விவர அறிக்கை ஒன்று **XXIII** -ம் எண் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

தொடக்க விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களைக் கூட்டமைப்புகளாகச் சீரமைத்தல்.

7.2. இச்சங்கங்களில் 4.79 லட்சம் உறுப்பினர்கள் (தனிப்பட்டவர்கள் 4.72 லட்சம்; சங்கங்கள் 0.07 லட்சம்) இருப்பது விவர அறிக்கையிலிருந்து தெரியவரும். தொடக்க விற்பனைச் சங்கங்கள் வேளாண்மைக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கக் கூட்டமைப்பாகச் சீரமைக்கப்பட வேண்டும் என்பதும், தனிப்பட்ட உறுப்பினர்கள் நீக்கப்பட வேண்டும் என்பதும் கூட்டுறவு குறித்து சந்தானம் குழு தெரிவித்த பரிவுரைகளில் ஒன்றாகும். கடன் வசதியை விற்பனை வசதியுடன் இன்னும் நெருக்கமான வகையில் இணைப்பதும், விளைபொருளிலிருந்து கிடைக்கும் விற்று முதலிருந்து சேர வேண்டிய தொகைகளை தவறாமல் வசூலிப்பதன்மூலம் அதிக அளவில் கடன் கொடுப்பதற்கு வகை செய்வதுமே இப்பரிவுரையின் நோக்கமாகும். தனிப்பட்ட உறுப்பினர்களை அகற்றுவதற்குப் பதிலாக, அத்தகைய உறுப்பினர்களின் எண்ணிக்கை 1967-ல் 3.99 லட்சம் என்பதிலிருந்து 1972-ல் 4.72 லட்சமாக உயர்ந்துள்ளது. சந்தானம் குழு தெரிவித்த பரிவுரையின் நோக்கத்தைக் கருத்தில் கொண்டு, அதனை விரைவில் செயல்படுத்த வேண்டு மென நாங்கள் வலியுறுத்துகிறோம்.

விற்பனை, வழங்கல்.

7.3. 1966–67-ல், இச்சங்கங்கள் ரூ. 3.6 கோடிக்கு வேளாண்மை விளைபொருளை விற்பனை செய்தன; இந்த அளவு 1971–72-ல் ரூ. 11.50 கோடியாக இருந்தது. 1967-ல் இச்சங்கங்கள் ரூ. 9.44 லட்சம் மதிப்புள்ள உரங்களையும் வேளாண்மைப் பொருள்களையும் வழங்கின; 1972-ல் ரூ. 19.49 கோடி மதிப்புள்ள உரங்களையும், வேளாண்மைப் பொருள்களையும் வழங்கின. இந்த இரண்டு வகையிலும் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

உற்பத்திக் கடன்களை வசூலித்தல்.

7.4. கிராமக் கடன் வழங்கு சங்கங்கள் வழங்கிய உற்பத்திக் கடன்களை, கிராமக் கடன் வழங்கு சங்கங்களின் உறுப்பினர்களால் விற்பனைச் சங்கங்கள் மூலம் (இம்முறை ஒருங்கிணைந்த கடன் வழங்கு-விற்பனை முறை என்று அழைக்கப்படுகிறது) விற்பனை செய்த விளைபொருளின் விற்று முதலிலிருந்து வசூலிக்கும் பணி இம்மாநிலத்தில் அதிக முன்னேற்றம் காணவில்லை. 1971–72-ல், இம்முறையில் ரூ. 0.59 லட்சம் மட்டுமே வசூலிக்கப் பட்டது. கூட்டுறவு மத்திய வங்கி அதிகாரிகள் அக்கறை காட்ட வேண்டிய ஒரு பொருள் இது என்று சந்தானம் குழு கருத்து தெரிவித்தது. சம்பந்தப்பட்ட மத்திய வங்கிக் கிளையின் மேலாளர் விற்பனைச் சங்கத்தின் குழுவில் இருப்பாரேயானால், கடன் வசதியையும் விற்பனையையும் ஒருங்கிணைப்பதற்கு உதவியாக இருக்கும். ஆகவே, அவர் அலுவல் முறையில் அந்த விற்பனைச் சங்கத்தின் இயக்குநராகச் செய்யப்படலாமென்று குழு கருத்துத் தெரிவித்தது. இக்கருத்தினைக் கூடிய விரைவில் செயல்படுத்தலாம்.

7.5.1. விற்பனைக்கு உதவி செய்யும் முதல் நடவடிக்கையாக, செய்முறை யந்திரங்களுக்குரிய மூலதனச் செலவில் முதலீடு செய்ய பங்கு மூலதன வடிவில் விற்பனைச் சங்கங்களுக்கு அரசு உதவி அளிக்கப்பட்டுள்ளது. பருத்தி விதை நீக்கும் யந்திரம், வேர்க்கடலை தோல் நீக்கும் யந்திரம், எண்ணெய் ஆலை, அரிசி ஆலை, தவிட்டு எண்ணெய் ஆலை, அரிசி உமி நீக்கும் யந்திரம், பழங்களைப் பதப்படுத்தும் யந்திரம் போன்ற செய்முறை தொழிற் பிரிவுகள் 97 உள்ளன. இவைகளில் பெரும்பாலான பிரிவுகள் அவை செயல் படுத்துவதற்காகும் செலவைச் சரிக்கட்டவும் மூலதன முதலீட்டை ஈடு செய்யவும் போதுமான வருமானத்தை ஈட்ட முடியவில்லையென்பது இந்த செய்முறைப் பிரிவுகள் பற்றிய சங்கடமான கூறுகளில் ஒன்றாகும். 97 பிரிவுகளில், 1970–71-ல் ஏறக்குறைய 52 பிரிவுகள் விரயத்தில் (மொத்த விரயம் ரூ 8.14 லட்சம்) செயல்பட்டன. எஞ்சிய பிரிவுகள் ஆதாயத்தில் (மொத்த ஆதாயம் ரூ. 16 லட்சம்) செயல்பட்டன. இப்பிரிவுகள் ஓராண்டில் செய் முறைப்படுத்தக்கூடிய அளவு 3.41 லட்சம் டன்னாகும். 1970-71-ல் 0.64 லட்சம் டன் மட்டுமே செய்முறைப்படுத்தப்பட்டது. பெரும்பாலான செய் முறைப் பிரிவுகளில் உரிய தகுதிபெற்ற மேலாளர்கள் இல்லை, யந்திரத்தை அதன் முழுத்திறனளவுக்குச் செயல்படுத்துவதற்கான தொழில் நுட்ப வல்லுநர்கள் இப்பிரிவுகளுக்குக் கிட்டவில்லை. எப்போது வாங்கவேண்டும், எப்போது விற்கவேண்டுமென்பதை நன்கறிந்த கொள்முதல், விற்பனை நிர்வாகிகள் இப்பிரிவுகளில் இல்லை. இவற்றிற்கெல்லாம் மேலாக, இந்த யந்திரங்களைச் சொந்தமாக வைத்துள்ள விற்பனைச் சங்கங்களில் வணிகர்களே அதிகமாக உள்ளனர். இவர்கள் தங்கள் சொந்த நலனைப் பார்ப்பதால் சங்கத்தின் நலன் பாதிக்கப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளர் அலுவலகத்தில் விற்பனைப் பிரிவில் போதிய தொழில் நுட்ப வல்லுநர்கள் இல்லை. இப்பிரிவு பன்னெடுங்காலமாக இது குறித்து நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளாமல் இந்நிலையைக் கண்ணுற்ற வண்ணமாக செயல்பட்டு வந்துள்ளது. தொழில் நுட்ப வல்லுநர்களின் பணிகளைப் பெறுவதற்காக தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து நிதியுதவிபெறும் மாநில விற்பனைக் கூட்டமைப்பு, மாநிலப் பொதுப் பணித்துறையிலிருந்து சில பொறியாளர்களை எடுத்துக் கொண்டு அதன் மூலம் முகமையில் மனநிறைவடைகிறது.

7.5.2. இந்தப் பிரிவுகளில் பெருமளவு மூலதனம் முடங்கிக் கிடப்பதைக் கருதிப் பார்க்கையில் இந்நிலையைச் சீர்படுத்த அவசர நடவடிக்கை எடுப்பது சாலப் பொருத்தமாகும். முதலாவதாக, விற்பனைச் சங்கங்கள் வணிகர்களின் பிடியிலிருந்து விடுவிக்கப்படவேண்டும். இச்சங்கங்களில் உழவர்களே முக்கியமாகச் செல்வாக்கு பெற்றவர்களாக இருக்கவேண்டும். இரண்டாவதாக, பதிவாளர் தகுந்த நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளாமல் பார்த்துக் கொண்டிருப்பதை விடுத்து முகப்புடன் வளர்க்கும் பணிகளை மேற்கொள்ளவேண்டும். உரிய தகுதிபெற்ற தொழில் நுட்ப மேலாளர், விற்பனை மேலாளர், கொள்முதல் மேலாளர் ஆகியோரின் பணிகள் இந்த செய்முறைப் பிரிவுகளுக்குப் பெறப்படவேண்டும். பெரும்பாலும் பொதுப் பணித்துறையிலிருந்து பொறியாளர்களை எடுத்துக் கொள்வதற்குப் பதிலாக செய்முறை பொறியியல், விற்பனைமுறை ஆகியவற்றில் வல்லமை படைத்தவர்களை வேலைக்கமர்த்துமாறு மாநிலக் கூட்டமைப்பு இணக்கப்படவேண்டும். மாநிலக் கூட்டமைப்பு கொடுக்க முன்வரும் சம்பள வீதங்களைப் பார்க்கும்போது உண்மையில் பயனுள்ள வல்லுநர்கள் கிடைக்காமற் போகலாம். நடைமுறையில் இதற்குச் சிறந்த மாற்று வழியாதெனில், அந்த வல்லுநர்களை பகுதி நேர ஆலோசகர்களாக வைத்துக்கொள்வதேயாகும். கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் அலுவலகத்தில் உள்ள விற்பனைப் பிரிவு இந்த ஆலோசகர்களின் பணியை நன்கு பயன்படுத்திக் கொண்டு செய்முறைப் பிரிவு ஒவ்வொன்றைப் பற்றியும் விரிவாக ஆய்வு செய்து அப்பிரிவை நல்ல முறையில் பணியாற்றும் நிலைக்குக் கொண்டுவர முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்பணி ஓர் இயக்க அடிப்படையில் மேற்கொள்ளப் படலாமென்று ஆணைக்குழு பரிவுரை செய்கிறது.

தலைமை விற்பனை சங்கமும் அதன் அலுவல்களும்.

7.6.1. இம்மாநிலத்திலுள்ள கூட்டுறவு விற்பனைத் தொடக்கச் சங்கங்கள் 1959-ல் அமைக்கப்பட்டது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்புடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. தம்முடன் இணைந்துள்ள சங்கங்களும் அவற்றின் உறுப்பினர்களும் உற்பத்தி செய்யும் வேளாண்மைப் பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்தல், இரசாயனமும், விதைகள், கருவிகள் முதலிய வேளாண்மை பயிரிடு பொருட்களை வழங்குதல், செய்முறைப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியவை இக்கூட்டமைப்பின் முக்கிய நோக்கங்களாகும். இதன் பங்கு மூலதனம் ரூ. 115.77 லட்சமாகும். இதில் ரூ. 112.54 லட்சம் அரசால் வழங்கப்பட்டுள்ளது. கீழ்க்காணும் காரியங்களுக்காகப் பங்கு மூலதனத்திற்கு அரசு தொகையளிக்கிறது:— விற்பனை அலுவலுக்கான நடைமுறை மூலதனம் ரூ. 13.45 லட்சம்; உர வாணிகத்திற்காக விரயகாப்புத் தொகை ரூ. 6.00 லட்சம்; மன்னார்குடியில் பாமணி உரத்தொழிற்சாலை ஏற்படுத்துதலுக்காக ரூ. 8.25 லட்சம்; நவீன அரிசி ஆலை அமைப்பதற்காக ரூ. 10.37 லட்சம்; IFFCO பங்குகளில் முதலீடு செய்வதற்காக ரூ. 3.75 லட்சம். டிராக்டர் பணிக்களரி அமைப்பதற்காக ரூ. 0.72 லட்சம் (மொத்தம் ரூ. 112.54 லட்சம்).

7.6.2. கூட்டமைப்பு இதுவரை செய்து வந்த விற்பனை வணிகம் குறிப்பிடத்தக்க அளவுக்கு இல்லை. விற்பனை செய்த பொருள்களின் மதிப்பு ரூ. 2.39 லட்சம் மட்டுமேயாகும். ஆயினும் உரம் வழங்குவதைப் பொறுத்த வரையில் கூட்டமைப்பு நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. 1971-72-ஆம் ஆண்டில், இக்கூட்டமைப்பு ரூ. 742.91 லட்சத்திற்கு உரத்தை வாங்கியது. ரூ. 849.49 லட்சத்திற்கு விற்பனை செய்தது. 1972 ஜூலை முதல் டிசம்பர் வரை ஆறு மாதக் கால அளவில் ரூ. 482.64 லட்சத்திற்கு உரம் வாங்கப் பட்டது. ரூ. 592.72 லட்சத்திற்கு உரம் விற்கப்பட்டது. சென்னை உரத் தொழிற்சாலைக்கான மூன்று விற்பனையாளர்களில் இக்கூட்டமைப்பும் ஒன்றாகும். தமிழ்நாட்டில் இந்திய உழவர் இரசாயன உரங்கள் கூட்டுறவு நிறுவனத்தின் ஒரு முகவராக இக்கூட்டமைப்பு இருக்கிறது.

உரம் வழங்கும் அமைப்பு முறையில் மாற்றம் செய்வதற்கு அரசு ஆணை யிட்டுள்ளதாகவும் (கூட்டுறவுத் துறையின் 9—5—73 ஆம் நாளிட்ட 184 ஆம் எண் அரசு ஆணை) புதிய திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான கட்டளைகள் அடங்கிய சுற்றறிக்கை ஒன்றை (22—5—73-ஆம் நாளிட்ட 54761/73 ஆம் எண் சுற்றறிக்கை) பதிவாளர் பிறப்பித்துள்ளதாகவும் இது தொடர்பாக நாங்கள் அறிகிறோம். திருத்தியமைக்கப்பட்ட முறையின்படி, தொடக்க விற்பனைச் சங்கங்கள் உரங்களைக் கையாள வேண்டியதில்லை. இவற்றின் பணியை, தஞ்சாவூர் மாவட்டம் நீங்கலாக மாநில விற்பனைக் கூட்டமைப்பின் வட்டார அலுவலகங்கள் மேற்கொள்ளும். (தஞ்சாவூர் மாவட்டத்தில், மாவட்டக் கூட்டமைப்பு இப்பணியை மேற்கொள்ளும்.) உரங்களை விநியோகம் செய்வதில் சில தொடக்க விற்பனைச் சங்கங்கள் சரி வர தமது பங்கை ஆற்றவில்லை என்றும், எனவே, விரைவாகவும் செவ்விய முறையிலும் விநியோகம் செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு மாற்றி யமைக்கப்பட்ட அமைப்பு முறை ஒன்று வகுக்கப்பட்டுள்ளது என்றும் எங்களிடம் கூறப்பட்டது. புதிய ஏற்பாட்டு முறை சிறந்த பலனை அளிக்குமா என்று தற்போதைக்கு சொல்ல முடியாத நிலையிலிருக்கும்போது, தொடக்க விற்பனைச் சங்கத்தின் பங்கு மிக்க குறைவாகவும் பெயரளவில் மட்டுமாக இருப்பதைப் பதிவாளரின் சுற்றறிக்கையிலிருந்து காண்கிறோம். தொடக்க விற்பனைச் சங்கத்தின் ஒரே பணி, கிராமச் சங்கத்தின் தேவைக் குறிப்புகளை கூட்டமைப்பின் வட்டார அலுவலகத்திற்கு அனுப்பி வைப்பதேயாகும். இவ்வாறு இருக்கையில், சில்லறை விற்பனைச் சங்கம் வழங்கும் உரங்கள் மீது அதற்கு இன்னும் தரகு (குறைந்த வீதத்தில் இருந்தபோதிலும்) அனுமதிக்கப்படும் என்பதை நாங்கள் அறிகிறோம். விநியோக அமைப்பில் பயனுள்ள பங்கு எதனையும் ஆற்றாத நிறுவனம் ஒன்றுக்குத் தரகுத் தொகை வழங்குவதால் உரங்களின் விலைதான் உயரும். இதுபற்றி அரசு பரிசீலனை செய்யலாம் என்று நாங்கள் கூறுகிறோம்.

7.6.3. கூட்டமைப்பு, தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடியில் உரமணித் தொழிற்சாலை ஒன்றை அமைத்துள்ளது. பழங்களையும் காய்கறிகளையும் பாதுகாப்பாகச் சேமித்து வைப்பதற்காக சென்னை மாநகரில் 1,250 டன் திறன்கொண்ட குளிர்ப் பதன பிரிவு ஒன்றையும் கூட்டமைப்பு அமைத் துள்ளது. செங்கற்பட்டு மாவட்டத்தில் இது அமைத்துள்ள நவீன அரிசி ஆலை, உணவுப் பொருள் வழங்கல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

7.6.4. இக்கூட்டமைப்பு, இந்திய எண்ணெய்க் கழகத்தின் மொத்த வியாபாரியாக மண்ணெண்ணெயை விற்பனை செய்கிறது. 1971-72-ல் ரூ. 14 லட்சம், மதிப்புள்ள மண்ணெண்ணெயை கூட்டமைப்பு கொள்முதல் செய்து ரூ. 14.50 லட்சத்துக்கு விற்பனை செய்தது. அரிசி, கோதுமை, சர்க்கரை போன்ற கட்டுப்பாடு விதிக்கப்பட்ட பொருட்களை தென் சென்னை யிலுள்ள ஏற்பளிக்கப்பட்ட சில்லறை வியாபாரிகள், கூட்டுறவுச் சங்கங் களுக்கு பங்கிட்டளிப்பதற்கு மாநில அரசு சார்பில் மொத்த வியாபாரியாகவும் இக்கூட்டமைப்பு செயல்படுகிறது. 1971-72-ஆம் ஆண்டில் இது மொத்த வியாபாரியாக இருந்து விற்பனை செய்த பொருட்களின் மதிப்பு ரூ. 90.76 லட்சமாகும். கூட்டமைப்பு செய்துள்ளதாக இப்பாராவில் குறிப்பிட்டுள்ள அலுவல்கள் அதன் செயல் வரம்புக்குள் அடங்கியவை என்று சொல்வதற்கில்லை. இவ்வியாபாரம் நுகர்வோர் அமைப்பு மேற்கொள்ளும் விற்பனையின் தன்மையைக் கொண்டதாகும். இச்செயல்களை இக்கூட்டமைப்பு மேற்கொண்டபோது மாநில அளவில் நுகர்வோர் சங்கங்களுக்காக கூட்டமைப்பு எதுவும் இல்லை. பின்னர், நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்காக மாநிலக் கூட்டமைப்பு ஒன்று அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. நுகர்வோர் கூட்டமைப்பும் இந்த அலுவலை செய்ய விழைகிறது என்று தெரிய வருகிறது. இந்த அலுவலை நுகர்வோர் கூட்டமைப்பிடம் மாற்றிவிட்டு தனது விற்பனைக் கூட்டமைப்பு முக்கிய நோக்கமான வேளாண்மை விளைபொருட்களை விற்பனை செய்தல், பயிரிடு தேவைப் பொருட்களை வழங்குதல், ஆகியவற்றில் நாட்டம் செலுத்துவது உகந்ததாகும். இவ்வாறு மாற்றம் செய்யப்படுவது குறித்த

நடைமுறை பற்றி, உணவுப் பொருள் வழங்கல் துறையுடன் கலந்து இவ்விரு நிறுவனங்களும் தங்களுக்கிடையே பேச்சுவார்த்தை நடத்தி முடிவு செய்து கொள்ளலாம்.

7.6.5. கூட்டமைப்பு செயல்படுவதில் காணப்படும் முன்னேற்றத்தைக் காட்டும் விவர அறிக்கை ஒன்று இணைப்பு **XXIV**-ல் இணைக்கப் பட்டுள்ளது. 1962-லிருந்து 1964 வரையிலான 3 ஆண்டுகள் நீங்கலாக 1968 ஆம் ஆண்டு வரையில் இக்கூட்டமைப்பு ஆதாயத்தில் செயல்பட்டு வந்துள்ளதையும் 1968-69-லிருந்து விரயத்தில் செயல்பட்டு வந்துள்ளதையும் விவர அறிக்கையில் காணலாம். விரயம் ரூ. 0.66 இலட்சத்திலிருந்து ரூ. 11.71 இலட்சமாக உயர்ந்துள்ளது. இவ்வாறு விரயத் தொகை அதிகமாக உள்ளதற்கான முக்கியமான காரணங்கள். கீழ்க்கண்டவை என்று கூறப்படுகிறது. 1968-69-ல் பங்கீட்டு முறையின் கீழ்க் கொண்டு வரப்பட்ட பொருட்கள் தொடர்பான வாணிகத்தில் உணவுப் பொருள் வழங்கல் அதிகாரிகள் போதுமான ஆதாயத்தை அனுமதிக்காதது; 1969-70, 1970-71ல் மாதிரி அரசி ஆலையை இயக்குவதிலான அதிகச்செலவு; உணவுப் பொருள்களின் தரக் குறைவு காரணமாக உணவுப் பொருள் வழங்கல் துறை உணவுக் கழகம் ஆகியவை விலைகளில் செய்த குறைப்புகள்; உரத் தொழிற்சாலைத் திறனை உரிய அளவிற்குக் குறைவாகப் பயன் படுத்தியது; ஏஜென்ட் சங்கங்கள் நிலுவைகளைத் தாமதமாக செலுத்திய தன் காரணமாக உர வாணிகத்தில் உரிய அளவுக்கு நாட்டமில்லாமற் போனது ஆகியவையாகும் என்று கூறப்படுகிறது. இக்குறைபாடுகள் அனைத்தையும் போக்குவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும், சுமார் இரண்டு ஆண்டுக் காலத்திற்குள் இவ்விரயத்தைச் சரிகட்டப்படும் என்று கூட்டமைப்பு நம்புவதாகவும் கூறப்படுகிறது. இது வரை கூட்டமைக்கு ஏற்பட்டுள்ள பெருத்த விரயத்தைச் சரிகட்டுவதில் கூட்டமைப்பு அடைந்துவரும் முன்னேற்றம் குறித்து துறை உன்னிப்பாக கவனித்து வர வேண்டுமென்று நாங்கள் கருத்து தெரிவிக்கிறோம்.

அத்தியாயம்-8.

வேளாண்மையில் கூட்டுறவு (பொதுப் பணிகள்)

தோற்றம்.—

8.1. மாநிலக் கூட்டுறவு இயக்கத்தில் அண்மையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி, தங்களது உறுப்பினர்களுக்கு பொது வேளாண்மைப் பணிகளைச் செய்வதற்காக இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள், வேளாண்-பொறியியல் பழுதுபார்க்கும் கூட்டுறவு நிலையங்கள் ஆகியவற்றை அமைத்துள்ளதேயாகும். சிறு பாசனத் திட்டங்கள், நில மேம்பாட்டுத் திட்டங்கள் (கிணறுகளைத் தோண்டுவதிலும், ஆழப்படுத்தலும், டிராக்டர்களை வாங்குதல் முதலியவை) ஆகியவற்றிற்காக மாநில நிலவள வங்கி பெரிய அளவில் மேற்கொண்டுள்ள கடன் வழங்கு அத்தகைய சங்கங்களை அமைப்பதற்குத் தூண்டுகோலாய் இருந்துள்ளது.

இறைவைப் பாசனச் சங்கங்கள்

நோக்கங்கள்.—

8.2. கட்டுபடியாகாத சிறிய அளவில் நிலம் வைத்துள்ள உழவர்கள் பொதுப் பாசன வாயிலிலிருந்து நீர் பெறும் பொருட்டு, அவர்களுக்கு உதவுவதே இறைவைப் பாசனச் சங்கத்தின் முக்கியமான நோக்கமாகும். இந்நோக்கத்தைச் செயல்படுத்த, நிலங்களைப் பெறவும், கிணறு ஏரிகள் முதலியவற்றை அமைக்கவும்; விசையேற்றங்களை நிறுவுவதன் மூலம் நீர் வாயிலிலிருந்து நீர் இறைக்கும் பணியை மேற்கொள்ளவும் இச்சங்கத்திற்குத் தகுதியுண்டு. டிராக்டர்கள், பிற வேளாண்மை இயந்திரங்கள் ஆகியவற்றை வாடகைக்கு விடுதல், விதைகள், எரு ஆகியவற்றை வாங்கி வழங்குதல் போன்ற பாசனப் பணிகளுடன் நேரடித் தொடர்பற்ற சில பணிகளையும் இச் சங்கம் மேற்கொள்வதற்கு அதன் துணை விதிகளில் விதித்துறை உள்ளது.

செயல்முறை.—

8.3. கிணறு போன்ற பொதுவான பாசன வாயிலை அமைப்பதற்காக, அடைவான பகுதி ஒன்றில் உள்ள தங்களது நிலங்களை ஒருங்கு சேர்க்க இறைவைப் பாசனச் சங்கத்தின் உறுப்பினர்கள் நயந்து கேட்கப்படுகின்றனர். இச்செயற்குறிப்பின் தொழில் நுட்ப வாய்ப்புக் கூறு குறித்து ஆய்வு செய்யப்படுகிறது. நிலவள வங்கிகள் நிதி உதவி அளிக்கிற திட்டங்கள் தொடர்பாக மாவட்டத் தொழில் நுட்பப் பிரிவில் மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ் நியமிக்கப்பட்ட உதவி புவியியல் வல்லுநர், வேளாண்மை உதவிப் பொறியாளர் ஆகியோரால் ஆலோசனை தரப்படுகிறது. இத்திட்டத்திற்கான மதிப்பீடுகள் ஊராட்சி ஒன்றியப் பொறியாளரால் அல்லது தொடக்க நிலவள வங்கியின் தொழில் நுட்ப மேற்பார்வையாளரால் தயாரிக்கப்பட்டு, வேளர்ண்மை உதவிப் பொறியாளரால் ஏற்பளிக்கப்படுகின்றன. இச் செயற்குறிப்பின் பொருளாதாரத் தன்னிறைவு, நிதி வகையில் சாத்தியமாகக்கூடிய நிலை ஆகியவற்றையொட்டி, திட்ட அறிக்கைக்கு (கூட்டுறவு) நலவளர்ச்சி அதிகாரி இறுதிவடிவம் கொடுக்கிறார். திட்டத்திற்கு மாவட்டத் திட்ட அதிகாரி (வேளாண்மை மறுநிதி உதவிக் கழகத் திட்டங்கள் தொடர்பாக நியமிக்கப்பட்ட துணைப் பதிவாளர்) ஏற்பளிக்கிறார். ஏற்பளிக்கப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் கடன் விண்ணப்பம் சம்பந்தப்பட்ட தொடக்க நிலவள வங்கிக்கு அனுப்பப்படுகிறது. மாநில நிலவள வங்கி அக்கடனை அனுமதிக்க அந்த வங்கி எற்பாடு செய்கிறது.

எளிதாக்கப்பட்ட நடைமுறைக்காக சட்டத்திலுள்ள விதித்துறை.

8.4. இறைவைப் பாசனச் சங்கங்கள் குறித்து தனிப்பட்ட அத்தியாயம் ஒன்று தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இச் சட்டத்தின் 84 (c)பிரிவின்கீழ். இறைவைப் பாசனச் சங்கத்தின் உறுப்

பினர் ஒருவர் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டு, சங்கம் தனது நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலும் வகையில் அது பெறும் கடனுக்காக தனது நிலத்தைப் பிணையாக வைக்க சங்கத்திற்கு அதிகாரம் அளிக்க வேண்டும். அறிவிக்கப் பட்ட நிலங்களை நிதிவழங்கு நிறுவனத்திற்கு அடைமானம் வைக்க அதே பிரிவு சங்கத்திற்கு அதிகாரம் அளிக்கிறது. மேலும், அத்தகைய அடை மானம் அறிவிப்பைச் செய்த நபரையும் அவருக்குப் பின் அந்நிலத்தில் பற்று கொள்பவர்களையும் கட்டுப்படுத்தும் என்று அந்தப் பிரிவு விதிக்கிறது.

பணிகளை நிறைவேற்றுவதற்கான முகவரமைப்பு.

8.5. கடன் அனுமதிக்கப்பட்ட பிறகு வேளாண்-பொறியியல்-பணிக் கூட்டுறவு நிலையம் (வளர்ச்சி வட்டார அளவில் அமைக்கப்பட்ட ஓர் அமைப்பு) மூலம் அப்பணியை சங்கம் நிறைவேற்றுகிறது.

மூலதன, வருவாய் செலவு எவ்வாறு திருப்பி வசூலிக்கப்படுகிறதென்பது.

8.6. பாசனவாயில் சங்கத்திற்குச் சொந்தமானது, செய்யப்பட்ட மூலதனச் செலவு, உறுப்பினர் நிலங்களது விகிதாச்சாரத்திற்கேற்ப அவர் களிடையே பகிர்ந்து கொள்ளப்படவேண்டும். தொடக்க நில வள வங்கி யிடமிருந்து பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்த, இத்தொகை ஆண்டு சமத் தவணைகளில் திருப்பி வசூலிக்கப்படுகிறது. ஒவ்வொரு கிணற்றிலும் கிடைக்கும் நீரின் அளவையொட்டி, பாசனத்தை முறைப்படுத்தவும், பயிர் முறையை முடிவு செய்யவும் நிர்வாகக் குழுவிற்கு அதிகாரம் அளிக்கப்பட் டுள்ளது. சங்கம் தனது வருவாய்ச் செலவைச் செய்ய, உறுப்பினர்களிட மிருந்து தண்ணீர் கட்டணங்களை விதித்து வாங்க அதிகாரம் உள்ளதாகும்.

இதுவரை அடைந்த முன்னேற்றம்.

8.7. இம்மாநிலத்தில் 2,087 இறைவைப் பாசனச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவைகளில் 39,411 உறுப்பினர்கள் (சாரசரி உறுப் பினர்கள் 19) உள்ளனர். செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 4.21 லட்சம் (சங்கம் ஒன்றிற்குச் சாரசரியாக ரூ. 200). ஒருங்கு தொகுப்பதற்காக வழங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிற நிலங்களின் மொத்தப் பரப்பு 79,100 ஏக்கர்களாகும். (உறுப்பினர் ஒருவருக்குச் சராசரியாக 2 ஏக்கர்கள்.) 2,087 சங்கங்களில்) 336 சங்கங்களுக்காக வகுக்கப்பட்ட திட்டங்களின் மொத்த மதிப்பு ரூ. 11.97 கோடியாகும். வகுக்கப்பட்ட திட்டங்கள், அனுமதி அளிக்கப்பட்ட திட்டங்கள், நிறைவேற்றி முடிக்கப்பட்ட திட்டங்கள் ஆகியவற்றைக் காட்டும் விவர அறிக்கை ஒன்று என் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

இறைவைப் பாசனச் சங்கங்களின் கூட்டமைப்பு.

8.8.1. இறைவைப் பாசனச் சங்கங்களின் அலுவல்களை மேற்பார்வையிட்டு ஒருங்கிணைத்து, மேம்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு கூட்டுறவு இறைவைப் பாசனக் கூட்டமைப்பு என்றழைக்கப்படும் கூட்டமைப்பு ஒன்று மாநில அளவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன் நோக்கத்தை நிறைவேற்றிட நிலங்கள், கட்டிடங்கள், வண்டிகள், தொழிற்சாலைகள், பணிக்களரிகள், இயந்திரங்கள் ஆகியவற்றை வாங்கவும், அரசின் முகவராகவும் தனியார், அரசு நிறுவனங்கள் ஆகியவற்றின் முகவராகச் செயல்படவும் கூட்டமைப்பு அதன் துணைவிதிகளின்கீழ் தகுதி உடையதாகும். கூட்டமைப்பின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 54,000 ஆகும். இத்தொகை 150 இறைவைப் பாசனச் சங்கங்களாலும், 118 பிற சங்கங்களாலும் செலுத்தப் பட்டது. நிலவள வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட நீண்ட காலக் கடன்கள் அனைத்தின் தொகையில் ½ சதவீதம் என்ற அடிப்படையில் இணைக்கப்பட்ட சங்கங்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட பங்குத் தொகையும், மத்திய வங்கிகள், அரசு ஆகியவற்றிடமிருந்து பெறப்பட்ட நடுத்தரக் கால, குறுகிய கால கடன்கள் அனைத்தின் தொகையில் ஒரு சதவீதம் என்ற அடிப்படையில்

வசூலிக்கப்பட்ட தொகையும் (ஒவ்வொரு ஆண்டும் நிலுவையாக உள்ளதில் இது கணக்கிடப்படும்). அதன் வருவாய்க்கான முக்கிய வாயிலாகும். பங்குத் தொகையை வசூலிக்கும் பணியைக் கூட்டமைப்பு இன்னும் தொடங்கவில்லை. அதுவரையிலும் தன்னைப் பேணிவருவதற்கும், இணைக்கப்பட்ட சங்கங் களுக்கு குறுகிய கால வழிவகை முன்பணங்களைக் கொடுத்து உதவவும் கூட்டமைப்பு, தமிழ்நாடு கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்து (சங்கங்களிட மிருந்து சட்டப்படி பெற்ற பங்குத் தொகையிலிருந்து தமிழ்நாடு கூட்டுறவு யூனியன் அளவில் ஏற்படுத்தப்பட்ட ஒரு நிதி) ரூ. 1 லட்சம் கடனாகப் பெற்றுள்ளது. துறையின் அதிகாரி ஒருவர் கூட்டமைப்பின் செயலாளராக இருக்கிறார். அவர் இறைவைப் பாசனச் சங்கங்களுக்கு அலுவல் முறையில் இணைப் பதிவாளரும் ஆவார். அவருடைய ஊதியத்திற்காகும் செலவைக் கூட்டமைப்பு ஏற்கிறது.

வேளாண் பொறியியல்—பணிக் கூட்டுறவு நிலையங்கள்.

8.9. இச்சங்கங்கள் வளர்ச்சி வட்டார, மாவட்ட, மாநில அளவில் என்ற மூன்றடுக்கு முறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நோக்கங்களும், உறுப்பினர் ஆதலும்.

8.10.1. உழவர்களுக்கு அவர்கள் வாழும் இடத்தில் பழுதுபார்த்தல், வாடகைக்கு விடுதல் போன்ற வேளாண் பொறியியல் பணிகளை முனைப்பாக அளிப்பதே வளர்ச்சி வட்டார அளவிலான நிலையத்தின் நோக்கமாகும். 140 வளர்ச்சி வட்டார நிலையங்கள் உள்ளன. வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றிலும் வேளாண் பணி நிலையம் ஒன்றை ஏற்படுத்துவதே முடிவான நோக்கமாகும். செங்கற்பட்டு, சேலம், தருமபுரி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு நிலையம் என்ற வீதத்திலும் தென்னார்க்காடு, வடார்க்காடு, மதுரை, இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு நிலையம் என்ற வீதத்திலும் மொத்தம் 16 மாவட்ட அளவிலான நிலையங்கள் உள்ளன. டிராக்டர்கள், விசையேற்றங்கள், எண்ணெய் எஞ்சின்கள், துளையிடும் இயந்திரங்கள், பரம்புப்பொறிகள் முதலியவற்றை பழுதுபார்ப்பதும், வேளாண்மை இயந்திரம் அல்லது நீர் முறைப்படுத்தும் இயந்திரம், வேளாண்மைக்கான உதிரி பாகங்கள் அல்லது பயிரிடு பொருட்கள் ஆகியவற்றை விற்பனை செய்வதும், மண்வளப் பரிசோதனை உட்பட வேளாண்மை குறித்த தொழில் நுட்ப உதவி அளிப்பதும், பெட்ரோல், டீசல், துணைப் பொருள்கள் ஆகியவற்றை விற்பனை செய்வதற்கென இருப்பு வைத்திருப்பவர்களாக பணியாற்றுவதும் இந்த நிலையங்களின் நோக்கமாகும். வளர்ச்சி வட்டார அல்லது மாவட்ட அளவில் செயல்படும் இறைவைப் பாசனச் சங்கம் எதற்கும் உறுப்பினராக 18 வயதிற்கு மேற்பட்ட எவருக்கும், சேருவதற்குத் தகுதியுண்டு.

8.10.2. இணைக்கப்பட்டுள்ள கூட்டுறவு நிலையங்களை ஒருங்கிணைத்து அவை நன்கு செயல்படுவதற்கு வசதியளிக்கவும் நிலையங்கள் வளர்ச்சி பெற்று மேம்பாடு அடைவதற்கு உதவி செய்யவும் வேண்டி, மாநில அளவில் கூட்டமைப்பு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதன் நோக்கங்களை நிறை வேற்றும் பொருட்டு, டிராக்டர்கள், விசையேற்றங்கள், மின்சார சாதனங்கள், எண்ணெய்ப் பொறிகள் முதலியவற்றைத் தயாரிக்கவும் சொந்தமாக வைத்திருக்கவும் அல்லது விற்கவும், வேளாண்மை யந்திரக் கருவிகளைச் செப்பனிட்டு பழுதுபார்க்கவும் மண்வள பரிசோதனை உட்பட வேளாண்மை தொடர்பான தொழில் நுட்பப் பணிகளை அளிக்கவும் இக்கூட்டமைப்பு தகுதி யுடையதாகும். கூட்டுறவு நிலையங்களுக்குள்ள நோக்கங்களைப் போலவே இந்தக் கூட்டமைப்பின் நோக்கங்களும் உள்ளன என்பதை அறிந்து கொள்ளலாம்

கூட்டுறவு நிலையங்களின் செயல்முறை.

8.12. கையினல் துளையிடும் கருவிகள் பத்துக்கான தேவைக் குறிப்புப் பொறியியல் பட்டதாரிகள் அல்லது பட்டயதாரர்கள் நிர்வாக இயக்குநர் களாக நியமிக்கப்படுகின்றனர். இதுவரை 36 நிலையங்களில் அவர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். இந்த நிலையங்களில் 29 நிலையங்களிடம், அவை செயல்பட்டு வரும் பகுதிகளிலுள்ள இறைவைப் பாசனச் சங்கங்களின் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையங்கள் சிலவற்றில் திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு, பணிக்களரி அமைத்தல், டிராக்டர்களை வாங்குதல் முதலியவற்றிற்காகக் கடன் விண்ணப்பங்கள் இந்திய ஸ்டேட் வங்கிக்கு அல்லது மாநிலக் கூட்டுறவு வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளன. ஒரு நிலையத்தில் (வாலாஜாபாத்) டிராக்டர் ஒன்று வாங்கப்பட்டு உழவர்களுக்கு வாடகைக்கு விடப்பட்டு வருகிறது. மாவட்ட நிலையங்களைப் பொறுத்த மட்டில் வரையறுக்கப்பட்ட முறையில் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து நிதியுதவி கிடைக்கிறது.

கூட்டமைப்பின் செயல்முறை.

8.12. கையினல் துளையிடும் கருவிகள் பத்துக்கான தேவைக் குறிப்புப் பட்டியல்களை வேளாண் பணி நிலையங்களிடம் கூட்டமைப்பு கொடுத்துள்ளது. திருவாளர்கள் பிரீமியர் இரிகேஷன் எக்யூப்மென்ட் பிரைவேட் லிமிடெட் தயாரிக்கும் தெளிப்புக் கருவிகளை வழங்க இக்கூட்டமைப்பு எஜென்சி எடுத்துள்ளது. கிர்லோஸ்கர் பிரதர்ஸ் நிறுவனம் தயாரிக்கும் டிராக்டர்களை வழங்குவதற்கான வணிக உரிமையை நான்கு மாவட்டங்களுக்கு இக் கூட்டமைப்பு பெற்றுள்ளது.

இறைவைப் பாசனச் சங்கங்களின் பணிகளை நிறைவேற்ற முகவர் நிறுவனம்.

8.13. கிணறுகள் தோண்டுதல், விசையேற்றங்களை நிறுவுதல் முதலிய இறைவைப் பாசனச் சங்கப் பணிகளை நிறைவேற்றும் பொறுப்பு வேளாண்-பொறியியல்-பணிக் கூட்டுறவு நிலையங்களிடம் கட்டாயமாக ஒப்படைக்கப் படுவதாக எங்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. இப்பணிகளுக்காகும் செலவில் 7½ சதவீதம் சென்டேஜ் கட்டணம் மேற்படி கூட்டுறவு நிலையத்தினல் விதிக்கப்பட்டு இறைவைப் பாசனச் சங்கங்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. சில இறைவைப் பாசனச் சங்கங்கள் இந்த நடைமுறைக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்த நேர்வுகளில், அவை களுக்குத் துணை ஒப்பந்தத்தின்மேல் பணி ஒப்படை செய்யப்பட்டது. அதாவது இறைவைப் பாசனச் சங்கம் முதற்கண் ஒப்பந்தத்தின் பேரில் பணியை வேளாண் பணி நிலையத்திடம் ஒப்படைத்தது. பின்னர் வேளாண் பணி நிலையம் மீண்டும் அப்பணியைத் துணை ஒப்பந்தத்தின் மேல் மேற்படி சங்கத்திடமே ஒப்படைத்தது. பொதுவாக இறைவைப் பாசனச் சங்கங்கள், வேளாண் பணி நிலையங்களிடம் பணியை ஒப்படைக்க விரும்பவில்லையென்று தெரிகிறது. அவை பணிகளைத் தாங்களே செய்ய விரும்புகின்றன. தங்கள் பகுதியைப் பற்றி தங்களுக்குள்ள தகவல், தங்களுக்குள்ள செல்வாக்கையும் கொண்டு பணியை எளிதாகச் செலவு அதிகமின்றிச் செய்து முடிக்கலாமென்று அச்சங்கங்கள் கருதுகின்றன. பணிக்காகும் மூலதனச் செலவானது உறுப்பினர்களால், அவர்கள் வைத்திருக்கும் நில உடைமைகளின் வீதாசாரத்திற்கேற்ப திருப்பிச் செலுத்தப்படவேண்டு மாதலால், பணியின் தரத்திலும் அவை அக்கறை கொண்டுள்ளன. கிணறு தோண்டுதல், விசையேற்றக் கொட்டகைகள் கட்டுதல், விசையேற்றங்களை நிறுவுதல் தொடர்பான பணிகள் மேற்படி சங்கங்களினல் செவ்வனே நிறைவேற்றப்பட இயலாத அளவுக்கு அதிக பயிற்சித் திறன் தேவை யானவையல்ல. வெளியிலிருந்து ஒரு எஜென்சி இப்பணியை மேற்பார்வை யிடவேண்டுமென்று வற்புறுத்தப்படின், பணிகளுக்காகும் செலவில் 7½ சதவீதம் சென்டேஜ் கட்டணம் கொடுப்பதற்குப் பதிலாக, பணியை மேற்பார்வையிட வேலைக்கமர்த்தப்படும் தொழில் நுட்ப மேற்பார்வை

PUBLIC LIBRARY

யாளர்கள் குறித்த செலவை ஏற்றுக் கொள்ள இறைவைப் பாசனச் சங்கங்களுக்கு மறுப்பேதும் இருக்காது எனத் தெரிகிறது. பணிகளில் அவை மிகுந்த அக்கறை கொண்டிருக்கும்போது, பணி நிறைவேற்றப்படுவதை மேற்பார்வை செய்யும் வேளாண் பணி நிலையைப் பணியாளர்களுக்கு உண்மையில் அப்பணி குறித்து அக்கறை இருக்காது என்று சங்கங்கள் கருதுவதில் ஓரளவு நியாயமிருப்பதாக நாங்கள் கருதுகிறோம். தம்மிடம் சம்பளம் பெறும் செயலாளர்கள் குறித்த செலவையும் இறைவைப் பாசனச் சங்கங்கள் சரிக்கட்ட வேண்டியிருப்பதோடு ஏனைய சில்லறை செலவினங்கள் குறித்தும் செலவு வேண்டும். சங்கங்களின் பணி அந்தச் சங்கங்களிடமே ஒப்படைக்கப்பட்டால் அதற்கான நிர்வாக, மற்றும் ஏனைய செலவுகளைச் சரிக்கட்ட அவைகளுக்கு எளிதாக இருக்கும். மேலும், ஒருபக்கம் இறைவைப் பாசனச் சங்கங்கள் அவற்றின் கூட்டமைப்பு மற்றொருபக்கம் வேளாண் பணி நிலையங்கள் அவற்றின் கூட்டமைப்பு ஆகியவற்றின் துணைவிதிகளில் பல விதித்துறைகள் ஒரே மாதிரியாகவும் இரட்டிப்புத் தன்மை வாய்ந்தவையாகவும் உள்ளன. இறைவைப் பாசனச் சங்கத்தின் சார்பாக மற்றொரு ஏஜென்சி நிறைவேற்றுமாறு கேட்கப் பட்டுள்ள பணிகளை, இறைவைப் பாசனச் சங்கங்களே துணைவிதிகளின்கிழ் மேற்கொள்ளத் தகுதியுடையனவாகும். பணிகளை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகளை இரட்டிப்பாக்குவதற்குப் பதிலாக, இறைவைப் பாசனச் சங்கத் துணைவிதிகளின்கிழ் எந்தப் பணிகளை மேற்கொள்ள அவை தகுதி யுடையனவோ அத்தகைய பணிகளைச் சட்டப்படி நிறைவேற்றுவதற்குப் போட்டியாக இராத வகையில், வட்டார அளவிலான வேளாண்-பொறியியல் பணி நிலையங்கள் செயலாற்ற வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம். இறைவைப் பாசனச் சங்கங்கள் விரும்பினால் தங்களது பணிகளை நிறைவேற்ற இயல வேண்டும். வேளாண் பணி நிலையங்களின் முக்கிய நோக்கம் வேளாண்மை இயந்திரக் கருவிகளையும் சாதனங்களையும் பழுதுபார்ப்பதும் விற்பனை செய்வதுமாக இருப்பதால், தாங்கள் தொடர்ந்து செயல்படுவதற்கு இறைவைப் பாசனச் சங்கங்களை அவை நம்பியிருக்க வேண்டிய அவசியமில்லை.

இறைவைப் பாசனச் சங்கங்களின் பணியை முடுக்கிவிடுதல்.

8.14. இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட இறைவைப் பாசனச் சங்கங்கள் சுமார் ஓராண்டு காலத்தில் அமைக்கப்பட்டன. இவ்வகைச் சங்கங்களை அமைப்பதற்கு அவசியமான தொடக்கப் பணியைச் செய்வதற்கு அதாவது, சங்கத்தில் சேர விழையும் உறுப்பினர்களால் தொகுக்கப்படுவதற்காக அடுத்தடுத்து போதிய நிலப்பரப்பு கிடைக்கின்றதா, நிலநீர் வளம், முதலியவை பற்றி நிச்சயித்து அறிந்து கொள்ளப் போதிய அவகாசம் இருந்ததாகக் கூற இயலாது. இவ்வகைப் பணிகள் இப்போது செய்யப்பட வேண்டும். இச்சங்கங்களின் பணியை முடுக்கிவிடுவதற்காக நடைமுறை சாத்தியமான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு செயல்படுத்தப்படுவது அவசியம் என நாங்கள் கருதுகிறோம். (கூட்டுறவு) நல வளர்ச்சிப் பணி அதிகாரிகளிடமிருந்து குறித்த காலத்திற்கொருமுறை அறிக்கைகள் தற்போது வருகின்றன என்றும் அதுகுறித்து கட்டளைகள் பிறப்பிக்கப் படுகின்றன என்றும் அறியப்படுகிறது. இச்சங்கங்களுக்காகவென்றே தனியாக நேரிடப் பணியாளர் எவருமிலர். நல வளர்ச்சிப் பணி அதிகாரிகளே இச்சங்கங்களுக்கு உயிரூட்ட வேண்டும். இந்த அதிகாரிகள் பிற பணிகளையும் கவனிக்க வேண்டியுள்ளது அவசியமிருப்பின், இறைவைப் பாசனச் சங்கங்கள் செயலற்று முடங்கிக்கிடக்கிற வளர்ச்சி வட்டாரங்களில் இந்த அதிகாரிகளுக்கு அவர்களது பிற பணிகள் ஓரளவு குறைக்கப் படுவதுடன், நிலங்கள் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு இச்சங்கங்களின் பணியை முடுக்கிவிட திட்டங்கள் தொடங்கப்படுகின்றனவா என்பதைப் பார்த்துக் கொள்ளுமாறும் அவர்கள் கேட்கப்படவேண்டும். நிலங்களை ஒன்றாகச் சேர்க்க வாய்ப்பு ஏதும் இல்லாதிருந்தால், அச்சங்கங்களைப் பெயருக்குப் பதிவேடுகளில் வைத்து வருவதற்குப் பதிலாக அவற்றைக் கலைத்துவிடுவதே சாலப் பொருந்தமாகும்.

தமிழ்நாடு அரசினருக்காக தமிழ்நாடு எழுது-பொருள் அச்சுத்துறை இயக்குநரால் பதிப்பிக்கபெற்று பிரசுரிக்கப்பட்டது.